JL
Rm 211, N09
N09-1
161427

OFFICE OF ... REGISTERED 2 APR 1907 MADRAS.



கடவுள் துணை

# செந்தமிழ்.

தொகுதி-ரு] பராபவஹு மாசிமீ [பகுதி-ச

## "யாழோர்கூட்டம்."

ஆரியமேலோர் எண்வகைமணமென்று வரையறுத்துக் கூறிய வற்றுள்ளே, "காந்தருவவிவாகம்" என்பதொன்றென்பது பலர்க்குந் தெரிந்தது. இவ்விவாகமே, பழந்தமிழ் நூலாசிரியரால் யாழோர் கூட்டம் என்று கூறப்படுகிறது. [யாழோர்-யாழ்வல்ல கந்தருவர்; கூட்டம்-மணம்] கந்தருவகுமாரரும் அம்மகளிரும் தம்முள் எதிர்ப் பட்டு மணமொத்து இயைவதுபோலத் தலைவனுந் தலைவியும் தம் முள் எதிர்ப்பட்டு மணமொத்தியைவதே இவ்விவாகத்தின் தாற்பரி யம். இதனை,

"அதிர்ப்பில்லைம் பூணுரு மாடவருந் தம்மில்
எதிர்ப்பட்டுக் கண்டியைத லென்ப—கதிர்ப்பு யாழ்
முந்திருவர் கண்ட முனிவறு தண்காட்சிக்
கந்திருவர் கண்ட கலப்பு." *

என்னும் வெண்பாவானும் உணர்க. இத்தகைய ஒழுக்கமுறை வடநூல்களில் உண்டேனும், அவற்றினும்விசேடமாகத் தமிழ்நூல் களில் அது பயிலக்காண்கிறோம். இம்முறையைத் தமிழர் காமக்கூட்டம், களவுப்புணர்ச்சி என்பர். இக்கூட்டம் பற்றிய நிகழ்ச்சிகளை வரையறுத்துக்கூறும் இலக்கணநூல்களும் தமிழ்மொழியில் காணப்படும்.

ஆயினும், இவ்வொழுக்கம் ஆரியர்க்குள்ளும் பண்டுதொட்டே வழங்கிவந்ததென்பதற்குப் பல காரணங்களுள்ளன. அவர்க்கு

* தொல்காப்பியம், பொருளதி, களவியல், க-ம் சூத்திரவுரை.

இம்முறை பிரபலமாக அநுஷ்டிக்கப்பட்டகாலத்தில், பிரமம் பிராபத்தியம் போன்ற உயர்மணங்களைப்பற்றி அவர்கள் அறிந்ததில்லையென்றேகூறலாம். ஏனெனில், அந்நன்மணங்கள், விவாகவிஷயத்தில் ஆரியரடைந்த புரோவிர்த்தியைப் படிப்படியே குறிக்கின்றன. அவைபோலவே, பைசாச ராக்ஷஸவிவாகங்கள், அவரது ஆதித்தாழ்நிலையை நமக்கு விளக்குவதாகும். போதாயனர் தமதுகற்பசூத்திரத்தில் இவ்வெட்டு விவாகமும் ஒன்றினொன்று தாழ்ந்ததென்று கூறுதல் காண்க.* ஆகவே, ஆரியர்கொண்ட எண்வகைமணமும் ஒவ்வொருகாலத்து அவர்கள் அனுஷ்டித்து விருத்திபெற்ற ஒழுக்கமுறைகளென்பது விளங்கும்.

உலகத்துள்ள நாகரிகசாதியாரெல்லாம், இவ்வாரியர் போலவே, ஆண்பெண்ணிருபாலாரது சம்பந்தத்தையும் ஒருவரையறைக்குட்படுத்திச் சீர்திருத்தியவரேயாவர். சிற்சில அநாகரிகமக்களிடத்து இவ்வரையறை காணப்படாதபோது அது நமக்கு அதிசயமும் அருவருப்பும் உண்டாக்குதல் இயல்பே. அயோத்தியில் நீஹறொர் ஜாதியார் கூட்டமாக முறையின்றி வசிப்பதும், நீலகிரித் தொதுவரிலும் திருவாங்கூர் … நீயரிலும் ஒருத்தியே எல்லாப்பிராதாக்களாலும் தம்பொதுமட… ாகப் பாவிக்கப்படுதலும், மலையாளத்துத்தச்சர் கருமாரில், ஒ… ன்னை நாலைந்து புருஷர் விசேடச்சடங்குகளுடன் மணம்புரிவதும், கேட்கும்போது,† நமக்கு எவ்வளவு அதிசயந் தருகின்றன! ஆனால், அநாகரிகமென்று சில சாதியாரிடத்துக் காணப்படும் ஒழுக்கங்களிற் பெரும்பகுதியை, மனிதசமூகத்தின் ஆதிநிலைகள் என்று கொள்வதே பொருத்தம். ஏனெனில், செயற்கையில் வளரும் அநாகரீகங்களினும் இயற்கையில் வழிவழியாகவந்தவைகளே அதிகமாகும். ஆதலால், மக்களது விவாக சம்பந்தமான விருத்தியானது, முற்கூறிய வரையறையற்ற ஒழுக்கங்களினின்றுதான் உண்டாயிருத்தல்வேண்டுமென்பது தவறான ஊகமாகாது. இதற்கேற்ப, சரித்திரத்தாலும், மனிதவகுப்பில்நாகரிமிக்க ஆரியசா

* பிரசனம்-௧, அத்யாயம்-௧௧, காண்-௨௰, சூத்-௪௰,௧௧.

† ஸ்ரீவாணீவிலாஸினீ. தொகு-௧, பகு-௩,பக்-௨௨௫.



தியின் ஆதிநிலை வெளியாகும். ஆரியமேலோர் வகுத்த எண்வகைமணமும், பிந்திய போதாயனம் ஆபஸ்தம்பமுதலிய கற்பசூத்திரங்களிலன்றி, வேதத்துக்காணப் படாதனவாம். இவ்வெண்மணங்களுள், ஸ்திரீகள் தாமாகவே புருஷரைவரிக்கும் பகுதியொன்றைவா அச்சூத்திர நூல்கள் அடக்கவில்லை. ஆனால், இருக்குவேதத்தில், "க (பெண்கள் வரித்தலானது எப்போதும் திருப்திகரமாகவே முடின் வதில்லை) "ஏனெனில், அநேகஸ்திரீகள், தங்களை விரும்புகிறவருடைய ஐசுவரியத்திலுள்ள ஆசையாற்கவரப்பட்டு வரிக்கிறார்கள். ஆனால், சாந்தமும் தேஜஸுமுள்ள பெண் தன்னைவிரும்பும் அநேகரில் தன் நேசத்துக் குரியவனையே புருஷனாக வரித்துக்கொள்ளுகிறாள்" (இருக். 10, 27. 12) *என்றுள்ள வாக்கியங்களினின்று, ஒவ்வொருஸ்திரீக்கும் அத்தகையவுரிமையிருந்ததென்று தெளிவாக விளங்குகிற… இவ்வழக்கம் ஆரியசமூகத்திலே குறைந்தகாலத்தில், அரசர்க்குகள், ளைமட்டும் "சுயம்வரம்" என, ஏகதேசமாக அது வழங்கிவந்த… ட்த் அன்றியும் ஆதியாரியமக்களின் ஸ்திரீபுருஷசம்பந்தமானது, ட பங் காலத்துப்போலக் கடுவிதிக்குட்படாது, வதூவரரின் இஷ்டாநிஷ்டங்களைப் பொறுத்ததாகவும் எளிதானதாகவும் அமைந்திருந்தது. உறவினரை இம்சித்து வலிந்திழுத்துச்செல்லும் ராக்ஷசமும், உறங்கும்போதாவது மயக்கங்கொண்டபோதாவது அணையும் பைசாசமும் இவ்வாரியநன்மக்களது அநுஷ்டானத்திலிருந்ததில்லையாயினும், கந்தர்வம்போன்ற ஒருவகைமணம் விசேடமாகஅநுஷ்டிக்கப்பட்டது இக்காலமேயாம். அவ்வகைமணமும், இப்போது சி… ஜாதியாரிடமுள்ளதுபோல,சீர்திருத்தம்பெறுதநிலையில் இருந்ததென்று கூறின் அது இழித்ததாகாது; ஏனெனில், அக்காலத்து ஸ்திரீபுருஷரது மனநிலையும் கொள்கைநிலையும் அதில் விற்பமின்றியிருந்தது.

இவ்வுண்மையைக்காட்டத் தக்கபிரமாணமும் இங்குக்காட்டல் கூடும். மகாபாரதத்தில், பாண்டுமகாராஜன் தம்மனைவியாகிய குந்திதேவிக்கு, பழங்காலத்து ஸ்திரீபுருஷரது சம்பந்தத்தைப்பற்றிய சரித்திரத்தை நன்குவிளக்கி அடியில்வருமாறு கூறியிருக்கின்றார்;

* ஸ்ரீ தத்தரது "புராதன இந்திய நாகரீகம்" தொகுதி-௧, பக்-௬௮.

"பெண்ணே! முற்காலத்தே ஸ்திரீகள் விவாகவரையறை இல்லாதவராயும் சுதந்தரர்களாயும் தம்மிஷ்டம்போலக் கிரீடிப்பவராயும் இருந்தனர். இளமைதொட்டே தம்மால் வரிக்கப்பட்டவரையும் கடந்து நின்ற அவர் விஷயத்தில் அச்செய்கை அதர்மமாகக் கருதப்படவில்லை. ஏனெனில், அவ்வழக்கம் இயல்பாக முன்புதொட்டே நிகழ்ந்துவந்தது. காமக்குரோதமற்ற விலங்கினங்கள் இப்போதும் அத்தர்மத்தையே அநுஷ்டித்துவருகின்றன. வாஸ்தவமான இவ்வழக்கமானது மஹருஷிகளாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது அன்றியும், உத்தரகுருதேசத்தில் இப்போதும் அது மதிக்கப்பெறுகிறது..... இப்போதுள்ள விவாகமுறையானது வெகுசமீபத்திற்றான் உண்டாக்கப்பட்டது. இதனை யார், எதற்காக உண்டாக்கினர்? என்றவிஷயத்தைச் சொல்லுகிறேன். உத்தாலகர் என்ற ஒரு மஹருஷி இருந்ததாக நாம் கேள்விப்பட்டிருக்கிறோமன்றோ! அவர்க்குச் சுவேதகேது என்னும் பிரசித்தரான ருஷி, குமாரராக இருந்தார். இந்த மஹருஷிபுத்திரராற்றான் தர்மத்தினின்றும் வழுவாத இக்கால விவாகவரையறையானது கோபநிலையில் ஏற்படுத்தப்பட்டது. இதை அவர் ஏன்செய்யநேர்ந்தது? என்பதையும் சொல்லுகிறேன்" சுவேதகேதுவும் அவர்தந்தையுந்தாயும் ஓரிடத்துச் சேர்ந்திருந்தபோது ஒரு பிராமணன் வந்து, சுவேதகேதுவின் தேஜோவிசேஷங்களைக்கண்டு வியந்து, இத்தகையபுத்திரனை உத்தாலகர் பெற்ற இடத்தினின்றே தானும் ஒரு நன்மகப்பெறும் ஆசைமேலிட்டு, அவ்வுத்தாலகரிடம் தன்னெண்ணத்தைத் தெரிவித்தபின், அவர் மனைவியைப் பிடித்துக்கொண்டு போவோம் வா என்று கூறினன். இதனைக்கண்ட சுவேதகேது அடங்காச்சினமும் நாணமுமுடையவராய்த் தம்முன்னிலையில் வலிந்திழுக்கப்பட்ட தந்தாயைப் பற்றிக்கொண்டு அப்பிராமணனைப் பெரிதும் இகழ்ந்துரையாடினர். அதுகேட்ட அவர் தந்தையாகிய மஹருஷி, "குழந்தாய்! கோபங்கொள்ளற்க; இவ்வழக்கம் பழமையானது; உலகில் எவ்வருணங்களிலும் ஸ்திரீகள் விவாகவரையறையுடையரல்லர், பசுக்களைப்போல், தத்தம வர்ணங்களில் அவர்கள் புருஷரைக்கூடி மகப்பெறுகிறார்கள். அப்படியே குடும்பங்களிலும் இவ்விஷயம் வழுவாகக் கொள்ளப்படுகிறதில்லை" என்றார். இவற்றைக்கேட்ட ருஷிபுத்திரர் அந்நியாயங்களைச்



சிறிதும் ஒப்பாமல், அவற்றைப் பேரிழிவாகக்கருதி, உலகில் ஸ்திரீபுமான்களுள் இவ்விதவிவாகவரையறையை விதித்து அதை எங்கும் ஸ்தாபிக்கலானார். அதுமுதற்றான் இவ்வரையறை ஏற்பட்டதென்று கேட்கிறோம். இவ்விதி ஏற்பட்ட பின்பு கணவரைக் கடந்து செல்லும் ஸ்திரீக்குப் பாவம் உண்டு. அது சிசுஹத்திக்குச் சமமானதும் மிகக்கடுமையானதுமாகும். உத்தரகுரு நாட்டாரால் இவ்வழக்கம் காமக்குரோதமின்றியே அநுஷ்டிக்கப்படுவதாயினும், இந்தப்பழையதர்மம் அங்கே ருஷிகளால் நிந்திக்கப்பட்டதில்லை. மற்றவிடங்களில், புத்திரகாரணமாகப் புருஷரால் ஏவப்பட்டவராயிருந்தாலும் அதை ஸ்திரீகள் அநுஷ்டித்தல் கூடாது. இவ்வாறு ஸ்வேதகேதுவால் இவ்வரையறை பலாத்காரமாக ஸ்தாபிக்கப்பட்டதென்று அறி"* எனக்காண்க.

இவ்வரலாற்றால், ஆதியாரியரது விவாகவரலாறுகள் மிகத்தெளிவாகவிளங்கும். இதனால், ஸ்திரீகள் புருஷரை வரித்திருந்தபோதிலும் விவாகவரையறைக்குட்பட்டிருக்கவில்லையென்றும், அவ்வாறு உட்படும்படி முதலிற் செய்வித்தவர் சுவேதகேதுவே என்றும் நன்குவெளியாம். இவ்விருஷி அவ்வாறுசெய்தமைக்குக் காரணம், அவ்வொழுக்கத்தில் காமக்குரோதங்கள் பிற்காலத்துண்டாகி, உலகவியல் சீர்கெடுநிலையில் இருந்தமைதான். பிற்காலத்து விவாகமுறை வெகு சமீபத்து உண்டாக்கப்பட்டதென்று பாண்டுகூறுதலால், பாரதகாலத்துக்குச் சிறிதுமுந்தியநாள்வரை, முற்கூறிய பழையவழக்கமே நிகழ்ந்ததென்பது பெறப்படும். இதற்கேற்ப, அக்காலசரித்திரங்களும் சான்றுகூறத்தக்கவை. இவ்வாறு மகாபாரதத்துக்கண்ட ஆரியரது ஆதிவிவாகவரலாறுகளை உட்கொண்டே, ஆசிரியர் தொல்காப்பியனாரும்,

"பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணமென்ப" (தொல். கற்பியல். ௪.)

எனச்சூத்திரத்தார். இதனுள் மேலே கூறிவந்த சரித்திர விஷயங்களெல்லாம் அடங்கிநிற்றல் உய்த்துணர்ந்துகொள்க. இச்சூத்திரத்து

*வடமொழி மகாபாரதம், ஆதிபர்வம், ௧௨௮-ம் அத்தியாயம். (வடநாட்டுப்பிரதியினும் தென்னாட்டுப்பிரதி அதிகவிவரங் கொண்டது).

வரும் "ஐயர்" ஆவார்—சுவேதகேதுவும் அவர்க்கு வெகுகாலத்துக் குப்பின் விவாகமுதலியவற்றை வரையறுத்து நூல்கள்வெளியிட்ட ஆபஸ்தம்பர் போதாயனர் முதலிய ஆரியமேலோருமாவர். கரண மென்பது விவாகச்சடங்கை. இனி, தொல்காப்பியனார் தமிழரதுசடங்கொடுகூடிய கற்பியல்முறையைக் கூறுந்தொடக்கத்தே,

"மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க் காகிய காலமு முண்டே" (தொல். கற்பியல். ௩)

என, ஆரியமக்கட்கு பிற்காலத்துருஷிகளால் விதிக்கப்பட்ட விவாக முறை, வேறொருசநாதனதர்மப்படி யொழுகிவந்த தமிழர்க்குள்ளும் வழங்கலாயிற்றெனவும், அவ்விருவரும் ஸ்திரீ புருஷசம்பந்தமான ஒழுக்கத்தில் ஆதிகாலத்தொன்றாயிருந்தவரெனவும், ஆரியக்கலப்புக் குப்பின்புதான் தமிழர் அவற்றைக்கொண்டனரெனவும் குறிப்பாகக் கூறுதல் உய்த்துணரத்தக்கது. இச்சூத்திரத்தில் தமிழரைக்'கீழோர்' என்பதனுள் அடக்கித் தொல்காப்பியர் கூறுதல் காண்க. "கந்தருவமணம் நாற்பாலுக்குமுண்டென்று சிலர் கூறுவர்" * எனப் போதாயனர் கூறுதலாலும், ஆரியர் தமிழரது ஆதிநிலைகள் ஒன்றாயிருந்ததென்பது விளங்கும்.

இனித் தமிழ்மக்களது விவாகசம்பந்தமான ஆதிநிலையைப்பற்றி ஆராய்வோம். இவர்க்குளிருந்த புராதனவழக்கமானது களவுப்புணர்ச்சி என்னும் காமக்கூட்டமேயாம். ஆரியரது எண்வகைப் பட்ட மணவிஷயம் தென்னாட்டவர்க்குச் சிறிதும் தெரியவாராதது. ஆயின் தொல்காப்பியனார்,

"இன்பமும் பொருளு மறனு மென்றாங்
கன்பொடு புணர்ந்த வைந்திணை மருங்கிற்
காமக் கூட்டங் கண்ணுங் காலை
மறையோர் தேத்து மன்ற லெட்டினுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோ ரியல்பே"
(தொல். களவியல், க.)

என்புழி, கந்தருவரியல்பு என்னும் வடமொழிவழக்கால் களவுப்புணர்ச்சியை வழங்கிய தென்னெனின்:—பிற்காலத்துத் தமிழ்நாட்டிற் குடியேறிய ஆரியர், தமிழ்மக்களது புராதனவொழுக்கம் தமது கந்தருவமுறைக்கொப்ப அமைந்திருந்தது நோக்கி, அவ்வாறு அடக்கிக் கூறியதேயன்றி, வடநூல்வழக்குத் தழுவித் தமிழர்மணம் ஏற்பட்டதில்லையெனத் தெளியத்தக்கது. இதுபற்றியே போதாயனரும், கந்தருவமணம் வைசியசூத்திரர்க்குரியதென்று கூறினர். * இவ்வுண்மையை, "காமக் கூட்டங் கண்ணுங் காலை, மறையோர் தேத்து மன்ற லெட்டினுட், துறையமை நல்யாழ்த்துணைமையோ ரியல்பே" என்னுமிடத்து, தமிழரது "காமக்கூட்டம்" வேறெனவும், அஃது ஆரியரது எண்வகைமணங்களுள் ஒன்றான கந்தருவமுறையில் ஒருவாறு அடங்குவதெனவும் தொல்காப்பியர் கருதிக்கூறுதல் உய்த்துணர்க. கந்தருவவொழுக்கம் கற்பின்றியும் நிகழ்வதாகலின், † கற்பொடுகூடிய தமிழரதுகளவுப்புணர்ச்சிக்கும் அதற்குமுள்ள சிறுவேற்றுமைதோன்ற அவ்வாறுகூறப்பட்டது.



இனித் தமிழ்மக்களது புராதனவொழுக்கமாகிய காமக்கூட்டம் பாண்டுகூறிய ஆதியாரிய வொழுக்கத்தினும் பெரிதும் சீர்திருந்தியதென்னலாம். ஆரியாங்கனைகள், பண்டைநாளில் புருஷரது எல்லை கடந்தும் நடந்துவந்தவிஷயம் வடநூல்களிற் கேட்கப்படுதல்போல, தமிழில் எவ்விலக்கியமும் காணக்கிடையா. தலைவர் தலைவியர்க்குள் களவுக்கூட்டம் நிகழ்ந்தபின், அக்கூட்டத்தாலாய அற்புதத்தை அவ்விருவரையும் பரஸ்பரம் கட்டுப்படுத்த, அதனால் ஸ்திரீயின் ஒழுக்கம் வரையறைப்பட்டதாய்ப் பிற்காலத்து எவ்வித மாறுபாட்டுக்கும் உட்படாததாக நிகழ்ந்தது. இவ்வுழுவலன்பு காரணமாகத் தலைவர்தலைவியர்க்குள் களவுப்புணர்ச்சி பலமுறை நிகழ்ந்தபின், தலைவன், தலைவிசுற்றத்தாரது ஆணைபெற்றேனும் அது பெறாதேனும் அவளை உடனழைத்துச்சென்று தன்னில்லாளாகக் கொண்டொழுகுவதே தமிழ்மக்களது ஆதிமுறை. ஆரியக்கலப்புத் தமிழ்நாட்டில்மிகுந்த பிற்காலத்தே இப்பழையமுறையோடு, பிராஜாபத்தியம்போன்ற மற்றொருவிவாகமுறையும் அநுஷ்டிக்கப்படலாயிற்று. அஃதாவது களவுப்புணர்ச்சி நிகழ்ந்தபின், அங்கியங்கடவுள்

* பிர, அத்-கக. காண்-உ௦, சூத்-கசு.

* பிர-க, அத்-கக, காண்-உ௰, சூத்-க௩.

† தொல், பொருளதி, களவியல், க-ம் சூத்திரவுரை.

சாட்சியாக விவாகச்சடங்குசெய்தபின்பே தலைவன் தலைவியை இல்லாளாகக்கொண்டொழுகுதல். இம்முறைதான், கற்பியல் என்னும் பகுதியில் தொல்காப்பியமுதலியவற்றிற் கூறப்படுவது. இவ்வழக்கம் முன்பிருந்ததில்லையென்பதை, ஆசிரியர் தொல்காப்பியர் “மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம், கீழோர்க் காகிய காலமு முண்டே” என்புழி நன்குவிளக்கியிருத்தல் முன்னரும் காட்டப்பட்டது. இவ்வாறு, கந்தர்வமணநடந்தபின் வேறுவிவாகம் பண்டையாரியர்க்குள்ளுநிகழ்ந்ததில்லையென்பது, துஷ்யந்தன் மனையாட்டியாகிய சகுந்தலை சரிதத்தாலும் வெளியாம். சுருங்கவுரைக்கின், சகுந்தலை துஷ்யந்தர்களின் காமக்கூட்டத்தை ஆதித்தமிழரது மணத்தோடு நன்றாக ஒப்பிடலாம். ஏனெனில், ஊழ்வகையால் அவ்விருவரும் தனியிடத்தே எதிர்ப்பட்டபோது ஒருவர்க்கொருவர் கரந்த உழுவலன்புடையராகி, வண்டோச்சி மெய்தொட்டுப்பயிறல் முதலாக அவர்க்குள் நிகழ்ந்த முன்னிகழ்ச்சிகளெல்லாம் தமிழரது காமக்கூட்டத்தும் [illegible]ண்மையால் என்க. சாகுந்தலத்துக்கண்ட இவ்வாரியவொழுக்கம் ஒருகால், பரதகண்டத்து ஆதிமக்களாகிய தமிழரிடத்துநின்றுபெற்றதாயினும் ஆகலாமென்பாருமுண்டு. தமிழரசர்க்கேயுரிய போர்முறையின் முதனிகழ்ச்சிகளாகிய நிரைகோடல் நிரைமீட்சி முதலிய வழக்குகளை * ஆரியருங்கையாண்டவரென்பது, மகாபாரதத்துவிராடபருவக்கதைகளால் பெறப்படுதலின், காமக்கூட்டமும், அதுபோன்றதொன்று என்பது அவர்கள் ஊகமாகும். ஆனால், பிற்கூறியது ஒருவாறு பொருந்தினும், களவுப்புணர்ச்சி ஆரியர்க்கும் பழமையாக உரியதென்பதில் ஐயமில்லை. இக்களவுப்புணர்ச்சியில் தலைவன் தலையர்க்குள் நிகழும் அன்புபோல எவ்வகைமணங்களினும் அது நிகழாதெனக்கண்டே, பழைய தமிழ்மக்கள், தம் இலக்கியங்களிலெல்லாம் இவ்வற்புநிலையைப் பெரிதும் புகழ்வாராயினர். தமிழ்மக்கள் பண்டுதொட்டே வழங்கிவந்த தெய்வமாகிய முருகக்கடவுளாலும் இவ்வொழுக்கம் அநுஷ்டிக்கப்பட்டதெனின், இதன்சிறப்பை விளக்கல்வேண்டுமோ! இவ்வொழுக்கத்தின் சிறப்பை அகநானூறு, கலித்தொகை, நற்றிணை, குறுந்தொகை, திருக்குறள் முதலிய பண்டைநூல்

* வடமொழி நீதிநூல்களில், இத்தகையபோர்முறை கூறப்படுவதாகத்தெரியவில்லை.



களிலும் பிற்காலத்தெழுந்த கோவைநூல்களிலும் கண்டுமகிழ்ந்துகொள்க.

இனி, தமிழ்மக்களுள், காமக்கூட்டத்தின்பின் ஏற்பட்ட விவாகமுறையைப்பற்றிய விஷயங்கள், வைதிகமில்லையாயினும் ஆகமிகமென்று கூறுவர். இவ்விவாகச்சடங்கு பெரும்பான்மை பெண்ணின் சுற்றத்தாராலும், ஏகதேசம் அவரின்றியும் நடைபெறும். இதனை,

“கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவோன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே”
“கொடுப்போ ரின்றியுங் கரண முண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான”

எனவரும் தொல்காப்பியர் கூற்றுக்களால் உணர்க. இச்சடங்குகள், அங்கியங்கடவுள் சான்றாக வேள்வியாசான் காட்டியவழியே நடத்தப்பெறும். இவ்விவாகத்திற் றலைவிதலைவர்க்குள் உண்டான பந்தத்துக்கு அடையாளம், தலைவி கழுத்தில் தாலி அணிதலேயாம். அதினும், புலிப்பல்லமைந்த தாலியே பழமையானதென்று தெரிகிறது. குறிஞ்சிநிலத்துக்குரிய களவொழுக்கத்தினின்று இம்மணம் வந்ததென்பதை இப்புலிபபற்றாலி குறிப்பிப்பதுபோலத் தோன்றுகிறது. இத்தாலி குறிஞ்சிநிலமக்கட்குரியதென்பதை,

“அரும்பெறன்மறவர்தாயத்தான்றதொல்குடியில்வந்தாள்
இரும்புலியெயிற்றுத்தாலி யிடையிடைமனவுகோத்துப்
பெரும்புறமலையப்பூண்டாள் பீலியுங்குழையுந்தட்டச்
சுரும்புறுபடலைமுச்சிச் சூரிப்பிணவுபோல்வாள்.” (கண்ணப்ப-௯)

என்னும் பெரிய புராணச் செய்யுளால் உணர்க. இதனுள்: இத்தாலியுடன் இடையிடையே அக்குமணியுங் கோத்தணிதல் கூறப்பட்டுளது: இத்தாலியே, வில்லிபுத்தூராராலும் “வரையரையன் றிருமடந்தை வனமுலைமேன மணிக்குன்றி வடமுஞ் செங்கை, நிரைவளையும் புலிப்பல்லான் றந்திகழ் மங்கலப்பூணும் நிலவ” என அருச்சுனன்றவநிலைச் சருக்கத்துக்கூறப்பட்டது. இப்புலிபபற்றாலியை மகளிரேயன்றிச் சிறுபிள்ளைகளணிதலும் அம்மலைநாட்டுவழக்கம் (புறம்—௩௭௪.)

*

இவ்வாறு, தாலிகட்டும்வழக்கம் பண்டைமுதலே தமிழர் கொண்டதென்பது "ஈகையரிய விழையணிமகளிர்" எனவரும் புறநானூற்றுத் தொடராலும் அதனுரையாலும்; இராமாவதாரங் கோலங்காண்படலத்து.

"கோனணிசங்கம்வந்துகுடியிருந்தனையகண்டத்
தீனமில்கலன்கடம்மிலினியனவணிதல்செய்தார்
மானணிநோக்கினார்தம்மங்கலக்கழுத்துக்கெல்லாந்
தானணியாயபோதுதனக்கணியாதுமாதோ"

எனக் கம்பர்கூறுதலாலும் பிறவும் வருவனவற்றாலும் விளங்கும். இவ்வாறுதமிழர் தாலியை விவாகவடையாளமாகக்கொண்டதுபோல, ஆரியர் கொண்டிருந்தவரென்று தெரியவில்லை. ஏனெனில்,விவாகக்கிரியைகளொவ்வொன்றற்கும் ஆரிடவிதியும் வேதமந்திரங்களும் இருப்பினும், மாங்கல்யதாரணத்துக்கு அவைகாணப்படவில்லை. பாணிக்கிரஹணமே ஆரியவிவாகத்தின் கோட்பாடாம். தமிழ்ப்பழையநூல்களுள்ளே, சிந்தாமணியில் இலக்கணையாரது மணங்கூறப்பட்டவிடத்தும், திவ்யப்பிரபந்தத்து நாச்சியார்திருமொழியிலே "வாரணமாயிரம்" என்னுந் திருப்பதிகத்தும், இராமாவதாரக் கடிமணப்படலத்தும் பிறண்டும் ஆரியவிவாகத்துநிகழுங்கிரியைகள் கூறப்பட்டவிடங்களில் மாங்கல்யதாரணம் மறக்கப்பட்டமை அதிசயிக்கத்தக்கது. ஆரியரதுபண்டைவழக்கு இவ்வாறாயினும் தென்னாட்டாரது தாலிகட்டும் வழக்கைநோக்கிப் பிற்காலத்தாரியமக்கள் அதனைத் தழுவலாயினர். பின்வந்த போழப்பர் முதலிய ஸ்மிருதிகர்த்தர்கள் விவாகக்கிரியைகூறிச்செல்லுமிடத்தே மாங்கல்யவமைப்பு முதலியவற்றைக்கூறாது சூத்திரமணிதலைமட்டும் தம் ஸ்வவசனத்தாற்குறிப்பிட்டுச்செல்ல, அவர்க்குப்பின்வந்தவர்,

மாங்கல்யதந்துநாநேந மம ஜீவநஹேதுநா ।
கண்டே பத்நாமி ஸுபகே ஸஞ்ஜீவ சரதஸ்சதம் ॥

என்னும் சுலோகத்தைக்கொண்டு அவ்விதியை அநுஷ்டித்து வருகின்றனர். இச்சுலோகத்திலும் மாங்கல்யதந்துவேயன்றி அதனுட்கோக்கப்படுவது கூறப்பட்டதில்லை. ஆயினும், பொன்னால் ஒருவகையுருவமைந்ததொன்று ஆரியர்க்குள் அணியப்படுகிறது. இதனுருவை நோக்கும்போது ஆதித்தமிழரது புலிப்பற்றாலியின் அமைப்பாகவே தோற்றுகிறது. தமிழ்நாட்டு ஆரியமக்கள் இவ்வகைத் தாலியை வழங்கிவர, ஏனையவிடங்களில் வெவ்வேறு உருவுடன் அதை அணிந்துவருகின்றனர். இவற்றால் "யாழோர்கூட்ட"த்தையும் அதன்பின்னிகழ்ந்துவந்த விவாகமுறையையும் பற்றிய சரிதங்கள் ஒருவாறு விளங்கும்.

பத்திராசிரியர்.

---



மாட்சிதங்கிய பரோடாமகாராஜா அவர்கள்
கைத்தொழிலைப்பற்றிச் செய்த

# மஹோபந்நியாசம்.

(முற்றொடர்ச்சி.)

நீராவியின் உதவிகொண்டு செய்யப்படும் முக்கிய தொழிற்சாலைகளின் மொத்தத்தொகைகளும், மற்றக் கைத்தொழிற்சாலைகளின் விவரக்குறிப்பும் யாவரும் எளிதிலறிவதற்காக கீழே காட்டப்பட்டிருக்கின்றன.

| | சாலைகள். | ௵ 1895-ல் | ௵ 1904-ல் |
|---|---|---|---|
| 1. | பஞ்சியந்திரசாலை | 148 | 203 |
| 2. | சணற்சாலை | 28 | 38 |
| 3. | கம்பளிச்சாலை | 5 | 6 |
| 4. | பருத்தியினின்று கொட்டை நீக்குதற்கும் அது சுத்தி பண்ணப்படுதற்கும் பின் பஞ்சு அழுத்துவதற்குமான யந்திரசாலைகள். | 610 | 951 |
| (5) | மாஅரைக்கும் சாலை | 72 | 42 |
| (6) | அரிசியந்திரசாலை | 87 | 127 |
| (7) | சர்க்கரைச்சாலை | 247 | 28 |

| | | | |
|---|---|---|---|
| (8) | பட்டுநூற்சாலை | 89 | 75 |
| (9) | பட்டுநெசவுச்சாலை | 28 | 11 |
| (10) | தோல் பதனிடும் சாலை | 60 | 35 |
| (11) | எண்ணெய்ச்சாலை | 163 | 112 |
| (15) | அரக்கு மெழுகுச்சாலை | 138 | 128 |
| (16) | இரும்பு பித்தளைத்தொழிற்சாலை | 64 | 89 |
| (17) | அவுரிநீலத்தொழிற்சாலை | 8225 | 422 |

மேலேகாட்டிய தொகைகளை நீங்கள் பார்த்தமாத்திரத்திலே நம் தேசத்தில் நீராவியின் உதவியால் நடத்தப்படும் முக்கிய கைத்தொழில்களைக்கொண்டு நம் நிலைமையை யறியலாகும்.

சில கைத்தொழில்களில் மாத்திரம் (உதாரணமாக, நெசவுத் தொழிலை யெடுத்துக்கொள்ளலாம்) நாம் ஏதாவது கொஞ்சம் முன்னுக்கு வந்திருக்கிறோம் என்றும் நமக்குவேண்டிய மொத்தத்தேவையில் ஒருகாற்பாகமாவது நாமே செய்துவருகிறோமென்றும் நாம் அறிந்துகொள்ளலாம். கம்பளி, சணல்போன்ற கைத்தொழில்களில் நாம் ஏறக்குறையமுழுதும் ஐரோப்பிய முதலையும் முயற்சியையுமே எதிர்பார்த்திருக்கிறோம். நாமாகவே, இதுவரை அத்தொழில்களின் விஷயமாய் சிரத்தையாவது முயற்சியாவது எடுத்துவரவில்லை. சர்க்கரைத்தொழில், தோல்பதனிடும் தொழில் (Tanniñg) இரண்டையும் பத்துவருடங்களுக்குள் இழந்தேவிட்டோம் மேலும் இரும்பைப்பற்றியோசிக்குமிடத்து, நாம் சற்றுக்குறைய முழுதும் அந்நியரைச் சார்ந்திருக்கிறோம். நம் தேசத்துத் தொழிற்சாலைகளில் ஆக்கப்படுவதெல்லாம் நமக்குக் கொஞ்சந்தான் காணுகிறது. ஆகையால் நான் முன்சொன்னதையே வற்புறுத்திச் சொல்லுகிறேன்:—

"நம் தொழில் இனி விர்த்தியாவதற்கு இடமிருக்கிறதென்றே நம்பலாம்; ஆனால் நாம் சந்தோஷப்படுவதற்கானபடி அவ்வளவு அபிவிருத்தியில்லை. இனிமேலாகவாவது நாம் ஊக்கத்துடன் இடைவிடாது உழைத்துவருவோமாகில் இத்தொழில்களில் அடையவேண்டிய சித்தியை நாமடையலாகும் என்பதற்குத் தக்க காரணங்களிருக்கின்றன."



அந்நிய . தலால் நடத்தப்படும் கைத்தொழில்கள்.

தற்கால நிலைமையைச் சுருக்கமாய்ச் சொல்லி முடிப்பதன்முன் ஒரு விஷயத்தைப்பற்றி நான் உங்கள் மனதில் அழுந்தவுரைக்க விரும்புகிறேன். அந்நியமுதல் சம்பந்தப்பட்டு நடத்தப்பெறும் யந்திரமூலத்தொழில்கள், தேயிலை அவுரி காபிமுதலிய மற்றத் தொழில்கள் இவைகளைப் பற்றி அதிக கவனம் செலுத்தவேண்டும். இப்பேர்ப்பட்ட தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் கூலியாட்கள் அதிக சொற்பமே. கைத்தொழிற் சனத்தொகையில் (Industrial population) அநேகம்பேர் நம்தேசத்துக்குரிய தொழில்களைப் பின்பற்றிவருகிறார்கள். அவர்கள் தத்தம் கிராமாந்தரங்களிலேயும் கடைகளிலேயும் உழைத்துவருகிறார்கள். நம் இந்தியா தற்காலத்தில் இருக்கிறபடியே எக்காலத்திலும் கிராமாந்தர கைத்தொழிற்றேசமாகவே யிருக்கும் (Land of cottage industries). நூறாயிரக்கணக்கானபேர் யந்திரசாலைகளில் உழைத்துவர, கோடிக்கணக்கானபேர் தத்தம்குடிசைகளிலிருந்தே தொழில்செய்துவரக் கூடும். யந்திரசாலைகளைப் பெருக்கி நம்நாட்டின் தொழிலாளிகளின் நிலைமையைப் பண்படுத்தலாம் —என்று எண்ணுகிறஎண்ணம் நம்தேசத்தைவிட்டு 6000-மைலுக்கு அப்பாலுள்ளவர்கள் நினைக்கிற வீணான தப்பெண்ணமாகும். கனவான்களே! அம்முறையால் சாத்தியமேயாகாது. நம்தேசத்துக் கைத்தொழிலாளிகள் நிலைமையைச் சீர்திருத்தம்பண்ண உண்மையாகவேநினைப்பவர்கள், தொழிலாளிகள் தத்தங்குடிசைகளிலிருந்துகொண்டே உழைக்கத்தக்கபடி ஓர்முறை கண்டுபிடித்தாற்றான் அவர்கள் எண்ணம் முற்றுப்பெறும். நாடுநகரங்களில் நெசவுத்தொழிலைக் கைப்பற்றியும், தத்தம்குடிசைகளிலிருந்தே பித்தளைப்பண்டப், தாம்பிரப்பண்டங்களைச் செய்தும் தம்முன்னோர்வழக்கப்படி அவரவர் தொழிலைக் கைப்பற்றிவரும் ஏழைக்குயவர்களையும், கொல்லர்களையும் தச்சுவேலைசெய்வோரையும் நாம் பாதுகாத்துத் தக்கவுதவிபுரிந்துவரவேண்டும். மேற்குறித்தவர்களே (விவசாயஞ்செய்து பிழைப்பவரல்லர்: அல்லதுயந்திரசாலைகளில் தொழில் செய்து பிழைப்பவரல்லர்) இக்காலத்தில் போதுமானபடி ஜனங்களது உதவியின்றிப் பஞ்சத்தில் முதலில் அடிபட்டு விழுகிறவர்கள். கனவான்களே! தற்காலத்

திற் பிரபலமாயிருக்கும் 'சுதேசக்கிளர்ச்சி'யானது, இதுவரை கவனிக்கப்படாமல் அலக்ஷியஞ்செய்யப்பட்ட மேற்குறித்ததொழிலாளிகளுக்கு ஒரு ஜீவனோபகாரமாயும் (சொற்பகாலத்துக்குள்ளேயே நாம் உணரக்கூடியவளவு அக்கிளர்ச்சி நம்தேசத்துக்கு நன்மை செய்திருக்கிறதென்றே நம்புகிறேன்) அவர்கள்செய்யும் கைத்தொழில்களை முன்னுக்குக்கொண்டுவந்து, அபிவிருத்திசெய்யக்கூடியதாயும், தக்கவேலை கிடைக்காமல் கஷ்டப்படும் தொழிலாளிகளுக்கு அது பரமோபகாரமாயுமிருக்கும் பக்ஷத்தில், அச்சுதேசக்கிளர்ச்சியில் எனக்குள்ள அபிமானம் இவ்வளவு அவ்வளவு ஆகாது. பெருங் கைத்தொழில்களை தக்கஉதவிபுரிந்து முன்னுக்குக்கொண்டுவருவதோடுகூட சாமான்ய கீழ்த்தரத்தொழில்களில் உழைக்கும்தொழிலாளிகளையும் தூக்கிவிடுங்கள். நீங்கள் அப்படிச்செய்வீர்களானால் கோடிக்கணக்கான கீழ்த்தரத்தொழிலாளிகளும், பொதுவாய் நம்தேசத்தாரும், ராஜாங்கத்தாரும் உங்களையும் உங்கள் முயற்சியையும் ஆசீர்வதிப்பார்கள்.

## கஷ்டங்களும் அவைகளை யெதிர்த்துவெல்லுமுறையும்.

கனவான்களே! இவைகளையெல்லாம் சொல்லிமுடித்ததால் நமக்கு இடையிலுறும் கஷ்டங்களைக்கவனிக்கவில்லையென்றாவது அவைகள் ஏறக்குறைய ஒழிந்தனவென்றாவது எண்ணமுடியாது. நாம் சென்ற இரண்டுநூற்றாண்டாக இழந்தஇடத்தைப் பின்னும் கைப்பற்றவேண்டும். நாம் கைத்தொழில்விஷயங்களில் பரிசயம் அதிகமில்லாமலும் தரித்திரராயுமிருந்துகொண்டே மிக்கதனவந்தர்களோடும் அத்தொழில்களில் அதிகப்பயிற்சியடைந்தவர்களோடும் சாமர்த்தியசாலிகளோடும் போட்டிபோட வேண்டியதாயிருக்கிறது. நாம் பழையமுறையோடு புதுமுறைகளிலும்பழகிப் புதிதாய்க்கண்டுபிடிக்கப்பட்ட நவீனமாதிரிகளை நன்றாய் அறிந்துகொண்ட பின்னரே இந்நூதனவழிகளைக்கண்டுபிடித்த ஜாதியாரை நாம் வெல்லவேண்டியிருக்கிறது. இதை எதற்கு ஒப்பிடலாம் என்றால், தாங்களே கண்டுபிடித்த ஆயுதத்தில்பயிற்சியிருந்த மேனாட்டுஜாதியாரோடு நாம் இதுவரை பழகாத அதே ஆயுதங்களைக்கொண்டு அவர்களை யெதிர்த்து வெல்லவேண்டியதுபோலும். நம் நாட்டில் தாழ்நிலையிலிருக்கும் யந்திரோபாயத்தைக்கொண்டு இங்கிலாந்து ஜெர்மானி, அமெ



ரிக்கா முதலிய அந்நியதேசங்கள் நம்தேசத்தில் மிகுதியாகப்பெருக்குகின்ற அந்நியச்சரக்குவெள்ளத்தைத் தடுக்கவேண்டியிருக்கிறது.

ஆகையால், நம் கைத்தொழில்கள் அந்நியநாட்டுக்கைத்தொழிற்பெருக்கமிகுதியால் அழிந்துபோமோ என்றபயம் ஜனிக்கின்றது. பழையமுறைகளையும் தொழில்களையுமே அநுசரித்துவந்தால் கட்டாயம் அவை இறந்தேபோகும். ஆகையால் சுதேசக்கிளர்ச்சியாலேயே நீங்கள் மேற்குறித்த நியாயத்தையறிந்து கொள்ளவேண்டும். நீராவி மின்சாரசக்திகளினால் போக்குவரவுச்சாதனங்கள் இலகுவாயும் நயமாயும் ஏற்பட்டுஅந்நியநாட்டுச்சாமான்கள்வந்து உங்கள் சொந்த சாமான்களை அமுக்கி அவைகள் முன்னுக்குவந்திருப்பதைப் பார்த்தாவது நீங்கள் அதிவிரைவில் எழுந்து, சிறந்த யுக்தியோடும் சாமர்த்தியத்தோடும் தக்கமுறைகளை அநுசரித்து இம்மாதிரியான அந்நியக்கொள்ளையை நிறுத்தமுயலுங்கள். இயற்கையில் அமைந்துள்ள சக்திகளை ஒருங்கு திரட்டவும் அவைகளின் மர்மத்தையறியவும் முயலுங்கள். அச்சக்திகளைப் பலவிதமாகத் தக்கபடி உபயோகியுங்கள். அச்சக்திகள் மனிதனுக்குத்தொண்டூழியம் செய்யும்படி அவற்றைப் பலபடியாகவும் திருப்புங்கள். கைக்குப்பளுவானவேலைகளை அவைமூலமாய் இலகுவில் செய்யும்படி யுக்தியையுபயோகியுங்கள். புத்திசாலிகள் முதலாளிகள் ஊக்கமுடையவர்கள் செய்யும்வேலைக்கும் அப்படியல்லாதவர் செய்யும் வேலைக்கும் தாரதம்மியம் யாவருக்கும் தெரிந்ததே. ஒருங்கு சேர்ந்து உழைக்கக் கற்றுக்கொள்ளுங்கள். காலத்தை வீண்செலவு செய்யாதீர்கள். பணத்தை லாபத்துறைகளில் உபயோகிக்க முயலுங்கள். உங்கள் முயற்சிகளையெல்லாம் ஒருங்குகூட்டினால்தான் சீக்கிரம் தேர்ச்சியடையலாம்.

## சுதேசீயம்.

மேற்குறித்த நிலைமைகளை உத்தேசிக்க 'சுதேச அன்பு' தேசத்தின் தற்காலதரித்திரநிலைமையை நீக்குவதற்குக்கிரமமான கருவியாகும். அதை நன்றாயுணர்ந்து வேலைசெய்தால் அதனால் அடையும் நன்மை அபரிமிதம். சுதேசத்தொழில்களை விர்த்தியாக்குவதென்ற ஊக்கத்தோடு கூடிய 'சுதேசக்கிளர்ச்சி'யில் ஒருகுற்றமுமில்லை. உண்

மையானசுதேசியாரென்றால், சொற்பவிலையில் அதிகசாமான் செய்ய முயல்பவனே. ஒவ்வொருவரும் சுதேசாபிமானத்தைமேற்கொண்டு, ஆரம்பத்தில்சுதேசசாமான்களை வாங்குவதாலுண்டாகும் அதிகவிலையையும் சிற்சில அசௌகரியத்தையும் பொறுத்துக் கொள்ளவேண்டும். ஆனால், தேசாபிமானக்கிளர்ச்சி எவ்வளவுபலமாகவிருந்தாலும், நாளடைவில் சுதேசச்சாமான்கள் நல்ல நிலைமையையடைந்து மற்ற அந்நிய நாட்டுச்சாமான்களின் உயர்ந்தமாதிரியைக் கொண்டாலொழிய நிலைத்துநிற்க முடியாது. நீங்கள் அப்படிச்செய்தால்தான் உங்கள் 'சுதேசக் கிளர்ச்சி'யாகிய கருவியினால் வெல்லச்சாத்தியமாகும்.

## இந்தியக் கரும்புச்சர்க்கரைத் தொழில்.

மேற்கூறிய கஷ்டங்களினால் நம்தொழில்கள் தத்தம் நிலைகெட்டுப்போய் பரிதாபமான கேவலநிலைமையிலிருக்கின்றனவென்பதற்கு ஒரே திருஷ்டாந்தம் போதும். இந்தியக்கரும்புச்சர்க்கரை (Cane-sugar) ஏற்றுமதி நின்றேபோய்விட்டது. ஜெர்மானியா, ஆஸ்திரியாவிலிருந்து இறக்குமதியாகும் ஒருவகைக் கிழங்குச் சர்க்கரை (Beet-root sugar) நம்நாட்டுச் சர்க்கரையை ஓட்டிவிட்டது. அந்நியநாட்டுச் சர்க்கரையின்மேல் அதிகத்தீர்வைகள் (Import duties) போடப்பட்டிருந்தும், தீர்வையின்றியிருக்கும் நமது சர்க்கரை வியாபாரத்தை, அது இங்குவந்து அழித்துவிட்டதைக்கவனிக்க ஆச்சரியத்தைக்கொடுக்கிறது. இதற்குக்காரணந்தேட எங்கும்போகவேண்டுவதில்லை. நம்மிடந்தானிருக்கிறது. அந்நியரது சட்டங்களால் ஏமாற்றங்கள்நிறுத்தப்படலாம். அந்நியச்சரக்குகளின்மேல் போடப்படும் தீர்வைகள், அத்தொழில்கள் வளர்ந்து ஓங்கும்படி அவ்வத்தேசங்களது கவர்ன்மெண்டார்கொடுத்துஉதவும் ஏராளமான போஷணைப்பணமிகுதியை (Bounties) ஒருவாறு எதிர்க்கலாம். ஆனால், நம் தொழிலாளிகள் தம்நிலைமையை உத்தேசித்து மோசமுறைகளையநுஷ்டித்தால் அவற்றையெப்படிச்சீர்திருத்தஞ் செய்யலாகும்? இந்தியச்சர்க்கரை அதிகமாகத்தேசத்துக்கு வேண்டியிருக்கிறது என்றாலும், அந்நியநாட்டார் ஏராளமான உதவி புரிந்து போஷித்துவரும் கிழங்குச்சர்க்கரையின் (Beet-root sugar) (சரசமான) விலையை உத்தேசித்து நம் சர்க்கரை நம் தேசத்திலேயே அதிகமாக வாங்கப்



படுவதில்லை. நம் தேசத்தில் கரும்பினின்று சர்க்கரைச்சாற்றை முற்றும்இறக்கும் முறை சரிவர இல்லாததினால், அதிகக்கரும்பு நஷ்டமாகின்றது. நூதனமுறைகளை அனுஷ்டிக்காது, பழையமுறைகளையே மூடத்தனமான பழக்கத்தோடு செய்துவருவதை நிறுத்தல்வேண்டும்.

## சென்னையில் பதனிடும் தொழில்.

தக்கயந்திரங்களைக்கொண்டு நூதனமுறைகளையநுசரிக்காத குற்றத்தினால், சென்னையில் தோல்பதனிடும் தொழில் (Tanning) அழிந்துவிட்டது. இந்தியாவில் பதனிடப்படும் தோலைவாங்குவதைவிட அமெரிக்காவில் நவீனமுறைகொண்டு நன்றாகப்பதனிடப்படும் தோல்விலை சரசமாயும் நேர்த்தியாயுமிருக்கிறது. இதுபோல, நீலவகைகளும் நீல் எண்ணெயும் இப்போது ரசாயன சாஸ்திர உதவிகொண்டு (Synthetic chemistry) செய்யப்பட்டு அவை சம்பந்தமான விவசாயத்தைத் தாழ்த்திவிட்டன. விலை அதிகசரசமாகி உலகமுழுதும் ஜெர்மனியின் நீலச்சரக்குப்பரவியிருப்பதால் பங்காளத்து அவிரி நீலவியாபாரம் அதிகமாய் இறங்கிவிட்டது. 1895-ம் ௵த்தில் 53,000,000-க்கு விலையான அவிரி ஏற்றுமதியானது, 10 வருஷம் கழித்து 6000000-க்கு இறங்கினதோடுகூட அதன் பிறகும் அது அதிகக்ஷீணதசையையடைந்து வருவதானது அதிகவருத்தத்தைக் கொடுக்கிறது. 1905-ல் 75-லட்ச ரூபாவுக்குக்குறையாதபடி சாயவகைகள் ஜெர்மனி, பெல்ஜியம், ஆலந்து முதலிய இடங்களிலிருந்து இங்கே இறங்குவதால், அத்தொழில்களைச்சார்ந்த இந்தியசாயக்காரர்களது பிழைப்பை முற்றும் ஒழித்துவிட்டது.

ஆகையால், நம்தேசத்துக் கைத்தொழில்களின் அபிவிருத்திக்குத்தகுந்த சாதனங்களைப்பெருக்கியும், நமது எளிமைத்தனத்தை நீக்கும்படியான முயற்சிகளைச் செய்தும் வரவேண்டியது அவசியம். இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதிக்கணக்கிலிருந்து நாம் அநேக விஷயங்கள் படித்துக்கொள்ளலாம். அக்கணக்குகளிலிருந்து அறியப்படுவதென்னவென்றால், (1905-ம் வருடம் சம்பந்தப்பட்டமாத்திரத்தில்)நம்தேசத்துத்தக்க தொழிலாளிகளுக்குப் பயன்படாமலும் இந்திய முதலைக்கொண்டு நடத்தி நாம் பிரயோசனமடையாமலும் 100-

க்கு 69-பங்கு விளைபொருள்களை அப்படியே ஏற்றுமதி செய்திருக்கிறோம். அதேவருஷத்து மொத்த இறக்குமதிக்கணக்கைக் கவனித்தால் 100-க்கு 59-பங்கு அந்நியக்கைத்தொழிற் சாமான்களாகும். அந்நியரே இவற்றின்முழுப்பிரயோசனத்தையும் அடைந்துவருகிறார்கள். ஒருதேசத்தின் கைத்தொழிலபிவிர்த்தியை அறியவேண்டுமானால், அத்தேசத்துக் கைத்தொழிற் பண்டங்களின் ஏற்றுமதிக்கும் அவ்வாறே அங்கிருந்து வெளியேறும் விளைபொருள்களின் ஏற்றுமதிக்குமுள்ள தாரதம்மியங்களையும், அந்நியநாட்டிலிருந்து அத்தேசத்தில் இறக்குமதியாகும் மற்றைநாட்டு விளைபொருள் செயற்கைப்பொருள்களின் தாரதம்மியங்களையுங்கொண்டு தெளியவேண்டும். ஒரு தேசம் தன் கைத்தொழிற் பண்டங்களை அதிகமாக ஏற்றுமதி செய்தும் அந்நிய தேசங்களிலிருந்து அவற்றின் விளைபொருள்களை அதிகமாகப்பெற்றும் வந்தால், அவற்றின் மூலம், அத்தேசத்தின் கைத்தொழிற் செழிப்பையும்; அது தன்னாட்டு விளைபொருள்களை அந்நிய தேசங்கட்கு அதிகமாக ஏற்றுமதிசெய்தும், மற்றைய நாடுகளிலிருந்து கைத்தொழிற்பண்டங்களை இறக்குமதியாகப்பெற்றும் வந்தால், அந்நாட்டின் கைத்தொழிலின் கேவலநிலைமையையும் நாம் அறியலாகும்.

மேற்குறித்த ‘தேசத்தொழினிலைவிதி’ யாவரும் நம்பத்தகுந்ததொன்றேயாம். இந்தியா மற்றைய தேசங்களோடு செய்யும்வியாபாரமுறையில் கவனிக்கவேண்டிய ஒருதுக்ககரமான விஷயம் என்னவென்றால், அதன் இறக்குமதியைவிட பலமடங்கு அதிகமாய்க்கொண்டே வருவது அதன் ஏற்றுமதி என்பதே.

நாம் அந்நிய முதலுக்கும் முயற்சிக்கும் மிகவும் அதிகமாக அடிமைப்பட்டிருக்கிறோம். நமது இருப்புப்பாதைகள் ஐரோப்பிய முதல்கொண்டு நடத்தப்பட்டுவருகின்றன. அமெரிக்கா சாஸ்திர நிபுணர்கள் (Savants from America) நம் சுரங்கங்களைக் கண்டுபிடித்து அதினின்றும் அபரிமிதமான ஆதாயத்தையடைகிறார்கள். தினந்தோறும் நம் கிரகத்துக்குவேண்டிய சாமான்களுக்கும் அந்நியக்கைத்தொழில்களையே எதிர்பார்த்திருக்கிறோம். நாம் உண்டு உடுப்பதும், பெருக்கி மெழுகுவதும், கண்டுகளிப்பதும், சுகிப்பதும் ஊர்ந்துலாவுவதுமான சௌகரியங்களையடைவதற்குஅந்நியத்தொழிலாளிகள் கையை நாம் எதிர்பார்த்தவர்களாயிருக்கிறோம். தற்காலத்தில் நம் கைத்தொழில்களிருக்கும் நிலைமையைச் செங்குத்தான ஒரு மலையின் உச்சி ஓரத்திலிருக்கும் வஸ்து ஒன்றுக்கு ஒப்பிடலாகும். ஆகையால், நம் கைத்தொழில்கள் விழுந்து சிதைந்துபோகுமோ என்ற பயம் பிறக்கிறது. இவ்விதபயங்கர நிலைமையினின்றும் நம் கைத்தொழில்களைக்காத்து அவற்றிற்காக மேனாட்டையே எதிர்பார்க்கும் அடிமைத்தனத்திலிருந்து தேசத்தை எப்படி மீட்பதென்று யோசித்து நிர்த்தாரணம் செய்யவேண்டிய பிரசினை நம்முடைய கவனத்தையும் சிரத்தையையும் பொறுத்ததாகவிருக்கிறது. இவ்விதமாக நம் கைத்தொழிலடைந்துள்ள நோய்க்கு ஒரு தக்க பரிகாரத்தைக்கண்டுபிடிக்க ஒவ்வொரு சுதேசாபிமானியும் ஒவ்வொரு ராஜதந்திரியும் கவலையோடு எண்ணுவாராயினர். கனவான்களே! இவ்விஷயத்தைக்குறித்துத் தக்க ஊக்கமான முயற்சியை முன்னரே யெடுத்திருக்கிறீர்கள். ஆகையால் வெகுசீக்கிரத்தில் அபிவிருத்திபெறக்கூடியதும் யானறிந்ததுமான கைத்தொழில்களின் பேர்களைமாத்திரம் சொன்னால் போதும். அவையாவன:—



1. நெசவுத்தொழில்.
2. தச்சுவேலை, மற்றுமுள்ள மரவேலை.
3. இரும்பு, செம்பு, பித்தளைத்தொழில்.
4. தங்கம், வெள்ளி, மற்ற நகைவேலை.
5. சிற்பம் மற்றக்கல்வேலை.
6. குடம்வனைதல் செங்கல் ஓடு வேலைகள்.
7. சாயத்தொழில்.
8. தோல்பதனிடும் தொழில்.
9. கயிறுபின்னல்.
10. பிரம்பு, மூங்கில்வேலை, பாய்பின்னல்.
11. கண்ணாடிவேலை.
12. கடைசற்றொழில், அரக்குத்தொழில்.
13. கொம்பு, தந்தம், சித்திரக்கொத்துவேலை.
14. சித்திரத்தையல்வேலை(Embroidery.)
15. சர்க்கரைச்சுத்தித்தொழில் (Sugar refining.)

16. புகையிலை நயமிடுதொழில் (Tobacco curing)
17. எண்ணெயிறக்கும், மாஅரைக்கும் தொழில்.

மேற்கூறிய தொழில்களில் நம்தேசத்தில் அதிகமாய்ச்செலவாவதும் இதுவரை அந்நியதேசங்களுக்குக் கப்பல்கப்பலாய் அனுப்பி அங்கே அவற்றைக்கொண்டு செய்யப்பட்ட தொழிற்சாமான்களில் இங்கு அதிக இறக்குமதியாவதுமான கைத்தொழில்களை ஆரம்பத்தில் நாம் எடுத்து நடத்தலாம். நாம் இயற்கைப்பொருள்களை ஏராளமாக ஏற்றுமதிசெய்வதை நிறுத்தித் முற்றியகைத்தொழிற் பொருள்களை ஏற்றுமதிசெய்ய முயலவேண்டும். 1905-ல் நாம் 10600000 ரூபா பெறத்தக்க எண்ணெய்விதைகளை ஏற்றுமதிசெய்து 22000,000 ரூபா பெறலான எண்ணெயை இறக்குமதியாகப் பெற்றோம். சென்ற வருஷத்துக் கணக்குப்படி பம்பாய் ராஜதானியிலுள்ள எண்ணெய்ச்சாலை 76-தொழிலாளிகளுக்கு மாத்திரமே வேலைகொடுத்தது. சென்ற 10-வருஷகாலத்துக்குள் எண்ணெய் இறக்கும் யந்திரங்கள் 100-க்கு 47 குறைந்தன. ஏனென்றால், நம்தேசத்தில் நயமற்றதும் புராதனமுமான முறைப்படி எண்ணெயிறக்குவதைக் காட்டிலும் அந்நியநாடுகளுக்கு எண்ணெய்விதைகளை ஏற்றுமதிசெய்து அங்கிருந்து இறக்கப்பட்ட எண்ணெயை இறக்குமதியாகப்பெறுவது லாபமென்று காணப்படுகிறது. ஆனால் ஒருவிஷயம் கவனிக்கத்தக்கது. டாக்டர் வீல்கர் (Dr. Voelcker) குறிப்பிட்டுச்சொன்னபடி, எண்ணெய் விதைகள் முழுவதையும் ஒரு தேசத்தினின்று ஏற்றுமதிசெய்வது அத்தேசத்தின் நிலவளத்தையே ஏற்றுமதிசெய்ததாகும்.

## நம் தொழில்களின் கேவலநிலை.

ஒவ்வொரு வருஷமும் நாம் ஏராளமான கோதுமையையும் மற்றதானியங்களையும் ஏற்றுமதிசெய்துவர அவை அந்நியநாட்டுயந்திரங்களில் மாவாகத்திரிக்கப்பட்டு இங்கே இறக்குமதியாக, அவற்றை உபயோகிக்கிறோம். சென்ற வருஷாந்தக்கணக்குப்படி பம்பாய் ராஜதானியிலுள்ள கோதுமைமா யந்திரங்கள் (Wheat flour mills) 78 கைத்தொழிலாளிகளுக்கு மாத்திரம் வேலைகொடுத்ததாகத் தெரி



றது. மேற்குறித்த விஷயம் நம் கைத்தொழில்களின் கேவலநிலைமையையும் அவைகளுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டநிஷ்டூரங்களையும் விளக்குவதற்குத் தக்கசான்றாம். இவ்விடையூறுகளை யெதிர்த்துச் சென்று வெல்ல, நீங்கள் யோசித்துமுயலவேண்டும். நல்லநோக்கமும் அநுதாபமுமுள்ள கவர்ன்மெண்டார் தக்க சட்டங்கள் ஏற்படுத்தி உங்கள்முயற்சியை ஊக்கி உங்களை முன்னுக்குக்கொண்டுவரவேண்டியது அவர்கள் கடமை.

நான் நான்கு வருடங்களுக்குமுன் அகமடாபாத்தில்(Ahmedabad) சில குறிப்புரைகள் கூறினேன். அவற்றை உங்களுக்குத்திரும்பவும் இப்போது சொல்லுகிறேன்.

"பஞ்சமும், மேன்மேல் விர்த்தியாகும் எளிமையும், அதிகமாய்ப்பரவும் வியாதிகளும்—இவையெல்லாவற்றிற்கும் காரணமாய் நம் முறையில் (System) ஏதோ ஓர் ஊழல் இருக்கிறது. ஆகையால் உடனே அதைப் பரிகரிக்கச் சில காரியம் செய்யப்படவேண்டும். ஆனால் இதைக்காட்டிலும் மேலான விஷயம் ஒன்றிருக்கிறது. அது நம்தேச நிலைமையைப்பற்றிய முக்கியமான பிரசினையாம். அதைவிள்ளுதற்கு இதுதான் கடைசித்தருணம். நீங்கள் முயற்சிசெய்யாது தவறுவீர்களானால் ஒருகாலமும் நன்மைகிடையாது. வரவரத் தரித்திரராயும் பலமற்றவராயும் ஆவோம். மேன்மேல் அந்நியநாட்டாரையே சாரவேண்டியதாயிருக்கும். கைத்தொழிற் சுவாதீனத்தை (Industrial independence) வெகு ஜாக்கிரதையோடு காத்துவரவேண்டும்: அப்படியில்லாமல் அது தளர்ந்து அழியநேரிடுமாயின் நம்மையாள்வரும் எந்த அந்நியஜாதியாருக்கும் கேவலம் மரம்வெட்டுபவராயும் தண்ணீர் எடுத்துக்கொடுப்பவராயும் ஊழியம்செய்யும்படிதான் நேரிடும்.

ஆகையால் கைத்தொழிலை அபிவிருத்திபண்ணி அந்நியநாட்டாரைச் சார்தலாகிய அடிமைத்தனத்திலிருந்து விடுத்துக்கொள்ளுங்கள். அப்படிச்செய்ய முயல்வீரேல் நீங்கள் முற்காலத்தில் அடைந்திருந்த உன்னதநிலைமையைச் சீக்கிரத்தில் பெற்று முதற்றரஜாதியாரோடு நீங்களும் வைத்து எண்ணப்படுவீர்கள்."

மேற்கூறியவைதாம், நான் அகமடபாத்தில் கூறிய மொழிகள். நான் அவற்றைத்திரும்பவும் இப்போது உரைத்ததற்குக்காரணம், நான்கு வருடங்களுக்கு முன் அதன் முக்கியத்தை நாமுணர்ந்திருந்ததைக்காட்டிலும் இப்போது ஒருவாறு அதிகமாய் அறிகிறோம் என்பதே. நாம் நமதேசத்துச் சரித்திரத்தின் முக்கியமான தறுவாயொன்றில் நிற்கிறோம். தூக்கத்தினின்றும் எழுந்து சுருசுருப்புடனும் ஐக்கியத்துடனும் ஒத்துழைத்து நமது கைத்தொழிற் சுவாதீனத்தை அடையவேண்டியகாலம் கிட்டுகிறது. தவறினால் அநேகநூற்றாண்டுகளுக்கு அமுங்கிக்கிடக்கவேண்டியதுதான். நாம் இப்பொழுதே கைத்தொழிலில் முன்னடைந்திருந்த சுவாதீன நிலைமையைப் பாடுபட்டுழைத்தேனும் திரும்பவும் அடையமுயலவேண்டும். தவறினால் நாம் நமது சந்ததியாருக்குச் செய்யவேண்டிய கடமையை மறந்து துரோகம்பண்ணினவர்கள் ஆவோம்.

இப்படிக்கூறுவதால், நமது தற்கால நிலைமையை வீணாகப்பிரமாதப்படுத்தி உரைத்ததாக எண்ணமாட்டீர்கள் என்று நிச்சயிக்கிறேன். நாமே நம்மை ஆழ்ந்துபோகும்படி செய்துகொண்டதற்குக் காரணமான அந்நியக்கைத்தொழில் அடிமைத்தனத்தினின்றும் நம்மை இந்தத்தக்க தறுவாயிலேயே மீட்பித்து சுவாதீனப்படுத்திக்கொள்ளாவிட்டால், நமக்கு இனிமேல் விமோசனமில்லையென்று நான் உணருவதுபோல் நீங்களும் உணருவது திண்ணம். நான் முன் உரைத்தபடி இதுவே கடைசியான தக்கதருணம்.

## பொருட்காட்சிச் சாலைகளும் அவற்றையொட்டிய சங்கங்களும்.

மேற்கூறிய இரண்டும் வித்தியாபிவிருத்தி விஷயமாய்த் தக்க பலனைக் கொடுத்திருக்கின்றன. கனவான்களே! இனிமேலாக, நீங்கள் இது விஷயமாய் எடுத்திருக்கிற முயற்சியைப்பற்றியும் அம்முயற்சி பூர்ணபலனைக்கொடுக்கக்கூடிய முறைகளைப்பற்றியும் சில விஷயமே கூறலாம் என்று நினைக்கிறேன். நம்தேசத்துக் கைத்தொழிற்சரித்திரத்தில் ஒரு முக்கிய காலத்தில், நமது 'நாஷனல் காங்கிரஸ்' (Indian National congress) வருஷா வருஷம் கூடும் காலத்திலே



இந்தியாமுழுமையுமுள்ள கைத்தொழிற் பொருட்காட்சிச் சாலையையும் சேர்த்துவைத்துக்கொள்ளவேண்டுமென்று எண்ணின எண்ணம் மிகவும் சிறந்ததே. ஆரம்பமுதற்கொண்டே இந்தியாகவர்ன்மெண்டாரும் மாகாணக்கவர்ன்மெண்டாரும் மேற்கூறிய 'பொருட்காட்சிச்சாலைகள்' நன்றாய் முற்றுப்பெறும்படி தங்களால் ஆன உதவிகளைச்செய்தார்கள். மேலும் இம்முக்கியவிஷயத்தில், இந்துக்களும் மகம்மதியரும் ஆங்கிலேயரும் பார்சிகளும் நானாவிதவியாபாரிகளும் கைத்தொழிலாளிகளும், உயர்ந்த வித்தியார்த்திகளும் செல்வ ஜமீந்தார்களும் மற்றுமுள்ளவர்களும் சேர்ந்து ஒத்துழைத்திருக்கிறார்கள். மேற்கூறிய வருஷாந்தரப்பொருட்சாலைகள் இரண்டுவிதமான நன்மையைச்செய்திருக்கின்றன. அதாவது உயர்தரக் கைத்தொழிலாளிகளுக்குள் போட்டியையுண்டுபண்ணுவதோடுகூட அவர்கள் பற்பல நாடுகளிலுள்ள சரக்குகளை அறிய இடமேற்படுவதொன்று; ஒவ்வொருமாகாணத்திலும் ஒவ்வொரு பட்டணத்திலும் உபயோகத்துக்குவேண்டியிருக்கும் சரக்குகளைத் தெரிந்துகொள்ளவும் அவைகளைப்பற்றித் திட்டமான நயம் விலை முதலியவற்றை அறிந்துகொள்ளவும் பெரும் வியாபாரிகளுக்கும் மற்றச்சில்லறை வியாபாரிகளுக்கும் அது பயன்படுவதுமே. தொழிற்பொருட்காட்சிச்சாலைகள் சொற்பகாலத்துக்குள்ளேயே அதிகநன்மை விளைவித்திருக்கின்றன. அது பற்றித் திருப்தியடைந்து நாம் நம்மை ஏமாற்றிக்கொள்ளவேண்டாம். ஏனெனில், மேனாட்டுச்சாமான்களின் அபாரமிகுதியும் நயமும். நானாவித மாதிரிகளுமாகிய இவற்றை நான் பார்த்ததில், அவற்றோடு ஒப்பிட நம்சாமான்களின் நிலைமை அதிககேவலமாயிருக்கின்றது.

இதுபோன்ற பொருட்காட்சிகள், நமது இயற்கைப்பொருள்கள் பலவற்றையும் நாமே முற்றும் உபயோகப்படுத்தாது பின்வாங்கியிருக்கிறோம் என்று நமக்கு இடித்துரைக்க உபயோகப்படுகின்றன என்னலாம். இதுவிஷயத்தில், நாம் மேனாட்டாரது பரிபூர்ணமான நிலையையடையுமட்டும் திருப்தியடையக்கூடாது. கவர்ன்மெண்டார் அநுதாபப்பட்டுச்செய்யும் கூட்டுதவியுடன் நம்முடைய நுட்பமான புத்தியையுங்கொண்டு செலுத்தினால், இரண்டொரு தலைமுறையிலேயே நாம் மேனாட்டாரது உயர்நிலையையடையலாம்.

(இன்னும் வரும்.)

ஆர். ஸ்ரீநிவாஸராகவன்.

உ

சிவமயம்.

# குமரியாறு.

தமிழ்நாட்டெல்லை கூறினோரெல்லாம், "வடவேங்கடந் தென்குமரி" எனவும் "குணகுடல்குமரி குடகம் வேங்கடம்" எனவும், "மேற்கடல் கீழ்க்கடல் வேங்கடங்குமரி" எனவும் குமரியைத் தெற்கெல்லையாகக் கூறிப்போயினர். குமரி என்பதற்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் குமரியாறெனப் பொருள் கூறினர்.

குமரியாறு புண்ணியநதி ஏழனுள் ஒன்றென்பது, "வழி கங்கை யமுனையே நன்மதை சரஸ்வதி காவேரி, விழுமியகுமரி கோதாவரி பெருநதியின் பெயரே" என்பதனாற் பெறப்படும். அது தெற்கின்கண்ணேயிருந்ததென்பது "தென்குமரி" என்பதனாற் பெறப்படும். குமரியென்பது நதியாயின் அதன்றெற்கினும் நாடுளதாதல்வேண்டுமே எனின், அதன்றெற்கினும் நாடுளதென்பது, "கடல் கொள்வதன் முன்பு பிறநாடு முண்மையிற் றெற்கு மெல்லை கூறப்பட்டது" எனவரும் இளம்பூரணர் உரையாற் றுணியப்படும்.

குமரியாறும் அதன் தெற்கேயுள்ள நாடுகளும் ஒருகாலத்துக் கடல்கொண்டழிந்தனவென்பது நக்கீரனாரும் சிலப்பதிகாரநூலாசிரியரும், உரையாசிரியரும், அவர்க்கு முன்னிருந்த இளம்பூரணரும் அவர்க்குப்பின்னிருந்த நச்சினார்க்கினியரும் ஒத்துக்கூறுவதோடு காலமுங்கூறலின் உண்மையேயாமெனக்கொள்ளற்கு ஆக்ஷேபங்காண்கிலம். அழிந்தநாடுகளும் இன்னபெயரின வென்றும் இவ்வளவு தூரமுடையனவென்றும் அவர்கள் கூறிப்போந்தனர். அதுவும் அவர்கள் கூற்றை ஆக்ஷேபத்துக்கிடமின்றி வலியுறுத்துகின்றது. அங்ஙனம் அழிந்த நாடுகளுள்ளே ஏழ்தெங்கநாடு ஏழ்பனைநாடுகள் கூறப்பட்டன. அக்கூற்றால் அந்நாடுகளிலே தெங்கும் பனையும் மிக்கிருந்தனவென்பது பெறப்படுகின்றது. இப்போதுள்ள குமரிகோடிக்குத் தென்மேற்கிலும் தென்கிழக்கிலும் சமுத்திரமத்தியிலே சிதறுண்டுகிடக்கும் மாலைதீவு இலங்கை முதலிய தீவுகளிலே தெங்கு



மிகமலிந்து கிடத்தலும், குமரிகோடி முதல் தொண்டிவரையுமுள்ள கரையடுத்த நாடுகளிலும் யாழ்ப்பாணத்திலும் யாழ்ப்பாணத்துக்கும் இராமேச்சரத்துக்குமிடையேயுள்ள தீவுகளிலும் பனைமிக்கிருப்பதும், இந்நாடுகள் அழிந்தநாடுகளின் சேடமென்பதற்குச் சான்றாகும். இன்னும் இப்போதுள்ள குமரிகோடி முதல் நூறு 'மைல்' தூரத்திற்குத் தெற்கினும் மேற்கினும் கடல் ஆழமில்லாத்திடர்க்கடலாக விருப்பதும் சான்றாகும். அது மாத்திரமன்று. கன்னியாகுமரிமுதல் வடக்கும் வடகிழக்கும் வடமேற்கும் நெடுந்தூரம் வியாபித்திருக்கும் செம்புரைக்கற்பார் இலங்கையிலும் காணப்படலால், அஃது இடையேயுள்ள கடல்வாய்ப்பட்டழிந்த ஏழ்தெங்க நாட்டில் எஞ்சியகூறுமென்பதற்கு ஐயஞ் சிறிதுமில்லை.

இனி, குமரியாறு கடல்வாய்ப்பட்டழிந்த பின்னர் நூல்செய்த சிறுகாக்கைபாடினியார் தங்காலத்திலே தமிழ்நாட்டெல்லையாகவிருந்தனவற்றையே கூறிப்போந்தனர். அது,

"வடதிசைமருங்கின்வடுகுவரம்பாகத்
தென்றிசையுள்ளிட்டெஞ்சியமூன்றும்
வரைமருள்புணரியொடுகரைபொருதுகிடந்த
நாட்டியல்வழக்கநான்மையிற்கடைக்கண்
யாப்பினதிலக்கணமறைகுவன்முறையே."

எனத் தெற்கெல்லை கடலாகக் கூறினமையாற் றெளியப்படும். சிலப்பதிகாரகாரரும்,

"நெடியோன்குன்றமுந் தொடியோள்பௌவமுந்
தமிழ்வரம்பறுத்ததண்புனனாட்டு."

எனத் தமது காலத்துள்ளதாகிய கடலையே எல்லையாகக்கூறினர்.

இவற்றால், முன்னொருகாலத்தில் தமிழ்நாட்டுக்குத் தெற்கெல்லை குமரியாறென்பதும், குமரியாற்றுக்குத் தெற்கினும் நெடுந்தூரம் நாடுகள் பலகிடந்தனவென்பதும் அவையொருகாலத்திற் கடல்கொண்டழிந்தனவென்பதும் நன்கு துணியப்படும்.

அவை கடல்கொண்டழிந்தகாலம் எதுவென்பதே, மேல் ஆராயத்தக்கது. சிலப்பதிகாரவுரையாசிரியரும் நச்சினார்க்கினியர் முதலி

யோரும், கடல்கொண்டது முதலூழியிறுதிக்கண்ணே யென்பர். முதலூழியென உரையாசிரியர்கள் கொண்டது முந்தியயுகசந்தியாகக் கொள்ளின், அஃது இற்றைக்கு ஐயாயிரத்துக்குமேற்பட்ட வருஷங்களுக்கு முன்னர் நிகழ்ந்ததாகும். அங்ஙனமின்றித் தொல்காப்பியம் பொருளதிகாரத்தில், "பொய்யும் வழுவும்" என்னுஞ் சூத்திரவுரையில், "இவ்வாசிரியர் ஆதியூழியினந்தத்தே இந்நூல்செய்தலின்" என்பதில் ஆதியூழி எனலால் முதல்யுகத்திறுதி யெனக்கொள்ளின் பன்னூறாயிரம் வருஷங்களுக்குமுற்பட்டதாகும்.

இனி, ஊழி என்பது உகமுடிவு மடங்கல் என இருபொருண்மொழி. அஃது "உகமுடிவுடன் மடங்கலூழியாம்" என்னும் நிகண்டாற் பெறப்படும். பொருளதிகாரவுரையாசிரியர்க்கு உகமுடிவு என்பது கருத்தாயின் ஆதியூழியின் அந்தத்தே எனக்கூறார், ஊழி என்பதுதானே உகமுடிவாதலின். அவர்க்கது கருத்தாயின் இரண்டாம் யுகத்துத் தொடக்கத்தே எனக்கூறுவர். ஆதலின் அவர்க்கது கருத்தன்றாம். அவர் ஊழியென்றது பிரளயகாலத்தை. அஃதாவது தங்காலத்துக்கு முன்னர் நிகழ்ந்த பல அவாந்தரப்பிரளயங்களுள்ளே முந்தியதையேயாம். அவாந்தரப்பிரளயங்களினாலேயே சில நாடுகள் மூழ்கிக்கடலாவதும் சிலகடல்கள் சுவறித் திடராவதுமாம். பூமுகம் காலந்தோறும் இவ்வாறு தன்வடிவம் பேதிக்கப்பெறுவதுஇயல்பேயாம். இஃது இற்றை நாள் நவீனராகிய நமக்கு மாத்திரமன்று, பண்டைக்காலத்து ஆன்றோர்க்கும் புலனாயதோருண்மையேயாம். அஃது, "ஓரிடமழியப்பின்னுமோரிட நிற்கும்" என்னுஞ் சித்தியார்ச்செய்யுளாற் பெறப்படும். சத்தமேகங்களுந் திரண்டுருண்டு குமுறியிடையறாது மழைசொரியக் கடல்கள் ஆரவாரித்தோங்கி யெழுந்து கரைபுரண்டு பெருகி நாடுகளைத் தன்வாய்ப்படுத்தழிப்பதே பிரளயமாம். இவ்வாறன்றிச் சமுத்திரமத்தியிலுள்ள வடவாக்கினியும் பொங்கியெழுந்து ஆரவாரிக்கப் பூமி அதிர்ந்து தகர்ந்து வாய்விள்ள, அவ்வாய்வழியே நீர்கொள்ள நாடுகள் சிதைந்து கடலாவதுமுண்டு. இதுவும் பிரளயமேயாம். இவ்வகை உற்பாதங்கள் கன்னியாகுமரிக்குத் தென்பாலிலுள்ள சமுத்திரத்துக்கு நூதனமன்று. யுகங்கள்தோறும் யுகமுடிவிலும் யுகமத்தியில் இடையிடையும் உற்பாதங்-



கள் பெரியனவும் சிறியனவுமாக அநேகம் நிகழ்தல் இயல்பெனப் புராணேதிகாசங்கள் கூறும். ஐரோப்பிய பண்டிதர்களும், அநேக பிரளயங்கள் காலாந்தரங்களில் வந்துபோயினவென்பர். அவருட் சிலர் நம் புராணேதிகாசங்களை இவ்விஷயத்துக்கு மேற்கோளாக்குவர். செல்வர்க்குத் தஞ்செல்வம் பெரிதாகாமைபோல, புராணேதிகாசங்களின் பெருமை நமக்குப்புலப்படாவிடினும் ஐரோப்பியபண்டிதருட் சிலர்க்குப் பெருமதிப்புக்குரியதாய்விட்டது. புராணம் பஞ்சலக்ஷணம் எனப்படுவது உலகசிருஷ்டி, ஒடுக்கம், பாரம்பரியங்கள், மனுவந்தரங்கள், பாரம்பரிய கதைகள் என்னும் இவ்வைந்தையுங் கூறலாலன்றோ. நம்புராணங்களைத்தவிர இவ்விஷயங்களை நமக்குணர்த்தவல்லநூல்கள் உலகத்தில் மற்றெத்தேயத்தில் எச்சனங்களிடத்தில் எப்பாஷையில் இருக்கின்றன? நம் சிந்தைக்கும் மொழிக்குமெட்டாப் பெருஞ்சேய்மைக்கண்ணவாகிய பண்டையுகங்களில் நிகழ்ந்தனவற்றையெல்லாமொருவாறு திரட்டியும் மனுஷர் சஞ்சரித்தற்கரிய சுமேரு குமேருப்பிரதேசங்களின் (Polar regions) இயல்புகளையும் சூரியசந்திராதி மண்டலங்களின் அமைப்புகளையும் அம்மண்டலங்களுக்கும் நமக்குமுள்ள தொடர்புகளையும் இன்னும் நம் விவேகத்துக்கெட்டாத தத்துவங்களையும் சுருக்கியும் விரித்தும் எடுத்துரைக்கும் நூல்கள் நம்புராணங்களேயன்றி உலகில் வேறில்லையன்றோ. நம் புராணேதிகாசங்களுக்கன்று, நம் உபபுராணங்களுளொன்றற்குத்தானும் நிகராகாத அற்பபுராதன நூல்களை உச்சிமேல்வைத்து மெச்சிப்பாராட்டும் ஐரோப்பியர்க்கு நம்புராணங்கள் உரியனவாயிருக்குமேல் அவையெல்லாம் இதுவரையில் உலகெங்கும் பாராட்டும் பாரசாஸ்திரங்களாய்விடுமன்றோ. வருந்திக்கற்ற கல்வியறிவையும் இயல்பாகப்படைத்த விவேகத்தையும் நல்வழியிலும் பரோபகாரத்திலும் போக்காது நம்மவருள் எத்தனையோ மேதாவியர்கள் கேவலம் கற்பனாகதைகள்மேல் (Novels) வைத்தகையுஞ் சிந்தையும் வாங்காதவர்களாய் வீணாட்கழிக்கின்றார்கள். அவர்கள் நம் புராணேதிகாசங்களாகிய இரத்நாகரங்களிற் புகுநாள் எந்நாளோ; அந்நாளே உலகம் அங்குள்ள இரத்தினக்குவைகளைக் கண்டு பேரானந்தமுற்றுக் கொண்டாடுநாளாம். அது நிற்க;

நம் புராணேதிகாசங்களில் இலங்கை எழுநூறுகாததூரமுடையதெனக்கூறப்பட்டதன்றோ. அது பின்னர்க் கடல்வாய்ப்பட்டழிந்தொழிந்துவிட்டதெனவுங் கூறப்பட்டதன்றோ. இதனை இக்காலத்தில் நம்மவருள் நம்பாதவர் பெரும்பாலாரும், நம்புவார் மிகச்சிலருமேயாயினர். தென் இந்தியா வடக்கிலும் தக்ஷிணகேந்திரமண்டல சமீபம் தெற்கிலும், "மடகாஸ்கர்" மேற்கிலும், "ஆஸ்திரேலியா" "தஸ்மானியா" கிழக்கிலும் எல்லையாகத் தற்கால இலங்கையையும் "சுமத்திரா"வையும் தன்னகத்தே அடக்கி ஒரு கண்டம் முன்னாளிலிருந்தது என்று "மிஸ்டர். பி. எல். ஸ்கிளாட்டர்" முதலிய ஐரோப்பிய பண்டிதர்கள் ஸ்தாபித்தமையைக் கேட்டு நம்பாதவரும் நம்மவருள் உளரா? அதற்காக்ஷேபித்தவர் நம்மவருள் யாவராயினுமுளரா? மோகன வசியத்தில் அகப்பட்டார்போல எதிர்பேசாது யாவருமே நம்புகின்றனர். அது நிற்க; அக்கண்டத்துக்கு ஐரோப்பியர் "லெமூரிய" கண்டமெனப் பெயரிட்டனர். அப்பெயர் அக்கண்டமுள்ளகாலத்து வழங்கிய பெயரா? அன்று. அவர் தாமெடுத்தாளுமாறிட்ட தங்குறிவழக்கன்றோ. நம் புராணேதிகாசங்களில் அவர்க்குப் பயிற்சியுளதாயின் அதற்கு இலங்கை எனப் பெயரிட்டிருப்பார்கள். தாம் "லெமூரியா"வெனக்குறியிட்டு வழங்குங்கண்டம் புராணேதிகாசங்களிற் கூறப்பட்ட இலங்கையெனத் தெளிந்து இப்போது அந்நூல்களை வியந்துகொண்டாடவுந் தலைப்பட்டிருக்கின்றார்கள்.

நம் புராணேதிகாசங்களிலுள்ளபடி இலங்கை சூரபன்மன்காலத்தின் பின்னர் அழிந்து சுருங்கியதொருமுறை. பின்னர் இராவணன் காலத்தையடுத்தழிந்து குறுகியதொருமுறை. இடையிடையே காலாந்தரங்களில் வந்த அவாந்தரப் பிரளயங்களாற் சிதைவுற்றது பன்முறை.

இங்ஙனம் எண்ணில்லாத பிரளயங்களாலே தாக்குண்டற்கு இப்பூகோளத்திற்கு வயசு போதாதே எனின், நம் புராணேதிகாசங்கள் கூறும் வயசைநோக்குமிடத்து எத்தனையோ பலகோடிவருஷங்கள் கடந்தன, எத்தனையோ பலகோடி செல்லாமலின்னுங்கிடக்கின்றனவென்க. அஃதொருபாலிருக்க, ஐரோப்பிய பூகர்ப்ப சாஸ்



திரிகள் (Geologists) இப்பூமிக்குவயசு 50-கோடி வருஷமெனச் சாதிக்கின்றார்களன்றோ. இத்தொகை சென்றவை சென்றால் இதற்குள் எத்தனை பிரளயங்கள் வந்துபோயினவாதல்வேண்டும். மனுஷோற்பத்தியாகி ஒருகோடியே எண்பதிலக்ஷம் வருஷமாயினவென்பதும் அன்னோர் கொள்கையன்றோ. சிருஷ்டி தொடங்கி ஆறாயிரம வருஷமாயினவென்னும் மதவாதிகளுக்குமாத்திரம் இத்தொகைகள் பகையாம். அஃதெவ்வாறாகிலும் அவர் வர்க்கத்தினராகிய பூகர்ப்ப சாஸ்திரிகள் நம்பக்கமேயாவர்.

ஐரோப்பியரால் "லெமூரிய" கண்டமெனப்படும் நமது பூர்வலங்கையே இப்போது இந்திய சமுத்திரமென்றும் "பாசிபிக்"சமுத்திரமென்றும் சொல்லப்படும் மகோததியாம். அவற்றுள் இந்தியசமுத்திரமே தென்இந்தியாவிற்கு இன்றும் பெரும்பகையாயுள்ளது. அதுவே இடையறாதெதிர்பொருது நிற்பது. அதற்கு எதிரூன்றி அல்லும்பகலும் போராடி நிற்பதாகிய கன்னியாகுமரிக்கோடி பூர்வத்தொருகாலத்திலே தனது கூறாகித்தெற்கின்கண்ணே கிடந்த குமரிநதியும் ஏழ்தெங்கநாடு ஏழ்பனைநாடு முதலிய நாற்பத்தொன்பது நாடும் கடல்கொண்டழியப்பெற்றதென நந்தமிழ்நூல்கள் கூறுவதும் பெரிதுங்கொண்டாடத்தக்கதோருண்மைச் சம்பவமேயாமன்றோ. அஃது ஆதியூழியினந்தத்தே நிகழ்ந்ததென்பது உரையாசிரியர்கள் கூற்று. அதன்காலம் யாதென்பதே மேல் நிகழும் வினா. அதற்கு முப்பதினாயிரம் நாற்பதினாயிரம் வருஷங்களுக்கு முன்னுள்ளகாலமென்பேமாயின், கிறிஸ்துவுக்கு முன்னே நூறுவருஷந்தானும் எடுத்துக்கூற மனம்பொருந்தாது மனமழன்று சினமெழுந்து தம்வசந்தப்பிக் கூரியவாட்படைதேடும் பண்டிதசிரோமணிகளாற் றப்பாது கொடுந்தண்டம்புரிந் தொறுக்கப்படுவேம். ஆதலின் இயன்றமாத்திரம் சுருக்கமான தொகை காண்பதே தப்புதற்குபாயமாம். அதிலும் அவர் வர்க்கத்துப் பண்டிதசிரோமணிகள் கூறியதையே ஆதாரமாகக்கொண்டு கூறுதும்.

இப்பூகோளத்துக்கு நேர்ந்த பிரளயங்கள் பலவற்றுள்ளே விசேஷமானவை "எலியட்" பண்டிதர் கூறுமாறு ஐந்து. அவற்றுள் முதலாவது பத்திலக்ஷம் வருஷங்களுக்கு முன்னும், இரண்டாவது

எட்டிலக்ஷம் வருஷங்களுக்கு முன்னும், மூன்றாவது இரண்டிலக்ஷம் வருஷங்களுக்கு முன்னும், நான்காவது எண்பதினாயிரம் வருஷங்களுக்கு முன்னும், ஐந்தாவது கிறிஸ்துவுக்கு முன் 9564-வருஷங்களுக்கு முன்னும் நிகழ்ந்தனவாம். அவற்றுள் ஐந்தாம் பிரளயமே உரையாசிரியர் குறித்த ஆதியூழிக்குச் சமீபமுடையதாம். தலைச்சங்கமிருந்த தென்மதுரையை அழித்தவூழியே ஆதியூழியெனவுரையாசிரியரால் வழங்கப்படுவதாயிற்று. இரண்டாஞ்சங்கமிருந்த கபாடபுரத்தையழித்தவூழி—இரண்டாமூழியென வழங்கப்படுவதாயிற்று. இதற்கு "இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தின்" எனச் சிலப்பதிகாரவுரைப்பாயிரத்துள் வருதல் பிரமாணமாம். முதலாமூழியிலேயே குமரியாறும் பனிநாடும் அழிந்தனவாம். அவை அழிந்தது சகரர்தொட்ட கடலகத்துப்பட்டேயாம். இவ்வுண்மை "சகரர் வேள்விக்குதிரைநாடித் தொட்ட கடலகத்துப்பட்டுக் குமரியாறு பனிநாட்டோடு கெடுவதற்குமுன்பு" எனவரும் பொருளதிகாரவுரையாற்பெறப்படும்.

இதுகாறுங்கூறியவாற்றால் முதலூழியென்றது தென்மதுரை அழிந்தவூழி. இரண்டாமூழியென்றது கபாடபுரமழிந்தவூழி எனவே, முதற்சங்கந்தொடங்கியதுமுதல் தென்மதுரை கடல்கொண்டழிந்ததையிறுவாயாகவுடையகாலம், அஃதாவது முதற்சங்கத்து ஆதிமுதல் அந்தம்வரையுமுள்ள காலம் முதலூழியெனப்பட்டது. இடைச்சங்கந் தொடங்கியதுமுதல் கபாடபுரம் கடல்கொண்டழிந்ததை இறுவாயாகவுள்ளகாலம் இரண்டாமூழியெனப்பட்டது. இதுவே உரையாசிரியர்கள் கூறிய வூழியென்பதன்பொருளாம்.

சகரர் வேள்விக்குதிரைநாடிப் பாதலம்வரையுந் தோண்டியபோதெழுந்த கடல் சாகரமெனப்பட்டதென்பது புராணவரலாறு. புராணம் விஷயங்களைக் கூடார்த்தமாகவும், சாதாரணமாகவுங் கூறுவதாதலின், அவ்வவ்வகையிற் பொருள் காணின்றி மெய்ப்பொருள்காண்பதரிது. சகரர் கடல்தோண்டிய விஷயம் கூடார்த்தமேயாம். பாதலம்புக்க வேள்விக்குதிரையென்றது வடவாமுகாக்கினி. அக்கினிமலை வாய்விண்டு கொடிய அக்கினிகாலும் அவசரத்தில் அதன்வாய் பெண்குதிரைவாயினது வடிவம்போலுதலின் அது வடவா



முகமெனப்பட்டது. வடவாமுகம்—பெண்குதிரைவாய். சகார் என்றது எதிர்ப்பட்டவற்றைத் தகித்து உட்கொள்ளுஞ்சக்திகளை. வடவாமுகாக்கினி சினந்து கனைத்தெழுந்து சுவாலித்து மகா உக்கிரமான உற்கைகளைக்காலப் பூமியதிர்ந்து வாய்விள்ள அவ்வாய்வழியே நாடுகள்பாதலம்புக அந்நாடுகளிருந்தவிடத்தைச் சமுத்திரம் தனதாக்கிற்று. அச்சமுத்திரமே சாகரமெனப்படுவதாயிற்று. அதுவே தற்காலம் இந்துசமுத்திரமெனப்படுவதுமாம். இவ்வூழித்தீ காரணமாகவெழுந்த பிரளயத்திலேயே குமரியாறும் அதன்றெற்கின்கண்ணே கிடந்த நாடுகளும் மேற்குக்கரையோரஞ் சார்ந்துகிடந்த நாடுகளும், சோழமண்டலமுதல் வங்கநாடுவரையும் அவற்றைச்சார்ந்து கீழ்பாற்கிடந்த நாடுகளும் அழிந்து கடலாயினதுமன்றி, இந்தியாவோடு ஒருபாற்சம்பந்தமுற்றுக்கிடந்த தற்கால இலங்கையும் பின்னமுற்றதுமாம்.

இவ்வூழிக்குப்பின்னர் இடைச்சங்கந்தொடங்கி மூவாயிரத்தெழுநூறுவருஷம் நடைபெறுவதாயிற்று. அது,

"வடுவறுகாட்சி நடுவட்சங்கத்
... ... ... ...
தாவாக்காலந்தமிழ்பயின்றதுவு
மூவாயிரத்தோடெழுநூற்றியாண்டு"

என்னுஞ் செய்யுளாற் பெறப்படும். அச்சங்கமும் அஃதிருந்த கபாடபுரத்தை இரண்டாமூழி வந்தழிக்கவழிந்தது. அதன்பின்னர் மூன்றாஞ்சங்கமாகிய கடைச்சங்கம் தொடங்கிற்று. அதுவும் "எண்ணூற்கேள்வியரிருந்ததாயிரத்துத், தொளாயிரத்தைம்பதுவருடமென்ப" என்பதனால் ஆயிரத்துத் தொளாயிரத் தைம்பதுவருஷம் நடைபெற்றது. அஃதழிந்தும் இதுவரையும் சற்றேறக்குறைய ஈராயிரம் வருஷமாயின. முச்சங்கத்துக்குமிடையே சங்கமில்லாத காலமுஞ் சிலவாதல்வேண்டும். ஆக முதலூழி வந்ததும் அதனாற்குமரியாறு முதலியனவழிந்ததும் எண்ணாயிரம வருஷத்துக்கு முன்னராகும். இரண்டாமூழியிற் கபாடபுரமழிந்தபோது சில நாடுகள் இலங்கையிலும் அத்தாக்கத்தால் அழிந்தன. அது நிகழ்ந்தது கிறிஸ்

தாப்தத்துக்கு முன்னர் இரண்டாயிரத்து முந்நூற்றெண்பத்தேழு வருஷத்துககு முன்னரென ராஜாவளிநூல் கூறுகின்றது.

இவ்விஷயத்தில் என்புல்லறிவிற்கெட்டியவாறு இத்துணையுங் கூறியவற்றுள் கொள்ளற்பாலனவற்றைக்கொண்டு அல்லாதனவற்றைத்தள்ளுமாறு அறிஞரைப் பன்முறை வேண்டாநின்றனன்.

இங்ஙனம்,

யாழ்ப்பாணம்<br>நாவலர் கோட்டம் } ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

---

# உயிர்நூற்பயிற்சியாலாய பயனென்?

[ஸ்ரீ: வி. நரசிம்மஐயங்காரவர்கள், M. A. எழுதியது.]

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு—திருக்குறள்.

நம்மைச்சுற்றிலும் நாம் தினந்தினங் கண்ணுறுஞ் சராசரப் பொருள்களையும், அவற்றாலுண்டாம் பலாபலன்களையுந்தெரிந்துகொள்ளாது, தத்துவநூற்பயிற்சியே மாண்புடைத்தென்றெண்ணி அதனையே மிகவோதுவார் நம்மவருட்பலரும். ஆயினும், இக்காலத்து மேற்றிசைக்கல்வி எங்கும்பரவ, சிலர்மட்டுமே, இரஸாயனசாத்திரம், தாவர சாத்திரம், ஜீவப்பிராணிசாத்திரம் என்னும் புதியநூல்களைப் படிக்க ஆவல்கொண்டு கற்றுவரினும், அவர்களை மற்றோர்கள் தாங் கணிதமோதுவதாயும், சரித்திரம் படிப்பதாயும், தத்துவநூலாராய்ச்சி செய்வதாயுஞ்சொல்லி ஏக்கழுத்தத்தோடுபார்த்து நிந்திப்பதுமேலிட்டிருக்கிறது. இத்தகைய நிந்திப்பு அலைகடல்காணாத் தவளை தானிருந்த கிணற்றையே பெரிதென்னும் பேதைமையையொக்கும்.

“கற்க கசடறக் கற்பவை” என்னுந் திருவள்ளுவனாரது திருமொழியை நமது கலாசாலைகளில் எம்மட்டும் பரிபாலனஞ்செய்கின்றார்கள் என்று ஆராயுங்கால், பாலர்கள் கற்கவேண்டாதவற்றையும் தமது வாழ்நாளுள் தமக்குப்பலன் கொடாதவற்றையும் மிகுதியும்



படிக்கின்றார்கள் என்பது புலப்படும். “சார்லஸ்” 1649-ம் ஆண்டு கொலையுண்டான் என்பதும்; “பானக்பர்ன்” சண்டை 1314-ம் ஆண்டு நடந்தது என்பதும், “பானிப்பட்டு” யுத்தத்தில் இந்துக்கள் இத்துணை ஆயிரம் படையும், துருக்கர் இத்துணையாயிரம் படையுஞ்சேர்த்தார்கள் என்பதும், இன்னும் இவைபோன்ற ஆயிரக்கணக்கான அற்பவிடயங்கள் மாணாக்கர் மூளையில் நுழைக்கப்பெறுகின்றன என்பது யாவருக்குந் தெரிந்தது. இவ்விதக்கல்வியை இம்மட்டோடு நிறுத்தி, இராக்காலங்களில் மலரும் பூக்கள் பெரும்பான்மை வெளுத்தும், மஞ்சளாகவுமிருப்பதென்? எறும்பு தேனீ முதலிய சிறு பூச்சிகள், கூட்டமாய் வசிப்பதென்? விஷச்சுரம் விஷபேதி முதலிய பிணிகள், மாசுநிறைந்த விடங்களில் மிகுதியுமுண்டாவதென்? என்று இன்னன வினாக்கட்குத் தகுந்தவிடைபகர உதவுங்கல்வி பயனுடைத்தாமன்றோ. இவ்வினாக்கட்கு, சரித்திரத்திலும், தத்துவத்திலும் பட்டம்பெற்றுப் பரிசுவாங்கி, கலாசாலைகளினின்றும் வெளிப்போம் மாணவர்கள் உத்தரங்கொடுக்கவல்லவர்களா? ஆதலான், எவ்விஷயத்தின்தேர்ச்சியால், பின் நமது வாழ்நாளில் பெரிதும் பயனுண்டாகுமோ, அவ்விஷயத்தைக் கசடறக்கற்றல், கற்பவனது கடமையாம். அங்ஙனஞ்செய்யாமலும், தமக்குத்தாமே புத்தியைச் செலுத்தி உற்றறிந்து விசாரணாசக்தியைப்பெருக்கும் விஷயங்களை நீக்கி, ஞாபகசக்தி ஒன்றைமட்டுமே விருத்திசெய்யும் பாடங்களைக் கலைமுதல் மாலைவரையில் ஓதுவது புண்ணியமோ, புருஷார்த்தமோ? அறியோம்.

தாமே உற்றுணர்ந்து ஆராயுஞ்சத்தி, உயிர்நூற்பயிற்சியாற்பெருகும். தமக்குத்தாமே கண்டு தேர்தலில்லாததினாலன்றோ, நம்மவர்கள் ஜீவஜெந்துக்களைப்பற்றிச் சில அசம்பாவிதக்கதைகளைப்புனைந்து தொன்றுதொட்டு வழங்கிவருகிறார்கள். தேளானது முதுகில் வெடித்துக் குஞ்சுபொரிக்குமென்பதுவும், நல்லபாம்பு காற்றைப்புசித்துக் காலங்கழிக்குமென்பதுவும், பச்சைப்பாம்பு கண்ணைக் குத்துமென்பதுவும், அரணை நாவினாற்றீண்டின அளவில் மரணமென்பதுவும் உதாரணங்களாம். குளவியானது வண்டின் புழுவைத் தன்னினமாக்குகின்றது என்னும் கற்பனை வேதாந்த விசாரணையுண்

டானநாள்முதலே நம்மிடங்குடிகொண்டிருக்கக் காண்கிறோம். தவிரவும், கல்வியிற்பெரிய கம்பரும், தமது இராமாயணங் கரன்வதைப்படலத்து இவ்வுபமானத்தை மெய்யென்று நம்பி உபயோகித்து வழுவினார் என்னும் சிறுவிஷயம் அந்நூல் கற்றோர்கள் கண்டிருக்கலாம். இத்தகைய பொய்களை மெய்யென்று நம்பி மயங்குவோர்க்கு உயிர்நூற்பயிற்சியாலுண்டாம் பயன் அளவிடத்தக்கதன்று.

சராசரநூலாராய்ச்சியால் இங்ஙனம் விசாரணைசக்தி பெருகுவதுடன் வெவ்வேறு நயம்பயத்தலும் கூடுமென்பது பின்வருவனவற்றால் தெளியலாம். சிற்சிலசமயத்துக் காப்பி, தேயிலை, கரும்பு, பருத்தி, சந்தனமுதலிய தாவரங்கள் குன்றிப்போய் அவற்றைப் பயிரிட்டாருக்கு அளவற்ற சேதமுண்டாக்குவதற்குக் காரணமென்னையோ? வேறோரமயத்து நெற்பயிர் தழைத்தோங்காது, எதிர்பார்த்தவாறு விளையாமல் குடியானவர்கட்குக்கேடுவிளைவிப்பதற்குக் காரணந்தான்யாதோ? அக்காலங்களில் இத்தாவரங்கள் பிணியால் வருந்துகின்றனவென்று உயிர்நூல்விற்பன்னர்களால் கண்டுபிடிக்கப்பட்டும் அந்நோய்க்குக் காரணமாயிருப்பன மரக்காளான் அல்லது ஆம்பி என்றழைக்கப்படும் சிறு பூண்டுகளும் வேறு சில பூச்சிகளும் என்று தெரியப்பெற்றும் வருகின்றது. இவ்வளவோடு நிற்காது அவ்விற்பன்னர்களே, அவ்வியாதியை நீக்குதற்கோ தடுப்பதற்கோ வேண்டிய பரிகாரங்களையும் ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றனர்.

ஈதன்றியும், உயிர்நூற்பயிற்சியானது ஜனங்களது செல்வத்தைப் பெருக்குங்கைத்தொழில் வேலைபலவற்றிற் பயன்படுகின்றது. ஜப்பான்பட்டென்றும், சீனாப்பட்டென்றும் டாக்காப்பட்டென்றுஞ் சொல்லி நம்மவர்கள் ஆவலோடு கடைக்கேகி, மிகுதியானபணங்கொடுத்துவாங்கி உடுக்கக்காண்கிறோம். அவ்விலையுயர்ந்த பொருள் சிறுபுழுக்களால் நெய்யப்படுகின்றது. அபரிமிதமானபட்டுவேண்டுமாயின், புழுவின்முட்டைகளைச் சேகரித்து அவற்றிற்குத்தக்க தீனியிட்டு, அதிகக்காற்று வெயிலினால் மரணமடையாதவண்ணம் காப்பாற்றி, மிகுந்தபட்டுநெய்யும் நிலைமையிருக்குமாறு பாதுகாத்தல் வேண்டும். அங்ஙனமே ஆறு, ஏரி, கடல் இவற்றிலுள்ள மச்சங்கள் குன்றாவண்ணம் ஏற்பாடு செய்வதினால் மீன்வியாபாரம் அதிகமாகி,



அவற்றை உண்ணும் வெளிப்பிரதேசத்தார்க்கு ஏற்றுமதிசெய்யக்கூடும். இதுபோன்ற மற்றக் கைத்தொழில்களும் உயிர்நூலிற்றேர்ந்தவர்களால் விருத்தியடையக் காரணமுண்டு. உதாரணமாக, தேன்கூடுவைத்துத் தேன்சேகரிப்பதும், முத்துச்சிப்பிவளர்ப்பதும், (மனிதன், குதிரை, வீட்டிலுள்ள வேறு சிறுமிருகங்கள் இவற்றின் மாசு நீக்குவதற்கு நந்தேசந்தவிர்த்து மேற்றேசங்களிற் பயன்படுத்தும்) கடற்காளான் என்னுமொருபாசி விருத்தியாக்குவதும் அங்ஙனஞ்செய்தற்கேற்ற வழிகளைக்காட்டுவதும் உயிர்நூலிற்றேர்ந்தவர்கள் கொடுக்குமுதவியாம்.

வைத்தியம், சுகாதாரம் இவைபோன்ற சாத்திரங்கற்பதற்கு உயிர்நூல் மேம்பட்டதோர் கருவியாகும். வைசூரி, கொள்ளைநோய் மலைச்சுரம் முதலியநோய்கள் அணுவிலுஞ்சிறிய கிருமிகளால் உண்டாகின்றனவென்றும், அவை எவ்வண்ணம் மனிதனுடலிற் சென்று விருத்தியாகின்றனவென்றும் அவை உட்செல்லாமற்றடுக்கவேண்டியதற்குத் தக்கபரிகாரங்கள் இன்னின்னவென்றும் எளிதிற்றெரியவன் உயிர்நூல்கற்றோனே. இவ்விஷயம்பற்றிப் பின்னோரமயத்து விவரமாய் எழுதவெண்ணி, ஈங்கு இம்மட்டோடு நிறுத்தப்பட்டது.

உயிர்நூற்பயிற்சியினருமையும் பெருமையுமிவ்வளவு தானோ? இல்லை; இந்நூலைமுழுமையுங் கற்றறிந்த விற்பன்னர்கள், உயிருள்ளவை, உயிரில்லாதவை, தாவரங்கள், ஜீவப்பிராணிகள்—இவற்றிற்குள்ள சம்பந்தாசம்பந்தமும், ஜீவராசிகள் முதன்முதலுண்டான விதமும், பிறகுவேறுவேறாகிப் புழுவென்றும் பூச்சியென்றும் மீனென்றும் பறவையென்றும் விலங்கென்றும் உற்பத்தியான இரகசியமுங்கண்டவர்கள். இத்தகைய உண்மைப்பொருள் புகட்டுநூலோ இகழப்படுவது. இக்காலத்து அது நிந்திக்கப்படுவதற்கு முக்கிய காரணம், அந்நூல்கற்போர் ஜீவஜந்துக்களை வீணிற்கொன்று ஹிம்சைசெய்கின்றார்கள் என்பதாம். இரக்கமில்லாததும் மிகக அருவருப்புமான இக்கருமஞ் சிலர்செய்ய, அதுகாரணமாக இச்சாஸ்திரங்கற்பது தகுதியன்றென்று செப்புவார் பேதமை எத்துணைத்தோ? உயிர்க்குஞ் சேதமின்றி உயிர்நூற்பயிற்சி இயலுமென்னு முண்மை பின்தோன்றுஞ் சஞ்சிகைகளிற் காணும்விஷயங்களால் வெளியாம்.

---

உ

சிவமயம்.

# கந்தபுராண அருஞ்செய்யுள் விளக்கம்.

## காப்பு.

௧. உளான் சகடம் ஆறும்வேற்றுமைத்தொகை. தாமரைநாயகன் - சூரியன். அகடு - வயிறு. அம் - சாரியை. சக்கரம் - வட்டம். உறை விகடசக்கரன் என்னும் வினைத்தொகையில் விகடசக்கரன் செயப்படுபொருட்பெயராய் நின்றது.

## வாழ்த்து.

௨. நான்மறை யறங்கள் உம்மைத்தொகை.

## கடவுள் வாழ்த்து.

௧௭. வருதல் வேண்டிய - வரும்படி பிரார்த்தித்த. வருதலை விரும்பிய என்றல் பொருந்தாது.

## அவையடக்கம்.

௧. இறை - சிறிது. எழுதுமுன் வரைவேன் என்பது உண்ணுமுன் சத்தித்தான் என்பதுபோல நின்றது. சிறியதோரறிவினேன் என்னும் உபமேயத்திற் கியையுமாறு இறை என்பதற்குச் சிறிது எனப்பொருள்கோடலே பொருத்தம்.

௨. வான்கதிர் - சூரியன். இமைத்தல் - விளங்குதல்.

௪. சிந்து - கங்கை. இதிலுள்ள எண்ணும்மையை ஏனையவற்றோடுமொட்டுக.

௮. தொல்கதை - புராணம். ஓதியது - சொல்லப்பட்டன; சாதியொருமை. தொல்கதை சூதனால் ஓதப்பட்டன என்க. இங்ஙனமன்றி முடித்தல் சிறப்பின்று.

௧௫. அது அமைகற்பாலதோ என முடிக்க. அது எழுவாய்; இதனை இரண்டாம்வேற்றுமையாகக்கொண்டனர் ஸ்ரீமத். சுப்பிரமணியசாஸ்திரிகள். அது பொருந்தாது.



## ஆற்றுப்படலம்.

௪. கவைஇய - மூடிய. உரி - எழுவாய்.

௧௫. முல்லை, வெட்சி, மல்லிகை முதலியவற்றையுஞ்சேர்த்து மரமென்றல் பொருந்தாது.

௧௮. எழுதுங்கலை - ஓலை. ஆகுபெயர்.

௨௨. மீதுபோம் - சுவர்க்கத்துக்குப்போன.

௫௫. பாம்பு அளையிற் புகுமாறுபோலத் தூம்பிலணுகும்படி என்க. சொன்முறை தடைசெய்வோரில் புடைபெயராவண்ணம் (தடுத்து) என்க. தடுத்து என ஒருசொல் வருவிக்க. சொன்முறை தடைசெய்வோர் - மந்திரவாதிகள். இதற்கு ஸ்ரீமத். சுப்பிரமணிய சாஸ்திரிகள் பிறவாறு பொருள் கூறினர்கள். அது பொருந்தாது.

(வரும்.)

---

உ

# திருவள்ளுவரும் கம்பரும்.

:o:

திருவள்ளுவனாரருளிச்செய்த திருக்குறளிற் சிற்சில அதிகாரங்களிலும் சிற்சிலகுறள்களிலும் உள்ள பொருள்களை யமைத்துக் கம்பர் தாம்பாடிய இராமாவதாரத்துச் சிற்சில இடங்களிற் கூறியிருக்கின்றார். அவற்றுட் சிலவற்றை இங்கே காட்டுதும்.

திருவள்ளுவர் குறள் ௯௮-ம் அதி. பெருமை.

"பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்."

என்னும் ௨-ம். குறட்கருத்தையமைத்துக் கம்பர் இராமாவதாரத்தில் கிஷ்கிந்தாகாண்டத்து வாலிவதைப்படலத்து ௯௫-ம் செய்யுளில்,"இனையதாதலினெக்குலத்தியாவர்க்கும்—வினையினால்வரும் மேன்மையுங் கீழ்மையும்" எனக்கூறினர். இனி இச்செய்யுளில் 'வினை' என்றதை 'ஒழுக்கமெ'னக்கொண்டு "ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி—னெய்துவ ரெய்தாப் பழி." என்னுங் குறட்கருத்தையமைத்துக் கூறினர் எனினுமாம். பழிபற்றிவருவது கீழ்மை என்க. இன்னும்;

ஷை. ௮௬-ம். அதி. இகல்.

"இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடலு நணித்து"

என்னும் ௬ - ம் குறட்கருத்தையமைத்து ஷை ஆரியப்படலத்து ௧௫ - ம் செய்யுளில், "பகைநேர்வாருளரானபண்பினு—னுக நேர்சிந்தியுலர்ந்தழிந்தவான்-மகனே கண்டிலையோ நம்வாழ்வெலாம்" எனக்கூறினார். இன்னும்;

ஷை ௫௧ - ம். அதி. தெரிந்துதெளிதல்.

"பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்"

என்னும் ௫ - ம் குறட்கருத்தையமைத்து ஷை ௧௪ - ம் செய்யுளில், "தருமம் பற்றிய தக்கவர்க்கெலாய்—கருமங்கட்டளையென்றல் கட்டதோ" எனக்கூறினார். இன்னும்;

ஷை ௫௧ - ம். அதி. தெரிந்துதெளிதல்.

என்பதை ஷை ௨௮ - ம் செய்யுளில், "தூய்மைசால்புணர்ச்சிபேணி" என்பதில் 'தூய்மை' என்பதுள் அமைத்துக்கூறினார். தூய்மை, பிறப்புக் குணம் அறிவு என்பவற்றிலும், செயலினுந்தூய்மையாயிருத்தல். இவற்றை யாராய்ந்தே மந்திரிமுதலாயினரை வைத்தல்வேண்டும் என்பது நூற்கொள்கை. இன்னும்;

௫௨-ம் அதி. தெரிந்துவினையாடல்.

என்பதை, ஷை செய்யுளில் "புணர்ச்சிபேணி" என்பதுள் அமைத்துக்கூறினார். இன்னும்;

௬௬-ம். அதி. வினைத்தூய்மை.

என்பதை ஷை செய்யுளில், "தகளறுதொழிலையாகி" என்பதனுள் அமைத்துக்கூறினார். இன்னும்;

௭௦-ம். அதி. மன்னரைச்சேர்ந்தொழுகல்.

"அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"



என்னும் ௧ - ம் குறட்கருத்தையமைத்து அரசன்மேலேற்றி ஷை செய்யுளில், "சேய்மையோடணிமையின்றி" எனக்கூறினார். இன்னும்;

ஷை அதிகாரத்து.

"இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
வொளியோ டொழுகப் படும்"

என்னும் ௮ - ம் குறட்கருத்தை அமைத்து அரசன்மேலேற்றி ஷை செய்யுளில், "தேவரிற்றெரியநிற்றி" எனக்கூறினார். ஒளி - உறங்காநிற்கவுந்தாமுலகங்காக்கு மவர்கடவுட்டன்மை. இக்கருத்து "உறங்குமாயினு மன்னவன் றன்னொளி—கறங்குதெண்டிரை வையகங்காக்குமால் "எனச் சிந்தாமணியுட்கூறப்பட்டுள்ளது.(நாமக-உககூ) இன்னும்;

௭௧-ம். அதி. குறிப்பறிதல்.

"முகத்தின் முதுக்குறைந்த துண்டோ உவப்பினுங்
காயினுந் தான்முந் துறும்"

என்னும் ௭-ம் குறட்கருத்தை யமைத்து ஷை ௧௨௧ - ம் செய்யுளில்,

"புகையுடைத் தென்னி னுண்டு பொங்கன லங்கென் றுன்னு
மிகையுடைத் துலக நூலோர் வினையமும் வேண்டற் பாற்றே
பகையுடைச் சிந்தை யார்க்கும் பயனுறு பண்பிற் றீரா
நகையுடை முகத்தை யாகி யினனுரை நல்கு வாயால்."

எனக் கூறினார்.

௪௪ - ம். அதி. குற்றங்கடிதல்.

"செயற்பால செய்யா திவறியான் செல்வ
முயற்பால தன்றிக் கெடும்"

என்னுங் குறட்கருத்தை அமைத்து ஷை நக - ம் செய்யுளில், "செய்வனசெய்தல்" எனக்கூறினார். இன்னும்;

௫௮ - ம். அதி. கண்ணோட்டம்.

"ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை"

என்னுங் குறட்கருத்தை அமைத்து ஷ செய்யுளில், "தீய னசிந்தியாமல் வைவனவந்தபோதும் வசையில வினியகூறல்" எனக் கூறினார். இன்னும்;

ருரு - ம். அதி. செங்கோன்மை.

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங்கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில்" எனவும்,

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்"

எனவும் கூறிய குறட்கருத்துக்களையமைத்து ஷ ருச-ம் செய்யுளில், "ஆயதுதன்மையேனு மறம்வரம்பிகவாவண்ணா—தீயனவந்தபோது சுடுதியாற்றீமையோரை" எனக்கூறினார். இன்னும்;

கஉ - ம். அதி. நடுவுநிலைமை.

"கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி"

என்னுங் குறட்கருத்தை யமைத்து ஷ ருசு-ம் செய்யுளில், "ஆக்கமுங்கேடுந்தாஞ்செய் யறத்தொடுபாவமாய— போக்கிவேறுண்மைதேறார்" எனக்கூறினார்.

இன்னும் இவ்வாறு அமைத்துக்கூறப்பட்டன பலவுள. அவை நேர்ந்துழிக் காட்டுதும்.

சி. கணேசையர்.

# ஈயம்.

இது மென்மையும் நீல நரைநிறமுமுள்ள ஒருவகை உலோகம். சொற்பருசியுண்டு. தேய்த்தால் ஒருவித வாசனையுண்டு. இதன் ஆகரிகள் மிதமானவைகள். இவ்வுலோகம் இயற்கையிலே சுத்தமுள்ளதாய்க்காணப்படுவது அருமை. வியாபாரத்திற்காணும் ஈயத்தின் மிகுதியான பாகம் ஈயசலவீரமாகிய கலீனம் (Galenam) என்ற கல்லிலிருந்து எடுக்கப்படும். இது மிசூரி என்ற அமெரிக்காதேசப் பகுதியிலும் தொடுவாய் இராச்சியத்தின் பல பாகங்களிலும் இன்னுஞ் சிலவிடங்களிலும் விசேஷமாய் எடுக்கப்படுகின்றது. சிலவிடங்களில் கந்தகத்துடன் சேர்ந்தும் எடுக்கப்படுகின்றது. தொடுவாய்ப்பகுதியிலே எடுக்கும் ஈயம் மணலுடன் கலந்திருக்கும். தண்ணீரிற்கொட்டி அலசி ஈயமணலைப்பிரித்தெடுப்பார்கள் இம்மணல் ஒருவகைக் கருநரை நிறமுள்ளதாகக்காணும். சிலவிடங்களில் வெள்ளி, தங்கம் முதலிய உலோகங்களும் எடுகிறார்கள். இம்மணலைக்கொப்பறையிலிட்டுச் சூடேற்ற உருகித் தண்ணீர்போலாகும். தங்கள் இஷ்டப்படி கட்டியாக்கிக்கொள்வார்கள். மிசூரி என்ற அமெரிக்கா தேசப்பகுதியில் கலீனமென்ற கற்களைத்தூளாக்கி மடக்குலையிலிட்டு எற்றசூடேற்றி ஈயம் எடுப்பார்கள். கலீனத்தில் வெள்ளி சிலவிடங்களில் குறைவாயும் சிலவிடங்களில் அதிகமாகவும் எடுக்கத்தக்கதாகச் சேர்ந்திருக்கும். 250-பங்கு கலீனத்தில் ஒரு பங்கு வெள்ளி சேர்ந்திருப்பது அதிகமாகும். சிலவிடங்களில் 100-ல் ஒருபங்கு வெள்ளி சேர்ந்திருப்பது அதிகமாகும். ஈயம் பெலனற்றது. கம்பியாக இழுக்கவும் தகடாய் அடிக்கவுங்கூடும். சன்னக்கம்பியாக இழுக்க உதவாது. சுமார் 620-பாகை காங்கைக்கு ஈயம் உருகும். ஆறும்பொழுது சுருங்குந்தன்மையுடையது. அதிகங்காங்கையேற்றினால சொற்பம் ஆவியாய்ப் பறக்கும். ஈயத்துண்டின் வெட்டுவாய் மெத்தப் பளபளப்பாய்க் காணுமாயினும், விரைவில் கறையாகும். இவ்வாறு உண்டாகுங்கறை ஈயம் அதிகமாய்ப் பழுதடையாவண்ணம் ஆடைபோலகாக்கும். பரமாணுவிற்சற்றும் ஈரமில்லாதிருப்பினும், சுத்தமான நீர் நிறைத்து அடைத்தபாத்திரத்திலிரு

ப்பினும்வெட்டுவாய் ஒருகாலத்தும் மங்காது. ஆனால் காற்றும்சுத்த நீரும் படும்பொழுது ஈயம்மிகுவிரைவிற்கறையாகும். கரையக்கூடிய ஈய உப்புக்கள் கொடிய நஞ்சு. ஈயம் தேகத்தில் வரவரக்கூடி மறைவாயிருந்து சிலவருடங்கட்குப்பின் வலி, சோர்வு, இளைப்பு முதலிய வியாதிகளையுண்டாக்கும். தொட்டிவாய்ப்பகுதியிலே பெரும்பாலும் பாவிக்கும் தண்ணீர் ஈயஞ்சேர்ந்ததாகவேயிருக்கின்றது. இதனால் அனேகர் மேற்சொல்லிய வியாதிகட்குட்பட்டு அவஸ்தைப்படுகின்றனர். ஈயத்தொட்டி குழல்களில் இருக்குந்தண்ணீரை அனேகர் குடிக்கவேண்டிவருதலால் ஈயஞ்சேர்ந்து உண்டாக்குந்தீங்கை யாராய்ந்து அதை நீக்கவேண்டிய வழிவகைகள் கண்டுபிடிப்பது மிக்க அவசியமேயாகும். தண்ணீரின் தன்மைக்குத்தக்கதாய் ஈயத்தினால் அதில் உண்டாகும் பழுதும் வித்தியாசப்படும். தண்ணீர்த்தொட்டி குழல்கள் செய்வதற்குக் கல், மரம், தகரம், இரும்பு இவையே, சிறந்தவைகள். உருக்கிய ஈயத்திற்காற்று வீசவிட்டு ஈயபுர வச்சிரத்தை அதிகமாகச்செய்வார்கள். இது மஞ்சள் நிறமானவொரு பொடி. கரியில் ஒரு சிறு துண்டு ஈயத்தை வைத்து ஊதுகுழலின் வெளிச்சுவாலையிற்பிடிக்க இது விளங்கும். அது உருகி ஈயமும் ஈய வச்சிரமுஞ்சேர்ந்து முதல் நரைநிறமாகும். இன்னுஞ் சூடேற்ற ஈயபுரவச்சிரமுண்டாய் அதன் நரைநிறம் மாறி நல்ல மஞ்சள்நிறமாகும். அனேகம் பொருள்களுக்கு இவ்வச்சிரம் மிக விசேஷமுள்ளது. இது கண்ணாடி செய்யவும் பீங்கானுக்குப்பூச்சிடவும் அதிக உபயோகப்படுகின்றது. இது நெய்மிலங்களோடு சேர்ந்து கரையாச்சவுக்காரங்கள் உண்டாகும். வைத்தியத்தில் வழங்கும் வங்கப் (Lead)பற்று இதற்கு உதாரணமாகும். லீன(Linum on Linseed) என்னும் எண்ணெயுடன் இதைககலந்து கொதிப்பித்து மினுக்கவெண்ணெயாகிய வார்னிஷை (Varnish) உண்டாக்குவார்கள். ஈயச்சிவப்பு (Red Lead) என்ற தூள், ஈயபுரவச்சிரம் உருகும் சூட்டிலும் குறைந்த சூடேற்றி அதை நெடுநேரம் காற்றுப்படவைத்தால் உண்டாகும். இது புரவச்சிரமும் பிரவச்சிரமுஞ்சேர்ந்த ஓர் கலவை. இது அதிகச்சிவப்புநிறமுடையதாய்க்,கண்ணாடி செய்வதிலும், மைப்பூச்சிலும், இயாக்கிரி மெழுகு கடதாசிக்கு நிறங்கொடுப்பதிலும் அதிகமாகச்செலவாகும். ஈயகாபன்சு (Carbonate of



Lead) இயல்பிலே உள்ளதாயினும் மைப்பூச்சுக்காக மிகவதிகமாகச்செய்யப்படுகின்றது. இது மெதுவும் பாரமும் தண்ணீரிற்கரையப்படுவதுமான ஓர் பொடி. நீதுரிக்கமிலமாவது அசதிக்கமிலமாவது கலந்த தண்ணீரில் நன்றாகக்கரையும். இதை ( Linum on Linseed) லீனவெண்ணெயோடுசேர்த்தரைத்தூயவெள்ளை (White-Lead) என்னும் மைப்பச்சையைச் செய்வார்கள். மக்னீசிசல்வசாகிய பேதியுப்பு, நஞ்சாகவுண்ட ஈயத்துக்கு நல்ல மாற்றாகும். குடலில் அது இதனோடு சேர்ந்து கரையாத ஈயசல்வசாகும். நெடுநாளாகப்படிப்படியாய்ச்சேர்ந்து கூடும் ஈயநஞ்சுக்கு இதுகூடாது. ஈயத்திற்செய்யப்படும் உலோகக்கலவைகள் அதிகமாகும். துப்பாக்கிச்சன்னரவைகள் வேண்டிய வைரமாகவும், லேசில் சிறு சிறு உண்டைகளாகப்பிரியவும், அந்த ஈயத்திற்பாஷாணஞ் சொற்பமாகச்சேர்க்கப்படும். நூறுமுழ உயரமுள்ள கோபுரத்தின் மேலறையில் ஈயத்தை உருக்கிப்பல சிறுசிறு துளைகளுள்ள அடியையுடைய பாத்திரத்தில் வார்க்கப்படும். இது அதனில் துளிகளாய்ப்பெய்து உண்டைகளாய் ஆறி இறுகிக்கீழே உள்ள தண்ணீர்த்தொட்டியில் விழும். தரந்தரமாக ரவைகளைப்பிரிக்கவும், வடிவங் கெட்டவைகளை அகற்றவும் அதைச்சாய்தளம் (Inclined plane) வழியாய்ச்செல்லவிட்டு அரிப்பார்கள். ஈயம் மூன்றுபங்கும் அந்திமனி ஒருபங்குஞ் சேர்ந்த கலவையே அச்சு லோக (Type metal) மாகும். இதுஇலேசில் உருகி ஆறும்போது விரியுமாதலால், அச்சின்வடிவம் நன்றாகக்கொடுக்கும். ஈயமுந்தகரமுஞ்சேர்ந்து உண்டாகும் ஓர் கலவை பேசுறர் (Solder) எனப்படும்.

காரை. கா. சிவசிதம்பர ஐயர்.

---

சென்னை-600 008

# பஞ்சதந்திரம்.

———— :o: ————

இஃது ஒருவழிநூல். இதற்குமுதல்நூல்கள் பல. அவைகள் வடமொழியிலுள்ள பஞ்சதந்திரமும் குரு, வியாஸர், பாராசரர், சுகர், மனு, சாணக்கியன் இவர்கள் வடமொழியிற்செய்துள்ள நூல்களுமேயாம். இதோபதேசமெனும் வடமொழிநூல் பஞ்சதந்திரத்தையும் மற்றைய நூல்களையும் ஆதாரமாகக்கொண்டுள்ளது. இப்பஞ்சதந்திரம் இதோபதேசமிரண்டும் தம்முள் கதைப்போக்கில் மாறுபாடுள்ளனவாம்.

வடமொழிக் கதாசரித்ஸாகரம் எனப்படும் பெருநூலுள் இராமாயணபாரத கதைகளும் வேறுபுராண கதைகளும் பஞ்சதந்திரத்திலுள்ள பலகதைகளும் விக்கிரமாதித்தன் கதை வேதாளக்கதைகளும் நிறைந்துள்ளன. இந்நூல் செய்தவர் காச்மீரதேசத்துப்பண்டித சிகாமணியாகிய சோமதேவர். இமயவரை தொடங்கிக் கன்னியாகுமரிவரை பரந்துள்ள நமது நாட்டில் பண்டைக்காலங்களில் வழங்கிவந்த கதைகளுக்கெல்லாம் இஃது ஒருபொக்கிஷமெனலாம். இவ்வாறாயினும் குணாட்டியரென்பவருக்குப் பைசாச பாஷையில் சந்திரகுப்தனின் அமைச்சரான காத்யாயனராற்கூறப்பெற்றுள்ள பெருங்கதையின் சுருக்கந்தான் இது.

பஞ்சதந்திரத்தின் முதல்நூலை எழுதியவரின் காலநிர்ணயம் இப்பொழுது புலப்படாவிடினும் அம்முதனூல் கி. பி. ஆறாவது நூற்றாண்டின் முன்பு எழுதப்பட்டிருக்கலாமென்பது ஓர் உத்தேசம். ஏனெனில் விக்கிரமாதித்தன் சபையில் வீற்றிருந்த ஒன்பது பண்டிதரத்தினங்களுள் ஓரிரத்தினமாகிய வராகமிகிரரின் நூலிலிருந்து முதனூலாம்பஞ்சதந்திரத்துள் ஆதாரம் காட்டப்பட்டிருக்கின்றது.

விக்கிரமசகம் கி. மு. 56-ம் ஆண்டு முதலாரம்பமாவதால் கி. மு. நூற்றாண்டிலொரு விக்கிரமாதித்தனும், கி. பி. ஆறாவது நூற்றாண்டிலொரு விக்கிரமாதித்தனுமாக இரண்டு விக்ரமாதித்தர்களரசாண்டார்களென்பது ஒருவகையார் கொள்கை. மற்றொருசாரார் ஒரே விக்ரமாதித்தன் ஆயிரம்ஆண்டு அரசுபுரிந்தானென்பர். ஆதி அரசன்பெயரைப் பின்வரும் அரசர்கள் வகிப்பதும் அப்படியே யதிகளின் பெ



யரையும் பின்வருவோர் வகிப்பதும் நமது நாட்டு மரபாதலின் இரண்டு விக்கிரமாதித்தர்களிருந்ததாய்க் கொள்வது தகுதியாகும். சங்கரர்களும் பலருண்டன்றோ.

வராகமிகிரர் பிறந்த ௵ கி. பி. 505. அவரது நிர்யாணகாலமோ கி. பி. 587. இவர் காலத்திற்குப்பிறகுதான் வடமொழிப் பஞ்சதந்திரம் எழுதப்பட்டுள்ளது. இதன்படியே தமிழில் பஞ்சதந்திரம் எழுதப்படவில்லையாயினும் சிலகதைகளிரண்டினும் காணப்படுவதால் தமிழ்நூல் வடமொழிச்சார்பென்று கூறப்படுகின்றது. அந்தநியாயம் முழுதும் பொருந்தவகையில்லை.

தமிழ்நாட்டில், மூவேந்தர்கள் உறையூர், மதுரை, கருவூர், ஆரூர் காஞ்சி முதலிய பல நகரங்களில் பல்லாயிரவாண்டு அரசுபுரிந்தமை உண்மையாதலாலும் ஆதிகாவியத்தில் வால்மீகிமாமுனிவர் தமிழ்வேந்தர்களைச் சுட்டியிருப்பதாலும் தமிழில் பஞ்சதந்திரக்கதைகள் வசனரூபமாகவும் பாடல்ரூபமாகவும் ஏற்பட்டகாலத்திற்குமுன்பே அதிலுள்ள கதைகள் கர்ணபரம்பரையாய் வழங்கிவந்தனவென்று கூற ஓர் ஆதாரமுளது. அது செந்தமிழ் 4-வது தொகுதி 10-வது பகுதியில் பத்திராசிரியரால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அக்கதை ஓர் பார்ப்பனி ஒரு கீரியை நடந்தவிருத்தாந்தத்தையறியாது கொன்றதேயாம். இக்கதை சிலப்பதிகாரத்து அடைக்கலக்காதையுள் கூறப்பட்டுளது. காவிரிப்பூம்பட்டினத்துக் கோவலன் நாளில் இக்கதை நடந்ததாகக் கூறப்பட்டுளது. அம்மாதின் கணவன் அவளோடு கூடிவாழ்ச்சியாது ஓர் ஓலையில் வடமொழிச்சுலோகமொன்றை எழுதிக்கொடுத்துவிட்டுக் காசியாத்திரை போய்விட்டான். கையிலேட்டுடன் புகார் நகரிலதன்கருத்தையறியச் சென்றபோது கோவலனைச்சந்தித்தனள். அவன், முன்னிகழ்ந்ததை யறிந்து, அம்மாதோடுஅவள்கணவனைச் சேர்ப்பித்து வாழும்படி செய்தனனென்பது விளங்குகின்றது. சிலப்பதிகாரத்திற்குரை செய்த அடியார்க்குநல்லார் அவ்வடமொழிச்சுலோகத்தை எடுத்துக்காட்டியுமிருக்கின்றனர். பஞ்சதந்திரத்துள் கட்டுக்கதைகள் சில உளவேனும், உண்மையாய் நடந்த பலகதைகளும் ஓராண்வழியாய்ப்பிற்காலத்தவர் காலத்

தில் யதா சம்பவங்களாக நம்பப்படுகின்றன. காலம் இடம் முதலியவைகளைச் சுட்டி, நிகழ்ச்சியையும் அதன்முடிவையும் கூறியிருப்பதால் அது உண்மைச்சம்பவமேயாம்.

நீதிபோதனைகளை உண்மைக்கதைகளைக்கொண்டும் வேறு உண்மைகளுக்குக் கதைகள் புலப்படாதபோது அவ்வுண்மைகள் மனதிலழுந்தும்படியாகப் புனைந்த கட்டுக்கதைகளாலும் போதிக்கும் இவ்விதமானவழக்கம் நமது நாட்டில் பண்டைக்காலந்தொடங்கி வழங்கி வருகின்றது. அவ்வழக்கம் வடமொழியாலும் வேறுதேசபாஷைகளாலும் நமது நாட்டில் நடைபெற்று வருகின்றது. இவ்வழக்கம் வேறுநாடுகளிலெல்லாம் நடைபெறுமையாற்றான் இப்பஞ்சதந்திரம் முதலிய நீதிபோதனை நூல்கள் பலபாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு உலகெங்கும் வழங்கப்படுகின்றன.

இப்பஞ்சதந்திரம்போல உலகெங்கும் பலபாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டுவழங்கும் நூல்கள் பைபிலும் பில்கிர்ம்ஸ்பிராகிரசும்தாமென்று காரெட்டெனும கல்விமான் கூறுகின்றனர்.

சென்னைபுரியில் கலாசாலையிற் பண்டிதராயிருந்த தாண்டவராய முதலியாரென்பவர் கி. பி. 1826-ம்வூ தமிழில் இனியநடையில் பஞ்சதந்திரத்தை மொழிபெயர்த்துளார். கன்னடபாஷையிலிருந்ததை மொழிபெயர்த்தார். மகாராஷ்டிரபாஷையிலிருந்து அந்தக்கன்னட நூல் எழுதப்பட்டது. இம்முதலியார் ஆங்கிலம், தமிழ், கன்னடம் முதலிய பலபாஷைகளிற்றேர்ந்தவர். தமிழிலிச்காலத்துள்ள வசனநூல்களுளெல்லாம் இப்பஞ்சதந்திரமும் கதாமஞ்சரியுமே தமிழ்கற்போர்க்கு நடைத்திறம் விளங்கும் இனியவசனநூல்களாகின்றன. தமிழ் வசன பஞ்சதந்திரம் இன்றைக்கு 80-வூகளுக்கு முன் எழுதப்பட்டது. வீரமார்த்தாண்டனெனும் ஒரு தமிழ்ப்புலவர் செம்பாகமான செய்யுளாகப் பஞ்சதந்திரத்தைப் பாடியுள்ளார். பாடியகாலம் வசனநூல் ஏற்பட்டகாலத்தோ அல்லது அதற்குச்சற்றுப் பிற்பட்டோ ஏற்பட்டதாகக்கொள்ளவேண்டும். இப்படி உத்தேசியாது புராதன நூலென ஏன் கொள்ளக்கூடாதெனின், செய்யுள்களின் நடைப்போக்கும் காலத்தில்வழங்கிய சொற்போக்கும் அவ்வாறுகூற இசை



யாவாம். இவ்வுண்மை கத்திய ரூபமாயும் பத்திய ரூபமாயுமுள்ள பிரதிகளையாராய்வதால் விளங்குவதுபோல் நியாயவாதத்தால் விளங்காது. பாடிய புலவரின் சரித்திரம் எங்கும் கிடைக்கவில்லை.

இதனால் பஞ்சதந்திரம் உலகெங்கும் கொண்டாடப்படும் ஒரு நீதிபோதனைக்குரிய நூலென்பது தெளிவாகின்றது. இன்றளவும் பாடலாயுள்ள பிரதி சுத்தப்பிரதியாய் வெளிவந்திருப்பதாகப் புலப்படவில்லை. மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் ஒரு சுத்தப்பிரதியைத்தமது அச்சியந்திரவாயிலாக வெளிப்படுத்தி மதுரைத்தமிழ்ச் சங்கப்பரீக்ஷைகளில் இப்பாடல்களிற் சிலபாகத்தை வருடந்தோறும் பாடமாக்குவார்களாகில் பண்டைக்காலத்தில் நமது நாட்டிலேற்பட்டுள்ள நீதிபோதனை நெறியை நாமெல்லோரும் நழுவவிடாது காத்து வருவதாகும். நீதிபோதனை இக்கதைகள் வழியால் மனதில் பதிவதுபோல் வேறுவகையால் பதியா.

இக்கதைகளைச்சொன்னவர் ஒருவரே. இருவரல்லர்; என்பதற்கு ஒரு நியாயங்காட்டுவோம். சர்மாவென்பது அந்தணர்களது பேர்களோடு கடையிற் சேர்க்கப்படும் மொழி. இம்மொழியை சோமன் விஷ்ணு எனும் மொழிகளுக்கு பின்வைத்தால் சோமசர்மா, விஷ்ணுசர்மா எனும மொழிகளாகின்றன. அரி என்னுஞ்சொல் விஷ்ணுவையும் சந்திரனையும் உணர்த்தும் பலபொருள்கொண்ட ஒரு மொழியாதலால் சோமசர்மாவென்பதே விஷ்ணுசர்மாவாகிஒருவரையேசுட்டுவதாம். சர்மாவைத்தமிழர் சன்மாவென்பர். செந்தமிழ் 4-ம் தொகுதியின் 9, 10, 11-வது பகுதிகளில் கண்டவுண்மைகளைச் சுட்டி நமக்குத்தோன்றியவண்ணம் இதனை நாம் எழுதியுள்ளோம். தமிழ்க் குழைக்கும் நமது நண்பர்கள் வேறு நியாயம் காட்டி இதனையுறுதியாக்கவும் அல்லது இதிற்கண்ட குறைவை ஆதாரங்காட்டி விளக்கவும் வேண்டுகின்றேம்.

இங்ஙனம்,

தி. வேங்கடராமஐயங்கார்.

உ

# கண்ணப்பநாயனார் புராணம்.

---

(க) புலவர், புகழ்ந்து துதிக்கும் நல்லவளம் பெருகாநின்ற பூவையலர்கின்ற வாவிகளுஞ்சோலைகளுஞ் சூழ்ந்த பொத்தப்பிநாட்டையே, பகைவராது முப்புரங்களையழித்த விடையவரும் வேதவாய்மையைக்காப்பவருமாகிய திருக்காளத்தியிலெழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானுக்குக் கண்ணையிடந்தப்பிய நாயனாரது நாடென்று சொல்லுவர். நாவலர் - எழுவாய்.

(உ) இந்த அழகியநாட்டில் இந்நாயனாரது திருப்பதிதான் யாது என்று வினவில், மூங்கின் முத்துக்களைக் கொழித்தெறிகின்ற வருவி பிரவாகிக்கின்ற சாரல்களையுடைய நெடிய மலைகள்சூழ்ந்தபக்கங்களில் மதத்தையுடைய வலிய யானைக்கோட்டால் வலியதொடரையுடைய வேலியைவளைந்து இயைந்த பெரியகாவல்சூழ்ந்த பழையபதியாகிய உடுப்பூராகும். பெரியமதிலையொத்த வேலியைக் கோலிச்சூழ்ந்த என்றலுமாம்.

(௩) அப்பதியில் வாழ்வோர் வேடுவர்களாம், வளைந்த செவிகளையுடைய நாய்களைக்கட்டிய வலியதிரண்ட விளாமரங்களின் கோடுகளில் வார்வலைகள் பக்கத்தே தூங்க, பன்றியும் புலியும் கரடியும் காட்டாவும் மானுமாகிய இவற்றின் பார்வை மிருகங்களேயன்றியும் கற்பாறையாகிய முன்றிலில் மலைநெற்காயும்.

(ரு) அரி - தரிசுக்கல்.

(சா) ஏறுடை - உயர்ச்சியையுடைய.

(எ) தம்மாட்டச்சமு மருளுமெந்நாளுமடையாதவர்கள், வலிய தோலையுடையாகவுடையவர்கள், காட்டிலுள்ளதேனையும் புழுக்கிய தசையையும் உணவுகொள்பவராகிய நஞ்சுபாய்ச்சிய அக்கினியைச் சொரியும் பாணங்களையுடைய கருமை செறிந்தார்போன்ற சரீரத்தையுடைய வலியதொழிலையுடைய மறவராகிய வேடுவர்கட்கதிபதி நாகனென்பவன். பொச்சை - காடு.



(அ) பெற்றியால் - இந்நாயனாரைப் புதல்வராகப் பெறுந்தன்மையினால்.

(கூ) பெரியபுலிப்பல்லாகிய தாலிக்கிடையிடையே சோகிகளைக்கோத்துப் பெரியமிடரலையும்படி பூண்டவள், மயிற் பீலிகளும் இலைக்குழைகளும் நெருங்க வண்டுகள் பொருந்திய மாலையையணிந்த கூந்தலையுடைய அச்சத்தைத்தரும் பெண்சிங்கம் போன்றவள்.

(க0) அரியதென்றெவருங்கூற எனவே,வயோதிகர்களாயினர் என்பது பெறப்பட்டது. அதற்படிகாதல் - அப்புதல்வர்ப் பேற்றிலுள்ள விருப்பம்.

(கக) தோரணத்தையும் மணிகளையுந்தூக்கி. கதம்பம்-கடம்பு. போரைத் தனக்காபரணமாக அணிந்த, புகழைச்செய்கின்றகுரவை நிகழப் பேரழகுபொருந்திய வெறியாட்டைச்செய்து திருவிழாவை நடத்தியபின்பு.

(கஉ) கொற்றமயிலூர்தி உடையென மாறுக.

(க௩) வெறியாட்டோடு குற்றமற்ற பலிகளாய மிகுந்தகடன்களைச்செய்ய, பொருந்திய அம்மாதங்கள் கழிதலால், அளவின்றிச் செய்ததவத்தால் வெண்மையாகிய சந்திரனைச் சமுத்திரம் ஈன்றாற்போலப் புதல்வனைப்பயந்தபொழுது போக்கிப் பயந்தபோதென முடிக்க.

(கச) நீர் - ஒளி. மணியுமாக வேடர் பொழிகின்ற மழையேயன்றி.

(க௫) வேடரளவே யன்றி உலகமெல்லா மளப்பரும் பெருமையைக் காட்டித் தருங்குறிகள் பலவுந்தோன்ற; முழுதும் நற்சகுனம் நிகழ என்பது கருத்து.

(கஅ) மலையில்வீற்றிருக்குந் தங்கள் குலதெய்வமாகிய சுப்பிரமணியக்கடவுளினது காவலாக, வேட்டுவமரபினுள்ள தங்கள் குற்றமில்லாத பழைய முறைமைக்கியையப் பொருந்துவனவற்றைத்தோத்திரஞ்செய்து புரிந்து, வாசனைபொருந்திய இளந்தளிரையுஞ் சூட்

டி மலைவேப்பங்கொட்டைகளை அலங்கரித் திடையிற்கோத்த சோகி மாலையை அப்புதல்வருடைய அரையிலே கட்டி அவரை அழகுபொருந்த வளர்க்குங்காலத்து. வரை மணிக் கவடி எனப்பாடங்கொண்டு, வரைபொருந்திய சோகிமாலையை யென்பாருமுளர். கட்டுதலைச் சுப்பிரமணியக்கடவுட்குக் கட்டுத லென்பதவர்கருத்து.

(௨௦) இடுமெடித்தளர்வு - தளர்நடை. முட்பன்றிமுள்ளையரிந்து கோத்த கயிற்றிற் கோக்கப்பட்ட புலிப்பற்றாலியானது.

(௨௧) ஒளியையுடைய பசுமையாகிய சோகியோடு கட்டப்பட்ட இரத்தினங்களோடு தொடுத்தகாவலாகிய ஆபரணத்தையணிந்த அரைஞாணைக்கட்டி. காப்புக்கலன் - தாயித்துக்கூடு.

(௨௨) திருவாய் நீரினுள்ளே நனைந்தமுதமூறிய ஒழுகிய மழலைத்தீஞ்சொல்லை யழகிய மிருதுவான பவளம்போன்ற சிவந்தவாயாற் குதப்பி வளராநின்றார்.

(௨௩) பார்வை மிருகமாகிய புலியின் பிளந்தவாயை முழைஞ்சென்றுகருதி அழகிய கையைநீட்ட, அவர்மீது விருப்பத்தையுடைய பிதாக்கண்டு பசியதழையைக் கையிற்கொண்டு அடிக்க, ஆதித்த சந்திரர்களுக்குத்துன்பத்தை நீக்கும் அழகு வளர்கின்ற கண்களில் நீர்த்துளியாக நிறைந்து வருகின்ற முத்தத்தை யந்தமாதாவானவள் தன் வாய்முத்தமிட, நீக்கி. மாதா வாயால் முத்தமிடப் புதல்வரதை நீக்கி யென்றுமாம்.

(௨௪) உடுக்கைக்குறட்டை. உருட்டி ஓடி, கட்டப்பட்ட நாயினுடைய கயிற்றைச்சுற்றிப் பிடித்தறுத்து, மிக இளையவேட்டுவச் சிறுமியர் செய்தசிற்றில்களைப் பாதமாகிய சிறியதளிராற் சிதைத்து, பக்கத்தேவரும் பாலியருடன் குடிநெருங்கிய சிறிய குடிசைகளெவ்விடங்களினும் குறுநடையாகிய குறும்பைச்செய்து. குறும்பு - பொல்லாங்கு.

(௨௫) வடிவு ஆர்கண்ணி - அழகுநிறைந்த மாலை. நெருங்கிய குடிகளையுடைய சிற்றூரைச்சூழ்ந்த அலங்கரிக்கப்பட்ட யானைத்தந்தத்தாலாகிய வேலியையுடைய உழலை மரம் பொருந்திய சிறியபுறங்காட்டிற்சென்று.



(௨௬) சாபம் - சிங்கக்குட்டி. சாபமானவையாய் வளர்ப்பன எண்ணிலாதன.

(௨௭) ஊட்டிக்கொண்டு கண்டுயிற்றி - முலைப்பாலை உண்பித்துக்கொண்டு நித்திரைசெய்வித்து.

(௨௮) கூட்டி, அவர்கள் வந்தநாளிற் குறித்தவற்றையெல்லாம்.

(௨௯) சேடரின் - ஆதிசேடரினும், அறிவுடையோரினும். சாற்றிச்சொன்ன பேரொலியைக்கேட்டு.

(௩௨) சமைத்தல் - முடித்தல். பான்மை - வில்விழவுக்குரிய தன்மை. தேன்பொருந்திய கொன்றைமாலையையணிந்த சிவபெருமானுடைய வில்லான மேருவானது கடலில் நஞ்சையுண்டாக்க, அதனைக்கண்டபின்னரும் அப்பெருமானுக்குக் காட்டிலுள்ள தசையையமுதாக்கும் வில்லிற்குக்காப்புக்கட்டினர். மலைகளின் பொதுப்பெயராகிய மேரு என்பது இங்கே மந்தரமலையின்மேற்று. பொன்மயமாகிய ஒற்றுமை நயம்பற்றி இமயமலை மந்தரமலைகளை மேரு என்று கூறுதலமையுமென்று கூறுவாருமுளர். இந்த வில் சிவனுக்கு அமுதத்தை யீந்தமையால் அதினும் இது சிறந்ததென்பது கருத்து.

(௩௩) வில்லிற்குக்காப்புக்கட்டுந்திண்ணிய புலிநரம்பிற்செய்த நன்மை மிக்க காப்பாகிய நாணை நாகன்பெற்ற குன்றின் முன்கையிற் கட்டி.

(௩௪) புற்பாற்சொன்றி - புற்சாதம். புன்பாற்சொன்றி என்பது பாடமாயின், புன்செய்த்தானியங்களின் சோறென்க.

(௩௫) வேரிவிளங்கனி - தேன்பெய்த விளாம்பழம். ஈயல் - ஈசல்.

(௩௭) பாசிலைப்படலை - பச்சிலை மாலை. காசுடைவடத்தோல் - இரத்தினங்களைக்கோத்த தோல்வடம்.

(௩௮) தொண்டகமுரசு - இருபெயரொட்டுப் பண்புத்தொகை; உம்மைத்தொகையுமாம். சீர்கொண்ட விழவு என மாறுக.

(இன்னும் வரும்.)

ஜி. சதாசிவம்பிள்ளை,

உ

# "மதுரை ஸ்தானீகர் வரலாறு."

(கசஅ - ம் பக்கத்தொடர்ச்சி.)

[பழைய ஏட்டிலிருந்தபடியே வெளியிடப்பட்டது.]

"தாருண௵ முதல் சருவஜித்து௵ வரைக்கும் ௵ ச - க்கு சின்னப்பநாயக்கர் பட்டமாண்டார். சருவதாரி௵ முதல் நந்தன ௵வரைக்கும் ௵ ரு-க்கு ஐயப்பநாயக்கர் பட்டமாண்டார். விஜய ௵முதல் பிலவ௵ வரைக்கும் ௵ கூ-க்கு விசுவநாதநாயக்கர் பட்டமாண்டார். சுபகிருது௵ வரதப்ப அண்ணர்களாண்டார்கள். சோபகிருது௵ முதல் குரோதி௵ கார்த்திகை௴ வரைக்கும் தும்பச்சிநாயக்கராண்டார். ஷெ ௵ மார்கழி௴ முதல் விசுவாவசு௵ வரைக்கும் விசுவநாத நாயக்கராண்டார்."

"பராபவ௵ முதல் பிங்கள௵ வரைக்கும் ௵ கஉ-க்கு விட்டலராஜா திம்மநாயக்கராண்டார். காலயுக்தி௵ முதல் ரௌத்திரி ௵வரைக்கும் ௵ ங-க்கு செல்லப்பநாயக்கர் பட்டுக்கோட்டை யதுவப்பநாயக்கராண்டார். ஆகப்பாண்டியராஜாக்கள் அறுதியில், சகாப்தம் ருஉளசயஙு - க்கு மேல், ருசாஅயஉ வரைக்கும் இந்தப்படிக்குப் பட்டமாண்டார்கள். இந்த ராஜாக்கள் செய்த திருப்பணிகளுக்கும் திருவாபரணங்களுக்கும் கணக்குண்டு."

"சகாப்தம் ருசாஅஉ - க்குமேற்செல்லாநின்ற ரௌத்திரி௵ மார்கழி௴ ககஉ அராஜரிகமாக விஜயநகரத்திலிருந்து ராயர் உத்தரவுப்படிக்குக் கட்டியம் நாகமநாயக்கரும், அவர் குமாரன் விசுவநாதநாயக்கரும், அரியநாயகமுதலியாரும், பாண்டியன் வழியில் ஒரு தாயாதிவர்க்கம் அவனிவேந்த ராமபாண்டியனைக் கூடவழைத்துக் கொண்டுபோய்ப் பட்டங்கட்டிவைத்துவரச்சொல்லி ராயர் உத்தரவாக, பதின்மூவாயிரங்குதிரை தளத்துடனே திரிசிரபுரங்கோட்டையை வந்து கட்டிக்கொண்டு மதுரை வந்துசேர்ந்தார். உத்தரவுப்படிக்கு அவனிவேந்த ராமபாண்டியனுக்குப்பட்டங் கட்டாமல் விசுவநாதநாயக்கரவர்களுக்குப் பட்டங்கட்டிவைத்து, அரியநாயகமுதலியாரவர்கள் தளகர்த்தருமாகி, பண்டாரங்கி ஹரிபட்டரிடம் தீக்ஷை பண்ணிக்கொண்டு செங்கோலும் வாங்கி ராஜ்ஜியபரிபாலனம் செய்துவந்தார். அவர் ரௌத்திரி௵ மார்கழி௴ முதல் ருத்திரோத்காரி௵ தை௴ வரைக்கும் பட்டமாண்டார். அந்தநாளையில் ராயர் சமஸ்தானத்தை டில்லியிலிருந்த துலுக்கர் வந்து கட்டிக்கொண்டார்கள். பட்டங்கட்டி வைக்கிறோமென்று கூட்டிவந்த அவனிவேந்த ராமபாண்டியனுக்குத் தக்ஷிணத்தில் கெங்கைகொண்டானில் லெக்ஷம் பொன் சீமைவிட்டுக்கொடுத்து, மற்றைச் சீமையையெல்லாம் கட்டிக்கொண்டு பட்டமாண்டார்கள். தேவாதாயமுண்டானதை முன்பின் விசாரித்துக்கொண்டு விட்டுக்கொடுத்து, ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவரர்களுக்கு பூஜை, திருநாள், தேர் சகலமும் சிறப்பாக நடப்பித்துவரச்சொல்லி, அபிஷேக பண்டாரத்தைப் பரதேசிமுத்திரை விசாரணைக்கு நியமித்து நடத்திவந்தார்கள். அபிஷேகபண்டாரஞ்செய்வித்த திருப்பணிகளுக்கும், திருவாபரணங்களுக்கும் கணக்குண்டு. விசுவநாதநாயக்கரையனவர்கள் சீமை கட்டினவுடனே பிரசாதங்கொண்டு ஸ்தலத்தாரை விஜயநகரத்துக்குப் போய்வரச்சொல்லி உத்தரவாயிற்று. அப்போது மாளுவச்சக்கரவர்த்தி குலசேகரபட்டரை இவ்விடத்திலிருக்கச்சொல்லி, சதாசிவபட்டரை விஜயநகரத்துக்கு அனுப்புவித்தார்கள். அவர் விஜயநகரம்போய் நான்குமாதஞ்சென்று, வந்துசேர்ந்தார். போகவரச்செலவுகணக்குப்பண்ணித்தம்முடைய பாத்தியம்போக, குலசேகரபட்டர் பாத்தியத்துக்கு பொ - ரு கொடுக்கவேண்டிவந்தவிடத்தில் கொடுக்கவகையின்றி, ஒன்பதுநாளைக்கு உள்பரிசாரகத்தை யொத்தியாய்ச் சதாசிவபட்டருக்கு எழுதிக்கொடுத்தார். அன்றுமுதல் சதாசிவபட்டர் உள் பரிசாரகம் கசு - நாளும் இரண்டு கோவில் பூஜாகர்மமும் ஆண்டுவருகிறார்.

"சக்கரவர்த்திகள் உள்பரிசாரகம் கஉ - நாளும் உற்சவமூர்த்தி யிளையநயினார் மாறியாடுவார் முதலான பரிவாரதேவதைகளுக்கு உண்டான பூஜாகர்மமும் நடப்பித்துவருகிறார். அப்போது இருவகைப்பேர்களும் அனுகூலமாயிருந்தார்கள். ருத்திரோத்காரி௵ மாசி௴ முதல் ஆங்கீரஸ௵ கார்த்திகை௴ வரைக்கும் ௵ அ, ௴ ய-

க்கு விசுவநாதநாயக்கரய்யனவர்கள் குமாரன் குமார கிருஷ்ணப்ப நாயக்கர் பட்டமாண்டார். ஆங்கிரஸ௵ மார்கழி௴ முதல் மன்மத௵ ஆவணி௴ வரைக்கும் ௵ உ௰உ-௴ அ-க்கு வீரப்ப நாயக்கரய்யனவர்கள் பட்டமாண்டார். அவர்கள் நாளையில் அரிய நாயக முதலியாரய்யனவர்கள் தளகர்த்தத்தில் திரிசிரபுரம் கோட்டையும் மதுரைக்கோட்டையும் கற்கோட்டையாகவுண்டுபண்ணிவைத்தார்கள். சுவாமிக்குத்தம்முடைய அறைக்கட்டளையும் உண்டுபண்ணுவித்தார்கள். அரியநாயக முதலியாரய்யனவர்களுக்குச் சொப்பனமானபடியால் தம்முடைய அறைக்கட்டளையுமுண்டுபண்ணி, ஆயிரக்கால்மண்டபமுமுண்டுபண்ணுவித்தார். அந்தக் கட்டளைகளுக்கு விசாரணை அபிஷேகபண்டாரம். அறைக்கட்டளைகளுக்கு விட்டுக்கொடுத்த கிராமங்களுக்கும் கணக்குண்டு. அனேகந் திருவாபரணமுஞ் செய்துகொடுத்தார். அந்தநாளையில் சக்கரவர்த்திகள் ஒத்திக்குப்பணத்தை வாங்கிக்கொண்டு, ஒன்பதுநாளைப் பரிசாரகத்தை விடச்சொல்லி சதாசிவபட்டரைக்கேட்குமிடத்தில் சதாசிவபட்டர் வாசாலகனாயிருந்தபடியினாலும் பத்துப்பணமுஞ்சேர்ந்து ஜனமுமிக்கவரானதாலும் ஒத்தியில்லை; அறுதிக்கிரயமென்று அரமனையிலுங்கட்டிப்பேசிக்கொண்டு வலிமையினாலே தள்ளிவிட்டார். அப்போது அரமனையிலிருவகைப்பேருங் கரையேறி நடுவிற்கூட்டுவித்து சன்னிதி கோபுரவாசலிலே நியாயங்கேட்க, ஒத்திதானென்று தீர்ந்தது. ஆனாலும், பணம் வாங்கிக்கொண்டுவிடாமல் வலிமையினால் தள்ளிவிட்டார்கள். அன்றுமுதல் இருவகைப்பேருக்கும் பகைமூண்டது. முந்தின ராஜாக்கள் திட்டம்பண்ணுவித்தபடிக்கு நில்லாமல் மறியலாய் இவர் வலுத்தவேளையில் அவர் கையாடுவதும், அவர் வலுத்தவேளையில் இவர் கையாடுவதுமாக, இப்படியனேகடந்து, சக்கரவர்த்திகளுக்கு ஆசாரியவபிஷேகமில்லையென்று சொல்லி, சதாசிவபட்டர் குலசேகரபட்டர்வகைச்சனங்களைக் காவல்பண்ணுவித்து வலிமையினால் அபிஷேகம்பண்ணிக்கொண்டார்".

(இன்னும் வரும்.)

---

# புத்தகக் குறிப்பு.

:o:

## "காங்கிரஸ்" உபந்நியாசங்கள்.

இப்பெயர்கொண்ட புத்தகமொன்று சென்னைச் "சுதேசமித்திரன்" ஆபீஸினின்று எமக்கு அனுப்பப்பட்டுள்ளது. சமீபத்தில் கல்கத்தாவிலே 22-வது இந்தியன் நாஷனல் காங்கிரஸ் கூடியபோது, அம்மஹாநாட்டுக்கு நம் பெருந்தகைக்கிழவனாகிய ஸ்ரீ: தாதாபாய் நௌரோஜியவர்கள் அக்கிராசனம் வகித்த மாட்சியும், அங்கேகூடிய இந்தியமகாஜனப்பிரதிநிதிகளை உபசரிக்கும்பொறுப்பில் பங்காளப் பிரமுகரான ஸ்ரீ: டாக்டர் ராஸவிகாரிகோஸ் அவர்கள் தலைமைவகித்ததும், இதற்குமுந்திய எல்லாக்கூட்டங்களினும் இம்முறைக் காங்கிரஸிலே தேசாபிமானப்பெருக்கோடியதும் பிற விபவங்களும் நந்நாட்டில் அறியாதார் யாவர்? இம்மகாசபையின் தொடக்கத்தே நம் கிழப்பெருந்தகையும் டாக்டர் கோஸவர்களும் ஆங்கிலத்திற்புரிந்த மகோபந்நியாசங்கள் இன்றும் நம்காதில் ஒலித்தவண்ணமாகவேயுள்ளன. அவற்றிலடங்கிய அரும்பெருங்கருத்துக்களெல்லாம் தேசாபிமானிகளொவ்வொருவரும் பொன்போற்பொதிந்து போற்றத்தக்கனவன்றோ! இந்தியராகிய நமதுரிமைகளும் குறைகளும் முறைகளும் இவையென்பதையும், லௌகிகமுறையில் நாமடைதற்குரிய அரும்பயன்களையும் பசுமரத்தாணிபோலப் பதியுமாறு, அம்மகோபந்நியாசங்கள் விளக்குமாட்சி இங்கே முற்றும் புகழுந்தரத்ததன்று.

இத்தகைய உபந்நியாசங்கள் ஆங்கிலமறிந்தோர்க்கு மட்டுமே உபயோகமாவதையும், அஃதறியாத பல்லாயிரந்தமிழ் மக்கட்கு அவை பயன்படவியலாமையும் அறிந்து, சென்னைச் "சுதேசமித்திரன்" பத்திராசிரியர், தம் அன்பார்ந்த முயற்சியால், அக்குறையை இப்போது நீக்கியுள்ளாரென்றால், அச்செய்தி நந்நாட்டவர்க்குப் பெருமகிழ்ச்சி தரத்தக்கதேயாம். மேற்கூறிய பெரியோரது பிரசங்க மொழிபெயர்ப்புக்களோடு, ஸ்ரீ: தாதாபாயின் அற்புதவாழ்க்கையையும், அவர் காங்கிரஸ் தலைமை வகித்தற்குச் சீமையைவிட்டுப் புறப்

படும்போது, அவரை வழியனுப்புதற்காக பார்லிமெண்டு மெம்பர்கள் பலரும் பிறஆங்கில இந்தியபிரமுகர்களும் கூடிச்செய்த மரியாதைகளையும் எழுதிச்சேர்த்து, மொத்தத்தில் 156-பக்கமுடையதாக, இப்புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது. இம்மொழி பெயர்ப்புக்களெல்லாம் இனிய எளிய நடையில் அமைந்து விளங்குவதுடன், ஆங்கிலமூலத்திலுள்ள அரியபெரியகருத்துக்களை அப்பாஷை யுணர்ந்தவர் அறிந்துசுவைக்குமாறுபோல, தமிழரும் அறிந்து சுவைக்கும்படி அவ்வளவுசெவ்விதாக ஆக்கப்பட்டுள்ளமையால் இம்மொழி பெயர்ப்புக்களை அவற்றின் "எதிரொலி"என்றேகூறலாம். சிலகாலமாக நந்தேசத்தார்க்குள் உண்டாயுள்ள நவீனக்கிளர்ச்சிக்கேற்ப, இத்தகைய அரிய உபந்யாசங்களும் தக்கவர்களால் வெளியிடப்பட்டு வருவது நல்லகாலத்தின் அறிகுறியென்பதில் ஐயமில்லை. தமது அரிய காலத்தையும் உழைப்பையும் தமிழ்நாட்டாரது நன்மைக்கென்றே செலவிட்டுவருகின்ற ஸ்ரீ: ஜி. சுப்பிரமணிய ஐயரவர்களது முயற்சியால், நம்மவரது ராஜகீயவுணர்ச்சிக்கு முக்கியமாக வேண்டத்தக்க அற்புத உபந்நியாசங்கள் சில, முன்பும் இவ்வாறே வெளிவந்துள்ளன. இச்சிறுநூலகளால் நம்மவர்கருண்டான பயன் பெரிதென்பதில் ஐயமில்லை. இவ்வுபந்நியாசங்களின் கருத்துக்களெல்லாம், நமது பின்னில்லைமையின் பெருமைக் குற்றனவாதலால், அவை நமபெல்லாவுள்ளத்தும் புகுந்து வேலைசெய்யுங் காலமே நமது நற்காலமாகும்; அப்போதுதான், ஐகிகத்தில, உயர்பதவியை நாமும்அடைந்தவராவோம். ஆதலால், இத்தகைய மகோபந்நியாசங்களைப் பெற்றுப்படிப்பதும், படித்தவற்றைப் பலர்க்கு மெடுத்துப் போதிப்பதும் நமது பெருங்கடமைகள் என்பதை தமிழ்மக்கட்கெல்லாம் ஞாபிக்க விரும்புகிறேம். இவ்வாறு, நமது கடமை ஒழுங்காக நடைபெறுமாயின், இதுபோன்ற அற்புத உபந்நியாசங்களும் நூல்களும், ஐயரவர்களையொத்த நல்லறிஞர்கள் மூலம் அதிகமாக வெளிவந்து நமது உலகவறிவை விரியச்செய்யுமென்றே நம்பலாம். இக்காங்கிரஸ் உபந்நியாசப் பிரதிவிலை அணா எட்டாகும்.

பத்திராசிரியர்.

---

OFFICE OF THE ... TRAR OF ... REGISTERED 29 APR 1907



கடவுள் துணை

# செந்தமிழ்.

தொகுதி-௫] பராபவஸு பங்குனிமீ [பகுதி-௫

## பழைய தமிழெழுத்துக்கள்.

விரிந்துபரந்த இந்நிலவுலகின்கண்ணே மக்கட்பகுதிகளால் வழங்கப்பட்டுவரும் பாஷைகள் தொள்ளாயிரத்துக்கு மேற்பட்டன என்பர். பலவகைப்பட்ட இம்மொழிகளிலே பண்டைக்காலந்தொட்டு இலக்கியவிலக்கண வரம்புடையவாய்ச் சீர்திருத்தம்பெற்று விளங்குவன:—வடமொழி, தென்மொழி, இலத்தீன், கிரீக்கு, ஈப்புரு முதலியனவாம். இப்புராதனபாஷைகளில் தமிழுமொன்று என்பது, அறியாதார் சிலர்க்கு அசம்மதமாயினும், ஆராய்ச்சிவல்ல நம் பண்டிதசிகாமணிகள் பலரும் மேனாட்டுப்புலவர் சிலரும் அக்கொள்கையிற் சிறிதும் ஐயுற்றவரல்லர். பண்டை நாள் முதலே தமிழில் வழங்கிவரும் இலக்கியவிலக்கணவமைதிகளையும் பிறசில வழக்கங்களையும் சிறிதேனுமுணர்ந்தவர்க்கு இவ்வுண்மை வெளிப்படாமற்போகாது. இவ்விஷயம்பற்றிப் பிரபல ஆராய்ச்சிகள் முன்னரே செறிந்து நிகழ்ந்துள்ளமையால் அவற்றை இப்போது விசாரிப்பது வேண்டாததாகும்.

இங்ஙனம், பழமையும் சீர்திருத்தமும் பெற்ற உயர்தனிமொழிகளிலே தமிழும் ஒன்றாயின், அம்மொழி தனக்கேயுரிய அக்ஷரவமைதியையும் முற்காலத்தே பெற்றதாகல்வேண்டுமன்றோ. பாஷைகளின் சீர்திருத்தமானது, அவற்றிற்குரிய ஒருவித எழுத்துக்குறிகளின் உதவியாலன்றி எங்ஙனங் கைகூடும்? பழமையும் இலக்கியவிலக்கண வரம்புமுடைய வடமொழி இலத்தீன் முதலிய பாஷைகள் தமக்கென்று தனியேயமைந்த புராதன லிபிகளுடையனவன்றோ.

இம்முறைப்படி, தமிழ்மொழிக்கேயுரிய புராதன அக்ஷரங்கள் யாவை? அவற்றின் ஆதிவடிவு எம்முறைபற்றியது? என்னும்கேள்விகள் நியாயமாக, இங்கே உதிக்கக்கூடியன. ஆனால், இக்கேள்விகள் முன்னரும் எழுந்து விவாதப்பட்டவைகளேயன்றிப் புதியனவல்ல. இவ்விஷயத்தில் மறுபடியும் புகுவது விரும்பத்தக்கதன்றாயினும் அதுபற்றி ஆராய்ச்சியிற்கண்ட உண்மைகளை மறைத்தல் தவறாதலால் இதனை விஷயமாக எடுத்துக்கொண்டேன்.

மேற்குறித்த கேள்விகட்கு, 'இப்போது வழக்கிலுள்ளவைகளே தமிழ் மொழியின் புராதன எழுத்துக்கள்' என்று எளிதாக விடைதருவோமாயின், சிலகாலத்துக்கு முன் நம்பத்திரிகையிலே நிகழ்ந்த வாதங்கள் நம்புறமும் திரும்பிவிடும். இப்போது பரதகண்டத்து வழங்கும் பல்வேறு எழுத்துக்களெல்லாம் இற்றைக்கு 2200-ஆண்டுகட்கு முன் விளங்கிய அசோகசக்கரவர்த்திகாலத்து அக்ஷரங்களின் திரிபுகளென்பதும், இற்றைநாள் தமிழெழுத்தும் அன்னதொன்றேயென்பதும் சாஸன பரிசோதகரது ஒத்த கருத்தாகவுள்ளது. அச்சாஸனபரிசோதகர் இந்தியாவிலே பலவிடங்களிலுமுள்ள புராதன சிலாலிகிதங்கள் பலவற்றைத் துருவிச்சோதித்து, காலந்தோறும் எழுத்துக்கள் வேறுபடும் வகையைக் கண்டுதெளிந்தவர் என்று சொல்லப்படுவதால் அவரது அபிப்பிராயங்கள் மதிக்கப்படுவதும் இயல்பேயாம். இத்தகைய ஆராய்ச்சி நமக்கில்லாதவரை, நாம் அவர் கூற்றைச் சோதிக்கப்புகுவதிலும், தமிழின் ஆதி எழுத்துவரலாற்றை வேறுவழியாகப் புகுந்தாராய்வது சிறந்ததென்று தோற்றுகிறது.

சிலைகளிலும் வழக்கிலுமுள்ள தமிழெழுத்துக்கள் அசோகாக்ஷரங்களினின் றுதித்தவை என்பது சாஸனபரிசோதகர் கொள்கையாயினும், தமிழர்க்கு எக்காலத்துமே எழுத்துக்கள் கிடையா என்பது அவர் ஆக்ஷேபமாகத் தெரியவில்லை. தமிழ்மொழியில், மிகப்பழைமையும் பெருமையும்பெற்ற நூல் தொல்காப்பியம் என்பது அவரும் நன்கறிந்ததன்றே. இத்தொல்காப்பியத்திலே, கடைச்சங்கநாளிலும் வழங்காத சொற்களும் முடிபுகளும் வழக்குகளும் காணப்படுதலால், அந்நூலின் பழமை உறுதிபெற்றதென்பதில் ஐயமில்லை. நாம்



எவ்வாறு குறைத்துக்கூறினும், அந்நூலியற்றிய தொல்காப்பிய முனிவர்காலம், அசோகன்காலத்துக்குச் சிறிதும் பிற்பட்டதாகாதென்பதை நிரூபிக்கலாம். "செந்தமிழி"ல் முன்பு வெளிவந்த "இடைச்சங்கம்" என்னும் விஷயத்தாலும் இந்நிரூபணம் பெறப்படும். இத்தொல்காப்பியத்தே எகரவொகரங்களும், மகரமும், குற்றியலுகரமும் * வரிவடிவில் புள்ளிபெறுதல் நியதி என்று விதிக்கப்பட்டுள்ளது. அம்முறைப்படி, மகரம் இருபுள்ளியுடையதாதல் வேண்டும். இவ்வரிவடிவுப் பகுதிகள், 'அசோகாக்ஷரங்களின் திரிபு' என்று கூறப்படும்புராதன சிலாலிகிதங்களிற் காணப்படுவனவா? இவையன்றி, நச்சினார்க்கினியர் எழுத்தால் கா ஙா முதலியவற்றிலும், கொ ஙோ முதலியவற்றிலுமுள்ள கால்கள் முற்காலத்தே புள்ளிவடிவு பெற்றிருந்தன என்பது வெளியாகின்றது. இதுவும் அவற்றிலுண்டா? இக்கேள்விகட்கு "இல்லை" என்பது விடையாகுமாயின், அவ்வரிவடிவுகளால், அசோகன்காலத்துக்குமுன்பே தமிழர் தமக்கென்று எழுத்துக்கள் உடையராயிருந்தாரென்பது தெளிவாகலாம். இவற்றினுண்மையை அறிஞர் அறிவிக்கவேண்டுகிறேன்.

இனி, நன்னூலார் முதலிய பிற்றையாசிரியர்காலத்து வழங்கிய தமிழெழுத்துக்கள் இப்போது பயில்வனவற்றோடு அதிகவேற்றுமை உடையனவல்ல. ஆயின் அவர்கள் "தொல்லைவடிவினவெல்லா

---

* "மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்" "குற்றிய லுகரமு மற்றென மொழிப" என்னும் தொல்காப்பியச்சூத்திரங்களுள், பின்னதில்வரும் "அற்று" என்னும் மாட்டேற்றிற்கு, 'மெய்யீறுபோலக் குற்றியலுகரவீறும் புள்ளியொடு நிற்கும்' எனப்பொருள் கொள்ளாது, உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் வேறுரை கண்டனர். அது பொருந்தாதென்பது, யாப்பருங்கலவிருத்தியில்—— "குற்றிய லிகரமும் குற்றியலுகரமும் புள்ளி பெற்று நிற்கும்; என்னை? "குற்றியலிகரம் குற்றிய லுகரம் மற்றவை தாமே புள்ளி பெறுமே" என்பது சங்கயாப்பு"—எனவரும் முன்னோர் கொள்கையாற் பெறப்படும். நன்னூல் விருத்தியுடையாரும் "உயிர்வரினுக்குறண் மெய்விட்டோடும்" என்னும் சூத்திரவுரையில் உரையாசிரியர் முதலியோருரையை மறுத்து, முற்கூறிய கருத்துப்படப் பொருள்கூறினர். இனி, யாப்பருங்கலவிருத்தியால், குற்றியலிகரத்துக்கும் புள்ளியிடுதல் முற்காலத்தவர்வழக்கமென்பது வெளியாகின்றது.

வெழுத்தும்" என்று கூறியது, தங்காலத்து லிபிகளே முற்காலத்தும் வழங்கியவை என்னுங் கருத்துடனேயாம். இரண்டு நூற்றாண்டுக்கு முந்திய இலக்கண விளக்கமுடையாரும், பவணந்தி கூறியவாறே, கூறிப்போந்தார்! நவீனரான நம்மவரது அபிப்பிராயமுங்கூட, இப்போது வழங்கும் எழுத்தமைதியே புராதனமான தென்பதன்றோ! ஆனால், நாம் சிலாசாஸன பரிசோதனசாலைக்குச் சென்று அங்கேயுள்ள புராதனசிலாலிகிதங்களின் பிரதிசாயப்படங்களை முறையே நோக்கிவருவோமாயின், அதிற்காணுந் தமிழெழுத்துக்கள் நாகராக்ஷரங்கள்போலவும் தெலுங்குமலையாள எழுத்துகள்போலவும் வேறு சித்திரலிபிகள்போலவும் தோன்றுமேயன்றி உண்மைதோன்றாது. இதன்காரணம் ஒரேஎழுத்துக் காலந்தோறும் பலபடியாக வேற்றுமைப்பட்டுக் கிடப்பதேயாம். சாஸன பரீக்ஷகர்கள் அவற்றின் வேறுபாடுகளையெல்லாம் நன்கறிந்தவரென்பதற்கு அநேக நியாயங்களுண்டு. இத்தகை ஆராய்ச்சி நமக்குப்புதியதுபோலவே நன்னூலார் இலக்கணவிளக்கமுடையார் முதலிய பிற்காலத்தாசிரியர்க்கும் புதியதென்பதில் ஐயமுண்டோ? ஆதலால், "தொல்லை வடிவின வெல்லாவெழுத்தும்" என்று அவர்கள் கூறியது, முன்னோர் கூற்றை வழிமொழிந்ததேயன்றி லிபிகளையெல்லாம் சோதித்துக்கூறிய ஆராய்ச்சியுரையென்று கொள்வது பொருந்தாதாம். அன்றியும், நன்னூலார்காலத்து எழுத்துமுறையே தொல்காப்பியர்காலத்ததுமாயின், தொல்காப்பியத்துக் கூறப்பட்ட வரிவடிவுகள் பவணந்திகாலத்தனவாய சிலைகளிலும் காணப்படுதல் வேண்டுமன்றோ. சுருங்கவுரைக்குமிடத்து, சாஸனபரிசோதகர் கூறுமாறு இப்போது காணப்பட்ட பழையனவும்புதியனவுமான சிலாலிகிதங்களெல்லாம் ஆரிய முறைபற்றியனவெனவும், தொல்காப்பியர் காலத்துக்கு முன்வழங்கியவை முழுதும் தமிழ்முறைபற்றியவெனவும் கூறல் பொருந்தும். தொல்காப்பியர்க்கு மிகவும் முற்பட்டகாலத்தேயே சிலாசாஸனஞ் செய்யுமுறையைத் தமிழர் கையாண்டவரென்பது, "ஆடவர் பெயரும் பீடுமெழுதி" வீரக்கல் நட்டுவந்த அவரது புராதன வழக்கத்தால் தெளிவாகும். இவ்வாறு நடுகல்லிற் பெயரும் பீடுமெழுதலைச் "சீர்த்த மரபிற் பெரும்படை" என்பர் தொல்காப்பியர். வடநாட்டார்க்கு முற்றும் புறம்பான இவ்வழக்கம், அசோகனுக்கு முந்தியே



தமிழர் தமக்கென்று எழுத்துடையராயிருந்த செய்தியை செவ்வையாகக் குறிக்கத்தக்கது.

இனித் தொல்காப்பியர்காலத்தும் அதற்குமுன்னும் பயின்ற தமிழெழுத்துக்கள், பிறரிடத்திருந்து கடன்வாங்கினவன்றி, தமிழர் தாமே கண்டுபிடித்தவைகளாதல்வேண்டும். பொதுவாக, சீர்திருத்தமென்பது சிறுகச்சிறுக நிகழ்வதாகலின், புராதனமக்கள் சித்திரங்கள் மூலமோ அல்லது வேறு அடையாளங்கள் மூலமோ தங்கருத்தை வெளியிட்டுவர, பின்பு அவ்வறிகுறிகளினின்றே பிற்காலத்துச் சுருக்கவெழுத்துமுறை கண்டுபிடிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்று சரித்திரகாரர்கள் தக்க ஆதாரங்களைக்கொண்டு ஊகிக்கிறார்கள். பழமையிற் பேர்பெற்ற எகிப்தியர், முதன்முதல், ஒரு பொருளைக்குறிக்க அதனை முழுதும் சித்திரித்துவந்ததும், பின்பு அம்முறையினிடர்ப்பாடு நோக்கி, ஒருபிராணியைக் குறித்தற்கு அதனொரு பாகத்தைமட்டுஞ் சித்திரித்துக் காட்டிவந்ததும், அதுவும் சிரமமாதல்கண்டு வெவ்வேறு சுருக்கக்குறிகளைக் காலாந்தரத்தில் வழங்கிச் சீர்திருத்தியதும் பலர் சரித்திரநூல்கள்மூலமாகப் படித்தும் கேட்டுமிருப்பர். இவரைப்போலவே, பெருவியாதேசத்தவரும் சீனதேசத்தவரும் எண்ணிறந்த அறிகுறிகளாலேயே தங்கருத்தை வெளியிடுவாராயினர். இவருள் சீனதேசத்தாரது எழுத்தெல்லாம், நமது நெடுங்கணக்குப் போலாது, அளவிறந்த கருத்துக்களைக்காட்டும் சங்கேதக் குறிகளாகவே இன்றும் வழங்குகின்றன. சீனபாஷையைக் கற்று அதில் வசனிக்கவேண்டினும் வசனிப்பவர்கருத்தை அறிய வேண்டினும், குறைந்தது எழுபதினாயிரங்குறிகளை ஒருவன் தெரிந்திருக்கவேண்டுமாம். இப்புராதன பாஷைகளது எழுத்துவரலாறு போன்றதே, பழந்தமிழ் மக்களது எழுத்து வரலாறும். இக்கொள்கைக்கு இனிநான்கூறப்புகும் ஆதாரங்கள் தமிழறிஞரது ஆராய்ச்சிக்குரியனவென்றே நம்புகிறேன்.

தமிழரது புராதன அடையாளவெழுத்துக்கள் பன்னூற்றாண்டுகட்கு முன்பே வழக்குவீழ்ந்தன: ஆயினும், கடைச்சங்கநாளிலே அவற்றைக்குறித்த செய்திகள் அறியப்பட்டிருந்தனவென்றும், அவ்வறிகுறிகளில் ஒரு சில, அச்சங்ககாலத்திலும் அதற்கு மிகவும்

பிற்காலத்திலுங்கூட வழங்கினவென்றும் யான்கண்ட ஆதாரங்கள் குறிப்பிக்கின்றன. இச்சங்கேதவெழுத்துக்கள் நான்கு வகைப்பட்டனவாகும்: வடிவெழுத்து, பெயரெழுத்து, தன்மையெழுத்து, முடிவெழுத்தென. பண்டையெழுத்துக்களைப் பற்றிய இவ்வகைகள், கடைச்சங்க காலத்ததென்று தெளியப்பட்ட திவாகரத்திலே,

"பெயரெழுத்து முடிவெழுத்து வடிவெழுத்துத் தன்மை
எழுத்தென வெழுத்தின் பெயரியம் பினரே"

எனவும், பிங்கலந்தையில்,

"வடிவு பெயர்தன்மை முடிவுநான் கெழுத்தே,"

எனவும், வரும் சூத்திரங்களால் அறியப்படுகின்றன. இவற்றுள், பிங்கலந்தையின் கீழ்க்குறிப்பிலே, இந்நால்வகை எழுத்துகட்கும் அடியில் வருமாறு பொருள் கூறப்பட்டுள்ளது.

"வடிவெழுத்துச் செவிப்புலவொலியைக் கண்களுக்குப் புலப்படவெழுதும் எழுத்து; பெயரெழுத்து, வடிவெழுத்து முதலாக வழங்கும் மெய்யெழுத்துக்களுக்கு இடும் பெயரெழுத்து; தன்மையெழுத்துச்செவிப் புலனாகிய ஒலியெழுத்து; முடிவெழுத்து, வடிவெழுத்து முதலாகவுள்ள எழுத்தினை மனத்தாற்றுணிவது முடிவெழுத்து" எனக்கண்டு கொள்க.

மேற்காட்டிய பொருள்கள் எவ்வாசிரியர் கூற்று என்பது நிச்சயிக்கப் படவில்லை.* அன்றி, அவற்றால், உரைத்தவர்கருத்தேனும் தெளிவாக விளங்குகின்றனவா? தொடர்பில்லாத கருத்துக்கள் குழப்பத்துடன் எழுதப்பட்டனவென்றே என் சிற்றறிவிற்குத் தோன்றுகிறது. இனி, அவ்வெழுத்துவகைகளைக் குறித்து யான் ஆராய்ந்தமட்டில், அவை, ஆதித் தமிழ்மக்கள் கொண்டுவழங்கியவரிவடிவுகளின் பாகுபாட்டைக்குறிப்பனவைபோலவே காணப்படுகின்றன. இவ்வுண்மையைச்செவ்வையாக இங்கே விளக்குவேன். மேலேகண்ட எழுத்துவகைகளில், வடிவெழுத்தென்றது, பூர்வ எகிப்தியர் வழங்கியதுபோன்ற சித்திரக்குறிகளையாம். அவ்வெகிப்தியர், மனிதன் அல்லது விலங்கு இவற்றையுணர்த்த அவற்றின் முழுவுருவத்தையேனும், அவற்றின் ஒருபாகமாகிய தலையையேனும்

* இலக்கணக் கொத்துப்பாயிரத்தின் கீழ்க்குறிப்பொன்றிற் கண்ட சூத்திரங்களைக் கொண்டு இப்பொருள்கள் கூறப்பட்டன என்று தெரிகிறது. அச்சூத்திரங்கள் யாரியற்றியனவோ உண்மை தெரியவில்லை.



சித்திரித்துக் காட்டுதல் வழக்கம். இனிப் பெயரெழுத்து என்றது, பெரூவியர் சீனர்களைப்போல, ஒவ்வொரு பெயரை உணர்த்தற்கு இட்டுவழங்கிய சங்கேதக்குறிகளையாம். இவை, போரைக் குறிக்க மனிதன் புயங்களைக் காட்டுவதுபோல ஒருதொடர்புபற்றியேனும், அதுபெறுமலேனும் வழங்கப்படும். பெரூவியா தேசத்து அறிகுறிகளெல்லாம் அவரவர் இட்டு வழங்கினவேயன்றி பொருளுக்கு ஒருவிதத்தொடர்பும் உடையனவல்ல. இனி, தன்மையெழுத்தென்றது, குணங்கள் சக்திகள் முதலியவற்றைக் குறித்தற்கு வழங்கிய அடையாளங்களை; இத்தன்மை யெழுத்தாகப் பூர்வஎகிப்தியர் வழங்கியவை:— விவேகத்துக்குக் கண்ணும் எறும்பும், அறிவின்மைக்கு ஈயும், நன்றியின்மைக்கு விரியன்பாம்பும், வெற்றிக்குக் கருடனும், தந்திரத்துக்கு நரியும், கோபத்துக்கு வாலில்லாக்குரங்கும், நடைக்குத்தாள்களும் தோண்டுதற்கு மண்வெட்டியும் பிறவும் இவ்வாறே வருவனவுமாம். பெயரெழுத்துப்போலவே, இதுவும் முடிவெழுத்தும், பொருளுடன் சம்பந்தம்பெறாத வெற்றடையாளங்களாகவும்அமைந்திருப்பதுண்டு. இனி, முடிவெழுத்தென்றது, வினைநிகழ்ச்சியை உணர்த்தும் வாக்கியங்களைக்குறிக்கவழங்கிய அறிகுறிகளை; இரண்டு அல்லதுபலபிராணிகளின் அவயவங்களை ஒன்றாகக் கலந்து ஒருருவம் அமைத்து ஒரு விஷயத்துக்கே குறியாகவழங்குவது எகிப்தியர் முறை.

பழைய தமிழ் நிகண்டுகளிற்கண்ட இவ்வெழுத்துப்பாகுபாடுகளுக்கு மேலேகூறிய பொருள்கள் அன்பர்கட்கு ஆச்சரியமும் ஐயமும் விளைக்கக்கூடும். ஆனால், தமிழர்போன்ற புராதனநாகரிகமக்களது எழுத்துவரலாற்றை ஆராய்ந்தவர், என்கருத்தை அவ்வளவாக இகழ ஒருப்படார். அன்றியும், நவீனபாஷாதத்துவநூலோர், பேராராய்ச்சிகாட்டி, உலகத்துவழங்கும் எல்லாமொழிகளையும் ஆரியம் செமிடிக் துரானியம் என்னும் முப்பெரும்பகுதியுள் அடக்கியிருப்பதும், அவற்றுள் துரானியப் பகுதியிலே சீனமும் தமிழும் சேர்ந்து விளங்குவதும் விசாரித்தவர்க்கு விளங்கியிருக்கலாம். இவ்வாறு சீனமும் தமிழும் ஓரினமான மொழிகள் என்பதை, அவ்விரண்டிலுமுள்ள சொற்களினொற்றுமையாலும் பிறவிஷயங்களாலும் தெளிவுறுத்திச், "செந்தமிழில்" முன்புவெளிவந்த "தமிழ்ப்பெருமை" என்ற

அரிய உபந்நியாசத்திலும் விளக்கப்பட்டிருக்கிறது. இவற்றுள் சீனபாஷையின் எழுத்தமைதிமுழுதும் முன்குறித்தபடி சங்கேதக்குறிகளே யன்றோ. ஆயின் அச்சீனத்தின் புராதனஎழுத்தமைதி, அதன் ஞாதிமொழியும் பழைமையானதுமான தமிழுக்கும் உரியதாக ஏன் அமைந்திருத்தல் கூடாது? இதுகாறும் கூறிவந்தகொள்கை பொருந்துவதோ அன்றோ என்பதை, அடியில்யான்காட்டும் தக்க மேற்கோளாலும் நன்காராய்ந்து, பின்பு துணியும்படி அறிஞரை வேண்டுகிறேன். இதுவரை அச்சேறாத பழைய பெரியநூலாகிய யாப்பருங்கலவிருத்தியிலே கீழேகண்ட வாக்கியமொன்று காணப்படுகின்றது.

“மகடூஉ., ஆ, பிடி, குமரி, கன்னி, பிணவு, முடுவல் என்றின்ன சிலவெழுத்தும்; தேர்பதமுதலிய நால்வகையெழுத்தும்; [முச்சரடணை] முதலிய உக்கிரவெழுத்தும்; [சித்திரக்காருடம்] முதலிய முத்திறவெழுத்தும்; [பரசி] னாகிய நால்வகையெழுத்தும்; புத்தேள்முதலிய நால்வகைக் கதியெழுத்தும்; தாதுமுதலிய யோனியெழுத்தும்; மாதமதிய முதலிய சங்கேதவெழுத்தும்; கலிமுதலிய சங்கேதவெழுத்தும்; [பாரபபான பழுக காக்கிய] பதின்மூன்றெழுத்தும், என்றித்தொடக்கத்தனவும்; வச்சிரமுதலிய வடிவெழுத்தும்; கட்டுரையெழுத்தும்; மற்றும்பலவகையாற் காட்டப்பட்ட (எத்துணையோ) பலவெழுத்தும் வல்லார்வாய்க்கேட்க” என்பது.

யான் மேலேகூறிய கருத்தை எவ்வளவு தெளிவாக இவ்வாக்கியம் ஆதரித்து நிற்கின்றது? இதனால் எகிப்தியர் சீனர் வழங்கியவை போன்ற அறிகுறியக்ஷரங்கள் தமிழில் முற்காலத்தே எண்ணிறந்திருந்தன என்பதும், அவற்றில் ஒருசில யாப்பருங்கலவிருத்தியுடையார் காலத்துங்கூட வழங்கினவென்பதும் வெளியாகின்றனவன்றோ. யாப்பருங்கலத்திலே ஆசிரியனது இலக்கணங்கூறுமிடத்து, எழுத்துக்களின் வகையையும் அவன் உணர்ந்தவனாதல் வேண்டுமென்புழி, அந்நூல் விருத்திகாரர் காட்டிய விஷயங்கள் இவை. இவ்வாக்கியத்திலே, “வச்சிரமுதலிய வடிவெழுத்தும்” என்றுள்ள பகுதி, நிகண்டிற்கண்ட நால்வகை யெழுத்துக்களுள் முதலாவதைப்பற்றியதென்பது, அவ்விரண்டிற்குமுள்ள சொல்லொற்றுமையாலே விளங்கும்.

[] இக்குறியில் அடங்கியிருப்பன செவ்வையாகப் பொருள் புலப்படாதவை.



இதனால், இவ்வெழுத்து, நெடுங்கணக்கைக் குறிப்பதன்றென்பது தெள்ளிது. வச்சிரமுதலியவற்றைக் குறித்தற்கு அவற்றின் வடிவையே சித்திரித்துக்காட்டுதல் முன்னாண்மரபாதலின், அவை வடிவெழுத்தென்று கூறப்பட்டன. இனி, அவ்வாக்கியத்துள்ள மகடூஉ முதலியனவும், தேர் பத முதலியனவும், புத்தேள் முதலியனவும், தாதுமுதலியனவும், கவிமுதலியனவும், பிறவும் பொருள்களை யுணர்த்தும் பெயரெழுத்துக்களாகக் கருதலாம். என்னை? அவ்வாக்கியத்தில், சீனர் பெருவியாது போல, “சங்கேதவெழுத்துக்கள்’ என்னும் குறியீடு அவ்வரிவடிவுகளுக்குக் கூறப்படுதலால் என்க. இனித் தன்மையெழுத்தாக அவ்வாக்கியத்திற் காணப்படுவன:—உக்கிரவெழுத் தென்றுள்ளபகுதியும் மாதமதியம் கார்த்திகை முதலிய காலப்பொருளைக் குறிப்பனவும் ஆதல்வேண்டும்.; அரைக்காணி அரை நூறு சங்கிலி முதலாகச் சிற்றெண்களையும் பேரெண்களையும் அளவைகளையும் பற்றிவருவனவற்றை இத்தன்மை யெழுத்தில் அடக்கலாம். இனி, அவ்வாக்கியத்தில் வரும் “கட்டுரையெழுத்து’ என்னும் பகுதியை முடிவெழுத்தாகக் கூறல்பொருந்தும். கட்டுரையாவது, எடுத்தவிஷயத்தை ஒன்று அல்லது பல தொடர்மொழிகளால் முடிப்பதன்றோ. சிலப்பதிகாரத்தொடக்கத்தே இக்கட்டுரைகளைக்காணலாகும். எனவே, வாக்கியப்பொருளுணர்ச்சிக்கு வேண்டப்பட்ட அடையாளங்களே கட்டுரையெழுத்தென்பது பெறப்படுதலின், அதனை முடிவெழுத்தின்பாலடக்கல் இழுக்காது. இவ்வாறு தமிழ்மக்கள் நால்வேறுபடக் காலாந்தரங்களில் வழங்கிவந்த அறிகுறிகளெல்லாம் தங்கருத்தை எளிதாக வெளியிடுவதற்குப் போதாதனவாகவும் சிரமமானவைகளாகவும் குழப்பமானவைகளாகவும் இருந்தமையால், அவற்றினும் சுருக்கமான முறைகளைக் கண்டுபிடித்துக்கொள்வது ஆதித்தமிழர்க்கு இன்றியமையாததாயிற்று. இதன் பின்னரே, அவரது எழுத்துச் சீர்திருத்தம் முற்றுப்பெற்றிருத்தல் வேண்டுமென்பது திண்ணம். சீன ஜப்பானியர் பாஷைகளிலே, இன்றும் தம்பூர்வ நிலைப்படியேயுள்ள அடையாளஎழுத்துக்கள் தேசத்தின் அறிவுப்பெருக்கத்துக்கும் நாகரீக விருத்திக்கும் பேரிடையூறுதலை நோக்கி, அந்நாடுகளில் நவீனபுத்திமான்கள் எழுத்துத் திருத்தத்தின் இன்றியமையாமையைப் பெரிதும் உணர்ந்துவருஞ் செய்தி

*

நமக்கு எட்டுகின்றதன்றோ. இதுபோன்றதுதான் பழந்தமிழ் மக்கள்கொண்ட முறையாம். தமிழர் முறைமட்டும் இஃது என்பதன்று. ஆரியாது எழுத்துவகைகட்கெல்லாம் மூலமான அசோகாக்ஷரங்கள் கூட, எகிப்தியரதுபோன்ற சித்திரக்குறிகளினின்றும் அவ்வக்காலத்தில் அவ்வாரியராலே சீர்திருத்தப்பட்டவை என்பது நல்லறிஞர் பல்லோருடைய அபிப்பிராயமாக வுள்ளது. எனவே, புராதன நாகரீகரான மக்கட்பகுதியின ரெல்லாருடைய எழுத்துவழக்கமும் ஒரே மாதிரிகையான வரலாறுடையன என்பது மலையிலக்காகின்றது.

இனி "வடிவு பெயர் தன்மை முடிவுநான் கெழுத்தே" என்னும் பிரிவுபோல, "உருவே யுணர்வே யொலியே தன்மையென" மற்றோர் எழுத்துவகையும் யாப்பருங்கல விருத்தியிற் காணப்படுகின்றது. இவ்வகையின் விரியாக அந்நூலிற் கண்டவை: "அவற்றுள், காணப்பட்ட உருவ மெல்லாம்,மாணக் காட்டும் வகைமை நாடி,வழுவி லோவியன் கைவினைபோல, எழுதப் படுவதுருவெழுத் தாகும்" "கொண்டவோர் குறியாற் கொண்ட வதனை,யுண்டென் றுணர்வ துணர்வெழுத் தாகும்" "இசைப்படு புள்ளி னெழாஅலொடு புணர்ந்து, செவிப்புல னுவ தொலியெழுத் தாகும்" "முதற்கா ரணமும் துணைக்கா ரணமும், துணைக்கா ரணத்தொடு தொடரிய வுணர்வு, மவற்றொடு புணர்ந்த வகத்தெழு வளியின்,மிடற்றுப் பிறந்திசைப்பது தன்மை யெழுத்தே" எனக்காண்க. இந்நால்வகையெழுத்துக்களில் முதலாவது நீங்க, எஞ்சியவை ஒலிவடிவின் பிரிவைக் குறிக்கின்றமையால், "வடிவு பெயர்"—முதலிய நால்வகை யெழுத்துக்களுக்கும் இவற்றுக்கும் சம்பந்தமில்லையென்றே கருதப்படும்.

இதுகாறும் கூறிவந்தவற்றால், தமிழ்மக்களது புராதன எழுத்துவரலாறு ஒருபடியாக விளங்கும். அவ்வெழுத்துப்பற்றிய எனது கொள்கைகள் பொருந்துவனவோ அல்லவோ என்பதை அறிஞரது ஆராய்ச்சிக்கு விடுகின்றேன். அவரது ஆராய்ச்சியும் இதுவிஷயமாக நிகழுமாயின், உண்மை வெளிப்படாமற் போகாதென்பதே எனது நம்பிக்கை.

பத்திராசிரியர்.

# மாட்சிதங்கிய பரோடாமகாராஜா அவர்கள் கைத்தொழிலைப்பற்றிச் செய்த மஹோபந்நியாசம்.

(முன்றொடர்ச்சி.)

## தொழிற்சங்கத்தின் சென்றவருஷத்துவேலை.

கனவான்களே! சென்றவருஷமுதல் நீங்கள் ஒரு புதுவழியைக் கைப்பற்றினீர்கள். வருஷாந்தக் காட்சி (Annual Exhibitions) யோடு மாத்திரம் திருப்தியடையாமல் அதனுடன் ஒரு தொழிற் சங்கமும் கூட்டினீர்கள். அதன் முதற்கூட்டம் எனது அரசிறை மந்திரியாகிய (Revenue Minister) ஸ்ரீ: ஆர். சி. தத்தர் அக்கிராசனத்தின்கீழே நடைபெற்றது. அச்சங்கத்தார் செய்யும் வேலை, வருஷத்தில் ஒருமுறை கூடுதல் மாத்திரமானால் போதாது என்று எண்ணி வருஷம்முழுதும் நடைபெறவேண்டுமென்று நியமித்தீர்கள். அவ்வண்ணமே, 'மாகாணக்கைத்தொழிற் சங்கக்கமிட்டிகள்' (Provincial Industrial Committees) கல்கத்தா, பம்பாய், சென்னபட்டணம், அலகாபாத், லாகூர், நாகப்பூர் முதலிய தலைநகரங்களில் ஸ்தாபிக்கப்பெற்றன. மேலும் சாசுவத காரியதரிசி (Permanent Secretary)) ஒருவரும் அவருக்கு உபகாரியதரிசி (Under-secretary) ஒருவரும் நாகப்பூரை மத்தியஸ்தானமாகக்கொண்டு, பலவிடங்களினின்று கைத்தொழில்விஷயமான சமாசாரங்கள் சேகரிக்கவும், அவற்றை வேண்டிய இடங்களுக்கு எழுதி அறிவித்துக்கொண்டிருக்கவும், மாகாணக்கமிட்டியார் செய்யும் வேலைக்கு வேண்டிய உதவி புரியவும், மேற்கூறிய வேலையை வருஷமுழுதும் கொண்டுசெலுத்தவும் ஆகியநோக்கங்களுடன் நியமிக்கப்பட்டார்கள். இந்த மத்தியஸ்தானத்திலிருந்து செய்யும் வேலையை நிர்வகிப்பவர் (Central establishment) தங்கள் கடமையை மறந்து தூக்கம் கொள்ளவில்லையென்பதைக்கண்டு மகிழ்கின்றேன். இவ்வருஷமுடிவுக்குள்ளேயே, முக்கிய காரியதரிசியும் அவர் உதவிக்காரியதரிசியும் வசூலான கையொப்பப்பணத்துக்குள்ளேயே (Subscriptions) மொத்தச்செலவை அடக்கி மிச்சமும் வைத்திருக்கிறார்கள். அவ்வக்காலங்களில்

படிக்கப்பெற்ற சிறந்த போதனைபுகட்டும் வியாசங்கள் எல்லாவற்றையும் ஒருங்குதொகுத்து தொழிற்சங்கத்தாரது யறிக்கைப்பத்திரத்துடன் (Report of the conference) சேர்த்து, கையடக்கமான புத்தகமொன்று (Handy volume) பிரசுரித்திருக்கிறார்கள். மேலும் இந்தியாவின் பற்பல இடங்களிலுள்ள வெவ்வேறு கைத்தொழில்களைக் குறிப்பிட்டுச் (சரிவர முற்றுப்பெற்றதாகாதபோதிலும் கூடியமட்டும் ஆரம்பத்தில் கூடுமான முயற்சியெடுத்துத் தொகுக்கப்பெற்ற) விவர அட்டவணை (Directory) யொன்றும் காட்டியிருக்கிறார்கள். இவ்வருஷம் இந்தியா முழுதும் கைத்தொழில் விஷயமாய்ச் செய்யப்பட்ட வேலையைக்குறித்து மிகவும் அழகான அறிக்கை யொன்றும் தயாரித்திருக்கிறார்கள்.

### மேற்கண்ட சங்கத்தின் பலவீனமான சிலகுறிப்புக்கள்.

கனவான்களே! ஒரு வருஷகாலத்துக்குள்ளேயே போதுமான சித்தியடைந்திருக்கிறீர்கள். என்றாலும், இதைக்கொண்டு திருப்தியடையக்கூடாது. இனி வருங்காலத்தே, அதிகமான அபிவிருத்தி எதிர்பார்க்கப்படுகிறது. கைத்தொழிற்சங்க ஏற்பாட்டில், பலவீனமான குறிப்புகள் என்னவென்றால் மத்தியஸ்தான வேலை நிர்வகிப்பவர் மாகாணக்கமிட்டிகளோடு போதுமானபடி தொடர்பில்லாதிருத்தலும் பற்பல மாகாணக்கைத்தொழில்களையும் அபிவிருத்திபண்ண முயலுவதில் அக்கமிட்டிகளுக்குத்தக்க உதவிசெய்ய முடியாமலிருப்பதுமேயாம். மாகாணக்கமிட்டிகள் மாத்திரம் இருந்தால் போதா. ஜில்லாக்கமிட்டிகளும் நகரசங்கங்களும் நியமிக்கப்பட்டு எல்லோருக்கும் எல்லாவியாபாரமும் தெரிவிக்கக்கூடியவையாயிருக்கவேண்டும். நம் தேசம் அதிவிஸ்தாரமாயிருப்பதால், ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு தூரமானபிரயாணம் செய்யவேண்டியிருக்கிறது. நாகப்பூரி (Nagpur) லிருந்து பற்பலமாகாணங்களுக்குப்பிரயாணம் செய்யவேண்டுமாயின் முழுதும்ஒருபகல் ஓர்இரவுபிடிக்கும். ஆகையால் நாகப்பூரில் ஸ்தாபிக்கப்பெற்ற தலைமை வேலை நிர்வகிப்பவர் அதற்குப்புறம்பேயிருக்கும் மாகாணக்கமிட்டியாருக்கு அதிக உதவி செய்யக்கூடுமாயினும், மாகாணக்கமிட்டிகள் தாமே தத்தம்வேலைகளை ஊக்கத்துடன் உழைத்துச்செய்துகொள்ளக்கூடும். இவ்விதமாய் ஒற்றுமை நோக்கத்துடன் செய்யப்படும் கூட்டுவேலையால் வருஷாவருஷம் கைத்தொழிற் சங்கத்தின்காரியம் தொடர்ந்தஅபிவிருத்தியடையக் காணலாம். நம் தேசத்துக் கைத்தொழில்களை யபிவிருத்திபண்ணுவதற்கென்று எல்லாவிடங்களிலும் எடுத்துக்கொள்ளப்படும் முயற்சிகளை ஒன்றுகூட்டி இயக்குவதற்கு மத்தியஸ்தலசங்கம் ஒன்று இன்றியமையாதது. ஆகையால் தக்கதருணத்திலேதான், மத்தியஸ்தலக் கமிட்டியும், மற்ற மாகாணக்கமிட்டிகளும் கூடியமொத்தத் 'தொழிற்சங்கம்' ஸ்தாபிக்கப்பெற்றது.



### போதுஜனக்கல்வி கைத்தொழிலபிவிருத்திக்கு முக்கிய ஏதுவாகும்.

கனவான்களே! என் அறிவு அநுபோகங்களிலிருந்து அநுஷ்டானத்துக்குக் கொண்டுவரக்கூடிய சில அபிப்பிராயங்களை வெளியிட விரும்புகிறேன். நம் கைத்தொழில்களை யபிவிருத்திபண்ணுதற்கு அதிமுக்கியமானவழி யென்னவென்றால், 'பொதுஜனக்கல்வி' யைப் பரவச்செய்வதே. நம் தேசத்து வித்தியா விஷயமான முறைகளில், முக்கியமானவையும் நல்ல பலனைக்கொடுக்கக்கூடியவையுமான மாறுதல்கள் செய்யப்படலாம். ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி ஜனங்களின் வீட்டுவாயில்களில் கல்வியைக் கொண்டுபோய்க்கொடுத்து உதவினாலொழிய, (அதாவது பிரதமக்கல்வியை (Primary education) பணச்செலவின்றியும் கட்டாயப்படுத்தியும் விருத்திசெய்தாலொழிய) நாம் எடுத்துக்கொண்ட கைத்தொழிலபிவிருத்தி விஷயம் சரிவர சித்தியாகாது. இந்தியாகவர்ன்மெண்டார் மேற்கூறிய கல்வியைப்பணச்செலவின்றிக் கொடுக்க ஆலோசனைகொண்டிருக்கிறார்கள் என்பதையறிந்து சந்தோஷிக்கிறேன்.

### சம்பளம் வாங்காததும் கட்டாயமுமான கல்விமுறை.

இத்தேசத்தில் மேற்கூறிய கல்வியை ஏற்படுத்துவது புதுமையான தொன்றேயாம். ஆனால் அதுபற்றி நாம் கல்வி அபிவிருத்தி விஷயமாய் ஜனங்களுக்குச்செய்யவேண்டிய கடமையினின்றும் நழுவக்கூடாது. மேனாட்டில் 'சர்வசமரச சமநிலையை வற்புறுத்தும் சங்கத்தார்' (Socialistic communities) செய்துவரும் மாதிரி—(அதாவது யாவருக்கும் பணச்செலவின்றிக் காலைபோஜனம், ஸ்நானசௌ

கரியம், கால்சராய் முதலியவைகொடுத்து உதவுவது)—செய்யும்படி நான் புத்திசொல்ல மாட்டேன். பரோடாராஜ்யமுழுதும் 'கட்டாயக்கல்வி' (Compulsory education) யேற்படுத்தி அதனால் என்னுடைய ஜனங்கள் பிரயோசனத்தையடையும்படிசெய்ய முயன்று வருகிறேன்.

சிலவருஷங்களாக என்னிராஜ்ஜியத்தின் ஒருபாகத்தே அது நடைபெற்றதில் பலன்கிடைத்தது. அதனாலுண்டான நன்மைப் பெருக்கினால் ஊக்கங்கொண்டு ராஜ்ஜியமுழுதுமே 'பிரதமக்கல்வி' (Primary Education) யைக் கட்டாயப்படுத்திக்கற்பிக்கத் தீர்மானித்திருக்கிறேன்.

## உயர்தரத்தொழிற்கல்வியும் அதன் விசேஷமும்.

தற்காலத்தில் தொழிற்கல்வி அத்தியாவசிகமானது. நான் சமீபத்தில் ஐரோப்பா, அமெரிக்காவில் செய்த சுற்றுப்பிரயாணத்தில் என்மனதில் ஆழப்பதிந்தது என்னவென்றால், நாட்டு ஜனங்களின் கைத்தொழில் அபிவிர்த்தி யாவதற்கு 'உயர்தரத்தொழிற்கல்வி' சாதகமாயிருக்கிறதென்பதே. மேனாட்டில் ஒருதலைமுறைக்காலத்துக்குள் கல்வி விஷயத்தில் முழுதும் அபிவிருத்தி உண்டாயிருக்கிறது என்பது உண்மையே. மேனாட்டார் தற்காலத்தில் யுத்த ஆயுதங்களை விர்த்திபண்ணுவதிலாவது, சைந்நியங்களை அதிகரிப்பதிலாவது, கடற்சேனைகளைப் பெருக்குவதிலாவது அவ்வளவாக எண்ணங்கொள்ளாது, தற்காலத்தில் உயர்தரஜாதியாருக்குள் கைத்தொழிற்றலைமைவகிப்பதில் நிகழும் போட்டியிலே அதற்குச் சாதகமான தொழிற்கல்வியையே அபேக்ஷித்து விருத்திசெய்ய ஆத்திரமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

## கைத்தொழில் ஊக்கமுள்ள தலைமை ஜாதியார்கள்.

ஐரோப்பிய ஜாதியாருக்குள் ஜெர்மனியே கைத்தொழிலில் மேலான உயர்வை யடைந்திருக்கின்றது. அத்தேசத்து "உயர்தரத் தொழிற்கல்வி" கற்பிக்கும் சாலைகளிலே பர்லினிலுள்ள (Berlin) 'கிங்க்ஸ் தொழிற்கல்விச்சாலையே அதிப்பிரசித்தமானது. அங்கே உயர்தரப்போதகாசிரியர் 1500-க்குமேற்பட்டமாணவர்களுக்குத்தொழிற்கல்வி போதிக்கின்றனர். தொழிலில் செய்துகாட்டுகிற ரசாயன சாஸ்திரக்கல்வி (Applied Chemistry) மூலமாய்ப்பற்பல எண்ணெய்வகைகள், வர்ணவகைகள், சாயமேற்றுந் தொழில்(Dyeing) சாயம் போக்குந் தொழில் (Bleaching) துணியிலும் பட்டிலும் அச்சிடுந் தொழில், தோல்பதனிடுந்தொழில் (Tanning) முதலியகைத்தொழில்கள் மற்றெங்கும்விட விஸ்தாரமாக அங்கே போதிக்கப்படுகின்றன.



## பிரான்சில் கைத்தொழில்கள்.

பிரான்சும் தொழில்கற்பிக்குஞ்சாலை மூலமாகத் தன்கைத்தொழில்களைப் பலப்படுத்த முயலுகிறது. அதன் தலைநகரமாகிய பாரிஸிலுள்ள (Paris) "மூஸ் டி ஆர்ட்ஸ் எட் மெடிரே" (Mucee des arts et Metiere) என்ற பொருட்காட்சிச் சாலையில் பற்பல யந்திரங்களும் மாதிரியந்திரங்களும் அடங்கிய ஏராளமான சேகரவஸ்துக்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. முக்கியமான உயர்தரத்தொழிற் கல்விசம்பந்தப்பட்ட விஷயங்களைப்போதிப்பதற்குச் சாஸ்திர வகுப்புகளிருக்கின்றன. பிரான்சு கவர்ன்மெண்டாரே, ஸெவர்ஸிலுள்ள பீங்கான் சாலையை (Royal porcelain factory) வைத்து நடத்துகிறார்கள். மேலும், காபலின்ஸிலுள்ள சித்திரத்தொங்கலாடைகள் செய்யும் தொழிற்சாலை (Tapestry manufactory) யையும் தாங்களே நடத்துகிறார்கள். ஒவ்வொரு வருஷமும், அடிக்கடி, பாரிஸிலுள்ள 'கிரான்ட் அன்ட் பெத்தேபாலெஸ்' (Grand and Petit Palais)என்னும் ஒரு விஸ்தாரமான மண்டபத்தில் பொருட்காட்சிகள் வைக்கப்படுகின்றன.

## ஆஸ்திரியாத் தொழிற்சாலைகள்.

ஆஸ்திரியாவும் கைத்தொழில் விஷயத்தில் கீழானதல்ல. வியன்னாவில் தொழில் கற்பிக்கும் கலாசாலைகளிருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு கைத்தொழிலைக் கற்றுக்கொடுக்கின்றது. இத்தாலியாவிலும் (Italy) தொழிற்கலாசாலைகளிருக்கின்றன. நேபில்ஸி (Naples) லுள்ள காசனோவாக் கலாசாலை மாதிரியை முன்வைத்து ஏற்படுத்தப்பட்ட உயர்தர ஸர்வ தொழிற்கலாசாலை (Polytechnic institute)யின் உதவியினால் சிறந்தகைத்தொழிலாளிகளைப்பலவிடங்

களிலிருந்து சேகரித்து அவர்களிடமிருந்து பற்பல தொழில்கள் கற்றுக்கொள்ளப்படுகின்றன. இவ்விதமாய், உயர்தரத்தொழிலில் ஈமர்த்தியசாலிகள் ஒருங்கு சேர்தலால், தத்தம் வியாபார ரகசியங்களையும் குறைவுகளையும் பேசியறியலாகும்.

### லண்டனிலுள்ள உயர்தரத்தொழிற்சாலை.

லண்டனில், ஸிட்டி அண்டு கில்ட்ஸ் டெக்னிகல்காலேஜும் பற்பல 'பாலிடெக்னிக்ஸும்' (Polytechnies) ஜனங்களுக்கு உயர்தரத்தொழிலிலும் மற்றக்கைத்தொழிலிலும் அநுபவத்தோடு கூடிய பழக்கத்தைப் புகட்டுகின்றன.

### இங்கிலாந்தில் புதிதாய் ஏற்படுத்தப்பட்ட சர்வகலாசாலைகள்.

ஆக்ஸ்போர்ட்டு கேம்பிரிஜ் லண்டன் முதலிய சர்வகலாசாலைகளில் உயர்தரபாஷாஞானக் கல்வி புகட்டப்படுவதுபோல் மாஞ்சஸ்டர் பர்மிங்ஹாம் லீட்ஸ் பட்டணங்களில் புதிதாய் ஏற்படுத்தப்பட்ட கலாசாலைகள் 'உயர்தரத்தொழிற்கல்வி' புகட்டுகின்றன. மாஞ்சஸ்டரில் முனிசிபாலிடியாரால் உயர்தரத்தொழிற் கலாசாலை ஒன்றும் ஏற்பட்டிருக்கிறது. அஃது அப்பெரிய கைத்தொழிற் பட்டணத்தின் ஊக்கத்துக்கு ஞாபகக்குறியாகவிருக்கிறது. அங்கே யந்திரவிதி, (mechanical engineering) மின்சாரயந்திர விதி (electrical engineering) தொழிற்குரிய சடசாஸ்திரம் (Technical Physics) ரசாயன சாஸ்திரம் (கைத்தொழிற் குரியதும் பொதுப்பட்டதும்) (Industrial and general chemistry) சாயம்போக்குந் தொழில், சாயம்காய்ச்சுந்தொழில், நெசவுத்துணியில் அச்சடிக்கும் தொழில் (Printing and finishing of textles) காகிதம்செய்யும் தொழில், லோகசாஸ்திரம் (Metallurgy) முதலிய பலவகைப்பட்ட சாஸ்திரங்கள் போதிக்கப்படுகின்றன. பரோடாவிலிருந்து சில மாணவர்கள் அங்கேபோய் திராவக (acids) உப்புச்சத்துவகைகளுக் (alkalis) குரியதொழில், நிலத்திட்டமறிதொழில் (plumbing) சௌக்கியசாஸ்திரம் (sanitary engineering) கற்கிறார்கள்.

### அமெரிக்காவில் 'தொழிற்கல்வி' அடைந்திருக்கும் உந்நதநிலை. ராஜாங்கஉதவிபெற்ற கலாசாலைகள்.

நான் சமீபத்தில் சுற்றுப்பிரயாணம்செய்த தேசங்கள் எல்லாவற்றிலும் அமெரிக்காவிலேதான் தொழிற்கல்வி உந்நதநிலையை



யடைந்திருக்கிறது. ஐக்கிய நாட்டில் (United States) ஒவ்வொரு பிரத்தியேக ராஜ்ஜியத்திலும் ராஜாங்க உதவிபெற்ற தொழிற்கலாசாலைகளிருக்கின்றன. அங்கே மாணாக்கர்கள் பணச்செலவின்றிப் படிக்கிறார்கள். தொழிற்கல்வியில் ஒவ்வொருவரும் பழகியிருத்தல் தேசநன்மைக்கு ஆவசியகம் என்று ராஜாங்கத்தார் எண்ணிக் கலாசாலைகளுக்கு மானியநிலங்கள் விட்டும், வருஷாந்தர உதவிப்பணம் (annual grants) கொடுத்தும் வருவதனால் இனாமாகவே தொழிற்கல்வியை யாவரும் கற்றுக்கொள்ளலாம். ராஜாங்கவுதவிபெற்ற ஒவ்வொரு கலாசாலையிலும் விவசாயசாஸ்திரமும் கொஞ்சம் யுத்ததந்திரமும் கற்பிக்கப்படுகின்றன. இந்தக்கலாசாலைகளின் ஐவேஜுக்குத்தக்கபடி மற்றவிஷயங்களும் போதிக்கப்படுகின்றன.

### ஐக்கியநாட்டில் கோடீசுவரர்கள் கைகொடுத்துதவும் கலாசாலைகள்.

மேற்கூறிய ராஜாங்க உதவிபெற்ற கலாசாலைகளைத்தவிர ஏறக்குறைய 43-தொழிற்கலாசாலைகள் பெருஞ்செல்வர்களது உதவிகொண்டே நடந்துவருகின்றன. அங்கே, சிற்பமும் யந்திரசாஸ்திரங்களின் ஒவ்வோர் அம்சமும் கற்பிக்கப்படுகின்றன. மின்சார யந்திரசாஸ்திரமும் தொழிலுக்குரிய யந்திரசாஸ்திரமும் சிற்பப்படமெழுதலும் நெசவுத்தொழிலுக்குரிய மாதிரிவகை காட்டும்சாஸ்திரமும் மற்றுமுள்ள சாஸ்திரவகைகளும் கற்பிக்கப்படுகின்றன. மேற்கூறிய கலாசாலைகளில் போஸ்டனிலுள்ள பெரியதொழிற்சாலையும் சிகாகோவிலுள்ள ஆர்மர் தொழிற்கலாசாலையும் நியூஆர்க்கிலுள்ள பராட் தொழிற் கலாசாலையும் தனாதிபர்கள் உதவிகொண்டே நடைபெறும் கலாசாலைகளில் அதிகப்பிரசித்திபெற்றவை. இம்மூன்று கலாசாலைகளில் மாத்திரம் மொத்தம் 6000-மாணவர்களுக்குமேலே கற்பிக்கப்படுகிறார்கள்.

### ஹார்வார்ட் (Harvard), ஏல் (Yale), கொலம்பியா (Columbia) வைப்போன்ற சர்வகலாசாலைகள்.

மேற்கூறிய சர்வகலாசாலைகளில் யந்திரசாஸ்திரம் ஒவ்வோர் அம்சத்திலும் கற்றுக்கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு துவிதீயவித்யாப்யாசப்பள்ளிக்கூடத்திலும் தச்சுவேலை கொல்லவேலை யந்திரவே

லைகளும் மற்றும் கைப்பழக்கத்துக்குரிய தொழில்களும் கற்பிக்கப்படுகின்றன.

## ஜப்பான் அடைந்த கைத்தொழில் வெற்றி.

நான் ஜப்பானை இதுவரை பார்க்கவில்லை. என்றாலும், அத்தேசம் ஒரு தலைமுறைக்காலத்துக்குள்ளேயே செய்துமுடித்த அபரிமிதமான வேலையை நாம் எல்லோரும் அறிவோம். அது யுத்தத்தில் சமீபத்திற்பெற்ற வெற்றிகளால் உலகத்தின் முதற்றராஜாதியில் ஒன்றாக முன்வந்துவிட்டது. அத்தேசம் நான்ஷான் மூக்டன் யுத்தகளங்களில் பெற்றவெற்றிகள் விகாஸமானாலும், தொழிற்கல்விமுறையை அபிவிருத்திபண்ணினதாலடைந்த தொழின் மேன்மை அதைக்காட்டிலும் விகாசமே. தொழிற் கல்விமுறை அங்கே முற்றுப்பெற்றிருக்கிறது.

## கைப்பழக்கம். (Manual training.)

[சாதாரணப் பள்ளிக்கூடங்களிலும் கைப்பழக்க சாதகக் கல்வியும் மற்றக்கைத்தொழிற்கல்வியும் ஏற்படுத்தலாம் என்ற அபிப்பிராயம்.]

நான் உங்களுக்கு என் இரண்டாவது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறேன். நீங்கள் தொழிற்சாலைகள் ஸ்தாபிப்பதோடுகூட சாதாரணப்பள்ளிக்கூடங்களிலும் கைப்பழக்க சாதகமுறை ஏதாவது ஏற்படுத்த வேண்டும். இளம்பருவத்திலேயே கண்ணும் கையும் பழக்கப்பட்டு சாதகமானால் அதிக பிரயோசனத்தைக் கொடுக்கும்: பின்னால் கைத்தொழில் செய்துபிழைக்கவேண்டியிராத போதிலும், சாதகப்படுத்தல் யாவருக்கும் உபயோகமானது. எல்லா மாணாக்கரும் சித்திரம் வரைதல் மாதிரிவகைசெய்தல் (modelling) தச்சுவேலை, கொல்லவேலை ஆகியஇவற்றில் பரிச்சயமடைதல் மிகவும் நன்மையே. வைத்தியரும் மனநிலைசாஸ்திரிகளும் (Psychologists) மேற்கூறிய சாதகத்தைச் சிலாகித்துக் கூறுகிறார்கள். ஏனென்றால், பிள்ளைகள் படித்துச் சலித்துப்போனபின் மேற்கூறியவற்றைச் சாதகம்பண்ணுவது அவர்களுக்கு உற்சாகத்தைக்கொடுக்கவும், மனதைத்திடப்படுத்தவும் உதவுகிறதல்லாமலும், மாணாக்கர்கள், படிப்பையும் தொழில் வித்தையையும் இலகுவாய்க் கற்றுக்கொள்ளுவார்கள்.



ஆகையால், தொழில் கற்றுக்கொடுக்கும்படி ஏற்பாடு செய்வதினால் மாணாக்கர்கள் ஒருவாறு முற்றுப்பெற்ற அறிவை அடைகிறார்கள். அதாவது:—வெறும் படிப்புமாத்திரமேயன்றி மற்றத்தொழில்வித்தையும் கற்றுக்கொள்ளுகிறார்கள். தனவான்களும் சாமானிய கைத்தொழில்களைக் கற்றவராவர். ஏழைகளும் இளம்பருவத்திலேயே கருவிகளைத்தக்க பயிற்சியுடன் உபயோகிக்கும் மாதிரியை அறிந்துகொள்ளுகிறார்கள். எவ்வித நிலைமையிலுள்ளவர்களும் கைத்தொழிலின் கண்ணியத்தை இப்போதைக்காட்டிலும் இனி நன்குணர்வார்கள். பள்ளிக்கூடங்களில் ஆரம்பத்திலேயே கைத்தொழிற் பழக்கஞ்செய்வித்தல், தேசத்தின் கைத்தொழிலபிவிர்த்தி ஊக்கத்துக்கு ஊன்றுகோலாகும்.

மேலும், ஒரு விஷயத்தை நீங்கள் ஞாபகத்தில் எப்போதும்வைத்துக்கொள்ளவேண்டும். கைத்தொழில் வித்தையை எவ்வளவு நன்றாய் கற்றாலும், நாம் உயர்தரப்பொதுக் கல்வி (Liberal and general education) யின்றி யிருக்கக்கூடாது. ஏனென்றால், மேற்கூறிய உயர்தரக்கல்வியாலேயே எல்லாவித சாஸ்திரப்படிப்பும் ஆகவேண்டியிருக்கிறது. தொழிற்கல்வியைப் பொதுக்கல்வியோடு சேர்த்துக்கற்கவேண்டும். ஆனால் பொதுக்கல்வியை முழுதும் விலக்கித் தொழிற்கல்வியைமாத்திரம் கற்பதனால் பிரயோஜனமில்லை.

## வெளிநாட்டுக்கல்வி.

[கைத்தொழிற்கல்வியை முழுதும் கற்றுவர வாலிபர்களை ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பானுக்கு அனுப்பவேண்டும்.]

நமது சாதாரணப் பள்ளிக்கூடங்களிலும் கைப்பழக்க முறையை ஏற்படுத்துவதனாலும் தொழிற்சாலைகள் ஸ்தாபிப்பதனாலும் உண்டாகும் நன்மையைவற்புறுத்த இதுகாறும் முயன்றேன். போதுமான அளவு, மேற்கூறிய முறை விஸ்தாரமாய் ஏற்பட்டு நடந்துவரப்பலவருஷங்கள் செல்லும். அப்பேர்ப்பட்ட ஏற்பாடு முற்றுப்பெற்றுக் கைத்தொழிற்கல்வியிலும் யந்திரச்சூழ்ச்சியிலும் பயிற்சிபெற்றால்தான் நாம்முதற்றராஜாதியாருக்குள் ஒருவராகலாம். உயர்தரக்கைத்தொழிற் கல்வி நம் தேசத்தில் இல்லாததனால், வாலிபர்களை ஐரோ

ப்பா, அமெரிக்கா, ஜப்பானுக்குப் பலவருடங்களோ அல்லது பல தலைமுறைகளோ அனுப்பியேனும் மேற்கூறிய கல்விகளைக் கற்றுவரச் செய்ய வேண்டும். ஆகையால் கட்டாயம் அப்படிச் செய்யுங்கள். தொன்றுதொட்டு வந்த ஆசாரக்கட்டுகளுக்குப் பயந்து பற்பல தேசங்களில் சுற்றுப்பிரயாணம் செய்யத்தவறாதீர்கள். நீங்கள் பற்பல இடங்களுக்குப் போனாற்றான் புத்தியானது, பலவித அறிவு ஆராய்ச்சிகளால் நிரம்பி விகாசமாகும். உலகத்தில் முதன்மை பெற்ற ஜாதியாருங்கூட அடிக்கடி அந்நிய ஜாதியாரோடு கலப்பதனாலேயே மேலான நாகரீகம் அடைகிறார்கள். இந்தியாவும் தற்காலத்தில் அப்படிச்செய்யவேண்டியது அத்தியாவசியகம். அந்நியநாட்டுச்சுற்றுப்பிரயாணத்தாலும் அந்நியஜாதியாரோடு பலவிஷயங்களில் உறவாடுதலாலும் உண்டாகும் நல்ல பலனை 50-வருடங்களுக்குள் இந்தியாவில் ஒவ்வொரு "டிபார்ட் மெண்டிலும்" அறிந்துகொள்ளலாம். நான் சமீபத்தில் திரும்பி வந்ததின்மேல் நம்தேசத்தார் அந்நியக் கல்விமுறைகளைப் பற்றிக்கொண்ட கோட்பாடு மாறியிருக்கிறதென்பதை அறிந்து கொண்டேன். மேனாட்டு ஜாதியார்களைப்பற்றி நான் கொண்டுள்ள அபிப்பிராயங்களையறிய அவர்கள் ஆவலுடையவர்களாயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட விஷயங்களை அறியவேண்டுமென்ற ஆவல் மிகவும் நல்லதே. நான் அமெரிக்காவிலிருந்த போது, 2000, 3000 மாணாக்கர்கள், ஐரோப்பிய வித்தியா முறைகளை நன்கு ஆராய்ந்து கற்றும் அவற்றில் ஆழ்ந்துசெல்லும் ஞானத்தையடைந்தும் வருகிறார்களென்று கேள்விப்பட்டேன். அமெரிக்கா கவர்ன்மெண்டாரே பற்பல தேசங்களின் விளைபொருள்களைப் பற்றி சரிவரப் படிக்க வாலிபர்களை அனுப்புகிறார்கள். இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்சு தேசங்கள் வியாபாரத்தில் முதன்மை பெற்றிருந்தாலும், மற்ற இடங்களுக்குப்போய்ப் பலவிஷயங்களை ஆராய்ந்து கற்பதற்காக வாலிபர்களை யனுப்பி வருகின்றன. நமது தேசத்துக்குச் சமீபமான ஜப்பானும் நூற்றுக்கணக்கான வாலிபர்களை, பிரான்சு, ஜெர்மனி, அமெரிக்காநாடுகளுக்குக் கல்வியை முற்றுங்கற்றுவர அனுப்பி வருகின்றது. மேற்கூறியவற்றிலிருந்து நீங்கள் மேற்றேசத்தார்க்கு அறிவு விர்த்தியிலுள்ள பேரவாவை ஒருவாறு அறிந்துகொள்ளலாம். எப்படியாவது தனிக்கல்வியை(Special education) அடையவேண்



டுமென்ற எண்ணத்தால் ஜப்பானிய மாணாக்கரில் அநேகர் கீழ்த்தரக் கைத்தொழிலைச் செய்தேனும் ஜீவனோபாயம் தேடிக்கொண்டு, தாங்கள் எடுத்த வித்தையை முடியக் கற்று வருகிறார்கள்.

## ஜப்பானில் கல்விமான்களாகிய ராஜ்யதுரந்தரர்கள்.

ஐரோப்பிய உயர்தரக்கலாசாலைகளுக்கு (Seminaries) வாலிபர்களை யனுப்பித்தான் ஜப்பான் முன்னுக்குவந்தது. காட்டிஞ்சென் (Gottingen) லீப்சீக் (Leipzic) கலாசாலைகளில் இலௌகிகமுறைகளையும் ராஜதந்திர முறைகளையும் பற்றிய சாஸ்திரீயவிதிகளைச் சரிவரக் கற்ற வித்துவான்களான ராஜதந்திரிகளாற்றான் அது அவ்வித பிரசித்தியையும் பெருமையையும் அடைந்திருக்கிறது. அத்தேசத்து வாலிபர்கள் டில்பரி (Tilbury), போர்ட்ஸ்மௌத்தி (Portsmouth) லுள்ள கப்பல் செப்பமிடுந்துறைகளில் (Docks) கடல்யுத்தத்துக்குரிய கல்வியைக்கற்ற பலத்தாலல்லவோ, அது கீழ்க்கடல்களுக்கு (Eastern seas) அதிபதியாயிருக்கிறது. சேம்ப்-டி-மார்ஸ் (Champ-de-mars) என்னும் வெளியிடங்களில் கற்பிக்கப்படும் யுத்தசூட்சிகளிலும் தந்திரோபாயங்களிலும் நன்றாய்த்தேர்ந்த யுத்தவீரர்களைக்கொண்டுதான், அது யுத்தங்களை நிர்வகித்து வெற்றிபெற்றது. லண்டன், பர்லின், நியூயார்க் இந்நகரங்களிலுள்ள நாணயசாலை நிபுணர்களிடம் வியாபார மர்மங்களை அறிந்துகொண்டதனால்தான் கீழ்த்தேச வியாபாரத்தில் அது முதன்மையை அதிசிக்கிரம் வகிக்கும் நிலையில் உள்ளது. தன்சுதேசக்ஷேமத்துக்காக பாடுபட்டு உழைக்கும் வாலிபசிரோமணிகளை ஜப்பானில் காண்கிறோமல்லவா? இந்திய வாலிபர்களுக்கு மேற்கூறிய ஜப்பானியர்திருஷ்டாந்தமே போதியது. நாமும் நம் தேசத்துக்காக சுயநன்மையையே எப்பொழுதும் கருதாது மறந்தும் பொதுநன்மைக்காக உழைத்தும் வருவோமாக. நாமும் அவர்களைப்போல் ஜாதிஐக்கியத்தைப் பலப்படுத்தவும் எல்லாத்தொழில்களிலும் சிறந்தபுதுமாதிரியைக்கற்றுக்கொள்வதில் ஆவலையும் ஊக்கத்தையும் மேன்மேல் அடையவும், பொறுமையாய் உழைக்கவும் கற்றுக்கொள்ளவேண்டும். நாம் அப்படிச்செய்தால் நம் தேசாபிவிர்த்தியைக் காப்பாற்றிவிடக்கூடும்.

## கனம் ஜெ. ஸி. கோஸ் (J. C. Ghose) அவர்கள் ஏற்படுத்திய ஒழுங்கு.

இம்மாகாணத்தில் யோகீந்திர சந்திரகோஷ் (Jogendrachandra Ghose) என்னும் தேசாபிமானி அதிகஊக்கத்தோடும் தேசாபிமானத்தோடும் தேசநன்மைக்கு வருந்தி உழைக்கிறார் என்றும் ஐரோப்பா, அமெரிக்காவுக்குப்போய் உயர்தரக்கல்வி கற்றுவர வாலிபர்களை அனுப்புவதற்கான பெருத்த ஏற்பாடுகள் செய்துவருகிறார் என்றும் அறிய நான் சந்தோஷிக்கிறேன். அவ்வேற்பாட்டினால் சிலவாலிபர்கள் முன்னமே அவ்விடங்களுக்குப் போயிருக்கிறார்கள். நான் ஐரோப்பா, அமெரிக்காவில் சுற்றுப்பிரயாணம் செய்தபொழுது அநேக பங்காளவாலிபர்கள் அத்தேசங்களில் கற்றுக்கொண்டிருப்பதைப்பார்த்து அதிகசந்தோஷப்பட்டேன். அவர்களது சுதேசாபிமானத்தைச் சொல்லிமுடியாது. அப்பேர்ப்பட்ட வாலிபர்களிருப்பதைக் குறித்து நம்தேசம் கர்வமடையலாம். இவ்வண்ணமே பரோடா ராஜ்ஜியத்திலிருந்தும், அநேகவருஷங்களாக, ராஜாங்க உபகாரம் பெற்று ஐரோப்பாவில் கற்றுத்திரும்பின வாலிபர்கள், ராஜ்ஜியத்தில் நன்றாய் உழைத்தும், இந்தியாவின் மற்றபாகங்களில் தக்க வேலைகளில் அமர்ந்தும் இருக்கிறார்கள். சமீபத்திலும் அநேக இளமாணவர்கள் ராஜ்ஜியவுதவிபெற்று இங்கிலாந்து, ஜெர்மனி, அமெரிக்கா, ஜப்பான் நாடுகளுக்கு கற்றுவரப்போயிருக்கிறார்கள். நவீனக் கைத்தொழிலின் மாதிரிகளையே கற்பதற்காகச் சில மாணவர்களைக் குறிப்பிட்டகாலங்களில் ஒழுங்காய் அனுப்பிவரயோசித்துக் கொண்டுவருகிறார்கள்.

## இந்தியா அடையக்கூடிய பலன்கள்.

கனவான்களே! இந்தியா தற்காலத்தில் பழையனகழித்தலும் புதியன புகுத்தலுமான நிலைமையிலிருக்கிறது. அது விசேஷமான பெரும் பலன்களையடையக்கூடும். பம்பாயிலுள்ளவர்கள் மேற்குத் தொடர்ச்சிமலையிலுண்டாகும் மின்சார உதவியைக்கொண்டு தங்கள் யந்திரங்களை இயக்கி வேலைசெய்யப் பிரயத்தனம்பண்ணி வருகிறார்கள். சென்னையிலுள்ளவர்கள் மரப்பருத்தி (Tree cotton) யை அபிவிருத்தி பண்ணும் உபாயத்தை நாடுகிறார்கள். காலஞ்சென்ற



கனம்—தாதாவால் நன்கொடையளிக்கப்பெற்ற ‘ஆராய்ச்சிக்கலாசாலை’ (Research institute) யினால் இந்தியாவுக்கு மிகஉபயோகமான பலன்கள் கைகூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜனங்கள் இதுவரை கொண்ட ஊக்கமின்மையாகிய உறக்கத்தினின்றும் விழித்துக்கொண்டார்கள் என்பதை நாம் தேசமுழுதும் நன்றாய்க்காண்கிறோம். நாம் பொறுமையோடும் விடாமுயற்சியோடும் அநேகவருஷகாலத்துக்குச்சோர்வின்றி உழைத்துவந்தால் தான், கைத்தொழிலில் மேனாட்டாரது நிலையை நாம் அடையலாம் என்பதை மனதில் பதியவைத்துக்கொள்ளவேண்டும். நாம் எடுத்தகாரியத்தைக்கொண்டு செலுத்தும் ஊக்கமும், மனோதிடமும் பெற்று, நாணயவிஷயத்தில் ஒருவரையொருவர் மோசஞ்செய்யச் சிறிதும் நினையாமல் நம்பிக்கைவைத்துவரவேண்டும். நாம் ஒவ்வொரு விஷயத்திலும் முக்கியத்தை அமுக்கியத்தினின்றும் பிரித்தறியத்தெரிந்துகொள்ளவேண்டும். அத்யாவசிய விஷயங்களின் தத்துவத்தை உற்று நோக்கவேண்டும். அற்ப விஷயங்களில் நமது புத்தியை அலையும்படி விடக்கூடாது.

## இந்தியாவுக்குத்தக்க படிப்பினைகள்.

நீங்கள் அவகாசம் கொடுத்தால், தற்காலத்தில் பற்பல ஜாதியாரின் அனுபோகங்களிலிருந்து இந்தியா, தான் அறிந்துகொள்ளவேண்டிய படிப்பினைகளைச்சொல்ல விரும்புகிறேன். ஒருகாலத்தில் ஓங்கி உயர்ந்த நாகரீகஸ்தலமாகிய பூர்வீக இஜிப்தை (Ancient Egypt) உற்றுநோக்கி, நாம் படித்துக்கொள்ளும் படிப்பினையென்னவென்றால், ஒரு தேசம் அழிவற்ற உன்னதநாகரீகத்தையே எக்காலத்திலும்யடைந்துவரவேண்டுமாயின், அத்தேசத்தில் விவசாய லோகப்பொருள்கள் ஏராளமாயிருப்பதினால்மாத்திரம் அப்படி சாத்தியமாகாது என்பதே. ஆனாலும், மேற்கூறிய விளைபொருள்களின் மிகுதியே நிலைபெற்ற நாகரீக (Permanent civilisation) த்துக்கு மூலாதாரமாகும். பூர்வகாலத்தில், எகிப்து நானாவிதவிளைபொருள்களை ஏராளமாகப்பெற்றிருந்தது. என்றாலும், ஒரு ராஜ்ஜியத்திலுள்ள ஒவ்வொரு குடியும், எவ்வளவுதாழ்ந்த நிலைமையிலிருந்தாலும், அவ்விராஜ்ஜியத்திற்குத் தாமோர் அங்கம் என்னும் உண்மையை மறந்து, பொதுஜனக்ஷேமத்துக்குரிய முக்கிய விஷயங்களைக்கவனிக்காது, அலக்ஷி

யஞ்செய்து வந்ததனாற்றான், பிராபல்லியத்தையும் நாகரீகத்தையும் அது இழக்கநேரிட்டதோடு அது தன்னிலையினின்றும் சுவாதீன அரசாட்சியினின்றும் விழுந்து அடிமையாகி தானடைந்த சாஸ்திரத்தேர்ச்சியையும் இழக்கலுற்றது. கீழ்நிலைமையிலுள்ளவர்களைப்பழித்து, அவர்கள் தத்தம் உழைப்பினால் மேன்மையடையவொட்டாதபடி தவிர்க்கும் எந்த ராஜ்ஜியமும் நிலைநிற்கமாட்டாது. உண்மையாகவே, அப்பேர்ப்பட்ட ராஜ்ஜியம் மண்மேட்டில் கட்டின வீடாகும். ஒரு ராஜ்ஜியத்தின் பலமும் ஐசுவரியமும் அதன் குடிகளின் தகைமையால் அமைவதாகும்.

## கிரேக்கதேசமும், அதன் வியாபார மேன்மையும்.

கிரேக்க தேசமானது, தத்துவ ஆராய்ச்சிக் குறைவினாலாவது, சாஸ்திர ஞானக்குறைவினாலாவது, ராஜ்ஜிய தந்திர அறிவின்மையினாலாவது சீர்கெடவில்லை. மேற்கூறிய விஷயங்களில் அதன் மேன்மை ஜகத்பிரசித்தம். மேனாடு முழுதும் நாகரீகத்தைப்பரவச்செய்ததும் அதுவே. மேனாட்டில் பெரிக்கிளிஸ் (Pericles), பெளேட்டோ (Plato), அரிஸ்டாட்டில் (Aristotle) என்ற கிரேக்க மஹான்கள் பேர்கள் யாவரும்போற்றிப் புகழும் பெயர்களாகும். ஆதன்ஸ் ராஜ்ஜியமானது (Athens), தன் செல்வம் எப்பொழுதும் செழித்து ஓங்குவதற்குரிய நூலாதாரமான நுணுக்கமுறைகளை (Economic basis of her prosperity) அறிந்துகொள்ளாத குறைவினால் தான், அது, உலக சரித்திரத்தில் சிலகால மாத்திரம் பிரகாசித்ததேயன்றி, எக்காலத்திலும் நிலைபெற்றிருக்காமல் மறைந்து போய்விட்டது. தன் வியாபாரமும் கைத்தொழிலும் விர்த்தியாவதற்கேற்றதும் கடலோரமானதுமான தக்க ஸ்தலங்களை நன்றாய் உபயோகித்தும், தன் வியாபாரமுழுதையும் அடிமைகளிடத்திலல்லாது சுவாதீன புருஷரிடம் (Free-men) ஒப்புவித்தும், தன் ராஜ்ஜிய நிபுணர்களைக்கொண்டு அவர்கள் ஏற்படுத்தும் தக்க வருமான முறைகளையே அநுசரித்தும் வந்திருக்குமானால், அதைப்பற்றிய சரித்திரமானது அழியாத பெருமையையும் பிரசித்தியையும் அடைந்திருக்கும். ஆனால், அது அப்படிச் செய்யவில்லை. அது தன் லோகவிளைபொருள்களை



(Mineral resources) வீணில் கழித்தும், கோவில்கள் வித்தியாமண்டபங்கள் கட்டுவதில், ஏராளமான பணத்தைச் செலவுசெய்தும் வந்தது. மேனாட்டு நாகரீக முதிர்ச்சிக்கெல்லாம் ஊற்றாயிருந்து உதவிய கிரேக்க நாகரீகத்தைக் குறைவாகச்சொல்ல நான் எண்ணவில்லை. ஆனால், ஒன்று மாத்திரம் பொதுவாய்ச் சொல்லலாம. அதாவது:— செல்வம் எப்பொழுதும் ஓங்குவதற்கான நூலாதார முறைகளை (Economics) நன்றாய் அறிந்து கொண்டால் ஒழிய, எந்த நாகரீக ஜாதியாரும் எப்பேர்ப்பட்ட உன்னத நாகரீகத்தை ஒருகாலத்திலடைந்திருந்தாலும், அவர்கள் அப்படியே எப்பொழுதும் அவ்விதப் பதவியிலிருந்து வரமுடியாது என்பதே. இவ்வுண்மையை பூர்வகிரேக்கநாட்டு அநுபோகத்திலிருந்து தற்காலம் இந்தியா அறிந்துகொள்ளவேண்டும். நீங்கள் ஏராளமான பணத்தைச் செலவிடும்போது கவனிக்கவேண்டியது என்னவென்றால், அப்பணம் சாசுவத பலனைக் கொடுக்கிறதா என்பதே. இந்தியாவின் செல்வப்பெருக்கின் மேம்பாட்டைக்கருதி தத்தம் ஜாதி ஆசாரக்கட்டு விருப்பு வெறுப்புக்களைச் சற்று மறந்து உழைத்து வாருங்கள். உங்கள் உண்மையான மதாபிமானத்தை ஜனங்களின் முற்போக்கான நிலைமையின் பொருட்டு உழைப்பதில் காட்டுங்கள். எல்லாரும் ஆசார விவகாரங்களிலும் புத்தியிலும் சுவாதீனமுள்ளவராகக்கடவர். அப்படியானால் பூலோகத்திலுள்ள எந்த ஜாதியாரும் உங்களை சுவாதீனமற்றவராகும்படி செய்யவே முடியாது.

## ரோமாபுரியும், கைத்தொழிற் சுவாதீனமும்.

ரோமாபுரியும் இந்தியாவுக்குப்படிப்பினை போதிக்கின்றது. ரோமாபுரி க்ஷீணதசையையடைந்து பற்பல ஆபத்துக்குள் அகப்பட்டுச் சீர்குலைந்ததற்குக்காரணங்கள் அநேகமிருக்கின்றன. என்றாலும், அக்காரணங்களுள் முக்கியமானது இதுவென்று எடுத்துரைப்பது அரிது. ஆனால், ஒன்றுமட்டும் நிச்சயமே. பிற்காலத்திய ஸீஸர்களது (Caesars) அரசாட்சியில், கவர்ன்மெண்டார் மேன்மேலும் அனாவசியமாக ஜனங்கள் தாமே பார்த்துக்கொள்ளவேண்டிய ஒவ்வொரு விஷயத்திலும் தங்கள் தலையை நுழைத்துக்கொண்டு வந்ததனால்தான் ரோமராஜ்ஜியம் பலமற்றுத்தளரலாயிற்று.

(இன்னும் வரும்.)

ஆர். ஸ்ரீநிவாஸராகவன்.

*

திருச்சிற்றம்பலம்.

# இரகுவம்மிசம்.

இரகுவம்மிசம் என்பது, 'இரகு' என்னும் அரசன் மரபினுள்ளார் கதையைக்கூறும் காப்பியம். 'இரகுவம்மிசம்' என்னுந்தொடர்மொழி வடமொழி. அதுகாரணப்பெயராய், இந்நூலை உணர்த்தி நின்றது. இதற்கு முதனூல், கவிச்சக்கரவர்த்தியாய காளிதாசர் வடமொழியிலியற்றிய இரகுவம்மிசம். அது, "வன்றிசைக் காளிதாசன் வடமொழி - தென்றிசைத்தமிழானனி செப்புகேன்" என இந்நூலாசிரியர் பாயிரத்திற் கூறினமையானினிது புலப்படும். வடமொழி இரகுவம்மிசம் வான்மீக ராமாயணத்திற்கு வழிநூலாயுள்ளது. முதனூற்பெயரையே 'இரகுவம்மிசம்' என இதற்கிட்டு வழங்கியுள்ளார். 'இரகு' என்பதன்பொருள், பகைக்கடலையும், கலைக்கடலையுங் கடப்பவன் என நூலாசிரியர் கூறுமாற்றானுணர்க.

'தெட்டமெய்த் தவப்பயச் செல்வற் கவ்வயின்
யட்டில கலைக்கட றனையும் வாளமர்
முட்டிய பகையையு முடிவு காண்பனென்
றிட்டன ரொருபெய ரிரகு வென்னவே.

(இரகுவுற்பத்திப்படலம்.)

லக் - கடத்தல். உ - விகுதி. 'இலகு' என்பது, ரலவொற்றுமைபற்றி இரகு என நின்றது. இதனை வடமொழியினின்றுந் தென்மொழியிற் பெயர்த்துச் சிறந்தகாப்பிய நடை அமையச்செய்தவர், யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த நல்லூரில் வசித்த மஹாவித்துவான் அரசகேசரி என்பவர். இவர், நல்லூரிலிருந்தரசியல்புரிந்த பரராசசேகர மகாராசாவின் மருகர். தமிழ்வளர்த்தபெருமையாளர்களுள் இவ்வரசரும் ஒருவர்.

"தேனார் தொடையார் பரராச சிங்கப் பெருமான் செழுந்தமிழ்க்குக்
கானார் நெல்லின் மலைகோடி கண்டிநாடு கரைசேர
கூனார் கப்ப லாயிரத்திற் கொடுபோ யளித்த கொடைத்தடக்கை
மானாகரன்சங் கரன்சடையன் வளஞ்சேர்சோழ மண்டலமே."



எனச் சோழமண்டல சதகமுடையாராற் புகழப்பட்டாரும் இவ்வரசர் பெருந்தகையே. இச்செய்யுளால், இவ்வரசர் கல்விவலியினாலும், அவ்வள்ளல் செல்வவலியினாலும் வீறுடையர்களென்பதும், செல்வவலியினும் கல்விவலியையே பெரிதும் மேம்படுத்தியோராய், அச்சடையவள்ளல் இவ்வரசர்க்கு ஆயிரங்கப்பல் நெல்லும் போக்கினமையும் ஊகிக்கலாம். 'சடையன்' என்று மேற்செய்யுளிற் கூறப்படுவார், கல்விவீறுடைய கம்பரை ஆதரித்துப்போற்றிய சடையப்பமுதலியாரே. செவ்விய மதுரஞ்சேர்ந்த "இராமாவதாரம்" என்னுந்திவ்விய நூலில், கல்வியிற் பெரியராயகம்பர், தம்மை ஆதரித்துப் போற்றிய பெருநன்றிபாராட்டி நெடுநிலவேந்தரும் அழுக்காறுகொள்ளுஞ்செல்வமாண்பும் வண்மையும் வாய்ந்த சடையவள்ளலை ஒருபது கவிகளாற் புகழ்ந்தாங்கு, இவ்வரசகேசரியாரும், தாம்பாடிய 'இரகுவம்மிசம்' என்னும் காப்பியத்தில், தம்மைப்போற்றிய மாதுலனாகிய பரராசசேகரனை, ஆங்காங்குச் சிலகவிகளாற் புகழ்ந்துள்ளார். இராமாவதாரத்தின் ஒரு பாகத்தையே பாடிய இவ்வாசிரியரும், முன்னோர் மொழிபொருளேயன்றி யவர்மொழியும் பொன்னேபோற் போற்றினரென்பதுங் கவனிக்கத்தக்கதாம். இவ்வாசிரியர் (அரசகேசரியார்) பரராசசேகரனைப்புகழ்ந்துபாடிய சிலகவிகள் வருமாறு:—

"இன்ன காதை யியன்ற விரும்பொருட்
டன்னு செஞ்சொற் றுகடபு தூயநூல்
பன்னு செஞ்சொற் பரராச சேகர
மன்ன னின்ப மனங்கொள வாய்ந்ததே. (பாயிரம்-௯.)

வாரியல் பனிப்பரப் பசல மன்னனைச்
சூரியன் வெங்கதிர் தொடாது காக்குவான்
சீரிய செயற்பர ராச சேகர
வாரியன் றடம்புகழ் சூழ்ந்த தன்னதே. (தேனுவந்தனப்படலம்-௬௨.)

நன்னெடுந் தருமுன்னை மற்றைய நவில்வ தென்னே
பொன்னினை யுதவு மாரிப் புட்கலா வர்த்த மானாற்
பன்னுசெந் தமிழ்தேர் செஞ்சொற் பரராச சேகரன்கை
யன்னதப் பொழுதின் மற்றை யாணியத் தொவ்வா தன்றே.

(அயனுதயப்படலம்-௩௦.)

மொய்ப்பாயமரபெவைக்கு முழுதுலகினைகாட்டு முதியநேரின்
வைப்பாகி யக்கதிரோன் மலர்தலைப்பார் வணங்க வெதிர்வருதலாலே

கைப்பாரியனையகொடைப்பரராசசேகரன்றன்காவல்பூண்ட
மெய்ப்பாரெண்டிசையளக்குந்தனியாடற்பரிதியினின்விளங்கினனே.

(தசரதன் சாபமேற்றபடலம்-௮௮.)

நாற்றிசைப்பரப்பன்றியுமுலகெலாநணுகித்
தோற்றிசைப்பரராசசேகரன்கழறுதியா
மாற்றிசைப்பவர்நகரெனக்கிடந்ததுமறுகாற்
போற்றிசைப்பவர்நகரெனச்சிறந்ததப்புரியே"

(தசரயோத்திசேல்படலம்-௧0௭.)

இக்கவிகளுள், "செஞ்சொற் பரராசசேகரமன்னன்" எனவும், "பொன்னினையுதவுமாரிப்புட்கலாவர்த்தம்" எனவும், "பன்னுசெந்தமிழ்தேர் செஞ்சொற் பரராசசேகரன்" "எனவும், "பாரியேயனைய கொடைப்பரராச சேகரன்" எனவும் வருவனவற்றால், இவ்வரசன் அரசியன்முறையானன்றிக் கொடைமுறையானும், கற்றுணர்புலமையானும் மிக்கவனென்பது கருதப்படும். இதுகாறுங்கூறியவற்றால், இவர்களுக்கிடையில் கல்விவலி என்னும் பாரம்பரியமாகவுளதென்பது துணியப்படும். இப்பரராசசேகரவரசனதனுமதி கொண்டே அரசகேசரியார் இந்நூலைப்பாடிமுடித்தாரென்பது, 'மன்னனின்ப மனங்கொளவாய்ந்ததே' என்பதனாற்பெறப்படும். இந்நூலைத் திருவாரூர்த்திருக்கோயிலி லரங்கேற்றின ரென்ப. இந்நூலிலே திலீப மகாராசன், புத்திரப்பேறின்றி காமதேனுவை வழிபட்டுப்புத்திரனாகிய 'இரகு' என்பவனைப் பெற்றுக்கொண்ட கதையும், இரகுவின் கதையும், இரகுவின்மகன் அயன் கதையும், அயன்மகனாய தசரதன் கதையும், தசரதன்மகனாய இராமன்கதையும், இராமன்மகனாகிய குசன்கதையும், குசன்மகனாகிய அதிதிகதையும், அதிதிமகனாகிய நிடதன்முதல் அக்கினிவர்ணனீறாயுள்ள அரசர்கதைகளும், பிறவும் விரித்துஞ் சுருக்கியும் கூறப்படும். இந்நூலாசிரியர் கல்வியிற் பெரியாரென்பது, இந்நூலி லாங்காங்குக் காணப்படும் பிரயோகங்களால் இனிது புலப்படும்.

இந்நூலினருஞ் செய்யுள்களுக்குப் பொருளும், பிறவும் பின்னர் எழுதப்படும்.

அ. க. வைத்தியலிங்க உபாத்தியாயன்,

யாழ்ப்பாணம்.

---



திருச்சிற்றம்பலம்.

# பெரியபுராண அரும்பத விளக்கம்.

[பழைய பிரதியினின்று எடுத்துப் பதிப்பிக்கப்படுவது.]

—— ——— :0: ———— ——

(௨௧௯-ம் பக்கத்தொடர்ச்சி)

௩௯. களிகொண்டாட-களிப்பைக்கொண்டு கூத்தாட. சூரர்மகளிர் - கண்டோர்க்கு அச்சத்தைத்தரும் மலையரமகளிர். அரி - மலை.

௪0. தங்களுடைய பழையமரபிலுள்ள வில்வித்தைத்தொழில் வல்லவரிடத்தே பேரொலி பொருந்திய கரியபோரையுடைய இடபேறு போன்றதிண்ணனை.

௪௧. அழகிய விசாலித்த மலைப்பக்கத்துச் செயற்பாலவாகிய கடன்களை முன்னரே செய்த விற்றொழில் கற்குமிடத்தையடைந்து. பாங்கர்க்குளமெனக் கூட்டுக. சிங்கம் - சிங்கேறு போல்வார்.

௪௨. விரியப்படித்து, கண்ணிற்கடங்காத அழகுமிக, கலைகள் வளருஞ் சந்திரனைப்போல. வளர்வதன். பொலிவு - வளரும் பொலிவு; வளர்கின்ற அதன் பொலிவென்றுமாம்.

(௪௩) கணநிரைகள் - பசுக்கூட்டங்கள். மெய்வண்ணந்தளர் மூப்பின் பருவமெய்தி-அழகிய உடம்புதளரும் வயோதிகப்பருவத்தையடைந்து. வில்லுழவு - விற்றொழில்.

(௪௪) கடமையாகிய ஆமா. மாசங்களில் முறையாகச் செய்யப்படும் வேட்டைத்தொழில்.

(௪௫) சிலைக்கிழ் - வில்லாட்சிக்குக்கிழ்.

(௪௭) கன்னிவேட்டை - முதல்வேட்டை. காடுபலிமகிழவூட்ட - காட்டிற் பலியைத் தேவதைகள் மகிழவூட்ட.

(௪௮) காட்டிலுள்ள வரிபொருந்திய தளிர்நிறைந்த கண்ணிமாலையைச் சூடிக் கலைமான் கொம்பிலரிந்தமைத்த குண்டலத்தைக் காதிலணிந்து, மானின் வயிற்றிலுள்ள அரிதாரத்தால் திலதமிட்டு, மயிலினது கழுத்தைப்போற் (பசியசாயமிடப்பட்ட) சோகிமணிவட

த்தையும் பூண்டு, முலையானது தான்சாய்ந்து தோல் சுருங்கிச்சரிந்து தூங்கத் தழையாகிய மயிற்பீலி மரவுரிமேற் பொருந்த வந்து, பூக்கள் நெருங்கும் வேயரிசியால் மலிந்த அட்சதையைக்கொடுத்து போர்செய்கின்ற வேடர்க்கதிபனை ஆசீர்வதித்து நின்றாள். மயிற்கழுத்தைக்கோத்த மனவுமணியென்றலுமொன்று.

(௪௯) நிரப்பு - வறுமை. வைத்தபடி - நியமித்தபடி. அணங்குசார்ந்தாள் - தெய்வமாவேசப்பட்டவள்.

ஜி. சதாசிவப்பிள்ளை.

(இன்னும் வரும்.)

---

# யவனர்.

——:o:——

யவனரென்பா ரின்னாரென்பது எனக்கு முற்றுந்தெளிவாகவில்லை. காலஞ்சென்ற ஸ்ரீமான்: கனகசபைப்பிள்ளையவர்கள் கூற்றையோர் ஆதாரமாகக்கொண்டு செந்தமிழ்ப்பத்திரிகையில் யவனர் கிரேக்கரேயென வழங்குகின்றனர். பிள்ளையவர்கள் எக்கருவி துணையாக அக்கூற்றை நிரூபித்தனரென்பதை இவ்விரங்கூனில் நான் அறிந்துகொள்ள மார்க்கமில்லை.

இவ் யவனரைப்பற்றி டாக்டர் கால்டுவெல் சொல்வதாவது:—

"புராணேதிகாசங்களிற் கூறப்படுகிற யவனர் மேற்காசியாவில் வசித்தவர்கள். இப்பெயர் அயோனியரினின்றும் உற்பத்தி. இந்துக்கள் ஆதியிலறிந்த கிரேக்கரில் முதல்வரிவரே. ஆயினும், ஆதிசம்ஸ்கிருத காலத்தில் இப்பெயர் கிரேக்கர்யாவருக்கும் வழங்கலாயிற்று. பிற்காலங்களில் கிரேக்கருக்குப் பின்னால் இந்தியாவில் அரபியர் தலைப்படவே, அவர்களுக்கும் அப்பெயரே வழங்கலாயிற்று. ஆகையினால், சம்ஸ்கிருதவிஷ்ணு புராணத்தில் யவனரெனக் கூறுமிடங்களில் இவ்வரபியர் அல்லது பாரசீகக் குடாக்கடலினிருகரையிலும் வசித்தவர்களென்றே நாம் அறிந்துகொள்ளவேண்டியது."



Prof: வீபர் கூற்றுவருமாறு:—

"ஏறக்குறைய இருநூற்றைம்பது வருஷகாலங்களாக வடமேற்கிந்தியாவில் கிரேக்கர் மிகுதியுஞ் செல்வாக்குடையராயினர். அக்காலத்தில் இந்துக்கள் இவரை யவனரெனக்கூறினர். கிரேக்கர் ஒழிந்து இந்துஸ்கித்தியர் தலைப்படவே அப்பெயர் இவர்களுக்காகிப் பின் பார்த்தியர், பாரசீகருக்குவழங்கிக் கடையில் அரபியரைக்குறிக்கலாயிற்று."

டாக்டர் இராஜேந்திரலால்மித்ரர் கூற்றின் சுருக்கமாவது:—

" யவனர் என்னும் பதம் காந்தாரதேசத்தின் மேல்பக்கமுள்ள அரேபியா, பாரசீகம், மீடியா, அஸ்ஸீரியா இந்நான்குதேசங்களில் ஒன்றனுடையவும் அதின் ஜனங்களுடையவும் பெயரைக்குறிப்பதாகவிருக்கலாம். அப்பால் அந்நான்கினுக்குமே வழங்கும் ஓரேபெயராயிற்று. கிரேக்கருக்குமட்டும் இந்தப்பெயர் எப்பொழுதாவது இருந்ததென்பதற்குக் கொஞ்சமேனும் ஆதாரவில்லை."

இம்மூவர் கூற்றையும் நிராகரிக்கப்போதிய கருவிகொண்டு பிள்ளையவர்கள் யவனர் கிரேக்கரேயெனக்காட்டியுள்ளாராயின், அந்நூலை யான்பெறுமாறு செந்தமிழ் அபிமானிகள், சரித்திரவாராய்ச்சியர் கருணைபுரியவேண்டுகிறேன். அங்ஙனமின்றேல், பிள்ளையவர்கள் கூற்றைப்பேராதாரமாகக்கொண்டு யவனர் கிரேக்கரேயெனக்கூறுபவர், என் சந்தேகத்தை நிவர்த்திக்கும்படி பிரார்த்திக்கின்றேன்.

ஞாணதிக்கமச்சாது,
இரங்கூன்.

---

# பேரூர்.

செந்தமிழ்த் தொகுதி 4 பகுதி-7 ல் ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ் அவர்கள் மாறஞ்சடையன் என்னும் அரையனைப்பற்றி எழுதிய சாஸனத்தையும், மீகொங்கில், அணிகாஞ்சிவாய்ப் பேரூரைப் பற்றி எழுதிய குறிப்பையும் பார்க்கலானேன். மேற்படி மேலைச்சிதம்பரம் என்னும் பேரூரைப் பற்றி அவர்கள் எழுதிய குறிப்புரை

கள்சில தவறுகின்றன. யாரோ ஒருவர் தெரியாமற்கழறிய கூற்றை மேற்கொண்டு அருந்தமிழ் அன்பராகிய மேற்படி ராவ் அவர்கள் அங்ஙனம் வரைந்திருக்கக்கூடுமென்று எண்ணவேண்டியிருக்கின்றது. அவ்வுரைகளைச்சோதிப்பதால், மேற்படி ராவ் அவர்கள் குற்றமாகக் கொள்ளாரென்று எண்ணி அடியில்வருமாறு வரையலானேன்.

"இது" (பேரூர்) "இப்போது கோயம்புத்தூர் ஜில்லாவில் திருப்பூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு அடுத்திருக்கிறது. இதனை மேலைச்சிதம்பரம் என்ப. (ஆயின் பாடல்பெற்ற ஸ்தலமல்ல.)" என்று மேற்கூறிய பகுதியில் மேற்படி ராவ் அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

பேரூர் என்னும் முத்திஸ்தலமானது கோயம்புத்தூர் நகர்க்கு இரண்டுமைல் நேர்மேற்கே காஞ்சிமா (நொய்யல்) நதிக்கரையில் உள்ளது. திருப்பூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு அடுத்திருக்கிறது என்பது தவறும். திருப்பூரிலிருந்து ஏழாவது ஸ்டேஷன் (M. R. C. மதுராஸ் ரயில்வேயில்) கோயம்புத்தூர்; அங்கிருந்து இரண்டுமைல் பேரூர்என்பதை செந்தமிழ்வாசிக்கும் நண்பர்கள் அறிவார்களாக.

இனி மேற்படி ராவ் அவர்கள் "ஆயின், பாடல்பெற்ற ஸ்தலமல்ல" என்றுசொன்னது பொருந்தியதா? என்பதை விசாரிப்போம்.

அத்திருப்பேரூரானது மேலைச்சிதம்பரம், பட்டீச்சுரம், பிறவாநெறித்தலம்முதலாகிய பல திவ்விய நாமங்களையுடையது. சமயாசாரியர்களில் ஒருவராகிய சுந்தரமூர்த்தி நாயனார் திருமுருகன் பூண்டி, திருப்புக்கொளியூர், அவிநாசி, திருத்துடிசைமுதலான ஸ்தலங்களை முறையே தரிசனஞ்செய்து பின் திருப்பேரூர் பட்டீசுவரனையும் பச்சைநாயகியம்மையையும் வணங்குவான் அவண் சென்றதாக மேற்படி ஸ்தலபுராணங்களாலும் மேற்படி நாயனார் பாடிய தேவாரங்களாலும் தெரியவருகின்றது.

நாயனார் திருப்பேரூரின்கண் எழுந்தருளியிருக்கும்பொழுது கனகசபையினிடத்தே நித்தனார் தில்லைமன்றுள் ஆடியகோலத்தை



கண்கள் ஆனந்தக்கலுழிநீர் பொழிதரக் கண்டார் என்று பெரிய புராணச் செய்யுளால் விளங்குகின்றது.

முருகன்பூண்டியில் வேடுவரால் கவரப்பட்ட சொத்துக்களை மீட்டும்பெறப் பதிகம்பாடியும், அவிநாசியில் கருங்கான் முதலையைப் பிள்ளைதரச்சொல்லிப் பதிகம் பாடியும், அதி அற்புதங்களைச் செய்த நாயனார், நடராசப்பெருமான் தில்லையுட்கூத்தாடிய கோலத்தை திருப்பேரூர்க் கனகசபையின்கண் கண்ணாரக்கண்டும் தமது அருந்தமிழ் ஆரங்களால் அப்பெருமானை ஆர்வமிக அலங்கரியாதிருப்பாரா? மேலும், அந்நாயனார் போகுந்தலங்களிலெல்லாம் பதிகம்பாடுவது வழக்கமாயிருக்க, அத்திருப்பதியில் எழுந்தருளி, தரிசனஞ்செய்து, ஆனந்தித்திருந்தும் பதிகம்பாடாதிருப்பாரா? இன்னும், அவர்பாடிய "மடித்தாடும்" என்றற்றொடக்கத்துக் கோயில் தேவாரத்துள் கடைசி 10-வது

'பாரூருமரவல்குலுமைநங்கையவள்பங்கன்பைங்கணேற்றன்
ஊரூரன்றருமனார் தமர்செக்கிலிடும்போது தடுத்தாட்கொள்வான்
ஆரூரன் றம்பிரானாரூரன் மீகோங்கிலணிகாஞ்சிவாய்ப்
பேரூரர்பெருமானைப் புலியூர்ச்சிற்றம்பலத்தே பெற்றாமன்றே'

(கோயில்-பண்-குறிஞ்சி)

என்ற பாசுரத்தில் திருப்பேரூர் நடராசப்பெருமானைத் துதித்திருக்கின்றார். இப்படி வேறுதலத்துத் தேவாரத்திலுங்கூடவைத்துத் துதிசெய்யும் பெருமைவாய்ந்த அத்திருப்பதியை அவர் நேரே அடைந்தும் ஆண்டு நெஞ்சுருகப் பாடாதிருப்பாரா? என்று, இவைகளையெல்லாம் யோசித்துப்பார்க்குமிடத்து அப்பேரூரின்கண் நாயனார் தேவாரம்பாடினார் என்பது திண்ணம்.

மேலும், இந்நாயனார் கண்டதைக்கண்டபடி தேவாரத்திலமைத்துப் பாடுபவராதலால் பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற்றம்பலத்தேகண்டபொழுது அக்காட்சியைத் தமது தேவாரத்தில் இனிதமைத்துப் பாடிவைத்தார்; அதுபோலவே,

"நித்தனார் தில்லை மன்றுணின்றாடனீடியகோலநேர்காட்டக்
கைத்தலங்குவித்துக்கண்களானந்தக்கலுழிநீர்பொழிதரக்கண்டார்."

என்னும் பெரியபுராணச் செய்யுட்பிரகாரம் நாயனார் புலியூர்ப் பெருமானைப் பேரூர்க் கனகசபையின்பாட்டுக் கண்டபொழுது அக்காட்சியைக் கருங்கன்மனத்தையும் உருக்கும் தமது தேவாரப்பதிகத்தில் அமைத்துப்பாடியிருப்பார் என்பதேபொருத்தம்.

அப்படி அந்நாயனார் தேவாரம்பாடியிருந்தால் அப்பதிகங்கள் எங்கே? என்று ஒருவினா எழக்கூடும். அதற்கு அப்பதிகங்கள் இறந்துபோயின என்பதே விடை. நம்பியாண்டார் நம்பி சிதம்பரத்தில் தேவாரங்களைக்கண்டு எடுத்தபொழுது எவ்வளவோ தேவாரங்கள் எழுதப்பட்டிருந்த ஓலைகளைச் செல்லு அரித்துவிட்டது. அப்படி இறந்துபோன தேவாரங்களில் திருப்பேரூர்த் தேவாரமும் ஏன் ஒன்றாயிருக்கக்கூடாது? அப்படி இறந்துபோயிற்று என்று ஊகிப்பதே பொருத்தம்.

அத்தலத்தில் மேற்படி நாயனார் தேவாரம்பாடினார் என்பதற்கு இன்னுமொருதிருஷ்டாந்தம் காட்டுதும். அவர்பாடிய,

“ஆரூரத்தா வையாற்றமுதே அளப்பூரம்மானே
காரூர்பொழில்கள் புடைசூழ்புறவிற் கருகாவூரானே
பேருநறைவாயிப் பட்டிப்பெருமான் பிறவாநெறியானே
பாரூர்பலரும் பரவப்படுவாய் பாசூரம்மானே.”

(ஊர்த்தொகை-பண்-பழம்பஞ்சுரம்)

என்று ஊர்த்தொகைத்தேவாரத்தால் மேற்படி நாயனார் ஆங்காங்குச்சென்று தரிசித்துப்பதிகம்பாடிய ஸ்தலங்களையே தொகுத்துஊர்த்தொகையாகப் பாடிவைத்தாரென்றும், தாம்சென்று தரிசித்துப் பதிகம் பாடாத ஸ்தலங்களை அதிற் சேர்க்கவில்லையென்றும், அவர் தமது ஊர்த்தொகையுள் பிறவாநெறித்தலமாகிய திருப்பேரூரைச் சேர்த்து இருப்பதால் அப்பேரூரானது மேற்படி சுந்தரமூர்த்திநாயனாரால் பாடல்பெற்றிருக்கிறதென்றும், வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றது.

ஆனால், மேற்படி ராவ் அவர்கள் கொங்குநாட்டில் பாடல்பெற்ற ஸ்தலங்கள் ஏழுதானே, அவ்வேழில் திருப்பேரூர் ஒன்றாகஇல்லையே; அதனால்தான் பாடல்பெற்றஸ்தலமல்ல என்றுசொன்னேன்



என்றுசொல்லக்கூடும். அதனைக்கண்டுச் சிறிது சீர்தூக்கிப்பார்க்கின் உண்மை யிற்றென இனிதுவிளங்கும்.

ஒவ்வொருநாட்டிலும் பாடல்பெற்ற ஸ்தலங்கள் இவ்வளவினவென்று வரையறுத்த பெரியோர்கள் செல்லரித்ததுபோக இப்போது பதிகம் உள்ள ஸ்தலங்களைமாத்திரம் கணக்கிட்டு ‘கொங்கேழ்’ கொங்குநாட்டிற் பாடல்பெற்ற ஸ்தலங்கள் ஏழு என்றுகூறி, அவ்வேழில் இப்போது தனிப்பதிகம் இல்லாத திருப்பேரூரை உள்ளிடாது போயினர்.

ஆகவே, மேற்கூறிய பிரமாணங்களால் திருப்பேரூர் பாடல்பெற்றஸ்தலம் என்றே உறுதியாய் எண்ண இடமுண்டு.

ஓர் குறிப்பு:—பேரூர் பிறவாநெறித்தலம் என்பதற்கும், பேரூருறையும் பட்டிப்பெருமான் பிறவாநெறியளிக்கும் பெருமான் என்பதற்கும் அறிகுறியாக அப்பெருமான் சுந்தரமூர்த்தி நாயனார்க்கு அவர் பொன்கேட்டபொழுது “இத்தலத்தில் முத்தியையளிப்போமல்லாமல் பொன்கொடுக்கமாட்டோம்” என்றுசொன்ன வாக்கும், ஆங்குஉள்ள பிறவாப்புலி இறவாப்பனை என்னும் இரண்டு விருக்ஷங்களுமே சான்று.

அவ்விருக்ஷங்களை அத்தலத்தே இன்றும் பார்க்கலாம்.

துடிசை அ. சிதம்பர முதலியார்,

காஞ்சிபுரம்.

---

௨

# நல்லொழுக்கம்.

(௧௯௮-ம் பக்கத்தொடர்ச்சி.)

[ஸ்ரீ.இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

மகத்துவமும் நற்குணமுமுள்ள மனிதனைக்கண்டமேலே இளைஞர்க்குப் பெரும்பாலும் ஊக்கமுண்டாக்குவதாகின்றது. அவர்கள் சாந்தமும், தைரியமும், உண்மையும், பெருமையுமுள்ளவர்களை அவசியம் வியந்து நேசிக்கின்றனர். சாட்டுபிரியன்ட் என்பவர் உவாஷிங்டனை ஒரே முறைதான் பார்த்தார். ஆனால், அது அவர் ஜீவகால பரியந்தம் அவர்க்கு உபதேசம் செய்வதாயிற்று. அவர் அவனைச் சந்தித்த விஷயத்தைச் சொன்னபிற்பாடு சொல்வது வருமாறு:—"என்னுடைய பெயருக்கு எவ்வளவேனும் கீர்த்தியுண்டாவதற்கு முன்னர் உவாஷிங்டன் கல்லறைக்குப்போய்விட்டார். அவர்காலத்தில் நான் முற்றிலும் பிரசித்தியில்லாதவனாக இருந்தேன். அவர் முற்றிலும் மகிமைபெற்றவராயிருந்தார். நானே இருந்தஇடம் தெரியாது. என்பெயர் அவருடையஞாபகத்தில் ஒரு நாள் முழுதும் கூடத்தங்கியிருந்திருக்கமாட்டாது. ஆகிலும், அவருடையகடாக்ஷம் என்மீது பட்டதற்காக நான் பாக்கியமுள்ளவனானேன். பிற்பட்ட என் ஆயுசுகாலம் முழுதும் அதற்காகச்சிரத்தைகொண்டவனாக உணர்ந்திருக்கிறேன். மஹான்களுடைய பார்வையிலுங்கூட ஒரு நலம் உண்டு."

நீபுர் இறந்தபொழுது அவருடைய இஷ்டனாகிய பிரட்டெரிக் பெர்த்தஸ் என்பவர் "என்னுடன் வசித்தவர் எப்பேர்ப்பட்டவர்? தீமையும் இழிவுமுள்ளவர்களுக்கெல்லாம் யமன்போலவும் யோக்கியமும் உண்மையுமுள்ளவர்களுக்கெல்லாம் அடைக்கலமாகவும் இளைஞருக்குச் சினேகிதரும் உபகாரியாகவும் இருந்தார்" என்று அவரைப் பற்றிச்சொன்னார். "ஒரு மல்லனானவன் தேர்ந்தமல்வீரரால் சூழப்பட்டிருந்தால் அவனுக்கு நன்மையாகும். யார் வசிக்கும்போது அவரைக்கண்டால் தீயநினைவுகளையெல்லாம் உடைத்தாயிருக்க ஒரு



வன் வெட்கமடைவானோ அப்பேர்ப்பட்டவருடைய படத்தைப் பார்த்தமாத்திரமே அவனுடைய தீயஎண்ணங்கள் ஓட்டம்பிடிக்கின்றன" என்று மற்றோர் சமயம் பெர்த்தஸ் சொன்னார். கெத்தோலிக் மதஸ்தனாகிய ஒரு பணவியாபாரி ஒரு மனிதனை ஏமாற்றுகிற சமயத்தில் அவனுக்கு இஷ்டமான குருமூர்த்தியின் படத்தின்மீது திரைபோடுவது வழக்கம். ஓர் அழகியஸ்திரீயினுடைய படத்தைப்பற்றி ஹேஸ்லிட் என்பவர் அப்படியேசொல்லுகிறார். எப்படியெனில், மனோரம்மியமில்லாத செய்கை அப்படத்தின் முன்னர்செய்ய முடியாததாகத்தோன்றிற்று. ஓர்எளியஜெர்மன் ஸ்திரீயானவள் தன்னுடைய தாழ்மையான குடிசையின் சுவரின்மீது தூக்கப்பட்ட பெரியசீர்திருத்தக்காரருடைய படத்தைக்காட்டி அவருடைய ஆண்மையும் யோக்கியமுமுள்ள முகத்தைப்பார்த்தே ஒருவருக்கு நன்மையைச்செய்கிறது என்று சொன்னாள்.

ஓர்அறையில்தூக்கப்பட்ட ஒரு கௌரவமுள்ள அல்லது நற்குணமுள்ள மனிதருடைய படமுங்கூட ஓர்வகையான தோழமையாக நிகழ்கின்றது. அது நமக்கு அவரிடத்தில் சிரத்தையை விளைக்கின்றது. அவருடைய முகச்சாயையைப்பார்க்கையில் நாம் அவரை அதிகமாய் அறிந்ததுபோலவும் அவருக்குமிக நெருங்கிய பந்துபோலவும் உணருகிறோம். அதுதான், நம்மிலும் உயர்வும் நன்மையுமான குணத்துடன் நம்மைக்கூட்டுவதற்குத் தொடர்கருவியாகின்றது. நமது படமூர்த்தியின் யோக்கியதையின் அளவையடைதற்கு நாம் மிகவும் பின்னிட்டிருந்தபோதிலும் அப்படமூர்த்தியானது இடையறாது நம்முன்னிருப்பதாற் சிறிது சஹனசீலத்தையும் கட்டுப்பாட்டையும் நமக்குக்கொடுக்கிறது.

பாக்ஸ் என்பவர் பர்க்என்பவருடைய திதர்சனமும் சம்பாஷணையும் தம்மை எவ்வளவோ அவருக்குக் கடன்படும்படி செய்ததென்று ஒப்புக்கொள்வதைப் பெருமையாகப் பாராட்டினர். ஒரு சமயத்தில் அவர் இவரைப்பற்றிச் சொன்னது வருமாறு "புஸ்தகப்படிப்பால்தான்உணர்ந்த ராஜரீகதந்திரஞானத்தையும், சாஸ்திரங்களிலிருந்து தாம் உணர்ந்திருந்ததையும், உலகத்தையும், உலககாரியங்களையும் பற்றித்தாம் கற்றுணர்ந்த ஞானத்தையும் ஓர் துலாத்தட்டி

னும் மிஸ்டர் பர்க் என்பவருடைய சம்பாஷணையாலும் கற்பனையாலும் அடைந்த தேர்ச்சியை மற்றொரு தட்டிலும் வைத்தால் இது அவற்றினுங் கனக்கும்' என்பதாம். புரோபெஸர் டிண்டால் என்பவர் பேரடே வுடைய இஷ்டத்தை ஊக்கமும் உபதேசமுமாகச் சொல்லுகிறார். அவரோடு ஒருநாள் சாயங்காலம் காலக்ஷேபம் செய்தபிற்பாடு அவர் எழுதியது வருமாறு "அவருடைய கிரந்தமானது வியப்பை உண்டாக்குகிறது. அவரோடு இணங்குவது மனதை உற்சாகப்படுத்தி கௌரவப்படுத்துகிறது. நிச்சயமாகவே இதோ ஒரு பலவான் இருக்கிறான். நான் பலத்தை விரும்புகிறேன். ஆனால் 'பேரடே' உடைய ஒழுக்கத்தில் பலத்தோடு மரியாதையும் உருக்கமும் இனிமையும் கூடிய நிதர்சனத்தை நான் மறந்துவிடப்படாது."

மிகவும் மிருதுவான குணங்களுங்கூட மற்றவர்களுடைய ஒழுக்கத்தை நன்மைப்படுத்துகிறதற்குப் பலத்தகருவியாகின்றன. இவ்வாறு 'வேர்ட்ஸ் வர்த்' என்பவர் அவருடையசகோதரி 'டொராத்தி' உடைய ஒழுக்கத்தால் முக்கியமாய் அழுந்தப்பெற்றவராகத் தோற்றுகிறது. அவள் அவருடைய மனதிலும் இருதயத்திலும் நிலைத்த பயனை உண்டாக்கினாள். அவர் அவளைத் தன்னுடைய சைசவத்திற்கும் கௌமாரத்திற்கும் உபகரித்த பாக்கியமாக விவரிக்கிறார். தன்னைவிட அவள் இரண்டுவயசு குறைந்தவளாயினும் அவளுடைய உருக்கமும் இனிமையுமான குணமும் அவருடைய சுபாவத்தை மிகவும் உருப்படுத்திப் பின்வரும் கவியை உண்டாக்கும்படி அவருக்கு அறிவைக் கொடுத்தது. அக்கவி வருமாறு.

"அவள் எனக்குக் கண்ணைக்கொடுத்தாள், காதைக்கொடுத்தாள், சொற்பக்கவலையையும் சூக்குமமான பயங்களையும், இனிமையான கண்ணீர்களின் ஊற்று ஆகிய மனதையும், அன்பையும், ஆலோசனையையும் இன்பத்தையும் கொடுத்தனள்"

இவ்வாறு எல்லாக் காலங்களிலும் தங்கள் ஜாதியாரை வசப்படுத்தி கௌரவப்படுத்துவதற்குப் பாத்தியப்பட்ட புருஷருடைய ஒழுக்கங்களை உண்டாக்குவதற்கு அன்பின் பலத்தாலும் புத்தியின் சக்தியாலும், மிருதுவானகுணத்தை யுடைய பெண்கள் திராணியுடையோராயினர்.



"ஸர்வில்லியம் நேப்பியர்" முதல்முதல் தான் பையனாயிருக்கும் பொழுது ஒழுக்கம் உண்டானதற்குக் காரணம் அவருடைய தாயார் தன் எழுத்தின் மீது அழுத்திய அழுத்தமேயாம். அப்பால் குமாரனபொழுது அவருடைய சேனாதிபதி 'ஸர்ஜான்மூர்' என்பவருடைய கௌரவமான நிதர்சனமேயாம். 'மூர்' என்பவர் அந்த வாலிப உத்தியோகஸ்தருடைய குணங்களை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்துக் கொண்டார். 'கோரன்'னாவில் "சபாசு நன்றாயிற்று என்னுடைய மேஜர்களே" என்று அந்த சேனாதிபதி உற்சாகப்படுத்தப்பட்டவர்களில் இவர் ஒருவராயிருந்தார். அவர் 'மூர்' என்பவரை, அவரைச் சுற்றிய உத்தியோகஸ்தருடனே விவரித்து, தன் தாயாருக்குக் கடிதம் எழுதினதில் "அப்பேர்ப்பட்ட அரசன் நமக்கு எங்கே கிடைக்கப்போகிறான்" என்று அவர் எழுதினார். பெண்ணின் அலர் யுக்த சரித்திரமாகிய புஸ்தகம் ஸர்வில்லியம் நேப்பியரால் முக்கியமாய் உலகத்தாருக்குக் கிடைத்ததற்குக் காரணம் அவர் தம்முடைய சேனாதிபதி விஷயமாய்ச் செலுத்திய அந்தரங்க அன்பேயாம். ஆனால் அந்த புஸ்தகத்தை அவரை எழுதும்படி தூண்டியது அவருடைய மற்றொரு இஷ்டராகிய காலஞ்சென்ற 'லார்ட்லாங்டேல்' ஆவர். ஒருநாள் 'பெல்கிரேவியா' இப்பொழுது கட்டப்பட்டிருக்கிற வயல்களின் வழியே அவருடன் உலாவிக்கொண்டிருக்கும்போது லார்ட்லேங்டேல் தான் முதன்முதல், அந்த அவாவை உண்டாக்கியதாக அவர் சொல்லுகிறார். ஸர்வில்லியம் நேப்பியர் உடைய சரித்திரகாரர் அவரைப்பற்றி உள்ளபடியே சொல்லுமாறு:—"யோசிக்குந் தன்மையுடைய எவனும் அவரைச் சந்தித்தால் அவருடைய யூகம் பலமாய் அழுந்தப்பெறாமற் போகான்' என்பதாம்.

காலஞ் சென்ற 'டாக்டர் மார்ஷாஹால்' என்பவருடைய நடத்தையானது அவர் ஜீவகாலமுழுதும் ஒழுக்கத்தை உண்டாக்குவதிற் சக்தியுடைமைக்கு நிதர்சனமாக இருந்தது. இன்றும் வசிக்கிற அனேக சிறந்த மனிதர், தங்கள் வாழ்நாளில் வெற்றி பெற்றதற்குக் காரணம் அவருடைய சூசனங்களும் உதவியுமாயிருந்த தென்றும், அவை இல்லையேல், பற்பல அரியவித்தைகளும் ஆராய்ச்சிகளும் குறைந்தபக்ஷம் இவ்வளவு அதிகசீக்கிரம் உண்டாயிருக்கமாட்டா

தென்றும் கூறுகின்றனர். தன் பக்கலிலுள்ள இளைஞர்களை நோக்கி, "ஒரு விஷயத்தை எடுத்து அதை நன்றாய்ப் பின்பற்றுங்கள், கைகூடுவதிற் றவறமாட்டீர்கள்" என்று சொல்லுவார். தன்னுடைய வாலிப சினேகிதர்களுக்கு ஓர் அபிப்பிராயத்தைக் காட்டி "இதை உங்களுக்குப் பரிசாகத் தருகிறேன். நீங்கள் ஊக்கத்துடன் பின்பற்றினால் அதில் பாக்கியம் இருக்கிறது" என்று சொல்லுவார்.

ஊக்க குணமானது எப்பொழுதும் பிறரிடத்து ஊக்கத்தையுண்டாக்கும்படியான சக்தியுடையது. மனிதர்களுக்குள்ள மிகவும் சக்தியுள்ள கருவிகளில் ஒன்றாகிய ஜீவகாருண்ணியத்தால் அது பிரவிர்த்திக்கின்றது. வைராக்கியமும் ஊக்கமுமுள்ள மனிதன் தன்னறியாமலே தன்னுடன் மற்றவர்களைக்கொண்டு செல்லுகிறான். அவனுடைய நிதர்சனமானது எங்கும் வியாபித்துக்கண்டபாவனை செய்யும்படி நிர்ப்பந்திக்கிறது. அவன் ஒருவகையான மின்சாரசக்தியை உபயோகிப்ப, அது ஒவ்வொரு நாடியிலும் தீக்ஷண்யத்தை உண்டாக்குகிறது. அதாவது, தன்னைச் சுற்றிலுமுள்ளவர்களுடைய சுபாவத்தில் கலந்து அவர்களைச்சுறுசுறுப்புடன் கூட்டுகின்றது.

டாக்டர் ஆர்னால்ட் உடைய சரித்திரகாரர், இளைஞர்மீது அவர் செலுத்திய இத்தகைய சக்தியைக்குறித்துப்பேசுங்கால், அது உண்மையான ஊக்கம் அல்லது கல்வி அல்லது வாக்குவளமுடையோரைப் பார்ப்பதினின்றும் கிளர்ந்த சிரத்தைபொருந்திய வியப்பினாலெழுந்ததன்று; கடமையையும், கடமையின் பெருமையையும், ஆழ்ந்துணர்ந்து தெய்வபயத்தால் இடையறாது நடத்தப்பட்டதும் சௌக்கியமுள்ளதும் சகிக்கத்தக்கதுமாய் உலகத்தில் உண்மையோடுகூடி வேலைசெய்த ஊக்கமானசெய்கையாளர் விஷயமாய்க்கிளர்ந்த உருக்கத்தினின்றும் பிறந்த சக்தியேயாம்.

ஊக்கமுள்ள மனிதர்களால் செலுத்தப்பட்ட அத்தகைய சக்தியானது தைரியத்தையும், வைராக்கியத்தையும், பக்தியையும் உயிர்ப்பிக்கின்றது. தனித்தனி மனிதருடைய யோக்கியதையைக்கண்டு வியத்தல் தான், என்றும் வீரர்களையும் வைராக்கியர்களையும் உண்டாக்கியிருக்கின்றது. ஒரு கூட்டத்தாரைக்கண்டுவியத்தல் அங்ங



னம் உண்டாக்கமுடியாது. இவ்வாறு ஒழுக்கத்தின் உயிர்நிலையானது உணருந்தன்மையதாக இருக்கின்றது. அது தன் அதிகாரவசப்பட்டவரின் சுபாவகுணங்களை தீக்ஷண்யப்படுத்தி உயிர்ப்பித்து, உற்சாகசக்தியை மூட்டி நடத்துகின்றது.

பெரியோர்கள் தங்கள் சக்தியைப்பிறர்பாற் செலுத்துவதில் வன்மையுடையவர். தங்கள்சக்தியை பிறர்பாற் செலுத்துவதுமட்டுமன்று. ஆனால் அதைப்புகுவித்து அவர்களிடம், அதை உண்டாக்குவார்கள். இவ்வாறு 'டாண்டி' என்பவர் 'பிட்டிரார்ச்' 'பொக்காச்சியோ' 'டேஸோ,' இன்னும் அனேக தைரியவான்களுடைய கூட்டத்தை உற்சாகப்படுத்தித் தன்னைப் பின்பற்றும்படி செய்தனர். அவரிடத்திலிருந்து 'மில்ட்டன்' என்பவர் தீயவராற் சொல்லப்பட்ட கொடுமொழிகளையும் தீமையானகாலத்தின் நிந்தையையும் சகிக்கப்பயின்றனர். அநேகவருஷத்திற்குப்பிற்பாடு, பைரவன் என்பவர் ராவன்னாவின் தேவதாருவிருக்ஷத்தின் கீழுள்ள 'டாண்டி' யைப்பற்றி நினைத்துத்தான் இதன்முன் எக்காலத்திலாவது முயற்சித்திருந்ததைவிட மிகவும் அதிகமான சுரங்கங்களில் தன்காலத்தையிசைத்துக்கொள்ளத்தூண்டப்பட்டார். 'டாண்டி' என்பவர், 'ஜியட்டோ,' 'ஆர்க்கேக்னா' 'மிச்சேயல் ஆங்கினேர்,' ரேபாயல், ஆகிய இத்தாலிதேசத்தின் மிகவும் பெரிய சித்திரவேலைக்காரருக்கு ஊக்கத்தைக் கொடுத்தனர். அப்படியே, ஆரியஸ்டோவும், திட்டியனும் ஒருவர்க்கொருவர் ஊக்கத்தைக்கொடுத்து ஒருவர்மற்றொருவருடைய மகிமையை விளக்கிக் கொண்டனர்.

பெரியோரும் நல்லவர்களும் மனிதர்களிடத்தில், தானே வியப்பை உண்டாக்கித் தங்களைப் பின்பற்றும்படிக்கு மற்றவர்களைத் தம் வயப்படுத்துகின்றனர். மேலான ஒழுக்கத்தைப்பற்றிய இவ்வியப்பானது மனதை உயர்த்தி சன்மார்க்க விர்த்திக்கு மிகவும் பெரிய இடையூறாகிய அகங்கார பந்தத்தினின்றும் விடுவிக்க உபகரிக்கின்றது. பெரிய ஆலோசனைகளால் அல்லது பெரிய செய்கைகளால் தங்களை அறிகுறியாக நிறுத்திய மனிதர்களைச் சிந்தித்தலானது நம்மைச்சுற்றி அதிகபரிசுத்தமான ஆகாயத்தைத்தற்காலத்திற்கு உண்டாக்குவதுபோலத் தோற்றுகிறது. நம்முடைய நோக்கங்களும் கரு

த்துக்களும் தன்னறியாமலே உயர்த்தப்பட்டனவாக நாம் உணர்கிறோம்.

‘ஸெயின்டி டியூவி,’ என்பவர் கூறுமாறு:—“நீயாரைப் புகழ்கிறாயென்பதைச் சொல்லு: உன்னுடைய புத்தி, இச்சை, ஒழுக்கங்கள் விஷயத்திலாவது உன்னுடையஇயல்பை நான் உனக்குச்சொல்லுவேன்; நீ இழிவான மனிதர்களைப் புகழ்கிறாயா? உன்னுடைய சொந்த சுபாவமும் இழிவானதேயாம். ஐசுவரியவான்களைப் புகழ்கிறாயா? நீ இவ்வுலகத்துக் குரியவனாகிறாய். பட்டம் பெற்றவர்களைப் புகழ்கிறாயா? நீ முகஸ்துதிபேசுகிறவனாகிறாய். யோக்கியமும், தைரியமும், ஆண்மையுமுள்ளவர்களைப் புகழ்கிறாயா? நீயும் யோக்கியமும் தைரியமும், ஆண்மையுள்ள தன்மையனாகிறாய்.

ஒழுக்கம் உண்டாகாநின்ற இளமைப்பருவத்தில்தான் புகழ்வதற்கானதூண்டுதல் விசேஷமாயிருக்கிறது. நமக்கு வயது வளரவே வழக்கமானது நம்மைப்பற்றிக் கொள்ளுகின்றது. “ஒன்றிலும் வியவற்க” என்பது மிகவும் சாதாரணமான பழமொழியாக இருக்கின்றது. மனமானது விஷயங்களை ஏற்றுக்கொள்ளத்தக்க பருவத்தில் மகத்துக்களுடைய ஒழுக்கத்தை வியந்து பாராட்டச்செய்வித்தலானது உத்தமமாகின்றது. இளைஞர்கள் ஏதேனும் ஒருவித வீரரைப் பின்பற்றுவர்; ஆதலால் நல்ல மனிதரை வியக்குமாறு செய்யாவிடிற் கெட்ட மனிதரைத் தங்களுக்கு முன்மாதிரியாக்கி அவரைப் பின்பற்றுவர். இதனால் டாக்டர் ஆர்னல்ட் என்பவர், தன் மாணாக்கர் அரிய செய்கைகளைப் புகழ்ந்து வியப்பதையாவது, மனிதர் அல்லது கண்காட்சி விஷயத்தில் அபிமானமுற்றுப் பேசுவதையாவது கேட்க எப்பொழுதும் இன்பமுள்ளவராயிருந்தனர். அவர் கூறுமாறு: ‘புகழ்ந்துபாராட்டாதே,என்று உபதேசிப்பதானது பேய்க்குணத்தினுடைய பிரியவாக்கியமென நம்புகிறேன். அவன் தனது கற்பனையின் அந்தரங்க அர்த்தங்களைத்தன் மாணாக்கருக்கு உணர்த்தற்கு இதனைவிட நல்லமொழி தெரிந்துகொள்ளத் திறமையற்றவனாயிருக்கிறான். ஆகையால் பொய்ம்மைக்கு மாறான கருத்தை ஒழுங்காக உட்கொள்ளத் தகாத சுபாவமுடையோனை அவனுடைய பிரகிருதியின் மிகவும் செம்மையான பாகத்தை இழந்தவனாகவும், இழிவும்



மூடமுமான ஒவ்வொரு காரியத்தினின்றும் தன்னைக் காக்கத்தக்க சிறந்த கருவியை இழந்தவனாகவும் நான் எப்பொழுதும் எண்ணுகிறேன்.

ஆல்பர்ட் இராஜகுமாரன் மற்றவர்களுடைய நல்ல செய்கைகளைப்பற்றித் தாராளமாய் வியந்து பேச எப்பொழுதும் சந்நத்தராயினமை அவருடைய ஒழுக்கத்தில் முக்கியாம்சமாக இருந்தது. “நல்லவாக்கியத்தைச் சொல்லுகிற அல்லது கௌரவமான செய்கையைச்செய்கிற வேறே யாரிடத்திலும் மிகுந்த சந்தோஷத்தை அவர் உடைத்தாயிருந்தார், அவர் அதின் பேரில் சந்தோஷம் கொண்டாடுவார்; அதைப்பற்றி வெகுநாளைக்கு எடுத்துப்பேசுவார்; ஒரு சிறிய குழந்தையினாலாயினும் அலலது ஓர் அனுபவமுள்ள ராஜாதந்திரியாலாயினும் மேன்மையாய்ச் சொல்லப்பட்ட அல்லது செய்யப்பட்டதான காரியமானது அவருக்குச் சமமான இன்பத்தைக் கொடுத்தது. அவர் எக்காலத்திலும் எவ்விதத்தாலும் நன்மை புரிபவர்பால் சந்தோஷமடைந்தார்” என்று அவருடைய ஒழுக்கத்தை விளக்கும் பெரிய சமர்த்தர் சொல்லுகின்றனர்.

(இன்னும் வரும்.)

---

# “மதுரைஸ்தானீகர்வரலாறு.”

(௨௨௨-ம் பக்கத்தொடர்ச்சி.)

[பழைய ஏட்டிலுள்ளபடியே பதிப்பிக்கப்பட்டது.]

“அதன் பிறகு மன்மத௵ புரட்டாசி௴ முதல் பிலவங்க௵ வைகாசி௴ வரைக்கும் ௵ ௧௧௴ ௯-க்கு முத்துகிருஷ்ணப்பநாயக்கரய்யனவர்கள் பட்டமாண்டார்கள். அவர்களுக்குக்குரு பண்டாங்கிஹரிபட்டர் குமாரன் விட்டலபட்டர். அவரிடம் தீட்சை பண்ணுவித்துக்கொண்டு செங்கோலும் வாங்கினார். அப்போது குலசேகரபட்டர்வழி வலுத்தது. அசாரவழிக்காரர், அரிக்காரர்களை அறியப்பண்ணுவித்துக்கொண்டு யாவரையும் கொடுத்து உத்தரவுவாங்கிக்கொண்டு தம்முடைய பூர்வீகநிலையாகிய கரியமாணிக்கப்பெருமாள்

கோவில் சேகரம் ஆஸ்தானமண்டப நாயகத்தில் ஆசாரிய அபிஷேகத்திற்கு யத்தனம் செய்து நடப்பிவித்துக்கொண்டார். இது விவரம் சதாசிவபட்டர், அரமனையில் போய்ச் சொன்னதாவது:—அபிஷேகத்துக்குத் துரை உத்தரவாகி காணிக்கை பொன் நூா-கொடுத்து நடப்பிவித்துக் கொள்ளுகிற காரியத்தில், அரமனை யுத்தரவில்லாமற் பண்ணிக் கொண்டாரென்று விகாதமாய்ச் சொன்னபோது அரமனையார்க்கு ஆயாசம் வந்ததால் சக்கரவர்த்திகள் நிலைமையை விட்டுப் பின்வாங்கிப்போனார். அப்போது சக்கரவர்த்திகள் தொழிலைச் சதாசிவபட்டர் பார்த்து வரும்படி சொன்னார்கள். ஒரு ௵ பார்த்துவந்தார். இதற்குள்ளே தலம் விட்டு எடுபட்ட சக்கரவர்த்திகள் பக்கபாரிசத்தில் அமர்வாக இருந்து கொண்டு, அசாரவழிக் காரியஸ்தர்கள் மூலமாய்ப் பேசுவித்து, அபயஸ்தபச்சவடமும் வாங்கிக்கட்டிக்கொண்டு ஸம்ஸ்தானத்தில் காத்திருக்குமிடத்தில், பிலவங்க௵ ஆவணி௴ முதல் துந்துபி௵ தை௴ வரைக்கும் முத்துவீரப்பநாயக்கரய்யனவர்கள் பட்டமாண்டார்கள். அவர்களுக்கு குரு விட்டில பட்டர் புத்திரன் கேசவதீட்சத அய்யன். அவர் யாகம் பண்ணப் படிக்க யோக்கியமுள்ளவரானதால் அவர்களிடத்தில் தீட்சை பண்ணிக்கொண்டு ராஜ்ஜியமாளுகிற நாளையில், துரையவர்கள் மதுரைக்குப் புறப்பட்டார்கள். அப்போது குலசேகர பட்டர் தம்முடைய வரலாறெல்லாம் கேசவதீட்சத அய்யன் மூலமாய்ப் பிரபுவுக்குத் தெரியப்பண்ணுவித்து அவர் மிகவுங் கேட்டுக்கொண்டபடியினாலே, தயவு வந்து சதாசிவபட்டரை யழைப்பித்து நடந்த காரணத்தையும், மூலகாரணங்களையும் விசாரித்து பிலவ௵ கார்த்திகை௴ கூ சதாசிவப்பட்டர் வசமாயிருந்த தொழிலை சக்கரவர்த்திகளுக்குக்கட்டளையிட்டு சுவாமிகோவில் ஆறுகாற்பீடத்தில் ஆசாரிய அபிஷேகஞ் செய்வித்தார்கள்.

"அதன் பிறகு குலசேகரபட்டர், சதாசிவபட்டர் பேரில் விரோதமாய் அரமனையிற் சொன்னதாவது:—நாமில்லாத வேளையில் ஸ்ரீ பண்டாரத்தில் சிறிது நகைகள் கையாடி யிருக்கிறாரென்று கர்த்தாக்களிடத்தில் அறியப்பண்ணுவித்தபோது சதாசிவப்பட்டரிடத்தில் ஆயாசம் பிறந்தது. சதாசிவபட்டர் பயந்து பின்னுக்குவாங்கினர் ௲-௴ வரைக்கும் சதாசிவபட்டர் தொழில் முழுதும், மாளுவச்சக்கரவர்த்திகளைப் பார்த்துவரச் சொன்னார்கள். தலம் விட்டு எடுபட்டவர், கேசவதீட்சத அய்யரவர்களை யனுசரித்து அரமனைக்குப் பத்துப்பணம் செலவழிக்க, தீட்சத அய்யரவர்கள் மிகவும் கேட்டுக்கொண்ட நிமித்தம் தயவு வந்து அபயஸ்த பச்சவடமுங் கொடுத்து தலம் வந்து சேர்ந்தார். ஸ்ரீ பண்டாரம் கையாடல் பெரியதேவமுதலிபேரில் சுமந்ததாகி அவன் முதலைத் திருப்பவிட்டான். அதற்குக் கணக்குண்டு. அப்பால் குலசேகரப்பட்டரிடத்திலிருந்த தொழிலைச் சதாசிவபட்டர்க்கு விடச்சொல்லிக் கட்டளையிட்டு இனிமேல் இவ்விதமாக, ஒருவர்க்கொருவர் சர்ச்சை பண்ணிக் கொள்ள வேண்டாமென்று, பழைய கணக்கும் வரவழைத்துப் பார்த்துச் செய்தொழிலைத் திட்டம் செய்து வைத்தார்கள். அதற்குக் கணக்குண்டு. நம்பி முதல், சகல பரிஜனங்களுக்குந் தொழிலைத்திட்டம் செய்து நிலம் பூமியும், உம்பள சம்பளமும் கட்டளையிட்டார்கள். அதற்குக் கணக்குண்டு. கேசவ தீட்சத அய்யரவர்களிடத்தில் குருபக்தி நிரம்பவு முண்டாகிப் பிரபு நடப்பிவித்து வருங்காலத்தில் ஒரு நாள் சந்தோஷமாயிருக்கிற வேளையில், உங்களுக்கு வேண்டியவை கேளுங்கள் தருகிறோமென்று சொல்ல, மதுரை மீனாட்சிசுந்தரேசுவரர் சந்நிதானத்தில் ஒரு மடாதிபத்தியம் வேணுமென்றுசொல்ல அப்படியே நல்லது தருகிறோமென்று சொல்லி, ஸ்தானீகர்கள் சதாசிவபட்டர், மாளுவச்சக்கரவர்த்திகள் கட்டிமுதலியார் வகையில் தற்புருஷதேவமுதலியார், பெரியதேவ முதலியார், விழுப்பாதராயன், பாண்டியநாட்டு முதலியார் இந்த மடாதிபத்தியக்காரரைவரவழைத்து புராதன வழிபாடு கேட்குமிடத்தில், பழைய கணக்குப்படிக்கு மடாதிபத்தியத்துக்கெல்லாம் மனிதர்களிருக்கிறார்கள்; உலகுடைய பெருமாள் மடாதிபத்தியத்துக்கு மட்டும் மனிதர்களில்லை: யென்று சொல்ல அதை நம்முடைய குருவாகிய கேசவதீட்சத அய்யரவர்களுக்குப் பண்ணுவிக்கிறோமென்று கர்த்தாக்கள் முத்துவீரப்பநாயக்கரய்யனவர்கள் திருவாக்குப்பிறந்தது. சதாசிவபட்டர் மாளுவச்சக்கரவர்த்திகளிருவகைப் பேருக்கும், கேசவதீட்சதர் நிரம்பவு முதவிசெய்திருந்தபடியினாலே அப்பேர்ப்பட்ட பெரியவர் ஸ்தலத்

திலிருக்கவேணுமென்று ஸ்தானீகர்களனைவரும் மனப்பூர்வமாய்ச் சம்மதமென்று சொன்னார்கள்.

"சகாப்தம் ஆருளசய-க்கு மேற்செல்லாநின்ற சித்தார்த்தி௵ வைகாசிமீ திருதியையும் ரோகணிநட்சத்திரமுங் கூடிய சுபதினத்தில் ராஜகரமுத்திரைக் காணியாட்சியும் கட்டளையிட்டு, இரண்டு சந்நிதானத்திலும் வேதபாராயணமும், தெய்வப்புரோகிதமும் ஸ்ரீ பண்டாரமுதல் சகல தெய்வ கர்மத்துக்கும் உரியவராய் ஆறு மடாதிபத்தியக்காரர் பேரிப்பந்தம் தீர்த்தம் பிரசாதம் பரிவட்டமுதலான ஸ்வதந்திர சாம்மியமும் கட்டளையிட்டுக் கிராமபூமியும் விட்டுக்கொடுத்து, தாம்பிரசாஸனமும கட்டளையிட்டார்கள். ஸ்தல மொப்புக்கொண்டு பட்டுப்பரிவட்டமுங் கட்டி அன்று முதல் ராஜகர முத்திரை கேசவ தீட்சத ஐயர் என்று பெயருங் கொடுத்து, நாகர் முத்திரையும் முத்துவீரப்பநாயக்கரய்யனவர்கள் கட்டளையிட்டது நடந்துவருகிறது. துந்துபி௵ மாசிமீ ஈஉ முதல் விளம்பி௵ மாசிமீ சஉ வரைக்கும் ௵ ௲சு-க்கு திருமலைநாயக்கரய்யனவர்சள் பட்டமாண்டார்கள். அப்போது கேசவதீட்சத அய்யரவர்கள் குலகுரு பீடத்தில் தீட்சை செய்துகொண்டு ராஜ்ஜிய பரிபாலனம் செய்துவருகிற நாளையில், மாளுவச்சக்கரவர்த்திகளுக்கும், சதாசிவபட்டர்க்கும் விவகாரமாய் அரமனையில் வந்து கரையேறுமிடத்தில் குலசேகரபட்டர் பிரமாணமாகவேண்டுமென்று சொல்ல, சதாசிவபட்டர் அனுபோகத்தின்படி போகவேண்டுமென்று சொல்ல அப்போது உடனிருந்த நிர்வாகிகளும் அபிஷேகபண்டார முதலான மடாதிபதிகளுங் கூடி இருவகைப்பேர் நியாயமுங் கேட்டுச் சமாதானம் பண்ணுவித்த விதம்:—சதாசிவபட்டர்க்கு இரண்டு கோவில் பூஜாகர்மமும், பரிசாரகம் ௰ரு-நாளும் சித்தி விநாயகர் முதல் பரிவாரதேவதைகள் பூஜாகர்மம் ௰௫-நாள் திட்டமும் மடாதிபத்தியமும், குலசேகரப்பட்டர்க்கு உற்சவமூர்த்தி பிள்ளையநயினார் மாறியாடுவார்கோவில் பூஜாகர்மங்களும் உள்பரிசாரகம் கஉ-நாளும் சித்திவிநாயகர்முதல் பரிவாரதேவதைகளுக்கு கரு-வட்டம் பூஜாகர்மமும் செய்துவரச் சொல்லியும் முந்தின பிரபுக்களைப்போலே யல்லாது, இப்போதிருக்கிற ராஜஞெக்க மிதையல்லாமல் ஆசாரிய வபிஷேகத்துக்கு மூலமாய் இருவகைப்பேரும் காணிக்கை கொடுத்து, கையெழுத்து வைத்திருக்கிறவேளையில், விவகாரங்கள் வேண்டாம், பிரமாணமும் வேண்டாமென்று நேர்செய்துவைத்துச் சிறிது நாளில் நேராகுமென்று இருந்தார்கள். கர்த்தாக்கள் திருமலைச்சவுரியய்யரவர்கள் மீனாட்சி சுந்தரேசுவரர்களிடத்தில் நிரம்பவும் பக்தியுண்டாகி அம்மன்பிரசன்னமாகி விளையாடுகிற நாளையில், அய்யர் தீட்சதர் சாமாசிகத்தில் புராண சித்தமாயிருக்கிற திருவிளையாடலை ஸ்தானீகர்கள் மூலமாய் நடப்பிவிக்கச் சொல்லிக் கட்டளையிட்டதாவது:—சதாசிவப்பட்டர்க்கு அங்கம் வெட்டுகிற லீலையும், வளையல் விற்பதும் பிட்டுக்குமண் சுமப்பதும்; குலசேகரபட்டர்க்கு பொற்கிழியறுப்பதும், குதிரை கயிறுமாறுகிற திருவிளையாடலும், யானையேற்றமும்; மற்றலீலைகள் சிறிது பேர்பாதியாகவும்; சிறிது லீலைகள் பரிஜனங்களைக்கொண்டு செய்துவரச் சொல்லியும் கட்டளையிட்டுக் கண்காட்சிகள் பார்த்துச் சந்தோஷமாயிந்தப்படி நடந்துவருகிறது.

"சுவாமிக்கும் ஆபரணாதிகள் அநேகம் கொடுத்து, அநேகதிருப்பணிகளும் அபிஷேகபண்டார மூலமாய் உண்டுபண்ணுவித்து கோவில் பூஜைக்கு நாற்பத்தினாலாயிரம் பொன் சீமையும் விட்டுக்கொடுத்து அபிஷேக நைவேதனம் திருவிளக்கு, ஆடல் பாடல் தேர்; திருநாள் சகலமும் சிறப்பாக நடப்பிவித்தார்கள். புதுமண்டபமும், பெரிய தெப்பக்குளமும், இரத்தினத்திருவாச்சியும், இரத்தினச் சிம்மாசனமும், இலக்ஷம் பொன் ஆபரணமும் நடப்பிவித்தார்கள். அவர்கள் நாளையிலே கோவில் மிகப்பிரபலமாயிற்று. இவ்வளவுக்கும மீனாக்ஷி பிரசன்னமாகி அனுக்கிரகஞ்செய்வதாலும், ரசவாதம் சித்தியானதாலும், மதுரையில் தானே அரண்மனையுங் கட்டிக்கொண்டு ராஜ்ஜியபரிபாலனம் செய்துவந்தார்கள். சுவாமி கோவிலுக்கு அரியநாயக முதலியாரய்யனவர்கள், வீரப்பநாயக்க ரய்யனவர்கள், அறைக்கட்டளை யுபசாரமும், அம்மன் கோவிலுக்குத்திருமலைசௌரியறைக்கட்டளையுமாகத் திட்டஞ் செய்து, தம்முடைய கட்டளைக்குப் பன்னீராயிரம் பொன் சீமையும் விட்டுக்கொடுத்து, நெய்விளக்காயிமகன் பூவணநாதபண்டாரத்தைத் தர்மத்துக்குப் பொறுப்பாக நியமித்துப்பார்த்துவரச் சொல்லிக் கட்டளையிட்டார்கள். திருவிளையாட்டுகளுக்குரிய கிராமங்களுக்கும்; திருவாபரணம் திருப்பணிகளுக்கும் கணக்குண்டு.

"விளம்பி௵ மாசி௴ ௪௨ திருமலை சௌரி அய்யனவர்கள் தெய்வீகமானார்கள். விளம்பி௵ பங்குனி௴ முதல் விகாரி௵ வைகாசி௴ வரைக்கும் முத்துவீரப்பநாயக்கரய்யனவர்கள் ராஜ்ஜிய பரிபாலனம் செய்து வந்தார்கள். விகாரி௵ ஆனி௴ முதல் துந்துபி௵ ஆனி௴ வரைக்கும் ௵ ௨௰௩-க்கு சொக்கநாத நாயக்கர் பட்டமாண்டார். அந்த நாளையில் மிகவும் கலாபமுண்டு. உருத்திரோத்காரி௵ முதல் பிரமோதூத௵ வரைக்கும்௵ ௮-க்கு ரெங்ககிருஷ்ண முத்துவீரப்பநாயக்கரய்யனவர்கள் பட்டமாண்டார்கள். அவர்கள் தெய்வீகமானதின் பேரில், விஜய ரெங்கமுத்து சொக்கநாயக்கரய்யனவர்கள் ஒரு வருஷத்துக் குழந்தையானதால், பாட்டியார் மங்கம்மனவர்கள் குழந்தையை மடியிலே வைத்துக் கொண்டு பட்டாபிஷேகம் பண்ணுவித்து துரைகுழந்தையானதால் தாயே ராஜ்பபரிபாலனம் செய்தார்கள். தளவாய் நரசப்பையனவர்கள் நாளையில் ராஜகாமுத்திரை கேசவதீக்ஷித அய்யன் குமாரன் சிவன்தீட்சிதரவர்களுக்குக் குமாரரில்லாத படியினாலே கட்டியம் பெத்தவய்யர் வழியில் வந்த சுந்தரேசுவரையனுக்குத் தம்முடைய காணியாட்சியை, சகாப்தம் ௲௬௱௨௫-க்கு மேற் செல்லாநின்ற பிரமாதி௵ தை௴ முதல் தேதி சுத்த தானசாஸனப்பட்டயம் எழுதிக்கொடுத்துத் தானஞ்செய்து தங்கள் பெரியவர்களுக்குக் கர்த்தாக்கள் முத்துவீரப்பநாயக்கரய்யனவர்கள் பண்ணுவித்துக் கொடுத்த முதல்தாம்பிரசாஸனப் பட்டயத்தையும் கொடுத்து, ஸ்தானீகர்களனைவருக்கும் சொல்லி கர்த்தாக்கள் மங்கம்மனவர்கள் ஸம்ஸ்தானத்திலும் அறியப்பண்ணுவித்துத் திட்டஞ் செய்வித்து மனவெறுப்பினாலே வடக்கே காசிக்குப்போய்விட்டார்."

(இன்னும் வரும்.)

---

THE REGISTRAR OF ... 25 MAY 1907 ... MADRAS.



கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௫] பிலவங்க௵ சித்திரை௴ [பகுதி-௯

## அந்தாதிகள்.

அந்தாதி என்பது இறுதிமுதலாகத் தொடுப்பதாகும். அஃதாவது, பலவடிகளால் ஆயதோர் செய்யுளாயின், முன்னடியின் ஈற்றிலுள்ள எழுத்து, அசை, சீர் இவற்றிலொன்று வருமடியின் முதற்கண் வருதலும், முன்னடியேனும் முன்னடியிற்பெரும்பான்மையேனும் வருமடிமுதற்கண் வருதலும்; பலசெய்யுளான் ஆயதோர் நூலாயின், முற்செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்து, அசை, சீர், அடி இவற்றிலொன்று வருஞ்செய்யுளின் முதற்கண் வருதலுமாம். ஒரு செய்யுளகத்து அடிகள் இவ்வந்தாதியாற் றொடுக்கப்படின், அஃது அந்தாதித்தொடையெனப்படும். ஒருநூலகத்துச் செய்யுட்கள் இவ்வந்தாதியாற் றொடர்ந்துவரப்பெறின், அஃது அந்தாதித்தொடர்நிலையெனப்படும். இதனை அந்தாதித்தொகை என்றலும் உண்டு. இவ்வந்தாதிநூலெல்லாம் முற்செய்யுளினிறுதியும் வருஞ்செய்யுளின் முதலும் ஒன்றாய் வருதலேயன்றிப், பெரும்பாலும் நூலிறுதிச்செய்யுளினிறுதியும் நான்முதற்செய்யுளின் முதலும் ஒன்றாகியும்வரும். அந்தாதித்தொடைச் செய்யுளும் அடிகளின் ஈறும் முதலும் ஒன்றாய் வருதலேயன்றிச் சிறுபான்மை அச்செய்யுளின் ஈறும் முதலும் ஒன்றாகியும் வரும். திருநூற்றந்தாதி முதலியன நூறுசெய்யுளும் அந்தாதியாகத் தொடர்ந்துவந்தமையேயன்றி, இறுதிச்செய்யுளின் இறுதியும் முதற்செய்யுளின் முதலும் முறையே 'பூக்கொண்டதே' 'பூகொண்டு' என ஒன்றாய் வந்ததனையும் நோக்கிக்கொள்க.

உலகுடன் விளக்கு மொளிகிள ரவிர்மதி
மதிநல னழிக்கும் வளங்கெழு முக்குடை

முக்குடை நீழற் பொற்புடை யாசன
மாசனத் திருந்த திருந்தொளி யறிவனை
யறிவுசே ருள்ளமொ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்தர தென்ப
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை யுலகே"

இவ்வந்தாதித் தொடைச்செய்யுளிற் பலவடிகளும் ஈறும் முதலும் ஒன்றாய் வந்தனவேயன்றிச் செய்யுளின் ஈறும் முதலும் ஒன்றாய் வந்ததனையும் நோக்கிக்கொள்க. இவ்வந்தாதி, எழுத்து அசை சீர் அடி இவைபற்றி ஈறுமுதலாத் தொடுக்கப்பட்டவாறே, எழுத்தந்தாதி, அசையந்தாதி, சீரந்தாதி, அடியந்தாதி என நான்காக வகுக்கப்படும். "உலகுடன் விளக்கும்" என்னும் ஆசிரியத்துள் எழுத்தந்தாதி, அசையந்தாதி, சீரந்தாதி மூன்றும் வந்தன காண்க.

"ஆதியங் கடவுளை யருமறை பயந்தனை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கினை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கிய
சேதியஞ் செல்வநின் றிருவடி பரவுதும்"

இதன்கண் அடியந்தாதி வந்தது. இவ்வாறே அந்தாதி நூலுள்ளும் எழுத்தசை சீரடிகள் அந்தாதியாகவருதல் ஆங்காங்குக் கண்டுகொள்க. திருவாய்மொழியில் "கண்ணன் கண்ணல்ல தில்லையோர் கண்ணே" என்னுஞ் செய்யுளீற்றடிப்பின் "ஏபாவம்பரமே யேழுலகும்" என வேறுசெய்யுண் முதலடிவந்தது எழுத்தந்தாதியாம். "தலையில் வணங்கவு மாங்கொலோ தையலார் முன்பே" என்பதன்பின் 'பேய்முலை யுண்டு சகடம்பாய்ந்து மருதிடை' என வந்ததும் அது. அசையுஞ்சீரும் அந்தாதியாக வருவனவே, அந்நூலுள்ளும் பிற நூலுள்ளும் மிகப்பலவாம். பதிற்றுப்பத்து நான்காம்பத்தின்கணுள்ள ச, ரு, சு, ஆம் பாட்டுக்கள் அடியந்தாதியாற் றொடர்ந்து வந்தன.

இனி ஒரு செய்யுட்கண் இறுதியடியினிறுதியும் முதலடியின் முதலும் ஒன்றாய் வருவனவற்றை மண்டலவந்தாதியென்றும் அவ்வாறு வாராதவற்றைச் செந்நடையந்தாதியென்றும், பலவிரவி வருவனவற்றை மயக்கந்தாதியென்றும், எழுத்தசைசீர்களால் இடையிட்டு வருவனவற்றை இடையிட்டந்தாதி யென்றும், எழுத்தசை சீர்



களால் இடையிட்ட அடியந்தாதியை இடையிட்டடியந்தாதி யென்றுங்கூறி, அவை மண்டலவெழுத்தந்தாதி, செந்நடையெழுத்தந்தாதி, மண்டலவசையந்தாதி, செந்நடையசையந்தாதி, மண்டலச்சீரந்தாதி, செந்நடைச்சீரந்தாதி, மண்டலவடியந்தாதி, செந்நடையடியந்தாதி, மண்டலமயக்கந்தாதி, செந்நடைமயக்கந்தாதி, மண்டலவிடையிட்டந்தாதி, செந்நடையிடையிட்டந்தாதி என விரிப்பாருமுளர். இவையன்றி மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடையந்தாதிகளும் கூறுவர். இவ்வந்தாதித்தொடை விகற்பமும் இவற்றிற்குதாரணமும் பிறவும் "ஈறு முதலாத் தொடுப்பதந் தாதியென், றோதினர் மாதோ வுணர்ந்திசி னோரே" என்னும் யாப்பருங்கலச் சூத்திரத்துக் கூறிய விருத்தியுரையுட் கண்டுகொள்க.

மேலெடுத்தோதியவாறன்றி, இறுதிநின்ற சொற்பொருளுணர்க்கத்தால் ஆகுபெயரால் அந்தாதியாக வருதலும் உண்டு. இதனை மாறனலங்கார வுரைகாரர் "இறுதிநின்ற சொற்பொருளுணர்க்கத் தான் ஆகுபெயராற் சொற்றொடர் வருவனவுமுள. அதற்குச் செய்யுள்,

"பரிவதி லீசனைப் பாடி
விரிவது மேவ லுறுவீர்
பிரிவகை யின்றிநன் னீர்தூஉய்ப்
புரிவது வும்புகை பூவே"

"மதுமார் தண்ணந் துழாயான்
முதுவே தமுத லவனுக்
கெதுவே தென்பணி யென்னா
ததுவே யாட்செயு மீடே."

இவை முதற்பத்தின் ஆறாந்திருவாய்மொழியின் முதற் பாட்டும் இரண்டாம் பாட்டும். இவற்றுட் பூ என்ற சொல்லின் பொருளுணர்க்கத்தாற் சினையைக்கூற முதலையறிவிக்கும் ஆகுபெயரால் அந்தாதித்தவாறு காண்க" எனக் கூறியவாற்றான் அறிந்துகொள்க. அந்தாதியை இயலிசையந்தாதி யெனவும், பொருளிசை யந்தாதி யெனவும் இரண்டாகப் பகுத்து, இத்திருவாய் மொழிகளைப் பொருளிசை யந்தாதி எனப்பணிப்பர் திருவாய்மொழியீட்டினரும்பத வுரையாளர்.

இவ்வாறு வரும் அந்தாதி விகற்பமெல்லாம் தொல்காப்பியனார் கூறிய இயைபு (செய்-உசக) என்பதன் வகையாய் அடங்கும். ஆன்

டுப் பேராசிரியர் "பொருட்டொடராகவும், சொற்றொடராகவுஞ்செய்வது இயைபு எனப்படும்" எனவும், 'சொற்றொடர் என்பது அந்தாதி எனப்படுவது' எனவும் கூறியவாற்றான் உணர்ந்துகொள்க. இக்கருத்தானே மாறனலங்காரமுடையாரும்,

சொல்லாற் பொருளாற் றொடருந் தொடர்நிலை
யெல்லா மவற்று ளெழுத்தசைசீர்—மல்கு
மடிசொற் றொடர்நிலை யந்த முதலாப்
படிவைத் தனர்முன் பகுத்து. (பொதுவியல். ௬)

என்பதனால் அந்தாதியினைச் சொற்றொடர்நிலையென்று கூறினர். இங்ஙனம் அந்தாதியாக ஒரு செய்யுட் பலவடிகளையும் ஒரு நூலுட் பலசெய்யுட்களையும் தொடுப்பது தமிழிற் றொன்று தொட்டேயுள்ள பெருவழக்கமாம். இதனை யாப்பருங்கலவிருத்திகாரர் (௫௯) 'பன்மணிமாலையும், மும்மணிக்கோவையும், உதயண குமாரன் கதையும் தேசிகமாலையும் முதலாகவுடைய செய்யுட்களுள் அந்தாதிவந்தவாறு காண்க" எனவும், (௫௯)"இறுதியெழுத்துஞ்சொல்லும் இடையிட்டுத் தொடுத்த செய்யுளந்தாதி விகற்பம், உதயணன்கதையும் கலியாணகதையும் பன்மணிமாலையும் மும்மணிகோவையும் என்னுமிவற்றுட் கண்டு கொள்க" எனவும் கூறியதனானும், பேராசிரியர் "விருந்தேதானும், புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" என்னுஞ் செய்யுளியற் சூத்திரவுரையில் "புதுவது கிளந்த யாப்பின் மேற்றென்றது தன்னையெனின், புதிதாகத் தாம்வேண்டியவாற்றாற் பலசெய்யுளுந் தொடர்ந்துவரச்செய்வது; அது முத்தொள்ளாயிரமும் பொய்கையார் முதலாயினார் செய்த அந்தாதிச் செய்யுளும் எனவுணர்க" எனவுரைத்ததனானும், பதிற்றுப்பத்தின்கட் காப்பியாற்றுக்காப்பியனார் பாடிய நான்காம்பத்து அந்தாதியாகத் தொடர்ந்து வந்ததனானும் அறிந்துகொள்க. பாட்டியலுடையார் கலம்பகம் பல்சந்தமாலை இணைமணிமாலை இரட்டைமணிமாலை மும்மணிமாலை நான்மணிமாலை மும்மணிக்கோவை வசந்தமாலை நவமணிமாலை கலியந்தாதி ஒலியந்தாதி பதிற்றந்தாதி நூற்றந்தாதிமுதலிய பல பிரபந்தங்களிற்செய்யுட்கள் அந்தாதியாகத் தொடர்ந்து வரப்பெறுமென்ப



இவ்வந்தாதிச்செய்யுட்கள் எழுமுதல் ஆயிரம் இறுதியாகத்தொடர்ந்து வருவன எனவுணர்க. சடகோபர் திருவாசிரியம் எழுபாட்டு அந்தாதியாகவந்தது; திருவாசகத்துக் கோயிற்றிருப்பதிகம் கோயின்மூத்ததிருப்பதிகம் முதலாயின பத்துப் பத்துச்செய்யுட்கள் அந்தாதியாகத்தொடர்ந்தன. நீத்தல்விண்ணப்பம் ஐம்பது செய்யுட்களும் திருச்சதகம் நூறுசெய்யுட்களும் அந்தாதியாகத் தொடர்ந்தன. திருவாய்மொழி ஆயிரஞ்செய்யுள் அந்தாதியாக வந்தது. எல்லாப் பாக்களும் பாவினங்களும் இவ்வாறந்தாதியாற் றொடர்ந்து வரவும் பெறும். பாவும் பாவினமுங் கலந்து அந்தாதியாகத் தொடர்ந்தது கலம்பகத்துட்காண்க: பாக்களுள் வெண்பாவும் பாவினங்களுட்கலித்துறையும் அந்தாதியாற்றொடர்ந்து வந்தனவே மிகப்பலவாம்.

"வெண்பாக் கலித்துறை வேண்டிய பொருளிற்
பண்பா யுரைப்பதந் தாதித் தொகையே"

என்று பன்னிருபாட்டியலாருங்கூறுதல் காண்க. இதனைக் கபிலதேவர் பரணதேவர் நக்கீரதேவர் காரைக்காலம்மையார் பொய்கையார் பூதத்தார் பேயார் திருமழிசைப்பிரானார் சடகோபர் வெண்பாவந்தாதிகளானும்; திருவாதவூரர்நீத்தல்விண்ணப்பம், சடகோபர்திருவிருத்தம், சேரமான் பெருமாணயனார்பொன்வண்ணத்தந்தாதி, நம்பியாண்டார்நம்பி திருத்தொண்டர்திருவந்தாதி, திருவரங்கத்தமுதனார் இராமாநுசநூற்றந்தாதி, கம்பர் சடகோபரந்தாதிமுதலியகலித்துறையந்தாதிகளானும் உணர்ந்து கொள்க.

இங்ஙனம்,

ரா. இராகவையங்கார்,

ஸேதுஸம்ஸ்தான வித்வான்.

உ

# முத்துக்குமார கவிராசர்

# முத்தகத்திரயம்.

---

(முற்றொடர்.)

### கட்டளைக்கலிப்பா.

முடிவி லாதுறை சுன்னகத் தான்வழி
    முந்தித் தாவடிக் கொக்குவின் மீதுவந்
தடைய வோர்பெண் கொடிகாமத் தாளசைத்
    தானைக் கோட்டை வெளிகட் டுடைவிட்டாள்
உடுவி லான்வரப் பன்னாலை யான்மிக
    . உருத்த னன்கடம் புற்றமல் லாகத்துத்
தடையி லாதணை யென்று பலாலிகண்
    சார வந்தன ளோரிள வாலையே.

இது யாழ்ப்பாணத்திலே பிரசித்திபெற்ற மாவிட்டபுரக் கந்தசுவாமிகோவிலிலே ஒரு திருவிழாவிற் சென்று நின்றபோது முருகக்கடவுள் குதிரைவாகனத்திற் பவனிவருதலைக் கண்ட மாதுடப்பெண்டிர் நயந்த பக்கமாகக் கூறிய கட்டளைக்கலிப்பா என்பர்.

இக்கட்டளைக்கலிப்பாவிலே வரும் பிரகேளிகையும் நாமாந்தரிதை என்னும் பிரகேளிகையாம். பிரகேளிகை என்பதும் நாமாந்தரிதை என்பதும் முன் விளக்கப்பட்டன. இங்கே குறித்த பொருளை மறைத்து நின்று வெளிப்படையிலே வேறொருவகையாகப் புலப்படும் நாமங்களை முன்னர்க் கூறுதும்.

யாழ்ப்பாணத்திலுள்ள பிரசித்திபெற்ற ஊர்களின் நாமங்களுள்ளே பதினொரு நாமங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன; அவைகள் யாவையெனின்; சுன்னாகம், தாவடி, கொக்குவில், கொடிகாமம், ஆனைக்கோட்டை, கட்டுடை, உடுவில், பன்னாலை, மல்லாகம், பலாலி, இளவாலை என்பன.

இவற்றுள்ளே சுன்னாகம், தாவடி, கொக்குவில், உடுவில், மல்லாகம் என்னும் ஐந்தும் யாழ்ப்பாணநகரி லிருந்து வடபாகத்திலுள்ள காங்கேசன்துறைக் கடற்கரைக்குச் செல்லும் நெடுந்தெருவின்



பக்கங்களில் இருக்கும் ஊர்கள். கொடிகாமம் என்பது யாழ்ப்பாணநகரியிலிருந்து கிழக்கே கரு-மைல் தூரத்திற்கு அப்பாலிருக்கும் ஓரூர். இப்போது இவ்விடம் புகைவண்டி தங்கிச்செல்லும் இடங்களுள் ஒன்றாகியும் விளங்குகின்றது. ஆனைக்கோட்டை, கட்டுடை என்னும் இரண்டும் யாழ்ப்பாணநகரிக்கு வடமேற்கே சமீபத்திலிருக்கும் ஊர்கள். பன்னாலை, இளவாலை என்னும் இரண்டும் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றினாலும் சிறந்து விளங்கும் கீரிமலைக்குப் பக்கமாயிருக்கும் ஊர்கள். பலாலி என்பது யாழ்ப்பாணநகரியிலிருந்து புன்னைநகர்க்கூடாகச் செல்லும் நெடுந்தெருவின் முடிவிலே வடகடற்கரையிலே இருக்கும் ஓரூர்.

இங்கே மறைத்துவைக்கப்பட்டபொருளையும் கூறுதும். முடிவிலாதுறை சுன்னகத்தான் வழி-ஒருகாலும் அழிவின்றி நிலைபெற்றிருக்கின்ற திருக்கைலாசபதியுடைய குமாரராகிய முருகக்கடவுள்—முந்தித் தாவு அடி கொக்குவின்மீது வந்தடைய-முந்தித் தாவுகின்ற அடிகளையுடைய குதிரைவாகனத்தின் மீதிவர்ந்து பவனிவந்து சமீபிக்க—ஓர் பெண் கொடி காமத்தாள் ஆனைக்கோட்டை அசைத்து வெளிகட்டு உடைவிட்டாள்-ஒரு பெண்ணானவள் தாங்குதற்கரிய கொடுங்காமமுடையவளாய் ஸ்தனங்களை அசைத்து மருங்குற் பிரதேசத்திற்கட்டும் வஸ்திரக்கச்சினை நெகிழவிட்டாள். ஓர் இளவாலையே-வேறோர் இளம்பெண்ணானவள்—உடுவிலான் வர பன்னாலையான் மிக உருத்தனன்-சந்திரன் உதயஞ் செய்துவர மன்மதனும் மிகக் கோபித்தனன்—கடம்புற்ற மல்லாகத்து தடையிலாது அணை என்று-கடப்பமாலை அணியப்பட்டிருக்கும் வலிமையாகிய மார்பிலே தடையின்றி அணைத்தருள்க என்று சொல்லி—பல் ஆலி கண்சார வந்தனள் - பலதுளிகள் கண்களினின்றும் சாரும்படி வந்தாள் என்க.

சுன்னாகம்—வெள்ளிமலை. சுல்—நாகம் + சுன்னாகம் எனச்சந்தியாயிற்று. சுல்—வெள்ளி. நாகம்—மலை. ஒருகாலுமழிவின்றி நிலைபெறல்பற்றி முடிவிலாதுறை என விசேடிக்கப்பட்டது. சுன்னாகத்தான் - திருக்கைலாசபதி. வழி—மகன்; வமிசத்திற்கு வழி போன்று நிற்பவன். தாவடி என ஒரு சொல்லாகக்கொண்டு யுத்தம்

எனப் பொருள்கூறலு மொன்று. கொக்கு என்பது முற்றுகரவீறா ய் நின்ற ஒரு தேசிகச்சொல். கொடிய காமம் என்புழி யகரம் தொகுத்தல். கொடி என்பதனைக் காமத்திற்கு விசேடணமாக்காது பெண் என்பதனோடு சேர்த்துப் பெண்கொடி எனக்கொள்ளலும் அமையும். ஆனைக்கோடு, வெளி என்னும் இரண்டும் உவமாகுபெயர்கள்.

உடுவிலான் = நட்சத்திரத்தை மனைவியாகவுடையவனாகிய சந்திரன். உடு = நட்சத்திரம். இல் = மனைவி. பன்னுலையான் = சொல்லப்படுகின்ற கரும்பாகிய விற்படையையுடைய மன்மதன். ஆலை = கரும்பு. மல் = வலி. ஆகம் = மார்பு. பல் ஆலி = பலவாகிய துளி. இளவாலை = கட்டிளமை யுடையவள்.

முருகக்கடவுள் குதிரையிற் பவனி வருதலைக்கண்ட பெண்களுள்ளே ஒருத்தி உத்தரீயம் சோரப்பெற்றாள் எனவும் மற்றொருத்தி கண்ணீர் சோரப்பெற்றாள் எனவும் கடவுண்மயக்கம் விரும்பிய மானுடப்பெண்டிரிருவர் கொண்ட மலிவு கூறிய பாடாண்டிணை.

ஒருகாலுமழிவின்றி நிலைபெறுதல்பற்றித் திருக்கைலாசமலையை "முடிவிலாதுறை" என்று விசேடித்துக் கூறியதற்குப் பிரமாணமாகக் கந்தபுராணத்திலிருந்து ஒரு செய்யுளும் காட்டுதும்.

மாடு சூழ்தரு மேருவே யாதியாம் வரைகள்
பாடு சேரினு முலகெலா மழியினும் பரந்து
கூடு மண்டங்கள் குலையினுங் கொன்றைவே ணியன்போற்
கேடி லாமலே யமர்வது கயிலையங் கிரியே.

இவ்விசேடணத்தைச் சிறீகண்ட பரமேசுர மூர்த்தி மேலேற்றியுரைப்பினுமமையும். கட்டுடை விடுதலும், பலாலி கண்சார்தலும் மயக்கநோயைப் புலப்படுத்தும் இலாஞ்சனைகள். சந்திரனும், மன்மதனும் அந்நோய் மீதூரற்குக் காரணர்.

இதனைப் பிரகேளிகை வகையுள் ஒன்றாக அமையாது பொருளணிகளுள் ஒன்றாகவைத்துச் சமாசோக்தி என்னும் அலங்காரம் என்பாருமுளர். வேறு கூறும் ஆலங்காரிகருமுளர்.



இக்கட்டளைக்கலிப்பாவிலும் கூவிளம்வரற்பாலன இடங்களிலே தேமாங்காய் முதலிய வாய்ப்பாட்டுச் சீர்கள் தொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றால் இழுக்கடையாமை முன்னையகட்டளைக் கலிப்பாவினுரைக்கண் பிரமாணசகிதமாகக் கூறப்பட்டது. ஆங்குக் காண்க. முத்தகத்திரயத்துள்ளே இனிக்கூறற்பாலது ஒன்றேயாம். அதுவும் விரைவிற் கூறப்படும்.

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம்
பிலவங்கஞு சித்திரைமீ

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

---

# இராமாவதாரச் செய்யுட் பாடாந்தரம்.

## நட்புக்கோட்படலம்.

எனவினைந் தினைய வெண்ணி யிவர்கின்ற காத லோதக்
கனைகடற் கரைநின் றேறக் கண்ணிணை களிப்ப நோக்கி
யனகனைக் குறுகி னனவ் வண்ணலு மருத்தி கூரப்
புனைமலர்த் தடக்கை நீட்டிப் போந்தினி திருத்தி யென்றான்.

என்னும் உ௰-ம் செய்யுளில், 'கனைகடற் கரைநின்றேற' என்பது 'கனைகடற்றிரையு ளாழ்ந்து' எனக் காணப்படுகின்றது. காதலாகிய கடலுளாழ்ந்து எனப் பொருள்கொள்ளுமிடத்துப் பின்னையதே பொருத்தமுடைத்து. 'ஏறு' என்னும்பாடமும் இத்துணைச் சிறப்பின்மைகாண்க. திரையையுடைய கடலுள் என மாற்றிப் பொருள்கொள்க.

ஷ

நாலு வேதமா நவையி லார்கலி
வேலி யன்னதோர் மலையின் மேலுளான்
சூலி தன்னருட் டுறையின் முற்றினான்
வாலி யென்றுளான் வரம்பி லாற்றலான்.

என்னும் ௩௭-ம் செய்யுளில், 'நாலு வேதமா நவையி லார்கலி - வேலி யன்னதோர் மலையின் மேலுளான்' என்பது "நாலு வேதமா நவையில் சாலியின், வேலி யன்னவன் வெள்ளி வெண்கிரி' எனக்காணப்படுகின்றது. வேதமாகிய சாலிக்கு வேலியை யொத்தவன் எனப் பொருள்கொள்ளுமிடத்துப் பின்னையதே பொருத்தமுடைத்து. எனவே வேதவொழுக்கங்களையெல்லாம் பாதுகாப்பவன் என்றபடி. வேலி என்பதற்கியையச் சாலி எனவருதல் சிறப்புடைத்தாதல் காண்க. இதனைச் சிவனுக் கேற்றினு மமையும். சூலி—சிவன்.

ஷை

நிலனு நீருமா நெருப்புங் காற்றுமென்
றுலைவில் பூதநான் குடைய வாற்றலா
னலையின் வேலைசூழ் கிடந்த வாழிமா
மலையி னின்றுமிம் மலையின் வாவுவான்.

என்னும் ௩௯-ம் செய்யுளில், "நிலனு நீருமா நெருப்புங் காற்றுமென் றுலைவில் பூதநான் குடைய வாற்றலான்" என்பது "நிலனு நீரொடு நெருப்புங் கால்வெளி - யுலைவில் பூதமைந் துடைய வாற்றலான்' எனக்காணப்படுகின்றது. பூதமைந்தாகலின் ஐந்தையுங் கூறலே சிறப்புடைத்தென்க.

ஷை

கிட்டி னார்பொரக் கிடைக்கி னன்னவர்
பட்ட நல்வரம் பாக மெய்துவா
னெட்டு மாதிரத் திறுதி நாளுமூற்
றட்ட மூர்த்திதாள் பணியு மாற்றலான்.

என்னு... ம் ௪௦-ம் செய்யுளில், 'பட்டநல்வரம் பாகமெய்துவான்' என்பது 'பட... டமாபலம் பாதியெய்துவான்' எனக் காணப்படுகின்றது. பாதியெய்... துவது வலிமையிலேயேயாதலின் பின்னையதே பொருத்தமுடைத்து.

ஷை

படர்ந்த நீணெடுந் தலைபரப்பிமீ
தடர்ந்து பாரம்வந் துறவனந்தனுங்
கிடந்து தாங்குமிக் கிரியை யேவினு
னடந்து தாங்குமிப் புவன நானெலாம்.



என்னும் ௪௪-ம் செய்யுளில், 'அடர்ந்து பாரம்வந் துறவனந்தனுங்- கிடந்து தாங்குமிக் கிரியை யேவினால்' என்பது 'அடர்ந்து பாரிடந் தனை யனந்தனுங் - கிடந்து தாங்குமிக்கிரியின் மேவினான்' எனக் காணப்படுகின்றது. அனந்தன் பாரிடந்தனைக் கிடந்து தாங்கும்; இவன் இப்பூமியை நடந்து தாங்கும் எனப் பொருள்கொள்ளுமிடத்துப் பின்னையதே சிறப்புடைத்து. 'பாரம் வந்துற' என்பது வாளா கூற்றாய்ச் சிறப்பின்றி நிற்றல் காண்க.

ஷை

மெய்க்கொள் வாலினான் மிடலி ராவணன்
தொக்க தோளிறத் தொடர்ப்ப டுத்தநாள்
புக்கி லாதவும் பொழிய ரத்தநீ
ருக்கி லாதவு முலகம் யாவதே.

என்னும் ௪௮-ம் செய்யுளில், 'புக்கிலாதவும் பொழியரத்தநீ-ருக்கிலாதவு முலகம் யாவதே' என்பது 'புக்குலாயவெம் பொறியரத்தநீ- ருக்கி லாததெவ் வுலக மூழியாய்' எனக்காணப்படுகின்றது. முன்னையது பொருட்பொருத்த மின்றாதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து. உலாய-பரந்த. புக்கு உக்கிலாதது எவ்வுலகம் எனக் கூட்டுக.

ஷை

ஏகி வாலியு மிருது வேழொடேழ்
வேக வெம்பிலந் தடவி வெம்மையான்
மோக வென்றிமேன் முயல்பின் வைகிடச்
சோக மெய்தினன் றுணைது ளங்கினான்.

என்னும் ௫௩-ம் செய்யுளில், 'மோக வென்றிமேன் முயல்பின் வைகிட' என்பது 'மோகமோடமர் முயல்பின் வைகிட' எனக்காணப்படுகின்றது. ஆசையோடு போர்முயற்சியிலிருக்க எனப் பொருள்கொள்ளுமிடத்துப் பின்னையதே பொருத்தமுடைத்து. முயற்சி என்னும் சொல்லுக்கு 'வென்றி' என்பது இயைபின்மைகாண்க.

ஷை

என்று தானுமவ் வழியி ரும்பிலஞ்
சென்று முன்னவற் றேடி வேனவற்
கொன்று ளான்றனைக் கொல்லொ ணாதெனிற்
பொன்று வேனெனப் புகுதன் மேயினான்.

என்னும் ௫௫-ம் செய்யுளில், 'கொல்லொணுதெனில்' என்பது 'கொல்வனன்றெனில்' எனக்காணப்படுகின்றது. கொல்வன்: அது கூடாதாயிற் பொன்றுவேன் என்னும் பொருளே சிறந்து காட்டுதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து.

௫௪

தடுத்து வல்லவா தணிவு செய்துநோ
யெடுத்த வேலையோ ரிரையவி ஞலியைத்
தடுத்த காவலு மரிக ளானையாற்
கொடுத்த துண்டிவன் கொண்ட னன்கொலாம்.

என்னும் ௫௪-ம் செய்யுளில், 'எடுத்தவேலையோ ரிரையவி ஞலியைத்து' என்பது 'எடுத்திவன்றனக் கிறைமையோடிசைந்து' எனக்காணப்படுகின்றது. முன்னையது பொருட் சிறப்பின்மையிற் பின்னையதே சிறப்புடைத்து. இறைமையோடு இசைந்து அடுத்த காவல்—தலைமையோடு பொருந்திய அரசு: அஃதாவது முதலரசு என்றபடி.

௬௦

வால்வி சைத்துவான் வளிநி மிர்ந்தெனக்
கால்வி சைத்தவன் கடிது தைத்தலும்
நீனி றத்துவிண் ணெடுமு கட்டவும்
வேலை புக்கவும் பெரிய வெற்பெலாம்.

என்னும் ௬0-ம் செய்யுளில் 'வான்வளி நிமிர்ந்தென' என்பது 'பாவழிதிறந்திட' எனக்காணப்படுகின்றது. வழிதிறந்திடவே உதைத்ததாதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து.

இங்ஙனம்,
சி. கணேசையர்,
புன்னாலைக்கட்டுவன்,
யாழ்ப்பாணம்.

---

# பத்திராசிரியர் இலக்ஷணம்.

கல்வியறிவில் வல்லவராயும், தேசாசாரங்களையும் சமயாசாரங்களையும் நன்றாக விசாரித்தறிந்தவராயும், பிறருக்குவரும் ஆக்கக்கேடுகளைத் தம்முடைய ஆக்கக்கேடுகளா யெண்ணுகின்றவராயும், பரோபகாரம், சத்தியம், நடுவுநிலைமை, திடசித்தமுதலிய நற்குணங்களையுடையவராயும் இருப்பவரே பத்திராசிரியராதற்குத் தக்கவர். (பத்திரிகையாவது தேசாசாரங்களையும், சமயாசாரங்களையும், தேசவர்த்தமானங்களையும் யாவர்க்கும் புலப்பட அறிவிக்குங் கருவியாயுள்ளது.) பத்திராசிரியர் அரசருக்குங் குடிகளுக்கும் நடுவாகநின்று அரசநீதிகளைக் குடிகளுக்கும் குடிகளொழுக்கவரலாறுகளை அரசருக்கும் பட்சபாதமின்றியெடுத்துச் சொல்லல்வேண்டும். புலவர்களுக்குள் அல்லது சமயத்தார்க்குள் விவாதஞ்சம்பவிக்குங்கால், பத்திராசிரியர் ஒருபாற்கோடாமல் நின்று, அவர்வழக்கை நன்றாகவிசாரித்து, தக்கமுடிவுரையை யெடுத்து அவர்கள் கலகம் ஒழியும் வண்ணம் சொல்லவேண்டும். சாதியாருள்ளும் சமயத்தாருள்ளும் இராசாதிகாரிகளுள்ளும் அக்கிரமங்கள் தலைப்படுங்காலத்து, பத்திராசிரியர் அவ்வக்கிரமங்களை அஞ்சாமல் எடுத்து வெளியிட்டு அவர்கள் சற்புத்தியடைதற்குரிய நீதிவாக்கியங்களை நன்றாகப்பேசல்வேண்டும். தூஷணம் நிறைந்த கடிதங்களையும் குதர்க்கம் பொதிந்த கடிதங்களையும் பத்திரிகையில் பிரசரித்தல் பத்திராசிரியர்க்குக் குணமன்று. உலகத்திலே கல்வியறிவில்லாதவர்கள் பலரும் அஃதுள்ளவர்கள் சிலருமாயிருத்தலால், பத்திராசிரியர் நல்லறிவைவளர்த்தற்குரிய சாதாரணமான உறுதிப்பொருள்களைக் கடினசந்தியின்றி இலகுவான வசனநடையிற் பெரும்பான்மையும் பத்திரிகையில் எழுதிவரல்வேண்டும். ஆயினும் கல்விகற்கும் மாணாக்கர்களுக்கும் கற்றுத்தெளிந்த முதியோருக்கும் உபயோகமாகத்தக்க நுண்மையான சாஸ்திரப்பொருள்களையும் பத்திராசிரியர் பத்திரிகையில் சிறுபான்மையாக எழுதிக்கொண்டு வருதல் வேண்டும் தேசங்கள்தோறுஞ் சம்பவிக்கும் நானாவித சம்பவங்களுள்ளே அதர்மங்களைக்கைவிடுதற்கும் தருமங்களைக்கைக் கொள்ளுதற்கும் ஏதுவாகும் நல்லறிவைத்தருதற்குரிய சம்பவங்களை மாத்திரம் பத்திராசிரியர் பத்திரிகையில் பிரசரித்தல்வேண்டும். சம

பவங்களைத் தீர்க்கவிசாரணை செய்யுமுன் பத்திரிகையிற் பிரசரித்தல் பத்திராசிரியர்க்கு இழுக்காகும். ஆச்சரியத்தைத்தரத்தக்க சமாசாரங்களும் பத்திராசிரியரால் பத்திரிகையிற் பிரசரிக்கத்தக்கனவேயாம். தீக்குணங்களும் தீச்செயல்களுமுடையவர்கள் தமக்கினியராயின் அதுபற்றி அவரை நற்குணநற்செய்கையுடையவரென்று பாராட்டிப் புகழ்தலும், நற்குண நற்செய்கைகளையுடையவர்கள் தமக்கினியரல்லராயின் அதுபற்றியவரைத் தீக்குணம் தீச்செயல் உடையவரென்று அபவாதங்கூறி நிந்தித்தலும் நன்மையை விருத்திசெய்தற்குரிய பத்திராசிரியர்க்குக் கடனாகாவாம். பத்திராசிரியரின் பார்வைக்கு வரும் புத்தகங்கள் பண்டையாசிரியர் கொள்கையுடன் முரணுமாயின் அவற்றையுள்ளபடியே எடுத்துக்காட்டி நடுவுநிலைமை கோணாது கண்டிக்கவேண்டும். அவ்வாறு கண்டியாதொழியின் அது தமிழ்ப்பாஷைக்கும் பத்திரிகைக்கும் இழுக்காகும். பண்டைநூலுரையாசிரியர் கொள்கையுடன் முரணிச்செய்யும் உரைகளைக் கண்டித்துப் பிறரொருவர் எழுதினால், அவற்றையஞ்சாது பகிரங்கஞ்செய்தல்வேண்டும். அவ்வுரைகாரர் தமக்கினியரென்ற வெண்ணங்கொண்டு சாட்டுப்போக்குச்சொல்லுதல் பத்திராசிரியர்க்கழகன்றாம். பத்திராசிரியர் அற்பவிஷயங்களையும், பரிகாசத்துக்குரிய விஷயங்களையும் பத்திரிகையில் வரைந்து நிரப்புவாராயின், அஃது அறிவாளரால் வெறுக்கப்பட்டுப் பத்திராசிரியரின் வெள்ளறிவைக்கண்டு நகைத்தற்கு மிடமாகும்.

உதாரணமாக, "திறஞ்சுருட்டு," "இன்னார்க்கும் இன்னார்க்கும் விவாகம் பேசிவைத்திருக்கிறார்கள்" முதலிய விஷயங்களும் பிறவுமாம். பத்திரிகைக்கு விஷயமெழுதவறியாதவர்கள் பத்திராசிரியரானால், ஐயையோ பாவம்! என்ன செய்வார்கள். தம் அறிவுகெட்டியவைகளைத்தானே யெழுதுவார்கள். இதனால் பத்திரிகைக்குரிய மரியாதை குறைவாகும் என்பதையுணர்வாராயின் இப்படிச்செய்வார்களா? இத்தீச்செயல்களைப் பத்திராசிரியர் மேற்கொள்ளின் அவமதிப்பையும் பழிபாவங்களையும் தப்பாமல் அடைவரென்பது சரதமேயாகும்.

காரை. கா. சிவசிதம்பர ஐயர்,
யாழ்ப்பாணம்.

# நல்லொழுக்கம்.

(உசுஎ-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

[ஸ்ரீ: இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

மற்றவர்களுடைய குணங்களை உண்மையாகவே புகழ்ந்துபேசுவதைப்பார்க்கிலும் அதிக இஷ்டர்களைச் சம்பாதிக்கத்தக்கது வேறு எந்தக்குணமுமின்று. அது—உதாரமான சுபாவத்தையும், மனோசுத்தத்தையும், சினேக சுபாவத்தையும், யோக்கியதையைச் சந்தோஷத்துடன் கிரகித்தலையும், காட்டுகின்றது. 'போஸ்வெல்' என்பவர் ஜான்ஸனைப்பற்றி உண்மையுடனும் பூஜ்யதையுடனும் சிலாகித்ததனால் தான் அவரால் நமக்கு ஓர் மிகவும் நேர்த்தியான ஜீவ்யசரிதம் கிடைத்தது. எண்ணிறந்த ஆட்சேபணைகளும் நிந்தனைகளும் செய்யப்பட்டிருந்தும், பூஜ்யராகிய ஜான்ஸன்விஷயத்தில் பற்றுதல் கொண்டு விசுவாசமாயிருப்பதற்கான சில சுயம்பான நற்குணங்கள் போஸ்வெல் இடம் இருந்திருக்கவேண்டுமென்று யோசிக்கத்தக்கதாகிறது. 'போஸ்வெல்' என்பவரை, யூகமாவது சந்தோஷிப்பிக்கும் குணமாவது அல்லது வாக்குவளமாவது இன்றி பலஹீனமும், வீண்பெருமையும், தாளாண்மையும், விநோதபிரியமும் அதிகப்பிரசங்கமும் உள்ளடம்பனும் வீணனுமென முற்றிலும் நிந்திக்கப்படத்தக்கவராக 'மக்காலே' என்பவர் சொல்லுகிறார். ஆனால் 'கார்லைல்' என்பவர் அந்த ஜீவசரித்திரக்காரருடைய குணங்களைச்சொல்வதில் மிகவும் நீதியுள்ளவரென்பதில் சந்தேகமில்லை. 'போஸ்வெல்' அனேக விஷயங்களிற் பயனின்மையும் மூடத்தனமும் உடையவராயிருந்தபோதிலும், யதார்த்தஞான விஷயத்திலும், மேலான குணவிஷயத்திலும் அன்பும் வியப்பும் நிறைந்தவராய் பாணுக்கருக்குரிய பழமையான உயர் உணர்ச்சியை யுடையவரென்று சொல்லுகிறார். அப்பேர்ப்பட்ட குணங்கள் இல்லையேல் ஜான்ஸனுடைய ஜீவ்ய சரித்திரமானது ஒருக்காலும் எழுதப்பட்டிராது என்பதைக் கார்லைல் என்பவர் வற்புறுத்துகிறார். போஸ்வெல் என்பவர், ஞானத்தை அறிவதற்கு மனசையும், கண்ணையும், அதை வெளியிடுவதற்கு வாக்கையும் உடையராயிருந்தமையாலும், அவருடைய, சடையற்ற

அந்தரங்க ஆராய்ச்சியாலும், கூர்மையான புத்தியாலும், எல்லாவற்றையும்விட அவருடைய அன்பாலும், குழந்தைபோலும் மனத்தூய்மையாலும் அவர் ஒரு நல்ல புஸ்தகத்தை எழுதினாரென்று அவர் கூறுகின்றனர்.

உதாரகுணமுள்ள மனசையுடைய அநேக இளைஞர்கள்-முக்கியமாய்ப் புஸ்தகப்படிப்பினராயிருப்பவர்களைத் தங்களுக்குப் பூஜ்யராக எடுத்துக் கொள்கின்றனர். இவ்வாறு, 'அல்லன் கன்னிங்காம்,' என்பவர் நித்ஸ்டேலில், ஓர் கம்மியனுக்குள் வேலை பழகும்போது ஸர் வால்டர் ஸ்காட் தெருவின் வழியே போகிறதைப் பார்ப்பதற்காக மட்டும் எடின்பர்க்கு வழிமுழுவதும் நடந்து போனார். அந்த வாலிபனுடைய சிரத்தையை நாம் தன்னறியாமல் புகழ்ந்து அந்தப் பிரயாணத்தைச் செய்கிறதற்கு அவனை ஏவிய நோக்கத்தை நாம் பூஜிக்கிறோம். 'ஸர்ஜோஷுவா ரைனால்ட்ஸ்' என்பவர் பத்து வயதுப் பையனாயிருக்கும்பொழுது 'போப், என்பவரைத் தொடுவதில் ஒரு வகையான புண்ணியமிருக்கிறது போல நினைத்து வரிசை வரிசையாய் நின்ற ஜனங்களின் ஊடே தன்கையை நீட்டினார் என்று சொல்லப்படுகிறது. அதற்கு வெகு நாளைக்குப் பிந்தி 'ஹேய்டன்' என்னும் சித்திரக்காரர் 'ரைனால்ட்ஸ்' உடைய சொந்த ஊருக்குப் போனபொழுது அவரைக் கண்டு தொடுவதில் பெருமை பாராட்டினர் 'ரோகெர்ஸ்' என்னும் கவிஞர் பாலபருவத்திலே டாக்டர் 'ஜான்ஸன்' ஐப் பார்க்கப் பேரவாக்கொண்டதைப்பற்றிச் சொல்வது வழக்கம். ஆனால் அவருடைய கையானது 'போல்ட்கோர்ட்'டிலுள்ள ஜான்ஸனுடைய வீட்டுக்கதவின் தட்டுகருவியில்வைக்கப்பட்டபொழுது அதைரியப்பட்டுத் திரும்பிவிட்டனர். அப்படியே, காலஞ்சென்ற 'ஐஸாக்டிஸ்ரெயிலி' என்பவர் இளமைப்பருவத்தில் அதே காரியத்திற்காக போல்ட்கோர்ட்டுக்குப் போயினர். கதவைத்தட்டும்படியான தைரியம் கொண்டபோதிலும் அந்தப்பெரிய அகராதி கிரந்தகர்த்தர் கொஞ்சநேரத்துக்கு முன்புதான், இறந்துபோய்விட்டனர் என்று அவருடைய வேலைக்காரரால் தெரிந்தபொழுது பீதியடைந்தனர்.

ஆனால் இறக்கமும் அற்பத்தனமுமுள்ள மனசை உடையவர் அந்தரங்கத்துடன் புகழமாட்டார். அவர்களுடைய சொந்தத்துர்ப்பாக்கியத்தால் பெரியமனிதர்களையும் பெரிய காரியங்களையும் அறிய



வாவது ஆகவே பூஜிதைசெய்யவாவது மாட்டார்கள். இழிவான சுபாவமுடையோர் அவமதிப்புடன் புகழ்கின்றனர். ஆண்தேரைக்கு உயர்ந்த அழகின் ஸ்வரூபமானது பெண்தேரையே. விதூஷகன் பெரியவிதூஷகனையே உயர்ந்த மனிதனாக மதிப்பான். அடிமை வியாபாரி ஓர் மனிதனை அவனுடைய தேகபலத்தைக்கொண்டுமதிக்கிறான் 'ஸர்காட்பிரே நெல்லர்' என்பவர் போப் என்பவர் முன்பில் ஓர் 'கினீயா' வியாபாரியிடம் உலகத்தில் இரண்டுமிகவும் பெரியமனிதரைத் தான் பார்த்ததாகச் சொன்னபோது அவன் சொன்னதாவது:—"நீங்கள் எவ்வளவு பெரிய மனிதர் என்பது எனக்குத்தெரியாது. உங்களுடைய தோற்றம் எனக்குப்பிடித்தமில்லை. உங்கள் இருவரையும் ஒன்றாகூட்டினதைப்பார்க்கிலும் மெத்த அதிகப்பருமனான மனிதனை எல்லா எலும்புகள் தசைகளுடனும் பத்துகினிக்கு (பவுனுக்கு) நான் அடிக்கடி கிரயத்திற்கு வாங்கியிருக்கிறேன்."

நம்முடைய மிகவும் நன்மையான இஷ்டர்களுடைய கஷ்டங்களில் நமக்கு முற்றிலும் இனிமையற்றதாயில்லாத சில உள்ளன என்று 'ரோச்பெளக்கால்ட்' என்பவர் தம்முடைய நீதிமொழிகளில் சொன்னபோதிலும் அற்பத்தன்மையும் முக்யமாய் இழிவுமான சுபாவம்தான், பிறர் நோக்கத்தைக்கெடுப்பதில் இன்பப்படுதலும் பிறருடைய ஜயத்திற்காக எரிச்சற்படுதலுமாக நிகழ்கின்றது. உதாரகுணத்திற்குப் பொருந்திய சித்தம் இல்லாவண்ணம் அமையப்பெற்று, தங்களுக்குத்தாங்களே நிர்ப்பாக்கியமுள்ளவரான புருஷர்கள் உளராகின்றனர். அவதூறு பேசுவோருடைய ஸ்தானத்திலுள்ளவர்தான் சகலமான ஜனங்களிலும் மிகவும் பொருத்தம் இல்லாத மனிதர். இப்பேர்ப்பட்டவர், நல்லகாரியத்தில் மற்றவர்கள் அடைந்த வெற்றியைக்கூடப் பெரும்பாலும் அவர்கள் தம் சொந்தத்திற்குச்செய்த குற்றமாக மதிக்கத்தொடங்குகின்றனர். மற்றவன், முக்கியமாய்த் தாங்கள்புரியும் வித்தை வேலை அல்லது உத்தியோகத்தைவஹிப்பானாயின், அவனுடைய கீர்த்தியைக்கேட்கச் சகிக்கமாட்டார்கள். அவர்கள் ஒருமனிதனுடைய குற்றங்களை மன்னிப்பாராயினும் தங்களைப்பார்க்கிலும் நன்றாய் ஒரு காரியத்தை அவன்செய்ததற்காக மன்னிக்கமாட்டார்கள். தாங்கள்தாமே தவ

றினவிடத்தும் அவர்கள் அவனை மிகவும் இரக்கமறத்தூஷிக்கின்றனர். வெறுக்கத்தக்க தூஷகன் தன் எதிரியைப்பற்றி நினைக்குமாறு:—

"கடவுள் அவனுக்கு அவ்விதமான புத்தியைக்கொடுத்தபொழுது அவனை வெறுப்பதற்கு எனக்குக்காரணமில்லையா." என்பது.

இழிவான மனோசுபாவமுடையவர்கள், முகத்தைச்சுழித்தல், அற்பக்குற்றங்களை எடுத்துக்கூறல், குற்றங்களைத் தேடிப்பிடித்தலாகிய தன்மையராய், மானஹீனமான காரியம் அல்லது துன்மார்க்கமான ஐயகாரியம்தவிர மற்ற ஒவ்வொன்றையும் நிந்திக்கத்தயாராய் இருக்கின்றனர். அப்பேர்ப்பட்டவர்களுக்கு மிகுந்தசாதனமானது நல்லொழுக்கமுள்ளவர்களிடத்தில் காணப்பட்ட குற்றங்களேயாம். புத்திசாலிகள் தப்பிதஞ்செய்யவில்லையானால் மூடர்களுக்கு வெகுகஷ்டமாய் இருக்குமென்று 'ஜார்ஜ்ஹெர்பர்ட்' என்பவர் சொல்லுகிறார். ஆயினும், புத்திசாலிகள் மூடர்களுடைய குற்றங்களைக்கண்டு அக்குற்றங்களினின்றும் நீங்கிக்கொள்வதால் அவர்களிடத்திலிருந்து ஒன்றைகற்றுக்கொண்டபோதிலும், புத்திசாலிகள் ஸ்தாபித்த நிதர்சனத்தினால் மூடர்கள் நயம்பெறுவது அரிது. பெரியோர்களுடைய ஒழுக்கத்திலாவது அல்லது அவர்கள் காலத்தின் நடப்பிலாவது உள்ள குற்றங்களை மாத்திரம்கண்டுபிடிப்பதற்கு ஜாக்கிரதைப்படுகிற குணமானது நிர்ப்பாக்கியமானதென்று ஒரு ஜெர்மன் கிரந்தகர்த்தர் சொல்லியிருக்கிறார். நாம் அவைகளைப்பற்றி போலிங்புரோக் என்பவருடைய சற்குணத்தினால் தீர்மானிப்போம். அவரிடம் 'மாரில்பரோ' என்பவருடைய ஒரு போலிக் குறையை ஞாபகப்படுத்தினபொழுது அவர்சொன்னதாவது:—"அவர் மிகவும் பெரிய மனுஷனாயிருந்ததனால் அவருடைய குறையை நான் மறந்துவிட்டேன்" என்பதாம்.

வசிக்கிற அல்லது இறந்த பெரியமனிதர்களைப் புகழ்தலானது ஏறக்குறைய அவர்களைப்போல் நடக்கவேணுமென்ற இச்சையை உண்டாக்குகிறது. இளையனாயிருக்கும்பொழுது 'தெமிஸ்டோகிள்ஸ்' என்பவருடைய மனசானது அவருடைய காலத்திலிருந்தவர்களுடைய அரியசெய்கையால் ஆசைகொளுத்தப்பட்டு தம்முடைய தேசத்திற்கு ஊழியஞ்செய்வதில் தம்மைப் பிரகாசிப்பிக்க விரும்பினார்.



'மாராத்தன்' இல் யுத்தமானதுநடந்தபொழுது அவருக்குத்துக்கமானது உண்டாயிற்று. அதின் காரணமானது அவருடைய இஷ்டர்களாற்கேட்கப்பட்டபொழுது 'மிலிட்டியேட்ஸ்' இன் கொள்ளைப்பொருள்கள் அவரைத்தூங்கவிடவில்லையென்று மறுமொழிகொடுத்தார். சில வருஷங்களுக்குப்பிந்தி எத்தேனியன் சேனைகளுக்கு அவர் தலைவனாகவந்து ஆர்டிமிஸ்ஷியம்' 'ஸலாமிஸ்'இன் யுத்தங்களில் 'செக்ஸீர்ஸ்' உடைய பாரசீகசப்பற்சேனையைத் தோற்கடித்ததால் அவருடைய தேசத்தார் அத்தேசமானது அவருடைய ஞானத்தினாலும் பலத்தாலும் ரட்சிக்கப்பட்டதென்று நன்றியறிவோடு ஒப்புக்கொண்டனர்.

துஸ்ஸிடைட்ஸ் என்பவர் பையனாகவிருக்கும்போது ஹெரோடோட்டஸ் என்பவர் அவர் செய்த சரித்திரகிரந்தத்தை வாசிக்கக்கேட்டவளவில் அவருக்குக்கண்ணீர் உண்டாயிற்று என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய மனதில் உண்டாகிய அழுத்தமானது அவருடைய யூகத்தின்போக்கைத் தீர்மானிக்கத்தக்கதாயிருந்தது. டிமாஸ்தெனஸ் என்பவர் காலிஸ்ட்ரேட்டஸ் என்பவரின் பிரசங்கவன்மையினால் ஒருகாலத்தில் ஆசைகொளுத்தப்பட்டுத் தானும்பிரசங்கவல்லவராகத் தக்க பேரவாவானது உண்டாயிற்று. ஆனால் டிமாஸ்தெனஸ் என்பவர் சரீர தூர்பலமும் மெலிவான குரலும் தெளிவில்லாத சப்தமும் சொற்பமூச்சடக்கமும் உள்ளவராயிருந்தார். இந்தக்குறைகளை ஜாக்கிரதையானபடிப்பினாலும், மாறக்கூடாதநீர்மானத்தாலுந்தான், ஜெயிக்கத்திராணியுள்ளவரானார். ஆனால் அவர் எவ்வளவு பழக்கஞ்செய்தும் ஒருக்காலும் விரைவில் பேசத்தகாதவராகவேயிருந்தார். அவருடைய பிரசங்கங்களில் முக்கியமாய் மிகவும் கீர்த்திபெற்றவைகள் ஜாக்கிரதையாய் உழைத்து உண்டாகிய அடையாளங்களைக்காட்டுகின்றன. அந்தப்பிரசங்கவல்லவருடைய வித்தையும் சுருசுருப்பும் ஏறக்குறைய ஒவ்வொருவாக்கியத்திலும் விளங்குகின்றன.

ஒழுக்கத்தைப்பார்த்து நடந்து, பெரியோர்களுடைய நடை, உடை, யூகங்களால் உருவாக்கிய ஒழுக்கமுடையோரது இதுபோன்ற திருஷ்டாந்தங்கள் சரித்திரங்கள் எங்கும் வியாபித்திருக்கக்கா

ணப்படுகின்றன. யுத்தவீரர்கள், ராஜதந்திரங்கள், பிரசங்கவல்லவர்கள், தேசாபிமானிகள், கவிஞர்கள், சிற்பர்கள், எல்லோரும் ஏறக்குறையத் தன்னறியாமலே தங்களுக்கு முன்னிருந்த அல்லது பார்வையில் நடந்து காட்டிய மற்றவர்களின், ஒழுக்கங்களாலும் செய்கைகளாலும் வளர்க்கப்பட்டிருக்கின்றனர்.

பெரியவர்கள் இராஜாக்களாலும், குரு சிரேஷ்டர்களாலும், சக்கரவர்த்திகளாலும், அபிமானிக்கப்பட்டனர். 'பிரான்ஸிஸ் டி பெடிஸிஸ்' என்பவர் 'மிச்செல் ஆங்கிளோ' விடம் தொப்பியை இறக்காமல் ஒருக்காலும் பேசினதேயில்லை. டசன்கணக்கான பிரதானிகள் நிற்கும்பொழுது மூன்றுவது 'ஜூலியஸ்' என்பவர், அவரைப் பக்கத்தில் உட்காரும்படி செய்தனர். ஐந்தாவது சார்லஸ், திட்டியன் என்பவருக்கு வழிவிலக்கினர். அந்தச்சித்திரவேலைக்காரருடைய கையிலிருந்து சிறுதுடைப்பம் விழுந்தபொழுது "ஓர் சக்கரவர்த்தி உமக்கு ஊழியஞ்செய்யத்தகுதியுடையீர்" என்று சொல்லிக்குனிந்து அதை யெடுத்துக்கொடுத்தனர். 'ஆரியஸ்டோ'வினுடைய கவிதைகளைக் கிரந்தகர்த்தாவின் அனுமதியின்றி அச்சியற்றி விற்பவர்களைத் தீத்தண்ணீர் விலக்கிவைக்கிற தென்று பத்தாவது 'லியோ' பயமுறுத்தினர். ஒன்றுவது 'பிரான்ஸிஸ்' 'லியனார்டோ டாவின்சி'யின் மரணசயனத்தைப்போய்ப் பார்த்ததுபோல அதே போப்பும் ராபேயல் உடைய மரணசயனத்தைப்போய்ப் பார்த்தனர்.

'ஹேபிடன்' என்பவர் கானசாஸ்திரத்தில் தேர்ந்தவர்களைத் தவிர ஏனையர் ஒவ்வொருவராலும் தான் நேசிக்கப்பட்டு மதிக்கப்பட்டதாக ஒருக்கால் பூகமாய்ச்சொன்னபோதிலும் மிகவும் பெரிய கானசாஸ்திரிகளனைவரும் ஒருவர் மற்றொருவருடைய பெருமையை அங்கீகரிக்க மிக சித்தமாயிருந்தனர். 'ஹேபிட்ன்' என்பவர் அற்பமான பொறாமையினின்றும் முற்றிலும் விடுபட்டிருந்தவராகத்தோற்றுகிறது. பேர்போன 'போர்ப்போரா'வைப்பற்றிய அவருடைய மதிப்பானது அவருடைய வீட்டில் தன்னை வேலையாளாக அங்கீகரிக்கப்பெற்று ஊழியஞ்செய்யத் தீர்மானித்துக்கொண்டமட்டில் இருந்தது. போர்ப்போரா என்பவர் வசித்தகுடும்பத்தில் தன்னைப்பழக்கஞ்செய்து கொண்டுதான் அந்தவேலையைச் செய்வதற்கு ஒப்புக்



கொள்ளப்பட்டனர். ஒவ்வொருநாளும் அதிகாலையில் 'போர்ப்போரா'வினுடைய மேற்சட்டையை சுத்திசெய்யவும் அவருடைய பாதரட்சைகளைத்துடைக்கவும், அவருடைய புழுதியடைந்த தொப்பியை ஒழுங்காய் வைக்கவும் அவர் ஜாக்கிரதையாயிருந்தனர். முதலில் போர்ப்போரா' என்பவர் 'ஹேபிடன்' விஷயத்தில் முறுமுறுத்தார். ஆனால் அவருடைய கொடூரமானது சீக்கிரம் சாந்தமாகி முடிவில் அன்பாக உருகுகிறது. அவர் சீக்கிரம் தன் வேலையாளுடைய யூகத்தைக்கண்டுபிடித்து அதைத்தன்னுடைய போதனையால், ஹேய்டன் முடிவில் மிகவும் கீர்த்திபெற்றதாகிய விஷயத்தில், திருப்பிவிட்டனர்.

(இன்னும் வரும்)

---

## அடியில் வரும் பிழைகளைத் திருத்திக்கொள்க.

| தொகுதி. | பகுதி. | பக்.. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|---|
| 5. | 2. | 80. | 18. | ஒடுங்கியதால் | ஒடுங்கியசால் |
| 5. | 5. | 263. | 3. | எழுத்தின் | ஒழுக்கத்தின் |
| ,, | ,, | ,, | 12. | பெண்ணின் அலர் | பெணின் சுலர் |
| ,, | ,, | 265 | 13. | பைரவன் | பைரன் |
| ,, | ., | 267. | 11. | ராஜா | ராஜ |

௮

# “மதுரைஸ்தானீகர் வரலாறு.”

(உஎஉ-ம்-பக்கத்தொடர்ச்சி.)

[பழைய ஏட்டிலுள்ளபடியே பதிப்பிக்கப்பட்டது.]

“அன்று முதல் கட்டியம் பெத்தவரய்யன் வகை சுந்தரேசுவரய்யனை ஸ்தலம் ஸ்தானீகர்களனைவரும் ஒப்புக்கொள்ள, பரிவட்டமுங்கட்டிக்கொண்டு காணியாட்சியாண்டு வருகிறார். இரண்டு கோவில் தேவபாராயணம் தெய்வபுரோகிதங்களுக்கு கேசவதீக்ஷதர் நியமனம் பண்ணுவித்திருந்த அப்புடுவாத்தியாரைத்தானே தம்முடைய மனிதராய்த்தொழில் செய்து வரச்சொல்லித் திட்டம் பண்ணுவித்து நடந்து வருகிறது. மங்கம்மனவர்கள் நாளையில் வடக்கேயிருந்து அநேகம் பிராமணர்களை வரவழைத்து அக்கிரகாரங்களும் சத்திரங்களும் சாலைதர்மங்களும் கோவில்பூஜை உற்சவாதிகளும் விசேஷமாயுண்டு பண்ணுவித்து நடப்பிவித்தார்கள். சுபானு௵ வரைக்கும் மங்கம்மனவர்கள் ராஜ்ஜியமாண்டதில் ஒரு காரணத்தினாலே தெய்வீகமானார்கள்.

“பிறகு விஜயரெங்க முத்துசொக்கநாத நாயக்கனய்யனவர்கள் வெளியேறி, தாருண௵ முதல் விரோதிகிருது ௵ வரைக்கும் ராஜ்ஜியமாண்டார்கள். அவர்கள் ராஜரீகத்திற் செய்த திருப்பணிகளுக்கும் திருவாபரணத்திற்கும் கணக்குண்டு. மத்தியிலே கட்மல்ரோகம் வந்து தீராமல் விரோதிகிருது௵ மாசி௴ சிவராத்திரி நாள் முதல்சாமத்தில் தெய்வீகமானார். விரோதிகிருது௵ பங்குனி௴ முதல் சித்தார்த்தி௵ வைகாசி௴ வரைக்கும் ௵-எ-௴ கூ-க்கு கர்த்தாக்கள் விஜயரெங்கசொக்கநாத நாயக்கரய்யனவர்கள் பட்டஸ்ரீ மீனாக்ஷியம்மனவர்கள் பட்டமாண்டார்கள். அவர்கள் சகோதரர் வெங்கிடபெருமாள் நாயக்கரையனவர்கள் ராஜ்ஜியபரிபாலனம் செய்தார்கள். அந்த முன்னிலையிற் கலாபமுண்டாய்க் கொஞ்சநாள் அராஜரீகமுண்டானதில் தளவாய் நரசப்பய்யனவர்கள், திருமலைநாயக்கரையனவர்கள் வம்மிசத்தில் பங்காரு-திருமலைநாயக்கரைக் கூட்டிவந்து பட்டங்கட்டிவைத்துத் தம்முடைய குமாரன் முத்துசாமியய்



யனுக்குத் தளகர்த்தமுங் கொடுத்து ஒரு௵ ராஜ்ஜியமாண்டார்கள். மீனாக்ஷியம்மனவர்கள் பட்டபாளுமைகயில் பிரமோதூத௵ ஆவணி௴ கூஉ மதுரைக்கோட்டைகட்டளை வெங்கிடகிருஷ்ணமாவுத்தரவர்கள் நாளையில் விக்கிரம பாண்டிய பட்டராசாரிய அபிஷேகத்துக்கு அரமனைக்கு ஷ- ருா-பொன் யாவனையுங்கொடுத்து உத்தரவு வாங்கி நடப்பிவித்துக்கொண்டார். செண்பகசுந்தரபட்டர், ஷை குமாரன் சதாசிவபட்டர் ஷை தம்பி பிர்ம்மசாரி முத்துக்கலியாணசுந்தரபட்டர் அவர் குமாரன் சாமிநாதபட்டர், ஷை தம்பி பிர்மமசாரி செண்பகசுந்தரலிங்கபட்டர் மகன் பிர்ம்மசாரி—காணிக்கைக்காரர் ஜனம்—ரு. நெட்டூரரில் கற்பூரசுந்தரபட்டர் மகன், ஷை தமையன்மகன் ஆக ஏழுபேருக்கு உத்திரவாகும்போது, குலசேகர பட்டர் மறிக்க, அவர்களையெல்லாங்காவல் பண்ணுவித்துக்கொண்டு, அம்மன்கோவில் ஆறுசாற் பீடத்தில் ஆசாரிய அபிஷேகமும்செய்து கொண்டார்கள்.

“குலசேகரபட்டர் வகையில் காவலில்வைத்திருந்த ஒருவரைக் கூட்டிவந்து பரிவட்டமுங் கட்டிக்கொண்டு பட்டணப்பிரவேசம் வந்தார்கள். காணிக்காரர்களுக்கு எட்டு முழத்திலொரு சோமன் பட்டு வீதம் சாத்துப்பொடி பழகினசோமன் பட்டு —ரு. அர்ச்சகர்களுககுச் சல்லாச்சோமன் உ. இப்படிப்பரிவட்டங்கட்டிக்கொண்டு, நிறைவேற்றினபிறகு காவலிலிருந்தபேரை நீக்கிவிட்டார்கள். ஜனங்கள்போக மீதமாயுள்ள ஸ்தானீகர்களும் பரிஜனங்களுஞ்சுவாமியையெழுந்தருளிவித்துக்கொண்டு மதுரைநாயகர் ஸ்தலம் வந்துசேர்ந்து சேர்த்தியிலெழுந்தருளினர். கோவில் மூலஸ்தானமுதல் போக்குவரத்துப்பார்த்துத் திட்டம்செய்து மகா சம்பிரம வுற்சவத்திற்கு தூ-பொன்வரைக்குங் கொடுத்துச் சம்புரோக்ஷணையும் நடப்பிவைத்துப் பூஜையுஞ்சிறப்பாக நடப்பிவைத்து வந்தார். எடுபட்டுப்போன ஸ்தலத்தை முராரிராயர் உத்தரவுப்படி அப்பாச்சி நாயக்கரையனவர்கள் ஸ்தலத்தையுண்டு பண்ணுவித்தார். படாசாய்பு நாளையில் கொள்ளைபோனது போக நகை தட்டுமுட்டு இருப்புத்திட்டம் பண்ணுவித்ததிற்கும் கணக்குண்டு. சகாப்தம்-௲௬௱௭௰-க்கு மேல் உருத்திரோத்காரி௵ ஆடி௴ மாபூசிகானவர்களும், மம்மதல்லிகானவர்

களும் வந்து மராட்டியரை வெளிப்படுத்திச் சீமையைக் கட்டிக்கொண்டு ராஜ்ஜியம் ஆண்டு வருகிறார்கள். இவ்வளவும் படாசாய்பு கலாபந்தீர்ந்து வந்தபிறகு பழையகணக்குப்படிக்கு ஜீரணமாயிருந்ததுஞ் சேர்த்து புதுப்பிவைத்தார்கள். (ஞாபகம்.)

“சுவாமியாண்டவர் திருவாலவாயுடைய தம்பிரானார் திருக்கோவில் திருவாபரணங்கள். நிச்சனத்தில் தங்கநகைகள் பொன்னகைகள் செய்தால் தட்டானுக்குக்கூலி விராகன் க-க்கு ஊர்க்கூலிபணம் கஇ-க்கு பாதிக்கூலி பணம ௬-கொடுக்கிறது. நகாசு வேலைகளாக ஜோடி நகைகள் செய்தால் விராகன் க-க்குப்பணம் உ-வீதம் ஊர்க்கூலிக்கு பாதி ஒருபணவீதம் கொடுக்கிறது. வெள்ளி வேலைக்குச்சேதாரஞ் சேர்க்கிற சாதாவேலைக்கு ஊர்க்கூலி பணம் ௬-ம், நகாசு வேலைகதுப் பணம் அ-ம் ஆனதால், இதிற்பாதி கூலியுள்ளதைக் கொடுக்கிறது. கரிதளவாடங்கள் தேவையானது வாங்கிக்கொடுக்கிறது. பின்னால் கூலியிற் பிடித்துக்கொள்ளுகிறது. குந்தள வேலைக்கு ஒருவிராகனெடை ச-பொன்தங்கம் போட்டுச் செதுக்கினதின் பேரில் நகையின் பேரிற் சேர்ந்த ஈடு தங்கத்துக்கு கருகூலத்திலிருந்து தங்கக்காசு கொடுத்து அதற்கு விராகன் ஒன்றுக்கு உள்ளதிலே தள்ளி நின்ற பணத்தில் பாதிக்கூலி ஒத்துக் கொடுக்கிறது. மூலாம் பூச்சுவேலைக்கு இந்தப்படி செய்கிறது. மீதி நகைகள் பொன் தங்கம் வெள்ளியில் செய்தால் ஊரில் நடக்கிறது போல் பொன் தங்கத்துக்குக் கால்மாத்தும் வெள்ளிக்கு அரைமாத்தும் விளக்கணம்போட்டுச் செய்கிறதில் கோவிலுக்குப்பொன் தங்கத்துக்கு அரைக்கால்மாத்து விளக்கணமும், வெள்ளிக்குக்கால்மாத்து மாகஒப்புவிக்கிறது. சேதாரம்பொன் தங்கவேலைக்கு விராகனொன்றுக்கு நெல்லெடையொத்துக் கொடுக்கிறது. பொன் தங்கத்துக்குப் பொடி கூட்டுகிறதிட்டமொரு நகைக்கொரு விராகனெடை பொடி செல்மானம் உடல்தங்கம் பொன் விராகன் ஒன்றுக்கு காற்பணவெடை மட்டங்கூட்டிப் பொடிசேர்க்கிறது. இதுகால்மாத்திறங்கும். கோவிலுக்கு அரைக்காற்பண எடை வீதம் பொடிகூட்டுகிறது. ராவிப்பொடிகூட்டினால் ஒரு நெல்லெடை செம்புபோட்டுப் பொடிகூட்டுகிறது. வெள்ளிக்கு ஏழுபங்கு வெள்ளியும், ஒருபங்கு பித்தளை



யும் கூட்டிப்பொடி கூட்டுகிறது. சேதாரம் சேர்க்கிறவிதம் ஒத்துக்கொடுக்கிறது. இந்தப்படிக்குக் கண்ணன் மங்கைபாகமாசாரியும், தட்டான சொக்கனாசாரியும் உடன்படிக்கையெழுதிக்கொடுத்த பட்டயம் கருகூலத்திலிருப்பதாலந்தப்படி நடப்பிவிக்கவும்.

“சுவாமியுடையவர் திருவாலவாயுடைய தம்பிரானார் திருக்கோவில் (ஞாபகம்) சிதளபுஸ்தகம் ௬-(௫)-த்துக்கு இருக்கும். ஸ்தலத்தார் வரலாறு ஏடு கக. ஸ்தலத்தார் பரிஜனங்கள் தொழிலட்டவணை ஏடு ௬ரு. சொக்கநாத நாயக்கர் நாளையில் ஸ்தலத்தார் பரிஜனங்களுக்கு விட்டுக்கொடுத்த கிராம அட்டவணையேடு ச. கோவில் வாசலில, சுவதந்திரம் சாதம், தீர்த்தம், பரிவட்டமுதல் வினியோகதிட்டம்-ஏடு-ச. ஸ்தலததார் பரிஜனங்கள் செய்தொழிலுக்கு தாரத்தாவீதம் மனுஷர் நியமித்துப்பார்க்கிற திட்டம், ஏடு ரு. மீனாக்ஷியம்மன் நாளையில் திட்டம்பண்ணின கிராம அட்டவணை ஏடு ரு. திருப்பணிகளுண்டான திட்டமேடு-௬. உற்சவங்களுண்டான திட்டமேடு-க. காவல்காக்கிற திட்டமேடு ௬. ராஜ்ஜியம் ஆண்டதுரைகள் வரலாறு ஏடு ௬. ஆக ஞாபகப்புஸ்தக வகையரு ஏடு எச. இந்த ஞாபகப்புஸ்தகத்தை கருகூலக்கணக்கறையில் பத்திரப்படுத்தி வைத்திருக்கவும். ஸ்தலத்தார் பரிஜனங்களுக்குள்ளே விவகாரங்கள் வந்து நிலைமைக்காரியங்களில் சமுசியம் வந்தால் தீராதபக்ஷம் அரமனையுத்திரவானால் ஸ்தலத்தாரேழுபேரையும் கூடவைத்துக்கொண்டு இந்தபுஸ்தகத்திலெது பார்க்கவேணுமோ அது பார்த்து அதிலிருக்கிறபடிக்குத் தீர்த்துப்போடுகிறது. எந்தவேளையிலென்ன சமாசாரம்கேட்கிறார்களோ அதைமட்டும்பார்த்து அந்தப்படியே யெதிரிடையெழுதிப்போய்ச்சொல்லுகிற மற்றக்கருமானங்கள் ஒருவருக்கும் காண்பிவியாமல், கருக்காய்க்கொண்டுவந்தால் கணக்குப்பிள்ளையிடத்தில் சகலத்திராளுக்கும் கண்ணியமுண்டாருமானதால், கணக்கறையிற் பத்திரப்படுத்தி எதுகாரியமும் அந்தவிடத்திலிருந்து பார்த்துச்சொன்னால் ஸ்தலமுமரமனையும் ஒப்புக்கொள்ளும்; இப்படியே நிலைமையிலிருக்கிறவர்களறிந்து கொள்ளவும்.

“சுவாமியுடையவர் திருவால வாயுடைய தம்பிரானார் கோவில் பரிஜனங்கள் செய்தொழிலட்டவணை.—நாலாம் புதுக்கன்பழைய

கணக்குப்படிக்கு, முதல்நிர்வாகம் சதாசிவபட்டரான விக்கிரமபாண்டியபட்டர் நம்பி செய்தொழில் மூலபுரம் பிரதான உள்சன்னதிக்கு நித்தியப்படி யபிஷேகம் அலங்காரம் அர்ச்சனை நைவேத்தியம், தீபாராதனை சகல உபசாரமும், ஆறுகாலத்திலுஞ்செய்கிறது. மாறியாடுவார், உற்சவமூர்த்தி, இளையநயினார் முதலான பிரதான சன்னதிகளுக்கு நைவேத்தியம்; தீபாராதனை கூய நாளுஞ் செய்கிறது. சௌராதி சண்டபரியந்தம் உண்டாகிய சுற்றுக்கோவில்களுக்கெல்லாம், முதல்தேதிமுதல் கரு-ம்தேதி வரைக்கும் அபிஷேக அலங்காரம் தீபாராதனை செய்கிறது. இளையநயினாருக்கு உற்சவங்கள் வந்தால் கொடியேற்றம் பண்ணி யாகசாலைமுதலான மந்திரகர்மங்கள் எல்லாம் ஆகமத்தின்படிக்குச் செய்கிறது. அஷ்டபந்தனம், செடிபந்தனம், விமானப்பிரதிஷ்டை, சாந்தி, சம்புரோக்ஷணைகள் முதலானதெல்லாஞ் செய்கிறது. அதில் வருகிற பிரயோசனத்தைச் சதாசிவபட்டருடனே மூன்று பங்கும், சக்கரவர்த்திகளுக்கு ஒருபங்கும், கூசு-நிருவாகிகளுக்கொருபங்கும் ஆறுபங்கும் இந்தப்பிரகாரம் அவரவர் அனுபவித்துக்கொண்டு வருகிறது. நித்தியோற்சவம், மாசோற்சவம், வருஷோற்சவாதிகளுக்கும், விசேஷப்படிகளுக்குங் கையாட்சிக்கு மனுஷாள் நியமித்துக்கருகூலந்திறந்து தேவையான ஆடையாபரண மெடுத்துக்கொடுக்கிறது. அரமனைவாசற் பெரியதனம் பண்ணுகிறது. நன்மைதருவார்கோவிற்கு சொந்தத்திற் பூஜைபண்ணுகிறது. அங்கம் வெட்டுகிற திருவிளையாடலும், வளையல் விற்பதும், பிட்டுக்குமண் சுமப்பதும் இந்த மூன்று திருவிளையாடலுஞ் சொந்தத்தில் செய்கிறது. தென்திருவாலவாயன், வடதிருவாலவாயன் முதலான வெளிப்பட்ட கோவில்களெல்லாம், க-ஆந்தேதிமுதல் யரு-ஆந்தேதி வரைக்கும் பூஜைபண்ணி வருகிறது. மூலபுரம், இரண்டுசன்னதிக்கும் பரிசாரகம் யசு-நாள் வட்டமாய்ச்செய்துவருகிறது. திக்குவிஜயம், திருக்கலியாணம், பட்டாபிஷேகம் இவையெல்லாமிருவகைப் பட்டமாருஞ் செய்விக்கிறது. துரைக்குச் செங்கோலிருவகைப் பேருமெடுத்துக்கொடுக்கிறது. தையலாளுக்குச் சுவாமி கோவிலாறுகாற்பீடத்தில் நம்பியார் பொட்டுக்கட்டுகிறது. பூஜைபண்ணுகிற பேர்கள் வாலிபத்தில் வேதம், ஆகமசாஸ்திரங்களெல்லாம் படித்துக் குருக்களிடத்தில்



பரீக்ஷைகொடுத்து விவாகமானதின்பேரில் காணிக்காரர் அம்மன்கோவி லாறுகாற்பீடத்தில் ஆசாரியவபிஷேகம்பண்ணிக்கொண்டு பூஜை பண்ணிவருகிறது. அந்தந்தமுறைக்கு அவரவர் ஆசாரமாய்க்கையாடுகிறதேயல்லாமல் வேறொருவர் கைகலக்கப்படாது. துரைதளவாய் இரண்டுவகைப்பேருடைய அர்ச்சனைமட்டும் பண்ணிவருகிறது. வாகன ஏற்றம் ஏழாந்திருநாள் கரிபுரித்தவாகன ஏற்றமும் கூ-ம் திருவிழா சமணர்களுக்கு விபூதிபோட இடபவாகன ஏற்றமுந் திருக்கலியாணத்திற் பாதப்பிரக்ஷாளணம், மண்சாத்தல் இதுமுதலான வாகனஏற்றமுமுண்டு. சப்பிரம் ரதத்தில் வாகனஏற்றமுண்டு. இரண்டு கோவிலுக்கும், அர்த்தமண்டபம் வரைக்கும் காவல் பரிசாரகம் வட்டம்வீதங்காக்கிறது. அதிற் பாத்திரந் தட்டுமுட்டுப் பரிவட்டம் நகைநாணயம் சொத்தியம் சேதம்வந்தால் கருகூலக்கணக்குப்படிக்குக்கையாட்சிக்காரருக்கேற்கச்சம்மதி பண்ணுவிக்கிறது. உண்டியல் வாசலில் மனுஷாள் நியமித்து வட்டம் பதினொருநாளைக்கும் உண்டியல் வைத்துக்காத்திருந்து காணிக்கைகள் வருகிறதை அரமனையிற் கொண்டுவந்து முதலிட்டு, பணமாய் வந்திருப்பதற்குப் பத்துக்கிரண்டு பணவீதஞ் சுதந்திரம் வாங்கிக்கொள்ளுகிறது. வராகன், ரூபா, தங்கம், வெள்ளி, நகை, நாணயங்கள், பரிவட்டங்கள் வந்தால் கணக்கிலெழுதிவைத்துக் கையாட்சிக்காரரிடத்திலொப்புவித்துக் கருகூலஞ்சேரப்பண்ணுவிக்கிறது. வட்டந்திரும்புகிறபோது கையாட்சிக்காரர்-கூ-பேர் முன்னிலைக்கு, மறுவட்டஞ் சக்கரவர்த்திகள் வழியில் சகலபண்டபதார்த்தம், ஆடையாபரணாதிகள் கணக்காசாரப்படிக்கு ஒப்புக்கொடுக்கிறது. திருப்பணிக்காரியமும் நடக்கிறதைக் கண்டிசம் விசாரித்துக்கொள்கிறது. குடையறை, பல்லக்கறை, வாசன அறை, பரிவட்ட அறை, பசுப்புரை, நீவர்த்தியறை, தளவாட அறை சகலமும் மாசம், ஒருமுறை கையாட்சிக்காரர்கூட இருந்து திட்டக்கணக்காசாரத்துக்குச் சரிபார்த்துக்கொள்ளுகிறது. அந்தந்தத் தொழிலுக்கு நியமித்திருக்கும் மனுஷரைக்கொண்டு சொத்தியங்கள் வராமற் சாவதானப்படுத்தச் சொல்லுகிறது. அதிலேதாகிலுஞ் சொத்தியங்கள் வந்தால் அந்தத்தொழில் செய்கிறவனிடத்திலறிவிக்கிறது. உள்பரிசாரகவட்டம் பதினொன்குநாளைக்கும் கெர்ப்பக்கிரகமுதல் அர்த்தமண்டபம் வரைக்கும் தார்வையும், ஜலசுத்தியும், திரு

விளக்கும் போட்டுத் திருமேனிக்காவலுங் காத்திருந்து, தெரிசனத்திற்கு வருகிறபேர்களுக்கு தீர்த்தப்பிரசாதமுங்கொடுத்துக்கொண்டு சன்னதியிலே காத்திருக்கிறது. உண்டியல் வாசலுக்கு வட்டம் வீதம் பிராமணனை நியமித்துப் பாத்திரந் தட்டுமுட்டுகளெல்லாம் அன்றுடகந்தேய்த்துச் சுத்திபண்ணி வைக்கிறது. சன்னதிவிநியோகத்திற்குச் செல்லும் விபூதி கொண்டுவந்து போடுகிறது. உற்சவாதிகளில் உற்சவமூர்த்தி இளையநயினாருக்கு ரெக்ஷைசாத்துகிறது. தீபாராதனைகாலத்தில் மந்திரபுஷ்பம் அர்ச்சனை பண்ணுகிறது. ஸ்தபனம் வைத்துக் கும்பாபிஷேகஞ்செய்கிறது. பருப்பு, வடை முப்பழமிவை யெல்லாம் மூலம் இரண்டுசன்னதிக்குஞ் சாத்துகிறது. விநாயகர்முதல் பரிவார தேவதைகள் சந்நிதிக்கெல்லாம் தங்கள் வட்டயாயிருந்தால் சாத்துகிறது. ஸ்திரீ இல்லாதபேர், அங்கஹீனமான பேர், நோயாளிகளொருவரும் திருமேனியைத்தொட்டுப் பூஜை பண்ணப்படாது. திருவிளையாடல் செய்யப்படாது. இதைவிட அரயனையார் என்ன தொழில் செய்யச்சொன்னாலுஞ் செய்கிறது. இவ்வளவும் முதல் திருவாகம் சதாசிவபட்டர் நம்பி செய்தொழில். இவர்க்கு திருமலைசவுரி ஐயனவர்கள் நாளையில் விக்கிரமபாண்டிய பட்டரென்று பேர்கொடுத்தார்கள்.

முற்றிற்று.

---

## ஓர் குறிப்பு.

நன்னூலையும் அதன் ஆக்கியோனையும் பற்றி நான் கொஞ்சக் காலத்துக்குமுன் எழுதிய விஷயத்தில், நன்னூலாசிரியராகிய பவணந்தி முனிவரிருந்த ஊர் இன்னவிட மிருக்கிறதென்று விளங்கவில்லையென்று எழுதினேன். ஆனால், இவரூராகிய சனகை என்பது ஜனநாதபுரம் என்பதின் குறுககலென்பதற்கு ஐயமில்லை. அப்படியாயின் இது காவேரி வடகரையிலுள்ள மாயிலங்கையாக வேண்டும். இம்மாயிலங்கை இப்பொழுது மைசூர்ஜில்லா திருமுக்கூடல் நரசிபுரந்தாலுக்காவைச் சேர்ந்த கிராமம். இது கங்கராஜ்யத்திலேயே யிருக்கிறது. இதற்கும் கங்கநாட்டுப் பழய ராஜதானியாகிய தழைக்காட்டுக்கும் இடையில் காவேரிதானுள்ளது. இதைக்குறித்துச் சாஸனங்களில் அடியில் வருமாறு இருக்கின்றன:—

(1) முடிகொண்டசோழமண்டலத்து கங்கைகொண்டசோழவளநாட்டு இடைநாட்டு ஜனநாதபுரத்து.

(2) கங்கபாடியான முடிகொண்டசோழமண்டலத்துத் தென்கரை இடைநாட்டு மாயிலங்கையான ஜனநாதபுரத்து.

(3) கங்கபாடி தென்கரை இடைநாட்டு மாயிலங்கை.

(4) பெரியநாட்டு மாயிலங்கையான ஜனநாதபுரத்து.

மேலெடுத்துக் காட்டிய சாஸனப் பகுதிகளால் மாயிலங்கையே கங்கநாட்டிலிருப்பதினாலும், ஜனநாதபுரமென்று பெயர் பெற்றிருத்தலாலும் பவணந்தியினூராகிய சனகையாயிருக்கலாமென்று எண்ணப்படுகிறது.

து. அ. கோபிநாதராவ்.

---



### மாட்சிதங்கிய பரோடாமகராஜா அவர்கள் கைத்தொழிலைப்பற்றிச் செய்த

## மகோபந்நியாசம்.

(முற்றொடர்ச்சி.)

ஜனங்களே பார்த்துவரவேண்டிய கைத்தொழில் வேலைகளை அரசாங்கத்தாரே அனுவசியமாய் எடுத்து நடத்திவந்ததினால், அவ்வேலைகளில் ஜனங்கட்குப் பழக்க மேற்படாமலும் அவர்களே நிர்வகித்துப்பார்க்குந் திறமையுண்டாகாமலும் போகநேரிட்டது. இவற்றோடு, நாணயம் சரியாய் வழங்கி வராததனாலும், பட்டாள உபத்திரவம் அதிகமாயிருநதபடியாலும் விவசாயிகள் தத்தமுழவுவேலையை விட்டுவிடவும், வியாபாரி நாணயசாலையினின்று நீங்கவும் நேரிட்டன. ஜனங்கள் தங்கள் சாப்பாட்டுககு வேண்டிய தானியத்துக்கு வலீஸருடைய கிருபையை எதிர்பார்க்க வேண்டியிருந்தது. கவர்ன்

மென்ட் கஜானாவிலிருந்தே ஏழைகளுக்கு போஜனப்பொருள் அளிக்கப்பட்டு வந்தது. சக்கிரவர்த்தி ஆயுதபலத்தாலேயே ஆண்டு வந்தார். ஜனங்கள் கவர்ன்மெண்ட் நிர்ப்பந்தத்துக்குப் பயந்தே கைத்தொழில் வேலை செய்துவந்தார்கள். ராஜாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள் கேள்விகேட்பாரில்லாது சோம்பேறிகளாயும் செய்யத்தகாதன செய்பவர்களாயும் ஆனார்கள். ஜனங்கள் மேன்மேற் பெருகும் தரித்திரத்தையும் மனத்தளர்ச்சியையும் பெற்றார்கள். இவ்வகையாக தேச ஒற்றுமை, அபிமானங்கள் ஒழியப்பெற்றமையால், வடக்கேயிருந்து கொள்ளையடிக்கும் கூட்டப்படைகள் இலகுவாய் ரோமராஜ்பத்தை யழித்துவிட நேரிட்டது.

## தற்கால க்ஷேமத்துக்கு ஒன்றியுழைத்தல்.

ரோமாபுரி நிலைகெட்டு அழிந்ததின் காரணத்தை மறவாது மனதில் வைத்துக்கொண்டு நம் தேசம் விடுதலைப்படுவதற்கேற்ற சிறந்த முறைகளைத் தேடவேண்டும். நாம் எக்காலத்திலும் நல்ல நிலைமையிலேயேயிருந்து வரவேண்டுமானால், ஜனங்களுக்கு அவரவர்கள் செய்யவேண்டிய கடமைகளையும் அவர்களாலே தான் தேசத்துக்கு மகிமையும் கௌரவமும் உண்டாகும் என்ற மெய்யுணர்வையும் போதிக்கவேண்டும். உயர்ந்த கல்வியும் ஐசுவரியமும் உள்ளவர்கள் தாழ்ந்தநிலைமையிலுள்ளவர்களை ஊக்கப்படுத்தியும், கல்விபுகட்டியும் மற்றும் உரியகடமைகளை மேற்கொள்ளவும் வேண்டும்.

செயலற்றுக் கிடப்பவர் தம்மைத்தாமே காப்பாற்றிக்கொள்ளும் சக்தி வரும்வரையில்தான், அவர்களுக்கு நாம் உதவிசெய்யவேண்டும். அதற்கப்பால் தங்களையே சார்ந்துவரும்படி அவர்களை விட்டுவிடவேண்டும்.

நாம் கூடியசீக்கிரத்தில் தேசச்செல்வநூலாதார விதிகளை (Principles of economics) சரிவரக் கற்கவேண்டும். நாணயம், புத்திகூர்மை, தொழின்முயற்சி முதலிய சக்தியுடையவர்கள் பெரியகைத்தொழில்களை யெடுத்துநடத்தி வரும்படி ஊக்கிவரவேண்டும்.

## இந்தியாவும் புதிதாகக்கண்டுபிடிக்கப்பட்ட யந்திரங்களும்.

பூர்வீக இந்தியாவும் நமக்குச்சில படிப்பினைகளைப் புகட்டுகின்றது. இந்தியா பிராசீனகாலத்தில் மேனாட்டோடு செய்த தீவிர



மான வியாபாரத்தைப்பற்றியும், அதன் விலையுயர்ந்த விளைபொருள்களைப் பற்றியும் முன்னமே ஆரம்பத்தில் சொல்லியிருக்கிறேன். ஆனால்,நம்தேசத்தில்,மேற்குறித்த பழையகாலத்திலே இயந்திரத்தேர்ச்சி அதிகமாயில்லை. ஏனென்றால் புத்திக்கூர்மையில்லாத தாழ்ந்த ஜாதியாரிடம் இயந்திரத்தைக் கையாளுதல் விட்டுவிடப்பட்டது. தற்கால சிற்பசித்திரவேலைகள் பூர்வகிரேக்கரது வேலைநயத்தோடு ஒப்பிடத்தக்கவையல்ல. உலகத்தின் உயர்தரஜாதியாரென்று மதிக்கப்படுபவர்கள், இயந்திரத்தில் அடைந்துள்ள தேர்ச்சியை நாமும் பின்பற்றிப் பிடிக்கமுடியவில்லை. இதற்குக்காரணம் என்னவென்றால், உயர்ந்த புத்திக்கூர்மையுள்ள ஜாதியார்கள் இயந்திரங்களைத்தாங்களே கையாளுதலைவிட்டு, அவ்வளவுசாமர்த்தியமும் புத்திக்கூர்மையும் போதாத சாமான்யஜாதியார் அவற்றைச்செய்துவர விட்டுவிட்டதேயாம். நாம் பாஷாஞானத்திலும், சூக்ஷ்ம அறிவு முதிர்ச்சியிலும் உலகத்தின் மற்றெந்த மேலான ஜாதியாருக்கும் பிந்தினவரல்ல. நம்மிடம் தொழிற்சாமர்த்தியமும் இல்லாமல் போகவில்லை. அது இருக்கிறதெனபதைத் தாழ்ந்த தொழிலாளிகளிடமுள்ள புத்திநுட்பத்தாலும சாமர்த்தியத்தொழிலாலும் அறிந்துகொள்ளுகிறோம். தொழில் செய்வதற்கென்று குறிப்பிட்டஜாதியாரேயன்றி, பொதுவாய் தேசத்தாரெல்லோரும் கைத்தொழிலைக் கற்றுவரவேண்டும். தம் இளம்பருவத்திலேயே, பிராமணப்பிள்ளைகளும்; படித்த மௌல்வி (moulvies) களது பிள்ளைகளும் தொழிற்கருவிகளை உபயோகிக்கும் முறையைக்கற்றுக்கொள்ள வேண்டும். ஒவ்வோர் உயர்தரவித்தியார்த்திடும் (graduates) உத்தியோகத்தையே நாடிச் செல்வதை நிறுத்தி, கைத்தொழில்வேலையில் அமர்ந்துவரவேண்டும். அப்படிச்செய்துவருவாராகில் நம் தேசத்தார் பாஷாஞான முதிர்ச்சியில் பேர்போனவராயிருப்பதுபோல், கைத்தொழில் இயந்திரவேலைகளிலும் அவ்வாறேயாவார்கள் என்பதில் ஐயமில்லை.

## தற்காலத்து நான்கு முக்கிய ஏற்பாடுகள்.

தற்காலத்தில் மேனாட்டார் அடைந்திருக்கும் உன்னதபதவியைப்பார்த்து நாம் அநேகபடிப்பினைகள் படித்துக்கொள்ளுகிறோம், சென்ற பல நூற்றாண்டுகளின் சரித்திரத்தைத் திரும்பப்பார்க்கும்

வொரு தனிமைப்பட்ட ஜாதியும் ஐக்கியப்பட்டுப் பலப்படுவதற்கான கிளர்ச்சி நடந்துவந்திருக்கிறது. முற்காலத்தில், அவையெல்லாம் சிறிய ராஜ்யங்களாய்ச் சேர்க்கையின்றிச் சிதறிக்கிடந்தன. ஆனால் இப்போதோ அவை ஒற்றுமைப்பட்டுத் திரண்டு பலமுடைய தனித்தனி முழுராஜ்யங்களாகி விட்டன.

நான் வாசித்த அளவில், 'உண்மையான தோஷக்ஞர்' (candid critics) அடிக்கடி நம்மைப்பற்றிக் குறைகூறுவதெனனவென்றால், நாம் பலபிரிவுபட்டவராயும் தேசஒற்றுமையில்லாதவராயும் இருப்பதால், தேசத்தின் பொதுநன்மைக்குக் கூடியுழைக்கும் விசாலமனமற்றவராயிருக்கிறோம் என்பதே. அப்பேர்ப்பட்டகுறை நம்மிடமிருப்பது வாஸ்தவமானால் நாம் தேசாபிமானத்தையும் புத்தியையும் கொண்டுசெலுத்தி ஐக்கியப்பட்டுக் கூடியுழைப்பதற்கான முறைகளுக்கு அடிப்போட்டுவரவேண்டியது நமது கடமையாகும். தேசமுழுவதும், யாவரும் ஒருவரையொருவர் அறிந்து பேசிக்கொள்வதற்கு ஒரு பாஷையை ஏற்படுத்துவதோடுகூட தேசஐக்கியம் பலப்படுவதற்கான போதனையையும் புகட்டி வரவேண்டும்.

## சாஸ்திரீய முறைகளின் தேர்ச்சி.

ஐரோப்பாவில் 150-௵ காலத்துக்குள்ளேயே முற்றுப்பெற்றிருக்கும் 'சாஸ்திரசித்தி' யைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அவ்வித 'சாஸ்திர விருத்தி'ச்சரிதத்தை நோக்குங்கால் அதிக ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. மேற்கூறிய காலவளவுக்குள், ரெயில் வேக்களும புகைக்கப்பல்களும் மின்சாரத் தந்திகளும் தீப்பெட்டிகளும் ஆவியினால் ஏற்றப்படும் காந்தி விளக்குகளும் மின்சாரத்தின் ஒவ்வோர் உபயோக முறையறிவும்—பேசும் வாத்தியமும்(Phonograph,) ரான்ஜன் கிரணங்களும் (Rontgen rays,) சப்த வர்ணப் பிரிவு முறைகளும் (Spectrum analysis,) தேர்ச்சியடைந்த ரசாயண சாஸ்திரமும், வஸ்துவின் அணுவிதிகளும் (Laws of molecular constitution of matter,) சக்தி பரிபாலன விதியும்(conservation of matter) வியாதிகள் புழுஅணு மூலமாகும் என்ற ஐதீகமும் (Germ theroy of disease) ஆகிய அநேக முக்கியமான சாஸ்திரத் துறைகளில் விசேஷமான தேர்ச்சியடைந்திருக்கிறார்கள்.



## இந்தியா பின் வாங்கியிருத்தல்.

அன்பர்களே! இந்தியா மேற்கூறிய துறைகளில் அதிக அபிவிருத்தியடையவில்லையென்பதைக் கவனிக்க, நமக்கு வெட்கத்தையும் துக்கத்தையும் கொடுக்கவில்லையா? "இந்தியா தேசத்தார் மனத்தளர்ச்சியுற்றதனாற்றான், அவர்கள் திரும்பத்திரும்பப் புராதன எண்ணங்களையும் ஆசாரங்களையும் பின்பற்றி வருகிறார்களேயொழிய, நவீன நாகரீகமுறைகளில் தேர்ச்சி சிறிதும் பெறக்கூடவில்லை" யென்று ஓர் ஆசிரியர் நம்மை இகழ்ந்து கூறிய மொழிகள் வாஸ்தவந்தானா? நம் தேசத்தாரது புத்திதீக்ஷண்யம் தளர்ந்துவிட்டது என்று என்னால் நம்பமுடியாது. நம் தேசத்தார் ஊக்கங்கொண்டால் 'லோக ஞானாபிவிருத்தி' விஷயமாய் எவ்வளவோ நன்மை செய்யலாம். வெகுகாலத்திற்கு முன்னிருந்த நமது மகான்கள், தத்துவ சாஸ்திரத் தேர்ச்சியிலும், பாஷா ஞானப்பயிற்சியிலும் எவ்வளவோ முதன்மை பெற்று, அத்துறைகளில் உலகமுழுவதுக்கும் ஞானத்தைக் கொடுத்திருக்கிறார்கள் என்ற நியாயமான கௌரவமும் பெருமையும் நமக்கு உண்டன்றோ? ஆனால் அக்காலத்தில் நாம் எவ்வளவு புத்திதீக்ஷண்யத்தில் முதன்மை பெற்றிருந்தோமோ அதைத் திரும்பப்பெற்றாற்றான் நாம் அப்படிப் பெருமை பாராட்டலாம். மேனாட்டார் ஞானாபிவிருத்தியை மேன்மேலும் நாடிவருகிறார்கள். ஆனால் நம்தேசத்தாரோ, ஆராயாதே, தொன்றுதொட்டுவந்த முறைகளைக் குருட்டுத்தனமாய்ப் பின்பற்றியும், மேல் நோக்கிய முறையைக் கவனிக்காமலும், மேனாட்டாரைப் போல மனோதிடமும் புத்திதீக்ஷண்யமும் அடைய ஆவலற்றவராயும், 'கிணற்றுத்தவளை'களாயும் இருந்துவருகிறார்கள். நான் 'மாத்யூ ஆர்னால்ட்'கவிஞர் பாடிய நேர்த்தியான சில அடிகளைச் சொல்லி முடிக்கிறேன். அதன் தாத்பரியம் பின்வருமாறு:—

'கீழ்த்தேசத்து நாகரீகமானது, மேனாட்டு நாகரீகமாகிய சூறைக்காற்று சுழன்றுவீசித் தன்னை அழிக்க முயல, அதை அலக்ஷியத்துடன் பொறுத்துக்கொள்வதுபோல் தலைகுனியப்பெற்றிருந்தது. ஆனால், அது, சூறைக்காற்றுத் தீர்ந்து ஒழியப்பெற்றபின், எப்பொழு

தும்போலவே தியானத்துறையில் தன் சிந்தையைச் செலுத்திலா லாயிற்று.”

### மேனாட்டு முறைகளில் விலக்கற்பாலன.

நண்பர்களே! நான் மேனாட்டுச்சுற்றுப்பிரயாணங்களிலிருந்து திரும்பிவந்திருக்கிறபடியால், மேனாட்டையே சிலாகித்துக் கூறுகிறேன் என்றாவது, இந்தியாவுக்கு இனிமேல் ஒருகாலத்திலும் க்ஷேம விமோசனமில்லவேயில்லையென்று, என் நம்பிக்கையை ஒழித்துவிட்டேன் என்றாவது எண்ணிவிடாதேயுங்கள். விஷயங்களை நடுநிலையாய் ஆராய்பவன் எவனும் மேனாட்டு நாகரீகத்திலும் அநேக குறைவுகளிருக்கின்றன என்பதை ஒத்துக்கொள்வான். பெரியகைத்தொழிற் பட்டணங்களில் ஜனப்பெருக்கு மிகுதியால் உண்டாகும் கெடுதிகள் பலவுள. அக்கேடுகள் அந்நாட்டாருக்குப் பிற்காலத்தில் அழுந்தியுறைக்கும் என்பதில் ஐயமில்லை. வாஸ்தவமாகவே, அவை அவர்களது க்ஷேமத்துக்கு ஹானிகரமாகும். மேனாட்டில் ராஜாங்க முறையிலும் ஆசாரவழியிலும், தேகசௌக்கியத்துறையிலும் இன்னும் அநேகவிஷயங்கள் நிர்த்தாரணம் செய்யப்படவில்லை. தொழிலாளிகளுக்குள்(Labourers) அடிப்பட்ட ஒற்றுமையில்லை. மேனாட்டில் எங்கும் பொருளாசையே பெருத்து வருகிறது. அந்நாடெங்கும் ஜனங்கள் வீண் ஆடம்பரத்திலும், பணப்பூஜையிலும் ஆவலுள்ளவராயிருப்பதால், சாதாரணமும் சௌகரியமும் ஆடம்பரமுமற்ற முறைகளை யநுஷ்டித்துவரும் பழக்கம் அங்கேயில்லை. ஆனால் நம் தேசத்தாரோ, மேற்கூறிய சாதாரண சௌகரிய வழிகளையே பின்பற்றிவருகிறார்கள்.

இந்தியாவானது நீதிசாஸ்திர முறையில் கண்டிருப்பதற்கேற்க, சுலபமான சௌகரியஆசாரவழியை நாடியும், மேனாட்டுச்சிறந்த புத்திமான்களாலும் சாத்தியமாகாத பெரும்விஷயங்களை நிர்த்தாரணம் செய்துதந்தும், தற்கால சாஸ்திரரீதியான செல்வஅபிவிருத்தி முறையைத் தனக்கு உரிமையாக்கிக்கொள்ளவும், செல்வப்பெருக்கால் கண்மூடப்பட்டுப் போகாமல் சாதாரணஆடம்பரமற்றஆசார வழியையே எப்பொழுதும் பின்பற்றிவருவதுமே, அது தன் நன்மையும் உலக நன்மையுமாகக்கருதிச் செய்யவேண்டிய கடமைகளாகும். அதாவது மேனாட்டாருக்குத் தன் நீதிசாஸ்திரதத்துவத்தை உபதேசிக்கவும், அவர்களிடமிருந்து சடசாஸ்திரத்தைத் தான் கற்று உபயோகித்துக்கொள்ளவும் வேண்டுவதேயாம்.

முற்றும்.

உ

# பெரிய புராண அரும்பத விளக்கம்.

## கண்ணப்ப நாயனார் புராணம்.

(௨௫௬-ம்-பக்கத்தொடர்ச்சி)

(௫௧) வரைச் சூராட்டி-மலையிலுள்ள தெய்வபாவேசப்பட்டவள்.

(௫௨) சிறப்புப் பொருந்திய கருமை விரய நறியகுடுமியையும் வாசக்கண்ணியையுமுடைய நீலரத்தினமலை யொன்று வந்தாற்போல.

(௫௩) உடைதோல் - தோலுடைய பரிசை. (௫௪) மருமை கொண்டு - மருமையைக் கைக்கொண்டு; மருமையைப் பொருந்தியென்றுமாம். சிந்தையைச் சிவங்கொள்ளும்படி நின்ற.

(௫௫) நம்முடைய குலத்துள்ள வேடராகிய சுற்றத்தை நான் கைக் கொண்டு காத்த தன்மையின் நன்மையையே செய்து பகைமுனையிலயற்புலங்களைக் கவர்ந்துகொண்டு திண்ணிய வில்லின் வலி நீங்காத சிறப்போடு வாழ்வாய்; கொடியதுணிவையுடைய வேட்டைகளுமுனக்கு வாய்க்குப்; நீ தாமதியாது விரைந்து வேட்டையாடற்கு. இயல்பு-தனக்குரிய வியல்பு.

(௫௬) தங்கிய இருள்புலரும் விடியற்காலத்தில் விரிந்த விற்சாலையிற் பொலிந்த வில்லின் வலிய வேட்டைக் கோலத்தைக்கொள்ள அலங்கரிக்கின்ற கைத்தொழில் வல்லுநரோடு பொலிந்து புகுந்தார்.

(௫௭) நெறிப்பைக் கொண்ட சுருட்குஞ்சியானது, சாய்ந்தும் நிமிர்ந்தும் பொலிய, தளிரைக் கொண்டமாலைக்கிடையே கூட்டமாகிய வொளிபொருந்திய மயிற்பீலியைச் சேர்த்தி, வாசனை பொருந்திய பிணைந்த முல்லை மாலையின் மீது குறிஞ்சி மலரையும் வெட்சி மலரையும் நெருங்கிய வண்டின் கூட்டம் விழும்படி பின்னாற் செருகி.

(௫௮) முன்னெற்றியின் மீது மயிலிறகினடிக்குருத்திற் கிடையே வைத்த குன்றிமணியோடு முறுக்கப்பட்ட மயிர்க்கற்றை பொ

ருந்த அணிந்து மின்னலைப் போல விளங்குகின்ற சங்காலாய வெள ளிய தோடு காதிற் பொருந்திப் பக்கத்தே நின்றவை பூரணசந்திரனைப் போலிருக்க.

(௫௯) கழுத்தின்கண் வெள்ளிய சோகியாகிய காந்தி பொருந் திய மாலையைப் பொருந்த அணிந்து, சங்குமணியோடு பலரத்தினங்க ளைக் கோத்து இடையே பாலசந்திரனைப் போல்வனவாகிய பன்றிக் கொம்புகள் தூங்க, புலியின் வலிய தோலாகிய தட்டை வடிவச் செ யல் பொலிந்த சன்னவீரமென்னுமாபரணம் விளங்க. தண்டை மெ லித்தல் விகாரம்.

(௬௦) மார்பிற்சிறிய யானைத்தந்தத்தாலாய மணிகளின் திர ண்ட மாலை தூங்க, மாலையாற் பொலிந்த புயங்களிலுள்ள வாகுவலய ங்கள் தழைத்துப் பிரகாசிக்க, பொருந்திய வொளிபொலிந்த கங்கண ம் மேலே விளங்கிய முன்கையில் மேகத்தைப் போலப் பாணத்தைச் சொரிகின்ற வில்லின் சிறிய நாணைச் சுண்டுகின்ற கைத்தோற்க ட்டியை இட்டு.

(௬௧) அரையிலே மயிற்பீலி பொருந்திய புலித் தோலாடை யின் மீது கடற்றிரையிற் பொருந்துகின்ற வெண்மையாகிய சோ கிகளை நிரைத்து விளிம்பு சேர்த்தி, வரிசையாகப் பொலிகின்ற உடை யாகிய தோலின்மீதே வாளின் புறத்தைச் சூழ்ந்த வாசனை பொருந் திய துவராற் பதப்படுத்தப்பட்ட வார்க்கட்டைச் சூழ்ந்து அமைத் துக் கட்டி. சரணம்-மயிற்பீலி.

(௬௨) வீரக்கழலைக் காலில் விளங்கும்படி யணிந்து, பாதத்திற் பொருந்த இட்ட நீண்ட செருப்பானது, விருப்பத்தோடு வாய்த்திரு க்கும்படி பாரமாகிய பெரிய வில்லைப் பிரதக்ஷணஞ்செய்து நமஸ்க ரித்துத் திண்ணனார் பொருந்த அழகிய பாதத்தை மடித்து நாணேற் றி வியந்து தாங்கி. தொடு நீடு செருப்பு பாதஞ்சேர எனக்கூட்டுக.

(௬௩) அப்பொழுது அச்சிற்றாரிற்பொருந்திய இடர் நீங்க, மிக உயர்ச்சி பொருந்திய பெரிய கருமுகிலைப்போலத் துன்னென் றொலிக்க, தறுகண்மையையுடைய கோபமிகுகின்ற விலங்குகள் வில கியோட, சிவந்த கையிற்றடவிச்சிறிய நாணில் ஓசை கொண்டார்.